PRAY PREPARE PREACH

உபாகமத்தை கற்பித்தல்

உபாகம நூலுக்கான பேசும் வரைகோடுகள்

...உலகமெங்குமுள்ள
வேதாகம ஆசிரியர்களுக்காக
எழுதப்பட்டுள்ளது.

உபாகமத்தை கற்பித்தல்

உபாகம நூலுக்கான பேசும் வரைகோடுகள்

பொருளடக்கம்

அ. விரைவான உதவி: உபாகமத்திலிருந்து ஒரு பிரசங்கத்தை தயாரிப்பது எப்படி 4

ஆ. கற்பிப்பதும், பிரசங்கிப்பதும் எப்படி 5

இ. உபாகம நூலை பற்றிய சில தகவல்கள் 18

ஈ. உபாகமத்தைக் கற்றுக் கொள்ளுவதும் கற்பிப்பதும் 21

உ. பழைய ஏற்பாட்டு நியாயப்பிரமாணங்களை இன்று பிரயோகிப்பது எப்படி 139

ஊ. உபாகமத்திலிருந்து பாடங்கள் 142

Teaching Deuteronomy is published by The Good Book Company
© Paul Barker/The Good Book Company 2014

© 2016 தமிழ் மொழிபெயர்ப்பு, கொழும்பு இறையியல் கல்லூரி.
Tamil Translation © 2016 by Colombo Theological Seminary

சகல பதிப்புரிமையும் ஆக்கியோனுக்கே உரியது. ஆக்கியோனின் எழுத்து மூல அனுமதியின்றி இந்நூலின் எப்பாகமும் எவ்விதத்திலும் பிரித்தெடுக்கப்படவோ, இலத்திரனியல் மூலங்களுக்கூடாகவோ பிரதி பண்ணப்படவோ கூடாது.

ISBN 978-955-82389-2-9

Colombo Theological Seminary, 189,Dutugemunu Street, Kohuwela
Sri Lanka
http://www.cts.lk

முதலாவதாக தயவு செய்து இதை வாசியுங்கள்!

இன்னுமொரு பி.ஆ.பி (ppp) நூலை உங்களிடம் கொண்டுவருவதில் மகிழ்கிறேன். இறை வார்த்தையை பிரசங்கிக்கவும், கற்பிக்கவும் இது உங்களுக்கு உதவ வேண்டும் என்று விரும்புகின்றேன். எல்லா இடங்களிலுமுள்ள மக்கள் இறைவார்த்தையை தெளிவாக கற்க வேண்டுமென பிரார்த்திக்கிறேன். அதினால், மக்கள் இயேசுவை நோக்கி திரும்புவார்கள், இயேசுவைப்போல் வளருவார்கள். இறைவனுக்கே சகல துதியும் கிடைப்பதாக. நாம் அதிக உதவிகளைச் செய்வோம். எனினும் நீங்கள் அதிகம் உழைக்க வேண்டும். வாசிப்பதை வெறுமனே பிரதி பண்ணவேண்டாம். பி.ஆ.பி. என்றால், பிரார்த்தித்தல், ஆயத்தம் செய்தல், பிரசங்கித்தல் என அர்த்தமாகும். நீங்கள் ஒரு பிரசங்கியாக இருந்தால், இந்நூல் இறைவார்த்தையை பேச உங்களுக்கு உதவும். அல்லது நீங்கள் ஒரு ஆசிரியராக இருந்தால், பாடசாலையில் அல்லது சபையில் கற்பிக்க உதவும். பிரசங்கிக்கவோ அல்லது கற்பிக்கவோ முன்பதாக நிறைய காரியங்களை செய்யவேண்டும்.

பிரார்த்தித்தல்: மனித இருதயங்களை எம்மால் மாற்றமுடியாது. இறைவனுக்கு மட்டுமே அது முடியும். மனிதரை விசுவாசிக்கவும் எம்மால் முடியாது. இறைவனால் மட்டுமே அது முடியுமானதாகும். ஆயத்தம் செய்யும்முன் பிரார்த்திக்க வேண்டும். இறைவன் பேசுவதை நீர் கேட்க வேண்டுமென பிரார்த்தியுங்கள். இறைவார்த்தையை கற்பித்தப் பின்னர் பிரார்த்திக்கவேண்டும். நீங்கள் பேசுவதற்கு கேட்போர் மறுவுத்தரவு தரவேண்டும் என பிரார்த்தியுங்கள்.

ஆயத்தமாகுதல்: வேதாகம உரையை ஆயத்தம் செய்வது கடினமானது. பல மணி நேரம் செல்லும். இந்நூல் உதவி செய்கிறது. ஆனால், சகல வேலையையும் உங்களுக்காக செய்யாது. வேதத்தை மெதுவாக வாசிக்க வேண்டும். வாக்கியங்களை கவனமாக படிக்கவேண்டும். கேட்பவர்களுக்கு உதவும்படியாக, என்ன கூறவேண்டும் என்பதை ஆயத்தம் செய்தல் வேண்டும்.

பிரசங்கித்தல்: இறைவார்த்தையை கற்பிக்கும்போது இறைவன் வியத்தகு முறையில் பேசுவார். எமது வாழ்க்கையில் கனி தரும் விதையைப் போன்றதே இறைவனுடைய வார்த்தை - ஆவியின் கனியாகும். இறை வார்த்தையை பேசுவது உற்சாகமூட்டும் செயலாகும். இறை வார்த்தையானது அவருடைய வேலையை செய்யும் என்று இறைவன் வாக்குப் பண்ணியுள்ளார்.

இந்நூலை சிறந்தமுறையில் பயன்படுத்துவதற்கு எப்படி கற்பிப்பதும், பிரசங்கிப்பதும் என்ற பகுதியை வாசியுங்கள். அதன் பின்னர் உபாகமத்துடன் ஆரம்பியுங்கள். ஒவ்வொரு பகுதியையும் கற்பியுங்கள். அது ஒரு கதை. முதலில் ஆரம்பித்து முடிவில் முடிக்கும்போது, அது அர்த்தமுள்ளதாக அமையும்.

“வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கின்றது. தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையும் செய்ய தகுதியானவனாயும் இருக்கும்படியாக, அவைகள் கடிந்து கொள்ளுதலுக்கும், சீர்த்திருத்தலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாய் இருக்கின்றது.” 2தீமோத்தேயு 3:16

அ. துரித உதவி

உபாகமத்திலிருந்து ஒரு உரையை எப்படித் தயார் செய்வது?

1. இறையுதவிக்காக ஜெபிக்கவும்.

2. வேதப் பகுதியை பல தடவைகள் வாசிக்கவும். **பின்னணி**யையும், **குறிப்புக்க**ளையும் பயன்படுத்தவும் வேதவசனங்களைப் படிக்கவும்.

3. இவ்வேதப் பகுதியில் தேவன் கற்பிக்கும் முக்கிய கரு என்ன? **முக்கிய கரு**வைப் பயன்படுத்தவும்

4. உங்கள் மக்களுக்காக ஜெபியுங்கள். இந்த வேதப் பகுதி அவர்களுக்கு எவ்விதம் உதவும் என சிந்தியுங்கள். **செயற்பட** வேண்டிய பகுதியை பயன்படுத்தவும்.

5. உங்கள் சொந்த மொழிநடையில் உரையை தயார் செய்யுங்கள். உதவி குறிப்புக்களை எழுதுங்கள். முக்கிய கருவை கவனத்திற் கொள்ளுங்கள். **கற்பித்தல்** பகுதியிலுள்ள உதவி குறிப்புக்களை பயன்படுத்துங்கள்.

6. நீங்கள் செய்தவற்றை சரிபாருங்கள்:
   - **முக்கிய கரு** தெளிவாக உள்ளதா?
   - வேதாகமம் கற்பிப்பதை அவர்களுக்குக் காட்டுகின்றீர்களா?
   - மக்கள் விளங்கி நினைவில் வைக்கக்கூடிய **சொற் படங்களை** பயன்படுத்துகின்றீர்களா?
   - மக்களுடன் தொடர்புகளை ஏற்படுத்துகின்றீர்களா?
   - என்ன **மாற்றம்** நடைபெறும் என்று எதிர்ப்பார்க்கின்றீர்கள்?

7. உமது வார்த்தைக்கூடாக தேவன் பேச வேண்டும் என ஜெபியுங்கள். அவருடைய சத்தியம் மக்களை மாற்ற வேண்டும் என ஜெபியுங்கள்.

மேலதிக உதவிக்கு அடுத்தப் பகுதியை வாசிக்கவும்.

ஆ. கற்பிப்பதும் பிரசங்கிப்பதும் எப்படி?

வேதத்தை கற்பிப்பது எவ்வாறு என்று இந்தப் பக்கங்கள் விளக்குகின்றன. நீங்கள் ஒரு பிரசங்கத்தையோ அல்லது ஒரு உரையையோ தயார் செய்யும் ஒவ்வொரு முறையும் இது உங்களுக்கு உதவும்.

2தீமோத்தேயு 2:15 பின்வருமாறு கூறுகின்றது. "நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும், சத்திய வசனத்தை நிதானமாய் பகுத்து போதிக்கிறவனாயும், உன்னை தேவனுக்கு முன்பதாக, உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாய் இரு."

வேதத்தைக் கறிபிப்பது பற்றி இந்த வேதவாக்கியம் கூறுகிறது. இது கடினமான வேலை என பவுல், தீமோத்தேயுவுக்கு கூறுகிறார். அநேக ஆசிரியர்களும், பிரசங்கிகளும் ஒரு செய்தியை ஆயத்தப்படுத்த சில நிமிடங்களே செலவிடுகிறார்கள். அது போதாது. அதற்கு கடின உழைப்புத் தேவை. ஒரு மதிலைக் கட்டுகிறவனைப் பாருங்கள். அவன் சோம்பேறியாக ஒழுங்கீனமாக வேலை செய்கிறான். மதில் கீழே விழும். இன்னுமொரு மதிலைக் கட்ட அவன் அழைக்கப்பட மாட்டான்.

- *வேதத்தை கற்பிப்பதற்கு கடினமான உழைப்பு ஏன் முக்கியமானது?*
- *சரியான விதத்தில் வேதத்தை விளக்காவிடில் என்ன நிகழும்?*

நாம் சரியான முறையில் வேதத்தை விளக்காவிடில் தேவன் துக்கமடைவார். மனிதர்களுக்கு உதவி கிடைக்காது. நாம் வேதத்தை கற்பித்தால் மனிதர்கள் நரகத்திலிருந்து காக்கப்படுவார்கள். இயேசுவைப் பற்றிய அறிவில் வளர்ந்து இயேசுவைப்போல் ஆவார்கள். நீங்கள் ஒரு பேச்சையோ பிரசங்கத்தையோ ஆயத்தம் செய்யும்போது, எவ்வளவு நேரம் எடுக்க முடியுமோ அவ்வளவு நேரம் எடுங்கள். ஒரு நல்ல உரையையோ அல்லது பிரசங்கத்தையோ தயார் செய்ய ஒரு நாள் தேவைப்படலாம். ஜெபிக்க மறக்க வேண்டாம். ஜெபிப்பதுதான் முதல் வேலையாகும். தயார் செய்யும்போதும், பேச முன்பதாகவும், பேசிய பின்பும் ஜெபியுங்கள். கற்றுக் கொள்ளுங்கள். ஒவ்வொரு வேதப் பகுதிக்கும் இரண்டு பகுதிகள் உண்டு.

கற்றல், கற்பித்தல்

ஒவ்வொரு வேதபகுதிக்கும் இரண்டு பகுதிகள் உண்டு.

கற்றல் - வேதப்பகுதியை எப்படி விளங்கிக் கொள்ளல்.

கற்பித்தல் - வேதப் பகுதியிலிருந்து பிரசங்கத்தையோ அல்லது பேச்சையோ எவ்வாறு வழங்குதல்.

கற்றல்

ஜெபம் → பின்னணி → வாசித்தல் → குறிப்புகளு் - செயலாற்றுதல் → முக்கிய கரு

கற்பித்தல்

ஆரம்பம் → 2 அல்லது 3 உப குறிப்புகள் → எடுத்துக் காட்டுக்கள் → பிரயோகம் → ஜெபம்

கற்றல்

கற்றல் பகுதியில் பின்வரும் தலைப்புக்களைக் காண்பீர்கள்:

பின்னணி → வாசித்தல் → குறிப்புக்கள் → செயலாற்றுதல் → முக்கிய கரு

வேதாகமம் தேவனுடைய வார்த்தை. வேதாகமத்தை கற்பிக்கும்போது, தேவன் பேசும் பிரதான காரியங்களை மக்கள் கேட்கவேண்டும் என்பதை உறுதிப்படுத்தல் வேண்டும். வேதப் பகுதியின் கருவை கண்டுக் கொள்வதில் **முக்கிய கவனம்** தேவை என்பதே இதன் அர்த்தமாகும். அதுதான் தேவன் கூறும் விடயமாகும். பிரதான விடயத்தை நீங்கள் அறிந்தால், தேவன் சொல்வதை நீங்கள் அறிந்து கொள்வீர்கள். எனவே, பிரதான விடயத்தை எப்படி அறிந்து கொள்வது? இப் படிமுறைகளைப் பின்பற்றுங்கள்.

1. ஜெபம்

தேவ உதவிக்காக ஜெபியுங்கள். தயார் செய்யும்போது ஜெபித்துக் கொண்டிருங்கள். எமது படிப்பிற்கும், எமது கற்பித்தலின் மூலம் பலன் கிடைக்கவும் பரிசுத்தாவியானவரின் உதவி தேவை.

2. பின்னணி

வேதப் பகுதியின் பின்னணி பற்றி சிந்தியுங்கள்.

பின்னணி என்பதன் அர்த்தம் என்ன? இங்கு ஓர் எடுத்துக் காட்டு. ஆகாய விமானத்தின் முதற் படத்தைப் பாருங்கள். ஆகாய விமானம் எங்கே உள்ளது என்பதைப் பற்றி என்ன கூறுவீர்கள்?

அடுத்தப் பக்கத்திலுள்ள, இப்பொழுது இரண்டாம் படத்தைப் பாருங்கள். அதே படம்தான், ஆனால் இப்படத்தில், **பின்னணியைக்** காணலாம். இப்பொழுது ஆகாய விமானம் எங்குள்ளது என கூறுவீர்கள்?

ஆகாய விமானம் தரையிறங்கியுள்ளதை காணமுடியும். அது ஒரு கிராமத்தின் அருகே உள்ளது. அங்கு வானம் கறுத்துள்ளது. அதனால் அது பயணம் செய்வது ஆபத்தானது. அது ஓர் முக்கிய பயணமாகும்.

பின்னணியை விளங்கிக் கொள்வது பெரிய மாற்றத்தை தருகின்றது. எனவே, தேவ வார்த்தையை கற்றுக் கொள்ளும்போது, வேதப் பகுதியின் **பின்னணியைப்** பார்க்க வேண்டும்.

பின்னணிக்கு மூன்று பகுதிகள் உண்டு:

1. இவ் வேதப் பகுதி வேதாகமத்தில் எங்கே வருகிறது?
2. வேதாகமத்தில் எந்த நூலில் இப்பகுதி வருகிறது?
3. இப்பகுதிக்கு முன்னும் பின்னும் வரும் அதிகாரங்களிலும், வாக்கியங்களிலும் என்ன நடைபெறுகின்றன.

எமக்கு இவை தெரியுமாயின் நாம் வேதாகமத்தை சிறந்த முறையில் விளங்கிக் கொள்ள முடியும்.

ஒவ்வொரு உரையும் சில வாக்கியங்களிலிருந்தே அமையும். இவ் வாக்கியங்கள் முழு அதிகாரத்துடனும், முழு நூலுடனும், முழு வேதாகமத்துடனும் பொருத்தப்பாட்டுடன் கட்டமைக்கப்படுவதை சிந்தியுங்கள். உதாரணமாக, உபாமத்தில் நீங்கள் பேசுவதானால், அதன் பின்னணியை புரிந்துகொள்வதற்கு, பின்வருவனவற்றை சிந்திக்கவேண்டும்.

முழு வேதாகமம்

- வேதாகம கதையில் இந்நல் எங்கே வருகிறது?
- இது பழைய ஏற்பாட்டிலா? (இயேசுவின் வருகைக்கு முன்) அல்லது புதிய ஏற்பாட்டிலா? (இயேசுவின் வருகைக்குப்பின்).
- இந்நூல் சரித்திரத்தின் எக்காலப் பகுதியில் அமைகிறது? (வேதாகமமானது உலகின் உண்மை சரித்திரத்தைக் கூறுகின்றது).
- துணைக் குறிப்புக்களும், அடிக்குறிப்புக்களும் இப்பகுதியானது எவ்விதம் முழு வேதாகமத்துடன் பொருந்துமென காண உதவும்.

முழு நூல்

- மோசே யாருடன் பேசிக் கொண்டிருந்தார்?
- மோசே பேசும்போது மக்கள் எங்கே இருந்தார்கள்?
- மோசே இவ்விடயங்களை ஏன் பேசினார்?

உமது வேதாகமத்திலுள்ள முன்னுரைப் பகுதியில், பின்னணி குறித்த உதவியினை காணமுடியும். 17ம் பக்கத்தில், “உபாகமத்தைப் பற்றி” என்ற பகுதியில் உதவியினை பெறமுடியும். உதாரணமாக, மோசே இஸ்ரவேல் ஜனங்களுடன் பேசுவதைக் காணலாம். வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பூமியின் விளிம்பில் அவர்கள் நின்றார்கள். தேவனை நம்பவும், வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பூமியை அடையவும், மோசே மக்களை உற்சாகப்படுத்தினான்.

நீங்கள் பேசும் வேதப் பகுதிக்கு முன்னுள்ள பகுதி.

- இப்பகுதி நூலில் எங்கே வருகிறது?
- இதற்கு முன்னுள்ள பகுதியின் பிரதான விடயம் என்ன?

உதாரணமாக, உபாகமம் 2:1-3:11 வரையுள்ள பகுதியிலிருந்து பிரசங்கம் செய்வதாயின், 1:34-45 வரையுள்ள பகுதியில் என்ன நடை பெற்றது என அறிய வேண்டும். அதன் மூலம் ஏன் மக்கள் காதேஷ் பார்னியாவிலிருந்து திரும்பி வந்தார்கள் என்பதை விளங்கிக் கொள்ள முடியும் (உபாகமம் 2:1).

3. வாசித்தல்

வேதாகமப் பகுதியை 3 தடவை வாசியுங்கள், மெதுவாகவும், கவனமாகவும் வாசியுங்கள். சத்தமிட்டு வாசிப்பது சிறந்தது. வெவ்வேறு மொழி பெயர்ப்புக்களிலிருந்து வாசியுங்கள். மூன்றாவது முறை வாசிக்கும்போது, கண்களாலும், காதுகளாலும், மூக்கினாலும் சைகைகளினாலும் வாசியுங்கள். நீங்கள் அங்கே இருப்பதாக கற்பனை செய்யுங்கள். எதைப் பார்ப்பீர்கள், கேட்பீர்கள், முகர்வீர்கள், உணர்வீர்கள்?

4. விளங்கிக் கொள்ளல்

வேதப்பகுதியைப் புரிந்து கொள்வதற்காக வேலையாற்றுங்கள். ஒரு பகுதியை கற்பிப்பதானால், அப்பகுதி கூறுவதை தெளிவாக புரிந்து கொள்ளுதல் வேண்டும். ஆகாய விமானத்தின் இப்படத்தை கவனமாக நோக்குக்குங்கள். என்ன நடைபெறுகிறது என்பதை உங்களால் அறிந்து கொள்ள முடிகிறதா?

அதே விதமாக இந்த வேதப் பகுதி என்ன சொல்கிறது என்பதை கவனமாக பார்க்கவேண்டும். இப்போது மீண்டும் படத்தை பாருங்கள். அந்தப் படம் எதைச் சொல்லுகிறது? உதாரணமாக, நோயுற்ற அந்த மனிதன் என்ன நோயினால் அவஸ்தைப்படுகிறான் என்பது உமக்குத் தெரியாது. அதேவிதமாக அந்த வேதப் பகுதி சொல்லாத ஒன்றை ஊகிக்க வேண்டாம். ஒவ்வொரு வாக்கியமாக வாசியுங்கள். அதன் பின்பு அவ்விடயத்தை உங்கள் சொந்த மொழியில் கூறுங்கள். இது இந்த வேதப் பகுதியை புரிந்து கொள்ள உதவும்.

கேட்க வேண்டிய கேள்விகள்:

யார்? இப் பகுதியில் யார் உள்ளனர்?

- ஒவ்வொருவரைப் பற்றியும் நீர் என்ன அறிந்து கொண்டீர்?
- அவர்கள் எங்கே உள்ளார்கள்?
- தேவனைப் பற்றி இப்பகுதி என்ன கூறுகின்றது?

என்ன? இது எதைப் பற்றியது?

- ஏதாவது சொற்கள், சிந்தனைகள் மீண்டும், மீண்டும் வருகின்றதா?
- இவை உன்னால் புரிந்துக் கொள்ள முடியாதவையா?
- அப்படியானால், ஜெபித்து வாக்கியங்களை மீண்டும், மீண்டும் வாசியுங்கள். முழு அதிகாரத்தையும் வாசித்து தெளிவு கிடைக்கின்றதா? என்று பாருங்கள். இந்நூலிலுள்ள சில குறிப்புக்கள், அல்லது வேதாகமத்திலுள்ளவை உங்களுக்கு உதவும்.

ஏன்? ஏன் இது சொல்லப்பட்டுள்ளது?

- எழுத்தாளர், வாசகர்கள் எதைச் செய்யவேண்டும் என கூறுகிறார்? உதாரணமாக உபாகமத்தில், இஸ்ரவேல் மக்கள் எதைச் செய்யவேண்டுமெனக் கூறுகிறார்?
- தேவ பிள்ளைகளுக்கு என்ன மாறுதல்களை கொண்டு வரும்? உபாகமத்தின் முடிவில் இஸ்ரவேல் ஜனங்கள் தேவ கட்டளைக்குக் கீழ்ப்படிந்ததாக காண்கிறோம். அவர்கள் தேவனை நம்பி, யோசுவாவைப் பின்பற்றி, வாக்குப்பண்ணப்பட்ட பூமிக்கு வந்தார்கள்.

5. பிரதான விடயத்தைக் கண்டு கொள்ளுங்கள்

பிரதான விடயத்தைக் கண்டுக் கொள்ளுங்கள். ஒவ்வொரு வேதப் பகுதியிலும், தேவன் பெரிதாக கூறுவதே **பிரதான விடயமாகும்**. இவ்வேதப் பகுதியில் நீங்கள் இதைக் கண்டு கொள்ள வேண்டியது முக்கியமானதாகும். சில பிரசங்கிகள், வேதப் பகுதிகளை வாசிப்பதற்கு முன்னமே, அவர்கள் கூறும் பெரிய விடயத்தை தீர்மானித்து விடுவார்கள். பணத்தைக் கொடுப்பதைப் பற்றி பிரசங்கி ஒருவரின் பிரசங்கத்தைக் கேட்டேன். ஆனால், அவர் பிரசங்கித்த வேதப் பகுதியில் பணம் கொடுப்பதைப் பற்றி எதுவும் குறிப்பிடவில்லை. அவர் **பிரதான விடயத்தை** இழந்துவிட்டார்.

இந்தப் பட்டணத்தைப் பற்றி அநேக விடயங்களை கூறலாம். உதாரணமாக:

- ஆகாய விமானம் சிறிதானது.
- இவ் விமானத்தில் மூன்று சில்லுகளும், பல ஜன்னல்களும் உண்டு.
- ஏழு நபர்கள் காணப்படுகிறார்கள்.

ஆனாலும், இவை எதுவுமே இப் படம் கூறக்கூடிய பெரிய விடயத்தைக் கூறவில்லை. சுகவீனமுற்ற ஒரு மனிதன் காப்பாற்றப்பட்டு, மேலதிக பராமரிப்புக்காக எடுத்துச் செல்லப் படுகிறான் என்பதே பெரிய விடயமாகும்.

சிலவேளைகளில் எமது பிரசங்கங்களும் பேச்சுக்களும் அவ்வாறானவையே. உண்மையான காரியங்களை அதிகம் கூறுவார்கள். ஆனால், அவர்கள் பிரதான விடயத்தை விட்டுவிடுவார்கள். சில வேளைகளில் வேதப் பகுதியிலிருந்து எல்லா விடயங்களையும் கூற விரும்புகிறோம். மிகவும் முக்கிய விடயம் என யாரும் அறியாத பல விடயங்களை கூறுகிறோம்.

கேட்கவேண்டிய முக்கிய வினா: இவ்வாக்கியங்கள் கூறும் பிரதான விடயம், பெரிய விடயம் யாது? என்பதாகும். உதாரணமாக உபாகமம் 1:19-23ல் இருந்து பிரசங்கம் பண்ணும்போது, ஒரு நீண்ட பிரயாணம் பண்ணும் முன்பு, ஒருவரை அனுப்பி அத்தேசத்தை பார்வையிட வேண்டும் என கூறுவோமானால், அது அப்பகுதியின் பிரதான விடயம் அல்ல. எமக்கு பலமான எதிரிகள் இருக்கிறார்கள். தேவனுடைய வாக்குத்தத்தங்களை விசுவாசிப்பதே இப் பகுதியின் கருவாகும். பிரதான விடயத்தைக் கண்டு கொள்வதற்கு, நீர் எழுதிய சகல குறிப்புக்களையும், செயலாற்றும் பகுதியையும் வாசியுங்கள். கூறப்படும் பெரிதான விடயங்களை சிந்தியுங்கள். மீண்டும், மீண்டும் வரும் சொற்களையும் கருத்தாய் பொருளையும் தேடுங்கள்.

இப்பகுதி எதைக் கூறுகிறதென ஒரு வாக்கியத்தில் எழுதவும். உதாரணமாக, உபாகமம் 1:19-33ல் பிரசங்கம் பண்ணுகையில், நீர் இவ்விதம் எழுதலாம். பலமான எதிரிகளுக்கு பயந்து, தேவனை நம்ப கடினமாகும் வேளையில், தேவன் அதிக பெலமுள்ளவர் என்பதை நினைவில் கொள்ளவேண்டும்.

பிரதான விடயத்தை எழுதுங்கள். பின்னர் மீண்டும் வேதப் பகுதியை வாசியுங்கள். எந்தொரு முக்கிய விடயத்தையும் விட்டுவிடவில்லை என்பதை உறுதிப்படுத்துங்கள்.

திட்டம்

உமது பேச்சை ஆரம்பிப்பதற்கு முன்பதாக, நீர் சொல்வதை திட்டமிடல் வேண்டும். ஐந்து விடயங்கள் உண்டு என்று நாங்கள் எண்ணுகிறோம்.

பிரதான விடயம் துணைக் கருத்துக்கள் எடுத்துக்காட்டு பிரயோகம் மீளாய்வு

இப்போது நீங்கள் வேதப்பகுதியை புரிந்துள்ளீர்கள். உம்மிடம் சில குறிப்புக்களும், பிரதான விடயமும் உள்ளது. ஆனால், இது பிரசங்கமோ பேச்சோ அல்ல. பிரசங்கத்தையோ, பேச்சையோ திட்டமிடல் வேண்டும்.

பிரதான விடயத்தை தாளின் மேல் பகுதியில் எழுதுங்கள். நல்ல செய்தியை தயாரிக்க இது உதவும்.

அநேக பிரசங்கிகள் செய்தியை தயார் செய்வதில்லை. சிலர் ஒரே விடயத்தை மீண்டும் மீண்டும் கூறுவர். அது எரிச்சலூட்டும். சுற்றி சுற்றி காரியங்களை கூறுதல் யாருக்கும் உதவி செய்யாது. ஆகாய விமானமானது வட்டமடித்து தரையிலிறங்காமல் இருப்பது போலாகும். மற்றவர்கள் பேசுவதற்கு அதிகம் உண்டு, ஆனால், திட்டமிடல் கிடையாது.



இது கேட்பதற்கு கடினமாக இருக்கும். பேருந்து ஒன்றில் நீங்கள் இருக்கிறீர்கள். அது பல இடங்களுக்கும் போகிறது. ஆனால், நீங்கள் போக வேண்டிய இடத்தை அடையவில்லை. இரண்டு, மூன்று அல்லது நான்கு துணைக் கருத்துக்களை அல்லது தலைப்புக்களை வைத்து உமது செய்தியை திட்டமிடுவது நல்ல வழியாகும்.

இது பின்பற்றுவதற்கு இலகுவாகும். உங்களுக்கு பிடித்தமான உணவிற்காக பயன்படுத்தும் செயல்முறை உபாயத்தைப் போன்றது. முதலில் ஒன்றை சேர்த்து, பின்னர் மற்றையது, அதன் பின்னர் மற்றையது; உமது வயிற்றை நிரப்பி நீர் திருப்தியடையும் வரை அதைச் செய்வதைப் போன்றதே.

1. துணைக் கருக்கள்

துணைக் கருக்கள் பிரதான கருவை விளக்குபவையாகும்.
துணைக் கருக்கள் வேதப் பகுதியில் ஒரு பகுதியை விளக்குபவையாகும்.
துணைக் கருக்கள் சுருக்கமானவை, அதனால் கேட்போரால் நினைவில் வைக்க முடியும்.

வேதப் பகுதியை எவ்விதம் பிரிப்பீர்கள் என்று சிந்திக்கவும்:

- ஒவ்வொரு துணைக் கருவுடனும் எவ்வாக்கியங்கள் இணையும்?
- எல்லா வாக்கியங்களும் உள்வாங்கப்பட்டதா?
- பிரதான கருவை மேலும், மேலும் தெளிவூட்டத்தக்கதாக, துணைக் கருக்களை எவ்விதம் ஒன்றோடொன்று தொடர்புப்படுத்துவீர்?
- துணைக்கருக்கள் சிறியதாகவும், நினைவில் கொள்ளத்தக்கதாகவும் உள்ளதா?

உதாரணமாக, உபாகமம் 4:9-20.

பிரதான கரு: தேவனுக்கு உருவம் இல்லை. விக்கிரகங்களை வழிபட வேண்டாம்.

துணைக்கருக்களாவன:

1. ஒரேபில் (சீனாய் மலை) நடந்ததை நினைவில் வையுங்கள் (4:9-14)
2. விக்கிரகங்களைச் செய்தல் வேண்டாம் (வச. 15-20)
3. தேவ வார்த்தைக்கு செவி சாயுங்கள் (வச. 9).

எல்லாத் துணைக் கருக்களும்:

- சிறிதானவை
- நினைவில் கொள்ளக் கூடியவை
- சில வாக்கியங்களின் அர்த்தத்தை தருபவை.

2. எடுத்துக் காட்டு அல்லது கதை கூறுதல்:

எடுத்துக் காட்டு என்பது, கேட்பவர்கள் பிரதான கருவை விளங்கத்தக்கதாக கையாளப்படும் சொல் ஓவியம் ஆகும். சில வேளைகளில் வேதப் பகுதியிலும் எடுத்துக் காட்டுக்கள் காணப்படலாம். சிலவேளைகளில் நீங்கள் உங்கள் சொந்த எடுத்துக் காட்டுக்களை சிந்திக்கலாம். எடுத்துக் காட்டுக்கள் இலகுவாக புரிந்து கொள்ளத்தக்கதாக இருப்பதை உறுதிப்படுத்தவும். உதாரணமாக, உபாகமம் 16:1-17 இன் பிரதான கரு: தேவ ஜனங்கள், தேவன் அவர்களுக்கு செய்தவற்றை நினைவு கூர்ந்து, அதைக் கொண்டாட வேண்டும். பிரதான செய்தியானது: “நினைவு கூருதலாகும்” உமது எடுத்துக் காட்டானது அல்லது கதையானது நினைவுக் கூருதல் எவ்வளவு முக்கியமானது என்பதை காட்டத் தக்கதாக அமைதல் வேண்டும். எப்படி நீங்கள் நடந்ததை நினைவு கூர்ந்து கொண்டாடினீர்கள் என்பதை, செய்தியை கேட்போருக்கு கூறுங்கள். உதாரணமாக உங்கள் சபை ஆரம்பித்ததை அல்லது உங்கள் நாட்டிற்கு சுதந்திரம் கிடைத்ததை அவ்வாறு கூறலாம். நீங்கள் ஒரு கட்புலனுதவி பொருளை அல்லது படத்தைப் பயன்படுத்தலாம். ஒரு படத்தை வரையலாம் அல்லது ஒரு சிறு நாடகத்தை நடிக்கலாம். இவை பிரதான கருவை கற்பிக்க உதவுவதை எப்போதும் உறுதிப்படுத்துங்கள்.

3. பிரயோகியுங்கள்:

நாங்கள் தேவனின் வார்த்தையை கற்பிக்கும் போது தேவனின் வார்த்தை எங்களுடன் பேச வேண்டுமென்றும் அதை கேட்பவர்கள் அனைவரையும் மாற்றவேண்டுமென்றும் நாங்கள் விரும்புகின்றோம். எனவே இந்த பகுதியின் பிரதான கருப்பொருளானது எவ்வாறு நீங்கள் பேசப் போகும் மக்களுக்கு பிரயோகப்படும் என்பதை நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

நீங்கள் பேசப் போகும் பலவிதமான மக்களை குறித்து சிந்தித்து பாருங்கள் இதன் பிரதான கருப் பொருளானது எவ்வாறு பின்வரும் நபர்களோடு பேசுகின்றது?

- சிறுவர்கள்?
- புதிய விசுவாசிகள்?
- அவிசுவாசிகள?
- சபைத் தலைவர்கள்?

நீங்கள் பேசும் போது உங்களுக்கு செவிமடுக்கின்றவர்களுக்கு இருக்கும் கேள்விகளை குறித்து சற்று யோசித்து பாருங்கள். உதாரணமாக:

- எதிர் காலத்தில் இது எனக்கு எவ்வாறு பயன்படும்?
- இதை நான் இந்த திருச்சபைக்குள் எவ்வாறு நடைமுறைப்படுத்துவது?
- என் குடும்பத்தில் இதற்கு எவ்வாறு கீழ்ப்படிவேன்?
- எனது சமூகத்தில் அல்லது கிராமத்தில் எவ்வாறு சாட்சியாக வாழ்ந்து காட்டுவேன்?
- நான் இயேசுவை முழுமனதாய் பின் தொடருவதற்கு இது எவ்வாறு உதவி செய்கின்றது?
- நான் கவனம் கொள்ள வேண்டிய ஆபத்துக்கள் எவை?

நீங்கள் ஒவ்வொரு துணைக் கருத்துக்கு பின்னும், முடிவிலும் செய்தியை பிரயோகிக்கலாம். நீங்கள் வெறுமனே முடிவில் மாத்திரம் செய்தியை பிரயோகிப்பீர்கள் என்றால் சிலர் அதை தவற விடக்கூடும்.

நீங்கள் இப்பொழுது உங்கள் பிரசங்கத்தை அல்லது சொற்பொழிவை எழுதுவதற்கு தயாராகிவிட்டீர்கள்.

4. மீளாய்வு

நீங்கள் கற்றுக்கொடுக்கும் முன்னர் நீங்கள் எழுதியவற்றை மீளாய்வு செய்துபார்த்தல் வேண்டும்.

நீங்கள் ஆயத்தப்படுத்தியதை சோதித்து பாருங்கள்:

- பிரதான கருத்து தெளிவாக உள்ளதா?
- அந்த பகுதியில் வேதம் கற்றுக் கொடுக்கும் காரியத்தை காண்பித்துள்ளீர்களா?
- வசனங்களை தெளிவாக விளக்கி உள்ளீர்களா?
- மக்கள் செய்தியை புரிந்துகொள்ளவும் ஞாபகத்தில் வைத்து இருக்கவும் உதவும் முகமாக நீங்கள் சித்திரங்களை பயன்படுத்துவதை குறித்து சிந்தித்து உள்ளீர்களா?
- நீங்கள் பேசுவதை மக்கள் பின்பற்ற வேண்டி உங்கள் பிரசங்கத்திற்கு சீரான ஒரு ஓட்டத்தை கொண்டுள்ளீர்களா?
- உங்களுக்கு செவிமெடுப்பவர்களின் வாழ்க்கையில் என்ன மாற்றத்தை கொண்டு வர வேண்டுமென்று தேவனிடம் கேட்கின்றீர்கள்?

நீங்கள் பேசும் போது முழுமையாக எழுதிய ஒரு பிரசங்கத்தை பயன்படுத்த போகின்றீகளா அல்லது சிறிய குறிப்புகளை பயன்படுத்த போகின்றீர்களா என்று முடிவு செய்யுங்கள். எப்பொழுதும் உங்களுக்கு செவிமெடுப்பவர்கள் புரிந்துகொள்ளக்கூடிய மொழி பாணியை பயன்படுத்துங்கள்.

கற்பித்தல்

கற்பித்தல் பகுதியில் நீங்கள் அநேகமாக பின்வரும் தலைப்புகளை காண்பீர்கள்:

ஆரம்பம் **2 அல்லது 3 உப கருத்துக்கள்** **ஜெபம**

சில வேளைகளில் இதில் **பிரயோகித்தல்** அல்லது **எடுத்துக்காட்டல்** ஆகிய பகுதிகள் அடங்கும்.

வேதப் பகுதியை மையமாக வைத்து ஒரு பிரசங்கத்தை ஆயத்தப்படுத்த இந்த பகுதி உங்களுக்கு உதவியாக இருக்கும். இது முழுமையான ஒரு பிரசங்கம் அல்ல, இதில் உங்களின் பங்களிப்பும் இருக்க வேண்டும். ஆனால் இது உங்களுக்கு சில யோசனைகளை கொடுத்து உதவும். நீங்கள் இந்த யோசனைகளை எடுத்து உங்களுக்கு சிறந்த வழியில் அதனை பயன்படுத்த வேண்டும்.

உங்கள் பிரசங்கமானது எப்பொழுதும் பிராதன கருப் பொருளிலே தங்கியுள்ளது என்பதை மறக்க வேண்டாம்.

1. ஆரம்பியுங்கள்

உங்கள் பிரசங்கத்தை எவ்வாறு ஆரம்பிக்கப் போகின்றீர்கள் என்பதை குறித்து நன்கு சிந்தியுங்கள். உங்கள் மக்களிடம் உங்கள் பிரதான கருப்பொருள் என்னவென்பதை சொல்லுவது நல்லது. அவர்கள் ஏன் இதை குறித்து செவிமடுக்க வேண்டுமென்பதையும் இந்தப் பகுதி எவ்வாறு அவர்களுக்கு உதவி செய்யும் என்பதையும் கூறுங்கள். நீங்கள் ஒரு கேள்வியை கேட்டு அதற்கு உங்கள் பிரசங்கத்தில் பதில் தருவதாக கூறலாம். அவர்கள் உங்களுக்கு செவிசாய்க்கும் பொருட்டு நீங்கள் அவர்களின் ஆர்வத்தை தூண்ட வேண்டும்.

உதாரணமாக உபாகமம் 8:1-20 இன் பிரதான கருப்பொருள்: தேவன் உங்களை வனாந்திரத்தில் தாழ்மைப்படுத்தினார் என்பதை மறக்க வேண்டாம். அதே போல் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திலும் தாழ்மையாக இருங்கள் என்பதாகும்.

நீங்கள் தொடங்கும் முகமாக இவ்வாறான ஒரு கேள்வியை கேட்கலாம்.

- தீமையான அல்லது நன்மையான நிலைமைகள் மக்களை தேவனிடமிருந்து விலகிச் செல்ல காரணமாக இருக்குமா?

நீங்கள் அவர்களுக்கு அது தொடர்பான ஒரு கதையை கூறலாம்.

- ஒரு மனிதன் தனது மனைவியையும் தனது தொழிலையும் இழக்கின்றான், அதனால் கசப்புண்டு தேவனிடம் முறையிடுகின்றான். அவன் தனது விசுவாசத்தை இழக்கின்றான். அதே நேரம் ஒரு மனுஷி தனது வாழ்வு நல்லதென்று காண்கின்றாள், அவள் இன்னும் அதிகமாக பெற்று செல்வமுள்ளவளாக மாறுகின்றாள். ஆனால் அவளும் தேவனை விட்டு தூரப் போகின்றாள்.

2. துணை கருத்துக்கள்

துணை கருத்தக்கள் உடலின் எலும்புகளை போன்றதாகும். அதுவே உங்களை நிமிர்ந்து நிற்க உதவி செய்கின்றது. அதே நேரம் உங்களுக்கு தசையும் தேவை. வசனங்களை விளங்கப்படுத்துவதற்கு நீங்கள் நேரம் எடுக்க வேண்டும். நீங்கள் வேத வசனங்களை விளங்கப்படுத்துகையில் அவற்றை சத்தமாக வாசித்தல் நல்லதாகும். அத்துடன் மக்களும் தங்கள் வேதங்களில் அவ்வசனங்களை பின்பற்ற ஊக்கமளியுங்கள்.

இந்த புத்தகம் உங்களுக்கு சில யோசனைகளை கொடுக்கும், ஆனால் நீங்களும் உங்கள் சொந்த சிந்தனைகளை சேர்க்க வேண்டும். உங்கள் மக்களுக்கு எது நல்லதென்றும் அவர்கள் தெளிவாக புரிந்து கொள்ளுவதற்கு எது உதவியாக இருக்கும் என்றும் சிந்தியுங்கள்.

நீங்கள் பேசுவது வேதத்தை சார்ந்தது என்பதை மக்கள் புரிந்துகொள்ளுமாறு ஊர்ஜிதப்படுத்திக்கொள்ளுங்கள்.

3. வார்த்தை வடிவங்கள் மூலம் விளக்குதல்

கற்பித்தல் பகுதியில் விளக்கி கூறுதல் பகுதி ஒன்று காணப்படலாம். நீங்கள் மற்றவர்களை குறித்தும் சிந்திக்க வேண்டும் இயேசுவும் இதை மனதில் கொண்டுதான் உவமைகளை பயன்படுத்தி பேசினார். இயேசு பேசும் போது, இவ்வாறு கூறினார் "தேவ இராஜ்யம் இவைகளை போன்றது" என்று கூறி பின்பு ஒரு உவமையை கூறினார். இயேசு வார்த்தைகளை கொண்டு விடயங்களை சித்தரித்துக் காட்டினார். உதாரணமாக அவர் கள்ள போதகர்களை பயங்கரமான ஓநாய்கள் என்று சொல்லுவதை பார்க்கலாம். பவுல் கிறிஸ்தவ வாழ்வை ஒரு ஓட்டப் பந்தயத்துக்கு ஒப்பிடுவதை பார்க்கலாம், சில நேரங்களில் ஒரு நீண்ட கதையைப் பார்க்கிலும் வார்த்தைகளை கொண்டு சித்தரிப்பது சிறந்ததாகும்.

4. பிரயோகியுங்கள்

உங்களுக்கு செவிமடுப்பவர்களுக்கு வேதப் பகுதியை நீங்கள் பிரயோகப்படுத்தல் முக்கியமானதாகும். இதை நீங்கள் முடிந்தளவு தெளிவுபடுத்தல் அவசியமாகும். உங்களுக்கு செவிமடுப்பவர்கள் சிந்திக்கும்படியாக அல்லது செயற்படுத்தும்படியாக சில காரியங்களை வழங்குங்கள். மக்கள் மாறுவதையும் வளர்வதையுமே நாங்கள் விரும்புகின்றோம் என்பதை மறந்து விடாதீர்கள். அதே நேரம் சமூகமளித்து இருக்கும் அவிசுவாசிகளுக்கும் குறிப்பாக சில காரியங்களை கூற மறக்க வேண்டாம். உங்களுக்கு செவிமடுக்க வெவ்வேறு மக்கள் குழுக்கள் இருப்பார்கள்.

- விசுவாசம் நிறைந்தவர்கள்.
- விசுவாசத்தோடு போராடிக்கொண்டிருப்பவர்கள்.
- கிறிஸ்தவர்களாக விரும்புகின்ற ஆனால் எவ்வாறு என்று அறியாத அவிசுவாசிகள்.
- தங்களுக்கு இரட்சிப்பு தேவையில்லை என்று எண்ணுகின்ற அவிசுவாசிகள்.

ஒவ்வொருவருக்கும் நீங்கள் ஒவ்வொரு காரியங்களை கூற முயற்சி செய்யுங்கள்! எல்லோரும் ஏதோ ஒரு செய்தியை கேட்க வேண்டும். உதாரணமாக நீங்கள் உபாகமம் 4:21-31 ஐ கற்றுக்கொடுக்கும் போது:

- விசுவாசம் நிறைந்தவர்களுக்கு: நீங்கள் தேவனுக்கு சொந்தமானவர்கள். தேவன் உங்களை குறித்து எரிச்சல் உள்ளவராய் இருக்கின்றார், நீங்கள் அவரை பார்க்க பணத்தை நேசிப்பதை அவர் விரும்புவதில்லை.
- விசுவாசத்தோடு போராடிக்கொண்டிருப்பவர்களுக்கு: தேவன் இரக்கமுள்ளவர், நீங்கள் பிழை செய்திருந்தாலும் தேவன் உங்களை மன்னிப்பார். அவர் உங்களை நேசிக்கின்றார்.
- கிறிஸ்தவர்களாக விரும்புகின்ற ஆனால் எவ்வாறு என்று அறியாத அவிசுவாசிகளுக்கு: தேவன் இரக்கம் நிறைந்தவர், அவர் தவறுகளை மன்னிக்கின்றவர்~ மோசமான தவறுகளைகூட. நீங்கள் உங்கள் பாவ வழிகளைவிட்டு மனம் திரும்பி தேவனை நோக்கி செல்லும் போது உங்களை அவர் மன்னிப்பார்.
- தங்களுக்கு இரட்சிப்பு தேவையில்லை என்று எண்ணுகின்ற அவிசுவாசிகளுக்கு: தேவன் எரிச்சல் உள்ள தேவன். விக்கிரகங்களை ஆராதிக்கும் மக்களை வெறுக்கின்றவர், அவர் அவர்களை நியாயத்தில் கொண்டு வருவார்.

நீங்கள் ஒரு வேதப் பகுதியை பிரயோகப்படுத்தும் போது அது எவ்வாறு முதல் வாசகர்களுக்கு அல்லது மக்களுக்கு பிரயோகப்படுத்தப்பட்டது என்பதை அடிப்படையாக கொண்டு பிரயோகப்படுத்துங்கள். உதாரணமாக உபாகமம் 5:12-15

- சில மக்கள் சோம்பேறிகள். அவர்கள் 6 நாட்கள் வேலை செய்யவேண்டுமென்று வேத சட்டம் கூறுகின்றது. நாங்கள் எதை இலக்காக கொண்டு ஆறு நாட்கள் கடினமாக உழைக்க வேண்டும்.
- சில மக்கள் பேராசை கொண்டவர்களாக இருப்பதால் அவர்கள் அதிகமாக வேலை செய்வார்கள். நாங்கள் ஓய்வு எடுத்து, எங்களுக்கு கொடுக்கப்பட்ட வாழ்க்கையும் எங்களை சுற்றி இருக்கும் உலகத்தையும் நாங்கள் அனுபவித்து மகிழ வேண்டுமென்று தேவன் கூறுகின்றார்.

5. முடிவு

உங்கள் பிரசங்கத்தை எவ்வாறு நிறைவு செய்யப் போகின்றீர்கள் என்று சிந்தியுங்கள். உங்களுக்கு செவிமடுப்பவர்களுக்கு பிரதான கருப்பொருளை நினைவுபடுத்துங்கள். அவர்கள் நினைவில் வைத்துக்கொள்ள உதவி செய்யுங்கள்.

நீங்கள் தொடர்ந்து கூட்டதை கொண்டு செல்லும் முன்னர், சில நேரங்களில் உங்கள் பிரசங்கத்தை முடித்த பின்னர் உங்களுக்கு செவிமெடுத்தவர்களுக்கு அவர்கள் செவிமடுத்த விடயங்களை குறித்து சிந்திக்கவும் அதை குறித்து ஜெபிக்கவும் நேரம் கொடுத்தல் முக்கியமாகும்.

6. ஜெபியுங்கள்

ஜெபியுங்கள், இடைவிடாமல் ஜெபியுங்கள்.

- தேவன் முதலாவது உங்களை மாற்ற வேண்டுமென்று ஜெபியுங்கள்.
- உங்கள் மக்களிடம் பேசவதற்கு தேவன் உங்கள் வார்த்தைகளை பயன்ப்படுத்த வேண்டுமென்று ஜெபியுங்கள்.
- தேவனின் சத்தியம் உங்கள் மக்களை மாற்ற வேண்டுமென்று ஜெபியுங்கள்.

இ. உபாகமம் பற்றிய சில தகவல்கள்

இறுதி பிரசங்கம்

மோசே தான் இறப்பதற்கு முன்பதாக வழங்கிய இறுதி பிரசங்கமே உபாகமம் ஆகும். மோசே, இஸ்ரவேலில் உள்ள அனைத்து மக்களுக்கும், வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட கானான் தேசத்துக்கு வெளியே இருக்கும் ஒரு மலையின் மேலிருந்து பிரசங்கம் பண்ணுகின்றார்.

இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்தைவிட்டு புறப்பட்டு வந்து 40 வருடங்கள் வனாந்திரத்தில் கழித்துவிட்டார்கள் (யாத்திராகமம் 14:37-41). வாக்குப்பண்ணப்பட்ட தேசத்தினுள் செல்லுவதற்கு இஸ்ரவேல் மக்கள் மறுத்ததால், எகிப்தில் இருந்து வந்த சந்ததியினர் வனாந்திரத்திலேயே மரித்துப் போவார்கள் என்று தேவன் கூறுவதை காணலாம். பின்பு அவர்களின் பிள்ளைகளான அடுத்த சந்ததியினரே வாக்குப்பண்ணப்பட்ட தேசத்துக்குள் நுழைவார்கள் (எண்ணாகமம் 13-14).

வனாந்திரத்தில் இருந்த ஒவ்வொரு வேளையும் இஸ்ரவேல் மக்கள் தேவனுக்கு கீழ்ப்படியாது, அவருக்கு விரோதமாக செயற்பட்டார்கள். (யாத்திராகமம் 15:22-26, 16:1-3, 17:1-7; எண்ணாகமம் 11:1-3, 14:1-4, 20:2-5, 25:1-3)

மோசே எதனை செய்வதற்கு விருப்பமாக இருக்கின்றார்?

மோசேயின் மரணம் அண்மித்துவிட்டது. யோசுவா இஸ்ரவேலின் அடுத்த தலைவனாவான். யோசுவாவே இஸ்ரவேல் மக்களை வாக்குப்பண்ணப்பட்ட தேசத்துக்குள் வழிநடத்திச் செல்லப் போகின்றான். எனவே மோசே ஒரு நீண்ட பிரசங்கத்தை வழங்குகின்றார். அவருக்கு நான்கு காரியங்களை செய்ய விருப்பமாய் இருந்தது

1. அவர்களின் கடந்த காலத்தை அவர்களுக்கு நினைவுப்படுத்துவதற்கு.
2. தேவனில் அவர்கள் வைத்திருக்கும் விசுவாசத்தை அதிகரிப்பதற்கு
3. தேவ சட்டங்களை அவர்கள் கைக்கொள்ளும்படிக்கு உதவி செய்வதற்கு
4. தேசத்தை கைப்பற்ற அவர்களை உற்சாகப்படுத்துவதற்கு.

உபாகமமே அந்த பிரசங்கம்.

அந்த தேசம் வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட தேசம் என்று அழைப்பதற்கான காரணமானது, 600 வருடங்களுக்கு முன்பதாக, தேவன் இந்த தேசத்தை வழங்குவதாக ஆபிரகாமுக்கு வாக்குத்தத்தம் பண்ணியிருந்தார்.(ஆதியாகமம் 12:1-7). தேவன் தனது வாக்குறுதிகளுக்கு உண்மையுள்ளவர் என்பதை உபாகமம் தெளிவுபடுத்தி காட்டுகின்றது.

மக்கள் ஏன் தேவனின் சட்டங்களுக்கு கீழ்ப்படிய வேண்டும்?

உபாகமம் கீழ்ப்படியவேண்டிய சட்டங்களை குறித்தே அதிகமாக பேசுகின்றது, ஆனால் இந்த புத்தகம் எங்கள் கவனத்தை எப்போழுதுமே தேவனின் பக்கம் திருப்பச் செய்யும். மூன்று காரணங்களுக்காக இஸ்ரவேல் மக்கள் தேவ சட்டங்களை தங்கள் இருதயத்தில் இருந்து கீழ்ப்படியவேண்டியிருந்தது.

1. கடந்த காலங்களில் இஸ்ரவேல் மக்களுக்காக தேவன் செய்த காரியங்களின் நிமித்தம்.
2. தேவன் தேவனாய் இருப்பதன் நிமித்தம்.
3. தேவனின் வாக்குத்தத்தங்களும் எதிர்காலத்தை குறித்த அவரின் எச்சரிப்புகளின் நிமித்தம்.

உபாகமம் எங்களுக்கு வழங்கும் செய்தி என்ன?

உபாகமம் இஸ்ரவேல் மக்களை நோக்கி பேசுகின்றது. எதிர் கால சந்ததியினர் அதைப் படித்து தேவன் அவர்களுடனும் பேசுவதை உணரவேண்டுமென்று மோசே தனது பிரசங்கத்தை ஒரு புத்தகமாக எழுதி வைத்தார்.

இதே புத்தகம் கிறிஸ்துவை பின்பற்றுகின்ற கிறிஸ்தவர்களாகிய எங்களிடமும் பேசுகின்றது. நாங்கள் இஸ்ரவேலை போல ஒரு தேசமல்ல ஆனால் ஒரு திருச்சபையாக இருக்கின்றோம். கிறிஸ்தவர்கள் விசுவாசத்தின் மூலம் ஆபிரகாமின் வாரிசுகளானார்கள். இந்த புத்தகம் இன்றைய காலத்தில் பிரயோகமாவது தேவ ஜனங்களாகிய கிறிஸ்தவர்களுக்கே ஆகும். எனவே எங்களின் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் சட்டங்களை எவ்வாறு பிரயோகப்படுத்த வேண்டுமென்று நாங்கள் கவனமாக சிந்திக்க வேண்டும். நாங்கள் அதை இயேசுவையும் புதிய ஏற்பாட்டையும் அடிப்படையாக கொண்டு வாசிக்க வேண்டும். (உதவிக்காக, பக்கம் 98ல் உள்ள பழைய ஏற்பாட்டு சட்டங்களை படித்தல் என்ற பிற்சேர்கையை பார்க்கவும்).

இஸ்ரவேல் மக்கள் தேவனை உண்மையாக கீழ்ப்படியும்படி ஊக்கப்படுத்துவதே மோசேயின் நோக்கமாக இருந்தது. இந்த பிரசங்கம் எங்களுக்காக கொண்டிருக்கும் நோக்கமும் அதுதான். நாங்கள் தேவனிடம் உண்மையாக இருக்கவும் அவருக்கு கீழ்ப்படியவுமே அது எங்களை ஊக்குவிக்கின்றது.

புத்தகத்தின் திட்டவரையறை

1:1-5	அறிமுகம்
1:6-4:43	வரலாற்று பின்னணி
4:44-11:32	பொதுவான கட்டளைகள்
12:1-26:19	விவரமான சட்டங்கள்
27:1-28:68	ஆசீர்வாதங்களும் சாபங்களும்
29:1-30:20	முடிவுரை
31:1-34:12	யோசுவாவிடம் சகலதையும் கையளித்துவிட்டு மரிக்க மோசே தயாராகுகின்றார்.



உபாகமத்தை கற்பித்தல்

ஈ. உபாகமத்தைக் கற்றுக் கொள்ளுவதும் கற்பிப்பதும்

1 தேசத்துக்குள் நுழைதல்

பின்னணி

இந்த வசனங்கள் உபாகமத்திற்கான ஒரு பின்னணியை கொடுக்கின்றன. அவை பின்வரும் காரியங்களை வழங்குகின்றன:

- **புத்தகம் யாரிடமிருந்து வந்தது:** மோசே இஸ்ரவேல் மக்களை எகிப்தை விட்டு அழைத்து வந்து 40 ஆண்டுகள் வனாந்தரத்திலும் வழிநடத்திச் சென்றார்.
- **இந்த புத்தகம் யாருக்கு கொடுக்கப்பட்டது:** இஸ்ரவேலின் சகல ஜனங்கள், வாலிபர்கள், முதியவர்கள், ஆண்கள், பெண்கள் ஆகியோர்.
- **இந்த புத்தகம் எதை பற்றியது:** தேவனால் கட்டளையிடப்பட்டு (வச.4) மோசேயால் பேசப்பட்ட வார்த்தைகள் (வச.2).
- **பிரசங்கம் வழங்கப்பட்ட இடம்:** வாக்குப்பண்ணப்பட்ட தேசத்துக்கு வெளியில் யோர்தானின் மறுகரையாகும்.
- **இவ்வார்த்தைகள் எப்பொழுது பேசப்பட்டது:** எகிப்தில் இருந்து புறப்பட்டு 40ஆவது ஆண்டாகும்.
- **உபாகமத்தின் அவசியம் என்ன:** தேவனுடைய நியாயபிரமாணங்களை விளக்குவதற்காகும் (வச. 5).

வசனங்கள் 1–8 ஐ படிக்கவும்

ஒவ்வொரு வசனத்தையும் 2 அல்லது 3 தடவைகள் வாசிக்கவும். ஒவ்வொரு வசனத்தையும் வாசித்து அதை உங்கள் சொந்த மொழியில் உங்களுக்கு நீங்களே விளக்கி கூறுங்கள். இப் பகுதி எதனை கூறுகின்றது என்று அறிவதற்கு இது உதவியாக இருக்கும்.

குறிப்புக்கள்

- **உபாகமம் 1:4.** சீகோன் மற்றும் ஓக்கின் தோல்வியை குறித்து எண்ணாகமம் 21:21-26ல் உள்ளது.
- **உபாகமம் 1:5.** “சட்டம்” என்பதற்கான எபிரேய அர்த்தம், “அறிவுரைகள்” அல்லது “வாழ்க்கைமுறை” என்பதாகும்
- **உபாகமம் 1:7.** “அரபா” (NIV) என்பது யோர்தான் நதியின் தாழ் பள்ளத்தாக்காகும். மேற்கில் உள்ள மலையடிவாரங்கள் (செபலா) தேசத்தின் நடுவில் உள்ளது. பக்கம் 18ல் உள்ள வரைபடத்தை பாருங்கள்.

ஆராய்ந்து பாருங்கள்

தேசத்தை குறித்து தேவன் கொடுத்த வாக்குத்தங்களை குறித்து படியுங்கள் ஆபிரகாமிற்கு: ஆதியாகமம் 12:1-7, 15:13-18; ஈசாக்கிற்கு: ஆதியாகமம் 26:2-5; யாக்கோபுக்கு: ஆதியாகமம் 28:12-15. இந்த வாக்குத்தத்தம் எவ்வாறு கடத்தப்பட்டது என்பதை அவதானியுங்கள், அது உபாகமத்தில் உள்ள இஸ்ரவேல் மக்களுக்கும் பொருந்துகின்றது.

விசுவாசமும் கீழ்ப்படிதலும் எவ்வாறு ஒன்றோடொன்று தொடர்புள்ளது என்று சிந்தித்துப்பாருங்கள். அந்த தேசத்தை தருவதாக தேவன் கொடுத்த வாக்கை இஸ்ரவேலர்கள் நம்ப வேண்டும். அதாவது அந்த தேசத்தை அவர்களின் எதிரிகளிடம் இருந்து எடுப்பதற்கான கட்டளைக்கு கீழ்ப்படிய வேண்டும். தேவ ஜனங்கள் கீழ்ப்படியும்படி நாங்கள் உதவி செய்ய பிரசங்கம் பண்ணும்போது, தேவனில் அவர்களின் விசுவாசத்தை

⬇ கற்றுக்கொள்ளுங்கள்: உபாகமம் 1:1–8

அதிகரிக்க வேண்டும், நாங்கள் விசுவாசத்தை முக்கியத்துவப்படுத்தாவிட்டால், கிறிஸ்தவம் வெறுமனே சட்டங்களை மாத்திரம் கொண்ட சமயமாக மாறிவிடும்

உண்மையான கிறிஸ்தவர்களைப் பொறுத்தவரையில், எமது வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட தேசம் பரலோகமாகும் (உ+ம். 1 பேதுரு 1:4).

- விசுவாசமும் கீழ்ப்படிதலும் எவ்வாறு எங்களுக்காக இணைந்து செயற்ப்படுகின்றது? (உ+ம். யாக்கோபு 2:14~26).

⊕ பிரதான கரு

தேவன் தான் வாக்குப்பண்ணின தேசத்துக்குள் நுழையும்படி தன் ஜனங்களுக்கு கட்டளையிடுகிறார்.

➡ கற்பித்தல்: உபாகமம் 1:1–8

⊙ ஆரம்பித்தல்

- கிறிஸ்தவர்கள் தேவனுக்கு மென்மேலும் கீழ்ப்படிவதற்கு நீங்கள் எவ்வாறு அவர்களை ஊக்கப்படுத்துவீர்கள்?

தேவனிலும், முக்கியமாக தேவனின் வாக்குத்தத்தங்களிலும். கவனத்தை திருப்புவதன் வழியாக மோசே இஸ்ரவேல் ஜனங்களை ஊக்கப்படுத்துகின்றார். - இஸ்ரவேல் ஜனங்கள் பல தடவைகள் தவறான பாதையில் சென்றார்கள். கிறிஸ்தவ ஊக்குவிப்பானது, மக்களையல்ல தேவனை பின்தொடர்வதாக இருக்க வேண்டும்.

புத்தகத்திற்கான அறிமுகம்

⊙ வாசிக்கவும்: உபாகமம் 1:1–5

உங்களுக்கு செவிமெடுப்பவர்களுக்கு புத்தகத்தின் பின்னணி பற்றி கூறுங்கள். வசனங்கள் 1~5 இல் இருந்து, யாரால், யாருக்கு, என்ன சொல்லப்பட்டது, எங்கே, எப்பொழுது போன்ற பிரதான காரியங்களை விளக்கி சொல்லுங்கள்.

மோசே ஏன் இந்த பிரசங்கத்தை பிரசிங்கித்தார்? இஸ்ரவேல் மக்கள் தேவனின் வாக்குத்தத்தங்களை நம்பவும், தேவனின் கட்டளைகளுக்கு கீழ்ப்படியவும் ஊக்கமளிப்பதற்காகும்.

➡ கற்பித்தல்: உபாகமம் 1:1–8

பிரதான வேலை

வாசிக்கவும்: உபாகமம் 1:6–8
வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட தேசத்துக்குள் நுழையும்படி தேவன் இஸ்ரவேல் மக்களுக்கு கட்டளையிடுகின்றார். தேசத்தில் என்ன அடங்கியுள்ளது என்பதை பற்றி வசனம் 7 கூறுகின்றது. வசனம் 8ல் இந்த தேசம் ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு ஆகியோருக்கு வாக்குகொடுக்கப்பட்ட தேசம் என்று கூறுகின்றது. இந்த வாக்குத்தத்தம் மோசேயின் காலத்திற்கு 600 வருடங்களுக்கு முன்னால் கொடுக்கப்பட்ட ஒன்றாகும். ஆயினும் அந்த வாக்குத்தத்தம் மோசேயின் காலத்திலும் சாத்தியபடுமொன்றாக இருந்தது.

தேவன் தேசத்தை தருவார் என்ற வாக்கை இஸ்ரவேல் மக்கள் நம்பினால் மாத்திரமே அவர்கள் தேவனுக்கு கீழ்படிந்து தேசத்துக்குள் நுழைவார்கள்.

பிரயோகியுங்கள்: பூமியில் ஒரு இடத்தை தேவன் இஸ்ரவேல் மக்களுக்கு வாக்குக் கொடுத்தார். இது கிறிஸ்தவர்களுக்கு தேவன் வாக்கு கொடுத்துள்ள பரலோகத்தின் ஒரு மாதிரியாகும். இதே வண்ணமாக பூமியானது கிறிஸ்தவர்களுக்கு முக்கியமல்ல, கிறிஸ்தவர்கள் பரலோகத்தை நோக்கி செல்லுகின்றார்கள். தேவன் தன்னை விசுவாசிப்பவர்களுக்கு பரலோக தேசத்தை கொடுப்பார் என்று நாங்கள் விசுவாசிக்கின்றோமா? இந்த வாக்குத்தத்தம் எவ்வாறு உங்களையும் என்னையும் தேவனின் கட்டளைகளுக்கு கீழ்ப்படிவதற்கு உதவி செய்கின்றது?

எடுத்துக்காட்டு: நீங்கள் உங்கள் பிள்ளையிடம் ஒரு விசேடமான ஒரு பரிசை தருவதாக வாக்குகொடுக்கின்றீர்கள் என்று எண்ணிக்கொள்ளுங்கள். ஆனால் உங்கள் பிள்ளையோ தனக்கு இப்பொழுதே இனிப்புகள் வேண்டுமென்று கேட்கின்றது. நீங்கள் உங்கள் பிள்ளையிடம் அவர்கள் அதை விட பெரிய ஒரு பரிசுக்காக அடுத்த வருடம் வரை காத்திருக்கும்படி கூறுகின்றீர்கள். அந்த பரிசு எவ்வளவு சிறப்பானது என்று அவர்களுக்கு நினைவுபடுத்துகின்றீர்கள். நாங்களும் பிள்ளைகளப்போல சிறு விடயங்களை வாஞ்சியாது இருப்போம். நாங்கள் நல்லவர்களாகவும் பொறுமையுள்ளவர்களாகவும் பரலோகத்தில் உள்ள பெரிதான பொக்கிஷத்துகாக காத்திருப்போம்.

நாங்கள் பணத்தை இன்னும் அதிகமாக நாடுவதற்கு உந்தப்படும் போது, பரலோகத்தில் உள்ள அதை விட பெரிய பொக்கிஷத்தை பற்றி சிந்தித்துபார்க்க வேண்டும். நாங்கள் உல்லாசமாக வாழ உந்தப்படும் போது, பரலோகத்தில் இருக்கும் பெரிதான சந்தோஷத்தை குறித்து சிந்திக்க வேண்டும்.

ஜெபியுங்கள்: பரலோகத்தை குறித்த வாக்குத்தத்ததில் உங்கள் மனது தங்கியிருக்க உதவி செய்யும்படி தேவனிடம் உதவி கேளுங்கள், அப்பொழுதே அவருக்கு பூமியில் கீழ்படிவதற்கான பெலன் கிடைக்கும்.

⬇ கற்றுக்கொள்ளுங்கள்: உபாகமம் 1:9–18

2 பெரும் திரளான இஸ்ரவேல் மக்கள்

பின்னணி

வாக்கு கொடுக்கப்பட்ட தேசத்துக்குள் நுழைவதற்கான தேவனின் கட்டளையை மோசே இஸ்ரவேல் மக்களுக்கு நினைவுப்படுத்துகின்றார். தேவன் தேசத்தை பற்றிய வாக்குத்தத்ததை ஆதியாகமம் 12:1-7இல் ஆபிரகாமிற்கு கொடுத்தார். அப்பொழுது ஆபிரகாமும் அவன் மனைவியும் மாத்திரமே இருந்தார்கள். ஆனால் இப்பொழுதோ ஆபிரகாமின் வம்சவழியாக அநேகமான இஸ்ரவேல் மக்கள் உள்ளார்கள்.

பெரும் திரளான இஸ்ரவேலர்கள் இருக்கிறார்கள் என்பது தேவன் உண்மையுள்ளவர் என்பதை காட்டுகின்றது. பெரும் திரளான இஸ்ரவேல் மக்கள் இருப்பதால் நியாயம் தீர்க்க மோசேக்கு உதவியாளர்கள் தேவைப்பட்டார்கள்.

வசனங்கள் 9–18 ஐ படிக்கவும்

இப்பகுதியை 2 அல்லது 3 தடவைகள் வாசியுங்கள்.

குறிப்புகள்

- **உபாகமம்** 1:10-11. "வானத்தில் உள்ள நட்சத்திரங்கள்" ஆபிராகாமிற்கு ஆதியாகமம் 15:5 இல் கொடுக்கப்பட்ட வாக்கை குறிக்கின்றது. வசனம் 11ல் இருக்கின்ற "கர்த்தர் வாக்கு கொடுத்ததை போல" என்று மோசே நினைவூட்டுவதை கவனியுங்கள்.
- **உபாகமம்** 1:12-18. இதற்கான பின்னணியை பெற்றுக்கொள்ள யாத்திராகமம் 18:13-27 ஐ வாசியுங்கள். பெரும் திரளான மக்களுக்கான வாக்குத்தத்தத்தை தேவன் நிறைவேற்றியதால் மோசே தனியாக செயற்படும் போது அவருக்கு வேலை சுமை அதிகமாய் இருந்தது.
- **உபாகமம்** 1:13, 16-17. தேவனின் தலைவர்கள் எல்லோரையும் சமமாகவே நடத்தவேண்டும். பேதம் காட்டுதல் என்பது, ஒரு சிலரை மற்றவர்களைவிடவும் சிறப்பாக அல்லது தாழ்வாக நடத்துவதாகும்.
- **உபாகமம்** 1:16. "வேற்று ஆள்" (அந்நியன்) இது வேறு தேசத்து ஆள் ஆனால் இஸ்ரவேலின் நிரந்தரமாக குடியேற விரும்பும் ஒருவராகும்.

ஆராய்ந்து பாருங்கள்

ஆதியாகமம் 15:1-6 18-21 ஐ படியுங்கள்

- இங்கே காணப்படுகின்ற இரண்டு வாக்குத்தத்தங்கள் எவை?

இஸ்ரவேல் மக்கள் இப்பொழுது வானத்து நட்சத்திரங்களை போல திரளாக உள்ளார்கள் என்று உபாகமம் 1:10 கூறுகின்றது

- இந்த கூற்று எங்கிருந்து பெறப்பட்டது?

ஆதியாகமம் 15ல், ஆபிரகாம் தேவனின் வாக்குதத்தத்தின் மீது சந்தேகம் கொண்டார், எனவே தேவன் அவருக்கு அதை உறுதிப்படுத்தினார். இஸ்ரவேல் மக்கள் தேவனின் வாக்குறுதிகளில் சந்தேகப்படுவதை மோசே விரும்பியிருக்கவில்லை. தேவன் ஆபிரகாமிற்கு வழங்கிய திரளான சந்ததியை குறித்த வாக்குறுதியை நிறைவேற்றியிருந்தார் எனவே தேசத்தை குறித்த வாக்குறுதியையும் தேவன்

கற்றுக்கொள்ளுங்கள்: உபாகமம் 1:9–18

நிறைவேற்றுவார் என்று மக்கள் நம்பலாம்.

பெரும் திரளான இஸ்ரவேல் மக்கள் இருப்பதால் நியாயம் தீர்ப்பதற்கு மோசேக்கு உதவியாட்கள் தேவைப்படுகிறார்கள்.

- *அவர்கள் எப்படிப்பட்ட மக்களாக இருப்பார்கள்? (வ 13, 16–17)*

வாசிக்கவும் – உபாகமம் 10:17-18
தலைவர்களும் தேவனை போன்ற ஒரு மனப்பாங்கை கொண்டிருக்க வேண்டும். அவர்கள் மக்களை பார்த்து பயப்படாமல் தேவனின் கண்களுக்கு முன்பாக சரியானதை செய்ய வேண்டும்.

⊕ பிரதான கரு
தேவனை விசுவாசியுங்கள். அவர் தனது வாக்குகளை நிறைவேற்றுபவர்.

கற்பித்தல்: உபாகமம் 1:9–18

ஆரம்பியுங்கள்
மக்கள் ஒரு வாக்கை கொடுத்த அதை நிறைவேற்றிய பின்னர், இன்னொரு வாக்கை கொடுக்கும் போது அவர்களை நாங்கள் நம்புவது இலகுவாக இருக்கும்.

- அவ்வாறு உங்களுக்கு எப்பொழுது நடந்துள்ளது?

பகுதியாக நிறைவேற்றப்பட்ட வாக்குகள்

வாசிக்கவும்: உபாகமம் 1:10
ஆதியாகமம் 12ல் தேவன் ஆபிரகாமிற்கு திரளான சந்ததியினரையும் தேசத்தையும் தருவதாக வாக்கு கொடுத்தார், ஆனால் பின்பு ஆபிரகாம் அதை குறித்து சந்தேகம் கொண்டான். எனவே தேவன் மீண்டும் அதை ஆதியாகமம் 15ல் நினைவுபடுத்தினார். தேவன் ஆபிரகாமிற்கு அவரின் சந்ததியினர் வானத்தில் உள்ள நட்சத்திரங்களை போல இருப்பார்கள் என்று வாக்கு கொடுத்தார். ஆபிரகாம் தனது சந்தேகத்தை விசுவாசமாக மாற்றிக்கொண்டான்.

வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தை குறித்து இஸ்ரவேல் மக்கள் சந்தேகப்பட்டார்கள், அதனால் அவர்களால் அதற்குள் பிரவேசிக்க முடியவில்லை. இப்பொழுது தேவன் ஆபிரகாமிற்கு நினைவுப்படுத்தியது போல மோசேயும் இஸ்ரவேல் மக்களுக்கு நினைவுபடுத்துகின்றார். இஸ்ரவேல் மக்கள் ஏற்கனவே வானத்தில் உள்ள நட்சத்திரங்களை

➔ கற்பித்தல்: உபாகமம் 1:9–18

போல உள்ளார்கள் எனவே தேவன் தேசத்தை குறித்த வாக்குறுதியையும் நிறைவேற்றுவார் என்று அவர்கள் உறுதியாக நம்பலாம்

- நீங்களும் தேவனை விசுவாசிக்கலாம் என்று எண்ணுகின்றீர்களா? உங்கள் வாழ்வில் தேவன் கொடுத்த வாக்குறுதிகளுக்கு எவ்வாறு உண்மையாக இருந்திருக்கின்றார்?

மோசே தலைவர்களை நியமிக்கின்றார்

வாசிக்கவும்: உபாகமம் 1:12–18
இஸ்ரவேல் மக்களின் எண்ணிக்கை மிக அதிகமாக இருந்ததால் மோசே உதவியாட்களை நியமிக்க வேண்டியிருந்தது. தலைவர்கள் ஞானம் உள்ளவர்களாகவும் தேவ மக்களால் மதிக்கப்படுகின்றவர்களாகவும் இருக்க வேண்டும். அவர்கள் எல்லோரையும் சமமாக நடத்த வேண்டும்.

எனவே சபை தலைவர்களும் நியாயமாகவும் நேர்மையாகவும் இருப்பதை நாம் உறுதிப்படுத்த வேண்டும்.

எடுத்துக்காட்டு: கவலைக்கிடமான காரியம் என்னவென்றால் அனேக இடங்களில் உள்ள திருச்சபைகள் மக்களை அநீதியாக நடத்துகின்றார்கள். அதிலும் சில நாடுகளில் அதிக லஞ்சம் கொடுக்கும் நபரே சபைத் தலைவராக நியமிக்கப்படுகின்றார். இது தேவன் விரும்புகிற காரியமல்ல.

பிரயோகியுங்கள்: நாங்கள் எல்லோரையும் சமமாக நடத்துவதை எவ்வாறு உறுதிப்படுத்துவது? உறவினரும் செல்வந்தரும் விசேட சலுகைகளை எதிர்பார்க்கும் போதும், தாங்கள் விரும்பியது கிடைக்காது போகும்போது கோபம் கொள்ளும் போதும், இது கடினமாகும். சபைக்கு பணம் கொடுப்பவர்கள்தான் சபைத் தலைவர்களாக நியமிக்கப்படுகின்றார்களா? எங்கள் தலைவர்கள் ஞானத்தோடும் புரிந்துணர்வோடும், நியாயத்துடனும் நேர்மையுடனும் இருப்பதை எவ்வாறு உறுதிப்படுத்துவது?

17ம் வசனம் மக்களை கண்டு பயப்படாதே என்று கூறுகின்றது. நாங்களும் சில வேளைகளில் மக்கள் என்ன சொல்லுவார்கள் அல்லது செய்வார்கள் என்று பயப்படுவதுண்டு. தேவனின் பார்வையில் சரியான தீர்மானங்களை நாங்கள் எடுக்க வேண்டும்.

ஜெபியுங்கள்: நாங்கள் தேவனின் வாக்குத்தத்தங்களை விசுவாசிக்க அவரிடமே உதவி கேட்போம். நாங்கள் எங்கள் தலைமைத்துவத்தில் நியாயமாக, நேர்மையாக இருக்கவும் சரியான தலைவர்களை தெரிவு செய்யவும் உதவும் படி தேவனிடம் கேட்போம்.

3 பெற்றோர்களிடமிருந்து கற்றுக்கொள்ளுங்கள்

பின்னணி

மோசே இஸ்ரவேல் மக்களுக்கு பிரசங்கம் பண்ணுகின்றார். அவர்கள் வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட தேசத்தின் எல்லையில் நிற்கின்றார்கள். அவர்களின் எதிரிகளிடம் இருந்து தேசத்தை பறிக்கும்படி ஊக்கமளிக்க மோசே மனதாய் இருந்தான். அவர்களின் பெற்றோர் அந்த தேசத்தில் நுழையவில்லை என்பதை மக்களுக்கு மோசே நினைவுபடுத்தினான். அவர்கள் தேவனுக்கு கீழ்படியாது போனார்கள். (எண்ணாகமம் 13-14) அவர்களின் தாய்மாரும் தந்தைமாரும் வனந்தரத்திலேயே மரித்துப்போனார்கள். இந்த சந்ததியினரும் அதே தவறை செய்யக்கூடாது என்ற நோக்கில் மோசே பிரசங்கித்தார்

வசனங்கள் 19–33 ஐ படிக்கவும்

ஒவ்வொரு வசனத்தையும் வாசித்து உங்கள் வார்த்தைகளிலே உங்களுக்கு விளக்கப்படுத்துங்கள்.

குறிப்புக்கள்

- **உபாகமம் 1:19.** வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட தேசத்திற்கு தெற்கே காதேஷ் பார்னியா என்னும் ஊர் காணப்பட்டது. இங்கேதான் இவர்களின் பெற்றோர்கள் கீழ்ப்படியாமையினால் தேசத்துக்குள் நுழையமுடியாமல் போனது. பக்கம் 18ல் உள்ள வரைபடத்தை பாருங்கள்.
- **உபாகமம் 1:21, 25,30.** வாக்கு பண்ணப்பட்ட தேசம் கொடுக்கப்பட்டதாயிற்று, தேவன் இஸ்ரவேலுக்காக யுத்தம் செய்கின்றார்.
- **உபாகமம் 1:25.** உளவு பார்க்க சென்றவர்களின் அறிக்கை நல்லதாக இருந்தது. தேசம் நல்லதென்று அவர்கள் இணங்கினார்கள் "வளம் பொருந்தியதாக இருந்தது" அதாவது அங்கே விவசாயம் சிறப்பாக நடைபெறும் என்பதாகும். தேவன் இந்த தேசத்தை இஸ்ரவேல் மக்களுக்கே கொடுக்கின்றார் என்பதை சம்மதித்தனர்.
- **உபாகமம் 1:28.** பெற்றோர்கள் தேசத்தில் இருந்த எதிரிகளை குறித்து இரண்டு காரியங்களில் பயந்தார்கள் அவர்கள் பெலம் உள்ளவர்கள், அவர்களின் நகரங்கள் பலத்த அரண்களால் பாதுகாக்கப்பட்டிருந்தது. அங்கே இருந்தவர்கள் மிகவும் பெரியவர்களாக இருந்த படியாலும் இஸ்ரவேல் மக்கள் அவர்களை கண்டு பயந்தார்கள்.

ஆராய்ந்து பாருங்கள்

அவர்களின் பெற்றோர்களின் கீழ்படியாத தன்மையைக் குறித்து சிந்தித்துப் பாருங்கள் அவர்களின் பாவத்தை குறித்து 1:27-28 இல் கானலாம். அவர்களின் பாவம் இரண்டு வழியாக விளக்கப்படுத்தப்பட்டுள்ளது.

1. அவர்கள் தேவனுக்கு எதிராக புரட்சி செய்து அவருக்கு கீழ்படியாது போனார்கள் (வச 26)
2. அவர்கள் தேவனை நம்பவில்லை (வச 32). விசுவாசமின்மையே அவர்களின் பாவமாக இருந்தது.

⬇ கற்றுக்கொள்ளுங்கள்: உபாகமம் 1:19–33

- தேவனுக்கு கீழ்படியாத தன்மையும் அவரை விசுவாசியாது இருத்தலும் ஒன்றோடு ஒன்று எவ்விதம் பொருந்துகின்றது?

மக்கள் எதிரியை கண்டு பயந்தார்கள்

- மக்கள் அந்த பயத்தை விட்டு அகல மோசே எவ்வாறு உதவி செய்கின்றார்?

வசனங்கள் 29-31 ல் மோசே என்ன கூறுகின்றார் என்று அவதானியுங்கள், வசனம் 21 லும் அதே யோசனை காணப்படுகின்றது.

- உங்கள் சபை மக்களுக்கும் இவ்வாறான ஊக்கம் தேவைப்படுகின்ற சந்தர்ப்பங்களை குறித்து சிந்தித்துப்பாருங்கள்.

⊕ **பிரதான கருத்து**

எங்களின் எதிரிகள் பெலம் வாய்ந்தவர்களாக இருந்தாலும் நாங்கள் தேவனை விசுவாசிக்க வேண்டும். தேவன் அவர்களை பார்க்கிலும் வல்லமை உள்ளவர்.

➡ கற்பித்தல்: உபாகமம் 1:19–33

⊳ **ஆரம்பியுங்கள்**

இஸ்ரவேலர்களின் பெற்றோர்கள் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்குள் வந்த போது கீழ்ப்படியாமல் போனார்கள். அதே தவறை ஜனங்கள் இப்பொழுதும் செய்வதை மோசே விரும்பவில்லை. தேசத்திற்குள் பிரவேசித்து அதை சுதந்தரித்துக் கொள்ள இஸ்ரவேலர் எவ்விதம் உற்சாகப்படுத்தப்படுவார்கள்? தமது பெற்றோரை விட தாம் சிறந்தவர்கள் என்று அவர்கள் எண்ணக்கூடாது. அவர்கள் தேவனை நம்ப வேண்டும்.

பெற்றோர்களின் பாவம்

⌵ **வாசியுங்கள்: உபாகமம் 1:27–28**

எதிரிகளுக்குப் பயந்ததினால் அவர்களின் பெற்றோர்கள் கீழ்ப்படியாமல் போனார்கள். அவர்கள் தேவனை நம்பவில்லை. அவர்களின் பெற்றோர்கள் பின்வருமாறு கூறினார்கள்:

- “தேவன் எங்களை வெறுக்கிறார்” (வசனம் 27)
- “எதிரிகள் அதிக பலவான்களாயிருக்கிறார்கள்” (வசனம் 28)
- “எதிரிகள் மிகுந்த காவலுடன் உள்ளார்கள்” (வசனம் 28)

முதலாவது குறிப்பு உண்மையற்றது. தேவன் நமக்கு வாக்களித்ததையும் மற்றும் அவர் செய்ததையும் நாம் மறக்கின்ற பொழுது தேவன் நம்மை வெறுப்பதாக சிந்திக்க முடியும்.

➙ கற்பித்தல்: உபாகமம் 1:19–33

தேவன் எம்மை நேசிக்கிறார் என்பதை நாம் மறந்து விடுகிறோம்.

இரண்டாம் மற்றும் மூன்றாம் குறிப்புக்கள் உண்மையானவை. எதிரியானவன் வல்லமையுள்ளவன். ஆனால் தேவன் மிகுந்த வல்லமையுள்ளவர் என்பதை இஸ்ரவேல் ஜனங்கள் மறந்தார்கள்.

இஸ்ரவேலரின் பெற்றோர்கள் பாவம் செய்தனர். இந்தப் பாவம் இரு வழிகளில் விளக்கப்படுகின்றது:

1. அவர்கள் தேவனுக்கு எதிராக கலகம் பண்ணினார்கள். (வசனம் 26)
2. அவர்களுக்கு தேவனிடம் நம்பிக்கையில்லை. (வசனம் 32)

- எந்த எதிரிகள் உம்மை பயப்பட வைக்கின்றனர்?

ஒரு வேளை அரசாங்கங்கள், விசுவாசிக்காத குடும்ப அங்கத்தினர்கள், வேலைத்தலத்தின் தலைவர் அல்லது பில்லி சூனிய மருத்துவர்? தேவனின் வல்லமையையும், உண்மைத்துவத்தையும் நீர் மறந்து விடுகிறீரா?

இவ்விதமாக மீண்டும் நடைபெற அனுமதிக்க வேண்டாம்

⌄ வாசியுங்கள்: உபாகமம் 1:30–31
உங்கள் பெற்றோர்களை விட நீங்கள் சிறந்தவர் என எண்ண வேண்டாம்! தேவனைக் குறித்து சிந்திக்கும்படி மோசே இஸ்ரவேலரை உற்சாகப்படுத்துகிறான்:

- தேவன் உங்கள் முன் செல்லுகிறார் (வசனம் 30)
- தேவன் உங்களுக்காக யுத்தம் செய்வார் (வசனம் 30)
- தேவன் முன்னரும் இதை செய்திருக்கிறார் (வசனம் 30-31)

எதிரி பலமானவன் ஆனால் தேவன் மிகுந்த பலமுள்ளவர். தேவன் தமது வாக்குத்தத்தைக் காப்பாற்ற எந்தவொரு எதிரியையும் தோற்கடிப்பார். விசுவாசிக்கின்ற கிறிஸ்தவர்களுக்கு பரலோக தேசத்தை தேவன் வாக்களிக்கிறார். சிலுவையில் இயேசு எல்லா எதிரிகளையும் தோற்கடித்தார். சகல உண்மையான கிறிஸ்தவர்களும் பரலோகத்தை வந்தடைவார்கள் என்பதை இயேசு உறுதிப்படுத்தினார்.

- சாத்தானோ அல்லது மந்திரவாதிகளோ அல்லது எதிரிகளோ நீங்கள் பரலோகம் போவதை தடை செய்வார்களென பயப்படுகிறீர்களா?

உங்கள் எதிரியானவன் பலமுள்ளவன். ஆனால் தேவன் மிகுந்த பலமுள்ளவர்! இயேசு ஏற்கனவே வெற்றி சிறந்தார். சகல தேவனுடைய ஜனங்களும் வாக்களிக்கப்பட்ட பரலோக தேசத்திற்குள் பிரவேசிப்பார்கள்.

 # எடுத்துக்காட்டு: உங்கள் சபை கூடுவதை நிறுத்த வேண்டுமென உள்ளூர் அதிகாரிகள் கூறுவதாக வைத்துக் கொள்ளுங்கள். உள்ளூர் அதிகாரிகளுக்கு நீங்கள் பயப்படுகிறீர்கள். எனவே உங்கள் சபை கூடிவருவதை நீங்கள் நிறுத்துகிறீர்கள். எதிரிகளுக்குப் பயப்பட வேண்டாம். தேவன் மிகுந்த பலமுள்ளவராக இருக்கின்றார்.

↑ ஜெபியுங்கள்: எதிரிகளுக்கு பயப்படாமல் இருக்க உதவி செய்யும் படி தேவனிடம் கேளுங்கள்.

4 தேவனின் நியாயத்தீர்ப்பு

பின்னணி
பெற்றோர் தேவனுக்கு கீழ்ப்படியாமல் இருந்த காலத்தை இஸ்ரவேல் மக்களுக்கு மோசே நினைவூட்டினார். 26-33 வாக்கியங்களில் பெற்றோரின் பாவத்தை விளக்குவதை காணலாம். தற்போது தேவனின் நியாயத்தீர்ப்பை பற்றி பேசுகிறார்.

வசனங்கள் 34–35 ஐ படிக்கவும
ஒவ்வொரு வாக்கியத்தையும் வாசித்து உமது சொந்த வார்த்தைகளில் விளங்கிக் கொள்ளவும்.

குறிப்புக்கள்
- **உபாகமம் 1:34.** “ஆணையிட்டேன்” என்பதன் அர்த்தம் ‘உறுதிபடக் கூறுதல்’ என்பதாகும்.
- **உபாகமம் 1:39.** “கொள்ளையாவார்கள்” என்பதன் அர்த்தம் கொண்டு செல்லப்படுவார்கள் என்பதாகும் பிள்ளைகள் நன்மை, தீமை அறியாதிருந்தார்கள் அவர்கள் பெற்றோரின் பாவத்திற்காக அவர்கள் தண்டிக்கப்படவில்லை. தேவன் தமது வாக்குத்தத்ததை காப்பதினாலேயே அவர்கள் தேசத்தினுள் பிரவேசிப்பார்கள்.
- **உபகாமம் 1:40.** “வனாந்திரத்திற்கு பிரயாணப்பட்டுப் போங்கள்.” வாக்களிக்கப்பட்ட தேசத்தில் இருந்து இஸ்ரவேல் ஜனங்கள் 40 வருடங்கள் விலகிப் போயிருந்தார்கள்.
- **உபகாமம் 1:41.** கர்த்தருக்கு விரோதமாக பாவம் செய்தோம் என மக்கள் கூறினார்கள். ஆனால் தொடர்ந்து தேவனுக்கு கிழ்ப்படியாமல் போனார்கள். “மலைமேல் ஏறுவதற்கு இலகுவாயிருக்கும் என எண்ணினார்கள்.” தேவனின் உதவியின்றி சத்துருக்களை தோற்கடிக்க முடியும் என எண்ணினார்கள்.

ஆராய்ந்து பாருங்கள்
தேவன் கோபமடையமாட்டார் என சிலர் எண்ணுகிறார்கள் ஆனால் தேவன் பாவத்தைக் குறித்து கோபமடைகிறார் (வச.34). தேவன் பரிசுத்தமானவர். அவர் பாவத்தை வெறுத்து மக்கள் பாவம் செய்கையில் துயரமடைகிறார். தேவ கோபம் எப்போதும் நீதியுள்ளது. எமது கோபம் பெரும்பாலும் பாவமானது. நாம் சுயநலத்தினாலும், பெருமையினாலும் கோபம் கொள்கிறோம்.

வாக்களிக்கப்பட்ட தேசத்தினுள் யார் பிரவேசிப்பார்கள்? தேவன் பெற்றோர் செய்த பாவத்திற்காக அவர்களைத் தண்டித்தார். அவர்கள் வனாந்தரத்தில் மரித்தார்கள். காலேபும், யோசுவாவும் வாக்களிக்கப்பட்ட தேசத்தில் பிரவேசிப்பார்கள். ஏனெனில் அவர்கள் உண்மையுள்ளவர்களாயிருந்தார்கள். (எண். 14:6-10) மோசேகூட தேசத்தில் பிரவேசிக்கவில்லை. ஏனெனில் அவன் பாவம் செய்திருந்தான். (எண் 20:2-12). பிள்ளைகள் தேசத்தினுள் பிரவேசிப்பார்கள் (உபா. 1:39).

பெற்றோர் பாவம் செய்தாலும், தேவன் வாக்குதத்ததை காக்கிறவராகவுள்ளார் வசனம் 35, ‘பிதாக்களுக்கு’ தேவன் கொடுத்த

ⓘ கற்றுக்கொள்ளுங்கள்: உபாகமம் 1:34–46

வாக்குத்தத்ததை குறிப்பிடுகிறது. "முற்பிதாக்கள்" என்பது ஆபிரகாமைக் குறிக்கிறது.

பெற்றோர் தேவனின் நியாயத்தீர்ப்பை அறிந்திருந்தார்கள் எனவும், ஆனால் எப்படியோ தேசத்தை அடைய தீர்மானித்தார்கள் எனவும் மோசே கூறினார் (வச. 42). தேவன் அவர்களுடன் செல்லவில்லை. அவர்கள் தம் எதிரிகளிடம் தோல்வியுற்று, தேசத்திலிருந்து விரட்டப்பட்டார்கள்.

⊕ **பிரதான கரு**

தேவன் பாவத்தை நியாயந்தீர்க்கிறார். ஆனால் அவரது வாக்குத்தத்தத்தை காத்துக் கொள்கிறார்.

→ கற்பித்தல்: உபாகமம் 1:34–46

 # எடுத்துக்காட்டு

இரு மனிதர்களை கற்பனை செய்யுங்கள். ஒருவன் தான் விரும்பியது கிடைக்காதபோது கோபமடைகிறான். மற்றையவன், அரசாங்கமானது ஏழைகளை உதாசினம் பண்ணுகிறது என்பதால் கோபமடைகிறான் இவ்விருவருடைய கோபத்திற்கிடையில் வித்தியாசமுள்ளதா? முதல் மனிதனின் கோபமானது தவறானதும், சுயநலமுள்ளதுமாகும். இரண்டாவது மனிதனின் கோபமானது சரியானதும் நீதியுள்ளதுமாகும்.

பாவத்திற்கான தண்டனை

⊙ வாசியுங்கள்: உபாகமம் 1:35–37

இஸ்ரவேலரின் பிதாக்கள் தேவனை நம்பவுமில்லை, கீழ்ப்படியவுமில்லை (உபா. 1:26-32). அவர்கள் தேசத்திற்குள் பிரவேசிக்க முடியாது என்பதே அவர்களுக்கான தண்டனையாகும். மோசேகூட பிரவேசிக்க முடியவில்லை ஏனெனில் அவனும் நீரைப் பெறுவதற்காக கற்பாறையை அடித்த போது அவனும் பாவம் செய்தான். (எண். 20:2-12)

தேவன் இன்னும் வாக்குத்தத்தங்களை காக்கிறவர்

⊙ வாசியுங்கள்: உபாகமம் 1:36, 38–39

காலேபும், யோசுவாவும் தேசத்தினுள் பிரவேசிப்பதை விபரியுங்கள்.

➡ கற்பித்தல்: உபாகமம் 1:34–46

ஏன் பிள்ளைகள் பிரவேசிப்பார்கள்? அவர்கள் தமது பிதாக்களைவிட சிறந்தவர்கள் என்பதனால் அல்ல. தேவன் ஆபிரகாமுக்கு கொடுத்த வாக்குத்தத்தத்தை காத்துக் கொள்வதினால் பிரவேசிப்பார்கள் (வசன. 35).

கிறிஸ்தவர்கள், பரம தேசத்தை நோக்கி முன்னேறிக் கொண்டுள்ளார்கள். நாங்கள் நல்லவர்கள் என்பதனால் நாம் அங்கிருக்கமாட்டோம். தேவன் தமது வாக்குத்தத்தத்தை காப்பதனாலேயே நாம் அங்கிருப்போம். மனம் வருந்தி, இயேசுவில் பற்றுறுதி கொள்ளும் அனைவருக்கும் பரலோகத்தை அவர் வாக்குப்பண்ணியிருக்கிறார். எனவே எமது பாவத்திலிருந்து மனந்திரும்ப வேண்டும். இயேசுவை நேசித்து, அவருக்காக வாழ வேண்டும். பாவம் செய்யாதிருக்க முயற்சித்து, அவரை பிரியப்படுத்த வேண்டும்.

ஜனங்கள் மீண்டும் பாவமிழைத்தல்

வாசியுங்கள்: உபாகமம் 1:41–45

பிதாக்கள் பின்னர் தேசத்தினுள் பிரவேசிக்க தீர்மானித்தனர் ஆனால் தேவன் அவர்களுடன் இருக்கவில்லை முதற் தடவையே அவர்கள் கீழ்ப்படிந்திருக்க வேண்டியிருந்தது. தேவனுடன் இருக்கும்போது அவர்களுக்கு வெற்றி நிச்சயம். தேவன் இல்லாதபோது தோல்வியே நிச்சயமாகவிருந்தது.

எமது எதிரியாகிய சாத்தான், நாம் பரலோகம் வந்தடைவதை நிறுத்துவதே நோக்கமாகவுள்ளான் நாம் சுய பெலத்தில் சாத்தானை தோற்கடிக்க முடியாது. எமக்கு தேவன் தேவை. இயேசு ஏற்கனவே சாத்தானை தோற்கடித்துள்ளார். எனவே இயேசுவின் வெற்றியில் நம்பிக்கை கொள்ளவேண்டும்.

 # எடுத்துக்காட்டு: தேவன் தம்மை பின்தொடரும்படி ஒரு மனிதனை அழைத்தார். அம்மனிதன் முடியாது என்றான், அவன் தேவனைப் பின்தொடர விரும்பவில்லை தனது வாழ்வின் முடிவில் தேவனிடம் திரும்பலாம் என நினைத்தான். ஆனால் காலம் கடந்து விட்டது. அவனுக்கு இன்னுமோர் தருணம் வருவதற்குமுன்பாக தேவன் அவன் வாழ்வை முடிவுக்கு கொண்டு வந்தார்.

! பிரயோகம்: தேவனுக்கு கீழ்படிய தாமதிக்க வேண்டாம். உமது சொந்த பலத்தில் பரலோகம் போகலாம் என எண்ணுகிறீரா? இயேசுவின் வெற்றியில் நீர் நம்பிக்கை கொள்ள வேண்டும்.

5 தேவன் தமது ஜனங்களை ஊக்குவிக்கிறார்

பின்னணி

வாக்களிக்கப்பட்ட தேசத்தினுள் பிரவேசித்து, அதை சுதந்தரித்து கொள்ளுமாறு இஸ்ரவேல் ஜனங்களை மோசே ஊக்கப்படுத்துகிறான். இஸ்ரவேலர் சந்தித்த ஐந்து தேசத்தவரை நினைவூட்டுகிறான். இஸ்ரவேலர் சண்டையின்றி மூன்று தேசத்தவர்களை கடந்து சென்றனர். அவர்கள் ஏதோமியர், மோவாபியர் மற்றும் அம்மோனியர் ஆகியோராவர். பின்னர் எஸ்மோன் மற்றும் பாசான் தேசங்களுக்கு எதிரான யுத்தத்தில் வென்றார்கள்.

வசனங்கள் 2:1–3:11 ஐ படிக்கவும்

ஒவ்வொரு வசனத்தையும் வாசித்து உமது சொந்த வார்த்தைகளில் விளங்கிக் கொள்ளவும்.

குறிப்புக்கள்

- **உபாகமம் 2:4.** ஏதோமிய ஜனங்கள் ஏசாவின் சந்ததியாராவர். ஆதியாகமத்தில் கூறப்படும் யாக்கோபுவின் இரட்டைச் சகோதரரில் ஒருவன்தான் ஏசாவாகும்.
- **உபா 2:9,19.** மோவாப் மற்றும் அம்மோனிய ஜனங்கள் லோத்தின் வழித்தோன்றல்களாவார். ஆதியாகம நூலில் லோத்துவை ஆபிரகாமின் மருமகனாக காண்கிறோம்.
- **உபாகமம் 2:10-11, 20-21.** “ஏனாக்கியர்/ ஏமியர்”, “இராட்சதர்/ சம்சூமியா”: அந்நாட்களின் மனிதர்கள் (இராட்சதர்) நெடியவர்களாக இருந்தார்கள். இஸ்ரவேல் ஜனங்கள் ஏனாக்கியருக்கு பயந்தவர்களாய் இருந்தனர். (1:28)

ஆராய்ந்து பாருங்கள்

ஐந்து தேசத்தாரைப் காண்பதற்கு 18ம் பக்கத்திலுள்ள வரைபடத்தை பார்க்கவும். எண்ணாகமம். 20:14-21, 21:10-13, 21-35.

தேவன் ஏதோமியருக்கும், மோவாபியருக்கும் அவர்கள் நிலங்களை கொடுத்திருந்தார் (உபாகமம் 2:5,9,19). அதனாலேயே அவர்களோடு இஸ்ரவேல் ஜனங்கள் சண்டையிடக் கூடாமலிருந்தது இஸ்ரவேலருக்கும், அவர்கள் நிலங்களை கொடுப்பதாக தேவன் வாக்களித்தார். மோவாபிலும், அம்மோனிலும் மிக நெடிய மனிதர்கள் இருந்தார்கள் (2:10-11, 20-21). முன்னர் அவர்களை தேவன் தோற்கடித்து மோவாபியருக்கும், அம்மோனியருக்கும் அவர்களின் நிலத்தை கொடுத்தார்.

இஸ்ரவேலரின் பிதாக்கள் நெடிய மனிதர்களுக்கு பயந்தார்கள் என்பதை நினைவிற் கொள்க (1:28). இராட்சதர்களை தோற்கடிக்க தேவன் போதுமான பலமுள்ளவர் என்பதை இஸ்ரவேல் ஜனங்கள் நம்பவேண்டுமென மோசே விரும்பினான்.

எஸ்போனின் இராஜாவாகிய சீகோனையும், பாசானின் இராஜாவாகிய ஓகினையும் இஸ்ரவேல் தோற்கடித்தது. தேவன் இவர்களுக்கு நிலத்தை கொடுக்கவில்லை. சீகோனும், ஓகினும் பல பலம் வாய்ந்த

கற்றுக்கொள்ளுங்கள்: உபாகமம் 2:1–3:11

பட்டணங்களை கொண்டிருந்தார்கள் (2:36,3:4). இஸ்ரவேலின் பிதாக்கள் பலமான பட்டணங்களுக்குப் பயந்தார்கள் என்பதை நினைவிற் கொள்க (1:28). தேவன் பலமான பட்டணங்களை தோற்கடிக்கும் பலமுள்ளவர் என்பதை இஸ்ரவேல் ஜனங்கள் நம்ப வேண்டுமென மோசே விரும்பினான்.

ஓக் இராஜாவும் ஒரு இராட்சதனாயிருந்தான். அதனால்தான் அவன் படுக்கை மிக பெரிதாயிருந்தது (3:11). ஆனால் அவனும் கொல்லப்பட்டான். தேவன் இராட்சதர்களைவிட பலமிக்கவராகவுள்ளார்.

⊕ **பிரதான கரு**

தேவன் கடந்த காலத்தில் கிரியை செய்துள்ளார். ஆகவே உற்சாகமாக இருங்கள்.

கற்பித்தல்: உபாகமம் 2:1–3:11

ஆரம்பியுங்கள்

- தேவன் முன்னர் உமக்கு செய்த சில காரியங்கள் எவை?

தேவன் செய்த காரியங்களுக்கான சில உதாரணங்களைத் தருக. உமது தேவைகளை விசேடமான முறையில் சந்தித்திருக்கலாம். உங்கள் ஜெபத்திற்கு தெளிவான பதில்களைக் கொடுத்திருக்கலாம்.

- அவை, எதிர்காலத்திற்கு உம்மை உற்சாகமூட்டுகின்றதா?

தேவன் கடந்த காலங்களில் இஸ்ரவேலுக்கு செய்தவற்றை மோசே நினைவுபடுத்தினான். எதிர்காலத்தை விசுவாசத்துடன் முகங்கொடுக்கும்படி அவர்களை உற்சாகப்படுத்தினான்.

தேவன் பலமுள்ளவர்களை தோற்கடித்தார்

வாசியுங்கள்: உபாகமம் 2:10–11, 20–21

ஏதோமியர், மோவாபியர் மற்றும் அம்மோனியர் பற்றிய தகவல்களை கூறுங்கள். இந்த தேசத்தினருக்கு தேவன் அவர்களுக்கான பூமியை கொடுத்திருந்தார் என்பதைக் காட்டுங்கள்.

இவர்கள் தேசத்தில் முன்னர் இராட்சதர்கள் இருந்தார்கள் என்பதைக் காட்டுங்கள்.

தேவன் இராட்சதர்களை தோற்கடித்து, அவர்களுக்கு தேசத்தைக் கொடுத்திருந்தார். தேவன் இராட்சதர்களைவிட மிகப் பலம் வாய்ந்தவர்.

➔ கற்பித்தல்: உபாகமம் 2:1–3:11

- **தேவன் இன்றும் நெடிய மற்றும் பலமுள்ள மனிதர்களை தோற்கடிக்க கூடியவராகவுள்ளார்.**

இஸ்ரவேல் ஜனங்கள் தமது தேசத்திற்குள் நுழையும் போது, அங்கிருந்த இராட்சதர்தளை தோற்கடிக்கும் பலம் வாய்ந்தவர் என்பதை நம்பும்படியான கடந்த காலத்தைக் குறித்து மோசே கூறினான். பிதாக்கள் இராட்சதர்களுக்கு பயந்திருந்தார்கள் (1:28). அவர்கள் தேசத்திற்குள் பிரவேசிக்கவில்லை.

- **கடந்த காலத்தில் தேவன் செய்தவைகளினால் மோசே விசுவாசத்தை ஊக்கப்படுத்தினான்.**

பலமான நகரங்களை தேவன் தோற்கடித்தார்

வாசியுங்கள் 2:36, 3:4

சீகோன் மற்றும் ஒக் ஆகியோருடைய தேசங்களைப் பற்றி கூறுங்கள். இஸ்ரவேலர் முன்னரே அவர்களைத் தோற்கடித்திருந்தார்கள் என்பதைக் காட்டுங்கள். தேவனுடைய பலமே இந்த யுத்தத்தை வெல்ல வைத்தன. தேவன் பலமான நகரங்களை முன்னர் தோற்கடித்திருந்தார்.

- **தேவன் இன்றும் பலமான நகரங்களை தோற்கடிக்க கூடியவராகவுள்ளார்.**

மோசே இதைக் குறித்து இஸ்ரவேல் ஜனங்கள் அவர்களின் தேசத்தில் பிரவேசிக்கும் போது, தேவன் பலமான நகரங்களை தோற்கடிக்கும் பலமுள்ளவர் என நம்புவார்கள் என கூறினான். அவர்கள் பிதாக்கள் அவர்களின் எதிரிகளுடைய பலமான நகரங்களுக்கு பயந்திருந்தார்கள் (1:28). தேசத்தில் பிரவேசிக்கவில்லை.

- **தேவன் கடந்த காலத்தில் செய்தவற்றினால் மோசே விசுவாசத்தை ஊக்குவித்தான்.**

தேவன் இன்றும் அதே வண்ணமாகவுள்ளார். அவர் பலமுள்ளவராக ஒவ்வொரு எதிரியையும் தோற்கடிக்க கூடியவராகவுள்ளார்.

எமது சகல எதிரிகளையும் சிலுவையில் தோற்கடித்தார். இயேசு பாவத்தையும், சாத்தானையும், மரணத்தையும் வென்றார். நாம் தேவனில் பலமான விசுவாசம் வைத்து அவர் உதவுவார் என நம்புதல் வேண்டும்.

பிரயோகியுங்கள்: இயேசு கடந்த காலத்தில் செய்தவற்றை நினைத்துப் பாருங்கள் ஏற்கனவே தேவன் எப்படி உதவியுள்ளார். அவர் மீண்டும் மீண்டும் உதவி செய்வார். அவரை எப்போதும் நம்புங்கள்.

ஜெபியுங்கள்: தேவனை ஒவ்வொரு நாளும் நம்பத்தக்கதாக தேவனின் பெலத்தை நினைவுகூர உதவும்படி தேவனிடம் ஜெபியுங்கள்

6 தலைவர்களும் தவறுகிறார்கள்

பின்னணி

மோசே செய்த கடைசி பிரசங்கமே உபாகமம் ஆகும். விரைவில் மரிக்கப் போகிறான். அவன் வாக்களிக்கப்பட்ட தேசத்தினுள் பிரவேசிக்க மாட்டான். ஏனெனில் அவன் முன்னர் பாவம் செய்தான் இஸ்ரவேல் ஜனங்கள் பாவம் செய்யக் கூடாதென்பதற்காக அவர்களை எச்சரித்தான்.

வசனங்கள் 23–29 ஐ படிக்கவும்

இப்பகுதியை 2 அல்லது 3 தடவைகள் வாசியுங்கள். ஒவ்வொரு வாக்கியத்தையும் வாசித்து உமது சொந்த மொழியில் அதை விளங்கிக் கொள்ளுங்கள்.

குறிப்புக்கள்

- **உபாகமம் 3:23.** மோசே தான் எவ்வளவு ஆர்வமாக தன்னை தேசத்தினுள் பிரவேசிக்கவிட வேண்டுமென தேவனிடம் கேட்டதை நினைக்கிறான்.
- **உபாகமம் 3:26.** மோசே தன்னைக் கோபப்படுத்தின மக்களின் பாவத்தை நினைவு கூருகிறான். மோசே பாவம் செய்ததினால் தேவன் அவன் மீது கோபமடைந்தார்.
- **உபாகமம் 3:27.** “பிஸ்கா” மோசே மரிக்கப்போகிற மலைப்பகுதியாகும் (உபா. 34:1).
- **உபாகமம் 3:27.** வாக்களிக்கப்பட்ட தேசத்தை மோசேயினால் பார்க்க கூடியதாய் இருந்தது. ஆனால் பிரவேசிக்கவில்லை. (உபா. 34:1-4) பார்க்கவும்.
- **உபாகமம் 3:28.** பன்னிரண்டு வேவுகாரரில் யோசுவாவும் ஒருவன். (1:22-23) அவன் உண்மையுள்ளவன் (1:38). திடப்படுத்தல்/ ‘ஆணையிடல்’ என்பதன் அர்த்தம் ஜெபித்து தலைவரை அனுப்புவதாகும்.

ஆராய்ந்து பாருங்கள்

மோசே செய்த பாவத்தைப் பற்றி எண்ணாகமத்தில் காணலாம் 20:2-13. மோசே ஜனங்கள் மேல் கோபமடைந்தான். மோசே கற்பாறையில் இரு தடவைகள் கோலை அடித்தான். தேவனல்ல, தானே தண்ணீரைப் புறப்படச் செய்ததாக மோசே கூறினான் (வசன. 10). இது ஒரு மோசமான பாவம். மோசே தேவனை நம்பவும் இல்லை. தேவனுடைய பரிசுத்தத்தை இஸ்ரவேல் ஜனங்களுக்கு காட்டவும் இல்லை (வசன. 12).

- மோசேயின் பாவத்திற்கு யாரைக் குற்றம் சுமத்த முடியும்?

மோசேயால் மக்கள் மேல் குற்றத்தை சுமத்த முடியும். மக்கள் தான் அவனுக்கு கோபமூட்டினார்கள். ஆனால் குற்றம் மோசேக்குரியது. மோசே பாவம் புரிந்து குற்றமுள்ளவனானான். ஏனெனில் அவன் தேவனை நம்பவுமில்லை, கனப்படுத்தவுமில்லை தேசத்திற்குள் பிரவேசிக்க முடியாதபடி மோசே தண்டிக்கப்பட்டான். உபாகமத்தின் முடிவில் மோசே மரிக்கிறான். யோசுவா தான் மக்களை தேசத்தினுள் வழிநடத்துகிறான்.

- மோசேக்கான தண்டனை நியாயமானதா?

மோசே தேவனுக்காக பெரிய காரியங்களைச் செய்தான். தேவனின்

கற்றுக்கொள்ளுங்கள்: உபாகமம் 3:23–29

ஊழியனான மோசேயை தேசத்தினுள் பிரவேசிக்க தேவன் அனுமதித்திருக்க கூடாதா? தேசத்தினுள் பிரவேசிக்க மோசே மிகவும் ஆவலாயிருந்தான் தேவனுடைய நீதி நியாயமானதே. மோசேயின் பாவம் மோசமானது. தேவன் எல்லாப் பாவத்தையும் மோசமானதாகவே கருதுகிறார் என்பது எமக்கான ஓர் எச்சரிக்கையாகும்.

பிரதான கரு

தேவன் தெரிந்தெடுக்கும் தலைவர்கள்கூட தவறுகிறார்கள்.

கற்பித்தல்: உபாகமம் 3:23–29

ஆரம்பியுங்கள்

தேவன் பயன்படுத்தும் தலைவர்கள் பூரணமானவர்கள் என சில நேரங்களில் நாம் எண்ணுகிறோம். தலைவர்களும் தவறுவார்கள் என்பதை அறிவது கிறிஸ்தவர்களுக்கு நல்லது. பின்வரும் தவறிழைத்த தலைவர்களைப் பற்றி கூறுங்கள்: ஆபிரகாம், சிம்சோன், தாவீது, சாலமோன் ஆகியோர்.

மோசே பாவம் செய்தான். மோசே செய்த பாவம் என்ன என்பதை விளக்குங்கள். அவனுடைய பாவம் மோசமானது எனக் கூறுங்கள் ஏனெனில் கற்பாறையிலிருந்து தண்ணீரைக் கொடுத்த தேவனுக்கு கனத்தை செலுத்தவில்லை. மோசே வாக்களிக்கப்பட்ட தேசத்தினுள் பிரவேசிக்க அவனுக்கு அனுமதியளிக்கப்படவில்லை.

வாக்களிக்கப்பட்ட தேசத்தினுள் பிரவேசிப்பதற்காக மோசே விண்ணப்பம் செய்தான்

வாசியுங்கள்: உபாகமம் 3:23–25

மோசே தேவனின் மகத்துவங்களைப் பேசுகிறான் (வச. 24). தேவன் மகத்துவமான மற்றும் வல்லமையான காரியங்களைச் செய்தார். தேவனிடம், தேசத்தினுள் பிரவேசிக்க எவ்விதம் விண்ணப்பித்தான் என்பதை மோசே நினைவு கூருகிறான் (வச. 25). மோசே தேவனிடம் இரக்கத்தை/தயவைக் கேட்கிறான். தயவு

என்பதன் அர்த்தம் மன்னிப்பு என்பதாகும். தனது பாவத்தை தேவன் பொருட்படுத்தாமல் இருக்க வேண்டுமென மோசே எதிர்பார்த்தான்.

மோசேயின் ஜெபத்துக்கு தேவன் பதிலளிக்கிறார்

வாசியுங்கள்: உபாகமம் 3:26–29
தேவன் “இல்லை” எனப் பதிலளிக்கிறார். (வச. 26). மோசே வாக்களிக்கப்பட்ட தேசத்தினுள் பிரவேசிக்க முடியாது. தேவன் எமது ஜெபங்களுக்கு எப்போதும் “ஆம்” எனப் பதிலளிப்பவர் அல்ல. தேவன் எப்போதும் தயவு செய்யமாட்டார். தேவன் பரிசுத்தர்.

மக்கள் மோசேயைக் கோபப்படுத்தினார்கள். ஆனால் அது அவனுடைய பாவத்திற்கான சாக்குப்போக்காக அமையாது.

மோசேயின் ஜெபத்திற்கு மேலும் 2 பதில்களை தேவன் கொடுக்கிறார்.

1. மோசே தேசத்தைப் பார்க்க அனுமதிக்கப்பட்டது. (வச. 27) மோசே மரணிப்பதற்காக இம்மலையில் ஏறுவார். (உபா. 34:1) இது தேவன் மோசேயின் மேல் காட்டிய இரக்கத்தைக் காட்டுகிறது.
2. மோசே இறந்த பின்னர், யோசுவா மக்களை வழிநடத்துகிறான் (வச. 28). இதுவும் இஸ்ரவேல் ஜனங்கள் மத்தியில் தேவன் காட்டும் இரக்கமாகும். தேவன் அவர்களுக்கு இன்னுமொரு தலைவரைக் கொடுக்கிறார்.

எமக்கான எச்சரிப்பு

மோசேயின் பாவம் எம்மையும் எச்சரிக்கிறது. தலைவர்களும் கூட தவறுகிறார்கள். தேவன் எப்போதும் தயவு செய்வார் என எண்ணுதல் கூடாது. நாம் எப்பொழுதும் தேவனை நம்பி அவருக்கு கீழ்படிதல் வேண்டும். மற்றவர்கள் எம்மை கோபப்படுத்தினாலும் பாவம் செய்வதற்கான சாக்குப்போக்காக அதை எடுக்கக் கூடாது. நாம் தேவனுக்கு கீழ்படிந்து அவரை நம்ப வேண்டும்.

 # எடுத்துக் காட்டு: ஒரு மனிதனுடைய மனைவி இரவுணவு தயாரிப்பதற்கு தாமதமாகிவிட்டது. அவளுடைய கணவனுக்கு கோபமுண்டானது. எனவே கணவன் மனைவியை அடித்தான். அவர்களுடைய மேய்ப்பன் இதை அறிந்து கணவனுடன் பேசினார். இது மனைவியின் தவறு எனவும், இரவுணவை தாமதப்படுத்தினாள் என கணவன் கூறினான். மேய்ப்பன் அதைத் தவறு என கூறினான். யாராவது எம்மை கோபப்படுத்தினால் அதை ஒரு சாக்காக வைத்து பாவம் செய்ய முடியாது.

↑ ஜெபியுங்கள்: தேவ மனிதரின் தலைவர்கள் எப்போதும் தேவனை நம்பி, கீழ்படியவேண்டுமென தேவனிடம் கேளுங்கள்.

7 மற்றவர் விசுவாசிக்கும் படியாக கீழ்படியுங்கள்

பின்னணி

கடந்த காலத்தைப் பற்றி இஸ்ரவேல் ஜனங்களுக்கு மோசே நினைவு படுத்துகிறான். ஏனெனில் அவர்கள் கீழ்படிந்து வாக்களிக்கப்பட்ட தேசத்தினுள் பிரவேசிக்க வேண்டும் என விரும்பினான். எப்படி வாழ வேண்டுமென மோசே தற்போது அவர்களுக்கு கூறுகிறான். ஒரு எச்சரிப்பையும் மற்றும் ஒரு ஊக்குவித்தலையும் கொடுக்கிறான்.

வசனங்கள் 1–8 ஐ படிக்கவும்

2 அல்லது 3 தடவைகள் வாசியுங்கள். ஒவ்வொரு வாக்கியத்தையும் வாசித்து அதை உமது சொந்த மொழிநடையில் விளக்குக.

குறிப்புக்கள்

- **உபாகமம் 4:2.** ஒன்றையும் கூட்டவோ மற்றும் குறைக்கவோ வேண்டாம். அல்லது எதையும் அகற்றவும் வேண்டாம். தேவ வார்த்தையை ஒருபோதும் நாம் மாற்றக் கூடாது. சில சமயங்களில் தேவ வார்த்தைக்கு கீழ்ப்படிவது கடினமாக இருக்கும். எனவே அதை இலகுபடுத்த தேவ வார்த்தையை மாற்றக் கூடாது.
- **உபாகமம் 4:7.** "எமது தேவனாகிய கர்த்தர் எமக்கு சமீபமாயிருக்கிறார்." இஸ்ரவேலர் கீழ்ப்படியும் போது தேவன் அவர்களை ஆசீர்வதிக்கிறார். தேவன் அவர்களுடன் நெருங்கி இருப்பார். ஏனைய தேசத்தவர்கள் இதைக் கண்டு பிரமிப்பார்கள்.
- **உபாகமம் 4:8.** "நீதியுள்ள நியாயங்களும் கட்டளைகளும்." பழைய ஏற்பாட்டில் தேவன் கொடுக்கின்ற கட்டளைகள் நியாயமானவை. தேவனின் கட்டளைகள், ஏனைய தேசத்தாருடைய கட்டளைகளை விட மேலானதாய் இருக்கிறது. இஸ்ரவேலர் தேவனின் கட்டளைகளுக்கு கீழ்ப்படியும் போது ஏனைய தேசத்தினர் தேவனிடம் வருவார்கள்.

ஆராய்ந்து பாருங்கள்

எண்ணாகமம் 25:1-9ல் பேயோரில் இஸ்ரவேல் ஜனங்களுக்கு ஏற்பட்டதை வாசித்துப் பாருங்கள். இஸ்ரவேல் ஜனங்கள் பாலியல் பாவத்திலும், விக்கிரக ஆராதனையிலும் ஈடுபடடிருந்தார்கள்.

ஏனைய ஜனங்களின் தீமையான வழிகளை பின்பற்றக் கூடாதென்பதே இஸ்ரவேல் ஜங்களுக்கு கொடுக்கப்பட்ட எச்சரிக்கையாகும். அவர்கள் தேவனுக்கு கீழ்ப்படியும் போது மற்றவர்கள், இவர்களைப் பின்பற்றி தேவனிடம் வருவார்கள் என்பதே இவர்களுக்கான ஊக்குவிப்பாகும்.

இஸ்ரவேல் ஜனங்களின் மூதாதையரான ஆபிரகாமைத் தெரிவு செய்ததானது, அவர் மூலம் சகல தேசங்களும் (ஜாதியினரும்) ஆசீர்வதிக்கப் படுவதற்காகவே (ஆதி. 12:3) அது எப்படி நடைபெறுமென உபாகமம் 4:6-8 வசனங்கள் விளக்குகிறது. இஸ்ரவேல் ஜனங்கள் தேவனுக்கு கீழ்படியும் போது ஏனைய மக்கள் அல்லது ஜாதிகள் கேள்விகளைக் கேட்டு இஸ்ரவேலின் தேவனைக் குறித்து ஆச்சரியமடைவார்கள்.

⬇ கற்றுக்கொள்ளுங்கள்: உபாகமம் 4:1–8

இஸ்ரவேல் ஜனங்கள் ஒருதேசத்தவராக இருந்தார்கள். இன்று தேவ மனிதர்கள் சபையாகவுள்ளனர். தேவ மனிதர்கள் சகல தேசங்களிலும் வாழ்கிறார்கள்.

சபையானது எவ்விதம் தேவனுக்கு கீழ்ப்படிந்து தேவனண்டை மக்களை கவர்ந்திழுக்க வேண்டும் என எண்ணிப் பாருங்கள்.

⊕ **பிரதான கரு**

தேவ மனிதர்கள் தேவனுக்கு கீழ்ப்படியும் போது, ஏனையவர்கள் தேவனண்டை வருவார்கள்.

→ கற்பித்தல்: உபாகமம் 4:1–8

⊳ **ஆரம்பியுங்கள்**

- ஏனையோர் வாழ்வதை விட கிறிஸ்தவர்கள் வேறு விதமாக வாழ்கிறார்கள் என எண்ணுகிறீர்களா?

துக்கமான காரியம் என்னவென்றால் பல நேரங்களில் வித்தியாசமே இல்லை. தேவ மனிதர்கள் சில நேரங்களில் பொய்யுரைப்பவர்களாக, அநீதியுள்ளவர்களாக, பேராசையுள்ளவர்களாக, பல தவறுகளைச் செய்கிறவர்களாகவுள்ளார்கள். தேவ மனிதர்கள் தேவனை அறியாதவர்களை விட வேறுபட்டவர்களாக காணப்பட வேண்டும். இவ்விதமாயிருப்பின், அவிசுவாசிகள் தேவனண்டை வருவார்கள்.

எடுத்துக்காட்டு: ஒரு கிறிஸ்தவனுடைய அயலவன் தேவனை அறியாதவனாக இருக்கையில் அவன் சுகவீனமுறும் வேளையில் அவனுக்கு உணவு, சமைத்த உணவுகள், போன்றவற்றைக் கொடுத்து உதவினான். அவ்வயலவன் ஆச்சரியமடைந்தான். அவன் தனது அயலவன் இரக்கமுடையவன் என அறிந்து அவனும் கிறிஸ்தவனாக வேண்டுமென விரும்பினான்.

➡ கற்பித்தல்: உபாகமம் 4:1–8

எச்சரிக்கை!
மற்றவர்களைப் பின்பற்ற வேண்டாம்
⌄ வாசியுங்கள்: உபாகமம் 4:3–4
எண்ணாகமம் 25:1~9 வாக்கியங்களிலிருந்து பேயோரில் நடந்த பாவத்தை பற்றி கூறுங்கள். இஸ்ரவேல் ஜனங்கள் பேயோரில் உள்ள அவிசுவாசிகளைப் பின்பற்றி விக்கிரக ஆராதனையிலும், பாலியல் பாவங்களிலும் ஈடுபட்டார்கள். மரணத்தின் மூலமே இஸ்ரவேலரை தேவன் தண்டித்தார் என்பதை நினைவுபடுத்துங்கள்.

எமது உலகின் பாவங்களை கிறிஸ்தவர்கள் பின்பற்றக் கூடாது. தேவ பிள்ளைகள் தேவனுடைய தராதரங்களையுடையவர்களாக வாழ வேண்டும். உதாரணமாக நாம் விக்கிரகங்களை வழிபடக் கூடாது. பணத்தை எமது தேவனாக்கக் கூடாது. நாம் எப்போதும் உண்மையே பேச வேண்டும். அவிசுவாசிகள் வாழ்வதைப் போல் கிறிஸ்தவர்கள் வாழும்போது தேவன் சந்தோசமடைவதில்லை.

ஊக்குவிப்பு!
தேவனுக்கு கீழ்படிந்து தனித்துவமுள்ளவர்களாயிருங்கள்
⌄ வாசியுங்கள்: உபாகமம் 4:6–8
வாக்களிக்கப்பட்ட தேசத்தில் இஸ்ரவேலர் தேவனுக்கு கீழ்படிய வேண்டும் (வசன 1,5). ஏனைய தேசத்தவர்களை விட வேறுபட்டவர்களாக இருத்தல் வேண்டும். அப்போது என்ன நடக்கும்?

- இஸ்ரவேலர் ஞானமுள்ளவர்கள் என ஏனைய தேசத்தவர்கள் எண்ணுவார்கள் (வசன. 6).
- இஸ்ரவேலர் தேவனுடன் நெருக்கமுள்ளவர்கள் என்பதை ஏனைய தேசத்தவர்கள் காண்பார்கள்.
- இஸ்ரவேலரின் சட்டமானது நீதியும் நியாயமுமானதென ஏனைய தேசத்தவர்கள் பார்ப்பார்கள்.

தேவன் தம்மை ஆராதிக்கும் படியாக தேசங்களை கொண்டுவர விரும்புகிறார். அவர் தமது ஜனங்களுக்கூடாக இதைச் செய்வார். இதனால் தான் தேவன் ஆபிரகாமுடைய குடும்பத்தை (இஸ்ரவேல்) தெரிவு செய்தார். (ஆதி. 12:3)

கிறிஸ்தவர்கள்தான் இன்று தேவபிள்ளைகளாகவுள்ளனர். கிறிஸ்தவர்கள் தேவனுக்கு கீழ்ப்படிய வேண்டும். உலகத்தாரைவிட வேறானவர்களாக இருத்தல் வேண்டும். ஆனால் இஸ்ரவேலரைப் போல, கிறிஸ்தவர்கள் அடிக்கடி அவிசுவாசிகளின் நடைமுறைகளைப் பின்பற்றுகிறார்கள்.

ⓘ பிரயோகியுங்கள்: லகத்தாரிடமிருந்து வேறுபட்டவர்களாக இருந்து, மக்களைத் தேவனிடம் கொண்டுவரக்கூடிய வாழ்க்கையை வாழும் படி உங்கள் மக்களை ஊக்கப்படுத்துங்கள்.

⊕ ஜெபியுங்கள்: உமது சபை அங்கத்தவர்கள், தேவனுக்கு கீழ்ப்படிந்து, உலகத்திலிருந்து வேறுபட்ட வாழ்வு வாழவேண்டுமென ஜெபியுங்கள். கிறிஸ்தவர்களின் முன் உதாரணமான வாழ்வின் மூலம் மக்கள் தேவனைப் பின்பற்றுகிறவர்களாக வேண்டுமென ஜெபியுங்கள்.

8 விக்கிரகங்களை ஆராதிக்க வேண்டாம்

பின்னணி
இஸ்ரவேல் ஜனங்கள் வாக்களித்த தேசத்தினுள் பிரவேசிக்க முன்னர் மோசே அவர்களுக்கு பிரசங்கிக்கின்றான். சீனாய் மலையில் (ஓரேப்) இருந்த காலத்தில் இஸ்ரவேல் ஜனங்களுக்கு நினைவூட்டுகின்றான்.

வசனங்கள் 9–20 ஐ படிக்கவும்
ஒவ்வொரு வாக்கியத்தையும் வாசித்து அதை உமது சொந்த மொழிநடையில் விளக்குக.

குறிப்புக்கள்
- **உபாகமம் 4:10.** “ஓரேப்” என்பது சீனாய் என்பதற்கு மற்றுமொரு பெயராகும்.
- **உபாகமம் 4:12.** தேவன் அக்கினியின் நடுவில் இருந்து பேசினார். மக்கள் தேவனைக் காணவில்லை. ஆனால் அவரது சத்தத்தைக் கேட்டார்கள். தேவன் அங்கிருந்ததை அக்கினி காண்பித்தது.
- **உபாகமம் 4:19.** உங்களை மிகக் கவனமாகக் காத்துக் கொள்ளுங்கள். இதன் கருத்து என்னவெனில் இஸ்ரவேல் ஜனங்களுக்கு இக்கட்டளைக்குக் கீழ்ப்படிவது இலகுவானதாயிருக்கப் போவதில்லை.
- **உபாகமம் 4:16.** கெடுத்துக் கொள்ளுதல் என்பதன் அர்த்தம் தவறானவற்றைச் செய்வதாகும்.
- **உபாகமம் 4:20.** இருப்புக்காள வாயில் என்பது எகிப்திலே விக்கிரகங்களைச் செய்யும் உலோகங்களைக் குறிக்கிறது. “சுதந்திரமான” என்பது தேவன் அந்த நேரத்தில் இஸ்ரவேல் ஜனங்களுடன் கொண்டிருந்த விசேட உறவைக் குறிக்கின்றது.

ஆராய்ந்து பாருங்கள்
இஸ்ரவேல் ஜனங்கள் சீனாய் மலைக்கு வந்தார்கள் (யாத்திராகமம் 19). அங்கே அவர்கள் ஒரு வருடம் தங்கினார்கள் தேவன் அவர்களுடன் பேசி நியாயப் பிரமாணங்களைக் கொடுத்தார்.

அநேக சமயங்கள் அந்நாட்களில் ஆரதனைக்கு விக்கிரகங்களைக் கொண்டிருந்தனர். அவை மரத்தால் அல்லது கல்லினால் செய்யப்பட்டவையாக இருந்தன. விக்கிரகங்கள் அநேகமாக மனிதர், விலங்குகள், பாம்புகள், பறவைகள், அல்லது மீன்கள் அகியவற்றின் வடிவத்தில் காணப்பட்டன. பல சமயங்கள் சூரியன், சந்திரன் மற்றும் நட்சத்திரங்களை வழிபட்டனர். இஸ்ரவேலர் விக்கிரகங்களை வைத்திருக்க அனுமதிக்கப்படவில்லை.

- *இதற்கான காரணம் யாது?*

16-19 வரையிலான வாக்கியங்கள், ஆதியாகமம் 1:14-27 வரையுள்ளவற்றை ஞாபகப்படுத்துகிறது. சகலமும் தேவனாலே உருவாக்கப்பட்டன. நாம் தேவனால் உருவாக்கப்பட்டவற்றையல்ல தேவனையே ஆராதிக்க வேண்டும்.

தேவனை ஆராதிக்க வேண்டும் என்பதற்கான இன்னுமோர் காரணம் 20 ம் வாக்கியத்தில் உள்ளது. தமது சொந்த ஜனமாக இருக்க வேண்டும் என்பதற்காக தேவன் இஸ்ரவேலை

⬇ கற்றுக்கொள்ளுங்கள்: உபாகமம் 4:9–20

எகிப்தில் இருந்து அழைத்து வந்தார். ஏனைய ஜாதிகளில் இருந்து வேறுபட்டதாக இஸ்ரவேல் காணப்பட வேண்டும். தேவன் எமக்கு எப்படிக் காணப்படுகின்றார் என்பதை விட அவர் கூறுவது அதிக முக்கியமானது. நாம் அவருக்கு செவிமடுக்க வேண்டும். அவர் எவ்விதமாய் காணப்படுகின்றார் என்பதை விட அவர் தமது ஜனத்திற்குச் செய்கின்ற காரியங்கள் அதிக முக்கியமானவை. அவர் இஸ்ரவேலரை எகிப்தில் இருந்து மீட்டுக் கொண்டார்.

⊕ **பிரதான கரு**

தேவனுக்குப் பௌதீக அமைப்புக் கிடையாது எனவே விக்கிரகங்களை ஆராதிக்க வேண்டாம்.

→ கற்பித்தல்: உபாகமம் 4:9–20

⊙ **ஆரம்பியுங்கள்**

கடவுள் எவ்விதமாக இருக்கிறார்? என சில சமயம் பிள்ளைகள் கேட்பார்கள்; அவர் வெள்ளையரா? கறுப்பரா? அல்லது ஆசிய நாட்டவரா? அவருக்குத் தாடி உண்டா? அது எமக்குத் தெரியவில்லை. இஸ்ரவேல் ஜனங்கள் ஓரேப் மலையில் இருந்தபோது அவர்கள் தேவனைக் காணவில்லை. அவர் குரலைத்தான் கேட்டார்கள்.

ஓரேப் (சினாய்) மலையை நினைவு கூரல்

⊙ **வாசியுங்கள்: உபாகமம் 4:9–14**

வாசியுங்கள் ஓரேப் மலையில் இருந்ததை மோசே இஸ்ரவேல் ஜனங்களுக்கு நினைவூட்டுகிறார். ஜனங்கள் மலையருகே இருந்தார்கள். அங்கு நெருப்பும், மேகமும் இருளும் இருந்தது. தேவனின் சத்தமும் இருந்தது ஆனால் மக்கள் தேவனைக் காணவில்லை.

தேவன் பத்துக் கற்பனையில் வார்த்தைகளையும், ஏனைய சட்டங்களையும் பேசினார் (வசனம் 14).

இப் பகுதியின் பிரதான கரு "நினைவுகூருதல்" என்பதாகும். தேவனுக்கு சரீர அமைப்பு இல்லை. அதை அவர்கள் மறந்து விடுதல் கூடாது. அவர்கள் தமது பிள்ளைகளுக்கும், தமது

→ கற்பித்தல்: உபாகமம் 4:9–20

பிள்ளைகளின் பிள்ளைகளுக்கும் சொல்ல வேண்டும். (வசனம் 9-11)

விக்கிரகங்களை செய்ய வேண்டாம்

வாசியுங்கள்: உபாகமம் 4:15–20
ஜனங்கள் ஒரேப்பை நினைக்க வேண்டும் அதனால் தேவனாக ஆராதிப்பதற்காக விக்கிரகங்களை செய்தல் கூடாது. அநேக அவிசுவாசிகள் விக்கிரகங்களை வைத்திருக்கிறார்கள்.

- உமது நாட்டில் ஆராதனைக்காக விக்கிரகங்களையும், சிலைகளையும், படங்களையும் கொண்டுள்ள சமயங்கள் காணப்படுகின்றனவா?

அவர்களின் விக்கிரகங்கள் எவ் வண்ணமாய் காணப்படுகின்றது? 16-20 வரையுள்ள வாக்கியங்களில் குறிப்பிடப்பட்ட விதமாக ஜனங்கள் விக்கிரகங்களை உருவாக்குகிறார்கள் என்பதைக் காணலாம். ஆதியாகமம் முதல் அதிகாரத்தில் எவ்விதம் இவை குறிப்பிடப்பட்டுள்ளது எனக் காட்டுங்கள். தேவன் படைத்தவற்றை ஆராதிப்பது தீமையானது. நாம் தேவனை மட்டுமே ஆராதிக்க வேண்டும். எகிப்திய ஜனங்கள் விக்கிரகங்களைச் செய்தார்கள். அங்கிருந்துதான் தேவன் இஸ்ரவேல் ஜனங்களை வெளியே கொண்டு வந்தார். எங்களுக்காக தேவன் விசுவாசிகளை இயேசுவுக்குள் விடுவித்துள்ளார். நாம் தேவனை மட்டுமே ஆராதிக்க வேண்டும்.

- உங்கள் வாழ்க்கை குறித்து ஆராய்ந்து கவனமாய் சிந்தியுங்கள். ஏனைய காரியங்கள் எதையாவது ஆராதிக்கின்றீர்களா? தேவனுக்குக் கொடுக்க வேண்டிய இடத்தை உமது வாழ்வில் வேறு ஏதாவதற்கு கொடுத்துள்ளீரா?

தேவ வார்த்தைக்கு செவிமடுங்கள்
வேதாகமத்தில் உள்ள தேவவசனத்தை வாசிப்பதனால் இன்று தேவ வார்த்தையைக் கேட்கின்றோம். வேதாகமத்தில் தேவன் எம்முடன் பேசுகிறார். எனவே நாம் அவருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிய வேண்டும். வேதாகமமே எமக்குக் கடவுளின் வார்த்தையாகும். எனவே நாம் வேதாகமத்திற்கு அதிக கவனத்தைக் கொடுத்தல் வேண்டும்.

எடுத்துக்காட்டு: சில கிறிஸ்தவர்கள் இயேசுவின் அல்லது மரியாளின் சிலையையோ அல்லது படத்தையோ பார்ப்பார்கள். வேதாகமத்தில் தேவன் பேசுவதைக் கேட்க மாட்டார்கள். இது ஆபத்தானது. இது ஜனங்களை அறியாமைக்குள்ளும் மூடநம்பிக்கைக்குள்ளும் கொண்டு செல்லும். கிறிஸ்தவர்கள் வேதாகமத்தில் உள்ள வேதவார்த்தைக்கு கவனத்தை செலுத்தி, அதற்குக் கவனமாய் கீழ்ப்படிய வேண்டும்.

ஜெபியுங்கள்: வேதாகமத்தை வாசிக்கும் போது தேவனுக்கு செவிசாய்க்க உதவும்படி அவரிடம் கேளுங்கள்.

9 எரிச்சலும் தயையுமுள்ள தேவன்

பின்னணி

மக்கள் வாக்களிக்கப்பட்ட தேசத்திற்குப் பிவேசிக்க முன்பதாக மோசே பிரசங்கம் செய்கின்றார். விக்கிரகங்களை ஆராதிக்க வேண்டாமென மக்களை எச்சரிக்கின்றார்.

வசனங்கள் 21–31 ஐ படிக்கவும்

ஒவ்வொரு வசனத்தையும் வாசித்து உங்கள் சொந்த உரைநடையில் விளங்கிக் கொள்ளுங்கள்

குறிப்புக்கள்

- **உபாகமம் 4:23.** "உடன்படிக்கை" யின் அர்த்தம் உறுதியான உறவு என்பதாகும்.
- **உபாகமம் 4:24.** 'எரிச்சலுள்ள': எனும் பதத்திற்கு இன்னுமொருவருக்கு உரித்தான ஒன்றை தவறாக விரும்புவது என அர்த்தம் கொள்ளலாம். ஆனால் இங்கு எரிச்சல் என்பதன் அர்த்தமாவது தேவன் நமக்கு உரித்தானதை மட்டும் விரும்புகின்றார் என்பதாகும். தேவ ஜனங்கள் அவருக்கே சொந்தமானவர்கள். ஏனென்றால் அவர் தான் அவர்களை மீட்டெடுத்தார்.
- **உபாகமம் 4:26.** "அழிவடைதல்" என்பதன் பொருள் நிர்மூலமாக்கப்படல் அல்லது "மரித்தல்" என்பதாகும்
- **உபாகமம் 4:29.** "கர்த்தரைத் தேடுதல்" என்பதன் பொருள் பாவத்தில் இருந்து திரும்பி தேவனிடம் மன்னிப்பை வேண்டித் திரும்புவதாகும். ஜனங்கள் தமது முழு இருதயத்தோடும், ஆத்துமாவோடும் தேவனைத் தேட வேண்டும். அவர்களுக்கு தேவன் கட்டாயம் தேவை.
- **உபாகமம் 4:31.** "தயையுள்ளவர்" என்பதன் பொருளானது தேவன் ஜனங்களை மன்னித்து வாக்களிக்கப்பட்ட தேசத்திற்கு அவர்களைக் கொண்டு வருவார் என்பதாகும். இதற்கு அவர்கள் தகுதியுடையவர்கள் அல்லவே.

ஆராய்ந்து பாருங்கள்

- இவ் வேதாகமப்பகுதியில் தேவனிடமிருந்து வரும் கட்டளைகள் யாவை?

தேவன் எரிச்சலுள்ளவர் (வசனம் 24) ஜனங்கள் அவரிடமிருந்து விலகும் போது அவர் கோபமடைகின்றார். அதனால் தான் தேவன் மோசேயுடன் கோபமடைந்தார். (எண்ணாகமம் 20:12 யும் உபாகமம் 3:26 யும் பார்க்கவும்) எனவே தேவ ஜனங்கள் உடன்படிக்கையின் வாக்குத்தத்தங்களை மறந்து விடாதபடி கவனமாக இருத்தல் வேண்டும்.

- இஸ்ரவேல் ஜனங்கள் தேவனிடமிருந்து விலகி விக்கிரகங்களை ஆராதித்தால் தேவன் என்ன செய்வார்? (வசனம் 26~28)

தேவன் இரக்கமும் உடையவர் (வசனம் 31) அவர் தமது ஜனங்களை மன்னிக்க விரும்புகின்றார். இஸ்ரவேல் ஜனங்கள் தேவனைத் தேடுதல் வேண்டும். (வசனம் 29) அதன் பின்னர் அவர்கள் தேசத்திற்குத் திரும்புதல் வேண்டும். தேவ ஜனங்கள் அவரை விட்டு

⬇ கற்றுக்கொள்ளுங்கள்: உபாகமம் 4:21–31

விலகினாலும் தேவன் அவர்களை மறப்பதில்லை ஏனெனில் அவர் ஆபிரகாமுடன் செய்த உடன்படிக்கையைக் காத்துக் கொள்கிறார். நூற்றுக்கணக்கான வருடங்களுக்குப் பின்பு தேவன் இஸ்ரவேலைத் தண்டித்தார். ஏனெனில் அவர்கள் தேவனிடமிருந்து விலகி இருந்தார்கள். பாபிலோனிய ஜனங்கள் இஸ்ரவேலைத் தோற்கடித்தார்கள். அநேக இஸ்ரவேலர்கள் பாபிலோனுக்குக் கொண்டு போகப்பட்டார்கள் ஆனால் சிலர் தேசத்திற்குத் திரும்பி வந்தார்கள்.

⊕ **பிரதான கரு**

தேவன் எரிச்சலும் தயையுமுள்ளவராக இருக்கிறார்.

➡ கற்பித்தல்: உபாகமம் 4:21–31

ஆரம்பிப்போம்

- தேவன் எப்படிப்பட்டவர்? அவர் பூரண அன்பானவரா? அவர் கோபமுள்ளவரா? அவர் இரு தன்மையும் உள்ளவரா?

தேவன் எரிச்சலுள்ளவர்

வாசியுங்கள்: உபாகமம் 4:21–28

எடுத்துக்காட்டு: எமக்குரியவற்றின் மேல் மட்டும் நாம் எரிச்சல் உள்ளவர்களாக இருப்பது சரியானதே. எனவே ஒரு கணவனும் மனைவியும் தமது துணைவருக்காக எரிச்சல் உள்ளவர்களாகக் காணப்படலாம். அவர்கள் ஒருவருக்கொருவர் உரித்துடையவர்கள். தனது மனைவி இன்னுமொரு மனிதனை நேசிக்கின்றாள் எனக் கணவன் காணும் போது அவன் கோபமடைய அவனுக்கு உரிமையுள்ளது. மனைவியானவள் தனது கணவன் இன்னுமொரு பெண்ணை நேசிக்கிறான் என காணும் போது கோபமடைய அவளுக்கு உரிமை உண்டு.

தேவன் தமது மக்கள் மேல் எரிச்சலுள்ளவராக இருக்கிறார். அவர்கள் அவருக்கு மட்டுமே உரித்தானவர்கள். தேவன் மாத்திரமே அவர்களை மீட்டுக்கொண்டார். அவருடைய ஜனங்கள் ஏனைய தேவர்களிடத்திற்கும், விக்கிரகங்களிற்கும் திரும்பும் போது தேவன் கோபமடைகிறார்.

→ கற்பித்தல்: உபாகமம் 4:21–31

23ம் வசனத்தில் காணப்படும் "உடன்படிக்கையை மறக்க வேண்டாம்" என்ற முக்கிய கட்டளையை நீங்கள் கற்பிப்பவர்களுக்கு விளங்கப்படுத்துங்கள். இஸ்ரவேல் ஜனங்கள் விக்கிரகத்தைச் செய்வார்களேயாயின் அவர்கள் உடன்படிக்கையை மறந்தவர்களாவார். தேவனுக்கு மட்டுமே சொந்தமானர்கள் என்பதை மறக்கிறவர்களாகவுள்ளனர்.

தேவ ஜனங்கள் தேவனை மறக்கும் போது என்ன நடைபெறும் என்பதை விளங்கப்படுத்துங்கள் (வசனம் 26–28). இதுவே இஸ்ரவேல் ஜனங்களின் வாழ்க்கையில் பின்னர் நடைபெற்றன என நீங்கள் கற்பிப்பவர்களிடம் கூறுங்கள்.

தேவன் தயையுள்ளவர்.

வாசியுங்கள்: உபாகமம் 4:29–31

தேவன் தயையுமுள்ளவர். தேவன் அவரது ஜனங்கள் அவரைத் தேட வேண்டுமென விரும்புகிறார். ஜனங்கள் தமது இருதயத்தில் உண்மையும், நேர்மையும் உள்ளவர்களாகவும், மாய்மாலமும் தேவனை ஏமாற்றுகிறவர்களாகவும் இருக்கக்கூடாது எனக் கூறுங்கள்.

ஜனங்கள் தேவனிடமாக திரும்பி தமது பாவத்திலிருந்து விலகினால் தேவன் அவர்களை மீண்டும் தேசத்திற்குக் கொண்டு வருவார். தேவன் ஆபிரகாமுக்குக் கொடுத்த வாக்குத்தத்தங்களை நிறைவேற்றுவார். அவருடைய ஜனங்கள் உண்மையற்றவர்களாக இருந்தாலும் தேவன் உண்மையுள்ளவராக இருக்கிறார்.

புதிய ஏற்பாட்டில் தேவனை எரிச்சலுள்ளவராகவும், தயையுள்ளவராகவும் காண்கிறோம். சிலுவையில் இயேசு மனித பாவங்களுக்காக மரித்தார். ஏனெனில் ஜனங்கள் தம்மை விட்டு விலகிய போது தேவன் கோபமடைந்தார். இயேசுவின் மரணமும் தேவன் தயையுள்ளவரும் மன்னிக்கிறவரும் என்பதைக் காட்டுகின்றது.

ஆராய்ந்து பாருங்கள்: தேவனுடன் எமது உடன்படிக்கையைக் காத்து அவர் எமது தவறுகளை மன்னிக்கிறவரானதால் அவருக்கு நன்றி கூற வேண்டும். தேவனைத் தேடுவதில் உண்மையுள்ளவர்களாக இருத்தல் வேண்டும். ஒரு கணவனும் மனைவியும் ஒருவருக்கொருவர் உரித்துடையவர்களாயிருப்பது போல் நாம் தேவனுக்கே மட்டும் உரியவர்கள்.

- தேவனைப்பற்றி எவ்வாறு சிந்திக்கிறீர்கள்? அவருக்கு மட்டுமே உரித்தானவர்களா? தேவனுக்கு உண்மையுள்ளவர்களாக இருக்கிறீர்களா? அல்லது உங்களுக்கு வேறு தேவர்கள் உள்ளனரா? உங்கள் பாவத்திலிருந்து விலகி தேவனிடம் திரும்ப வேண்டிய தேவையுள்ளதா?

ஜெபியுங்கள்: அவருக்கு மட்டுமே உண்மையாக இருக்க தேவனிடம் உதவியை கேளுங்கள்.

10 வேறொரு தெய்வமில்லை

பின்னணி

இஸ்ரவேலர் வாக்களிக்கப்பட்ட தேசத்திற்குள் பிரவேசிக்க முன்பதாக மோசே அவர்களுக்குப் பிரசங்கம் செய்கிறார். கடந்து போன வருடங்களில் வனாந்திரங்களில் இருந்து ஜனங்கள் கற்றுக் கொள்ள வேண்டுமென மோசே விரும்பினார். வாக்களிக்கப்பட்ட தேசத்தில் நல்ல வாழ்க்கையை ஜனங்கள் வாழ வேண்டுமென மோசே விரும்பினார்.

வசனங்கள் 32–40 ஐ படிக்கவும்

ஒவ்வொரு வசனத்தையும் வாசித்து அதை உங்கள் சொந்த மொழி நடையில் விளங்கிக் கொள்ளுங்கள்.

குறிப்புக்கள்

- **உபாகமம் 4:32.** “இதுபற்றி இப்பொழுது கேளுங்கள்:” முதலாவதாக ஜனங்கள் காலம் அல்லது சரித்திரம் பற்றிக் கேட்கிறார்கள். இப்படிப்பட்ட பெரிய காரியம் நடந்ததுண்டா? இரண்டாவதாக ஜனங்கள் இடம் பற்றிக் கேட்கிறார்கள். வானத்தின் ஒரு முனை தொடங்கி அதின் மறு முனைமட்டும் இப்படிப்பட்ட காரியம் எங்காவது நடந்ததுண்டா?
- **உபாகமம் 4:35.** “அவரையல்லாமல் வேறொருவரும் இல்லை. கர்த்தரைத் தவிர வேறே பெரிதான தெய்வமில்லை”
- **உபாகமம் 4:36.** “வானத்திலிருந்து பூமிக்கு…” தேவன் வானத்திற்கும் பூமிக்கும் கர்த்தராயிருக்கிறார்.
- **உபாகமம் 4:37.** “முற்பிதாக்கள்” அல்லது “முனனோர்கள்” என்பதன் பொருள் ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு ஆகியோரைக் குறிப்பதாகும்.

ஆராய்ந்து பாருங்கள்

தேவன் எவ்வழிகளில் ஏனைய தேவர்களை விடப் பெரியவர்?

உபாகமம் 4:32-34ல் கேள்விகள் உண்டு. ஒவ்வொரு வினாவுக்குமான விடை “இல்லை” என்பதாகும். சீனாய் மலையில் இஸ்ரவேல் ஜனங்கள் தேவன் பேசுவதைக் கேட்டது போல ஏனைய ஜனங்கள் கேட்டது கிடையாது.

யாத்திராகமத்தில் தேவன் செய்ததைப் போல அடையாளங்களுடனும், அற்புதங்களுடனும் இன்னொரு தேசத்திலிருந்து ஒரு இனத்தை வேறு எந்தத் தெய்வமும் கொண்டு வரவில்லை. அவர் இஸ்ரவேல் ஜனங்களை எகிப்தில் இருந்து வெளியே கொண்டு வந்தார்.

நாம் என்ன செய்ய வேண்டுமென 35ம் வசனம் கூறுகின்றது. கர்த்தர் செய்ததை வேறு எந்த தேவனாலும் செய்ய முடியாது. எனவே ஏனைய விக்கிரகங்களையும் தேவர்களையும் ஆராதிக்க வேண்டாம். இந்த வாக்கியம் உபாகமம் 5:7ல் உள்ள முதற் கட்டளையை நினைவூட்டுகிறது. கர்த்தர் தான் மிகவும் பெரிதானவர் என ஜனங்கள் அறிய வேண்டுமென மோசே விரும்பினார். மோசே இதை 36-39 வரையுள்ள வாக்கியங்களில் மீண்டும் கூறுகின்றார். தேவன் வானத்திலிருந்து பேசினார். ஜனங்கள் பூமியில் தேவனின்

கற்றுக்கொள்ளுங்கள்: உபாகமம் 4:32–40

சத்தத்தைக் கேட்டார்கள். தேவன் சீனாய் மலையில் அக்கினியைக் கொண்டு வந்தார். பூமியில் தேவன் எகிப்திலிருந்து இஸ்ரவேலரை வெளியே கொண்டு வந்தார்.

இஸ்ரவேலரை வெளியே கொண்டு வந்ததன் நோக்கம் அவர்களை வாக்களிக்கப்பட்ட தேசத்திற்குக் கொண்டு வருவதற்காகவே ஆகும். தேவனின் வல்லமை எகிப்தைத் தோற்கடித்தது. தேசத்திலிருந்த ஜாதிகளைத் தோற்கடிக்க தேவன் பலமுள்ளவராக இருந்தார்.

⊕ பிரதான கரு

உண்மைக் கடவுளைத் தவிர வேறே கடவுள் இல்லை.

கற்பித்தல்: உபாகமம் 4:32–40

ஆரம்பியுங்கள்

மிகவும் சிறந்த உதைபந்தாட்ட வீரர் யார்? அல்லது மிகச் சிறந்த நடிகர் யார்? அல்லது மிகச் சிறந்த தலைவர் யார்? என ஜனங்கள் சில நேரங்களில் கலந்துரையாடுவார்கள். உபாகமம் 4:32-35 வரையுள்ள வாக்கியங்கள் எம்மை சிந்திக்க அழைக்கிறது. மிகச் சிறந்த கடவுள் யார்?

யார் மிகப் பெரியவர்?

வாசியுங்கள்: உபாகமம் 4:32–35

இரண்டு விடயங்கள் கர்த்தர் தான் பெரியவர் எனக் காட்டுகிறது.

1. தேவன் அக்கினியின் நடுவிலிருந்து ஜனங்களுடன் பேசினார். இது சீனாய் மலையில் நடந்தது.
2. தேவன் ஜனங்களை இன்னொரு தேசத்திலிருந்து வெளியே கொண்டு வந்ததார். இது யாத்திராகமத்தில் நடந்தது.

வாக்கியங்கள் 32-34 ல் “இல்லை” என்ற பதில் உள்ளது என நீங்கள் கற்பிப்போரிடம் கூறுங்கள். வேறு எந்த தேவனும் அக்கினியின் நடுவிலிருந்து ஒரு இனத்தோடு பேசியதில்லை. இவ்விதமான காரியங்கள் வேறு எந்த சமயத்திலோ அல்லது இடத்திலேயோ சம்பவித்ததில்லை.

எனவே யார் மிகப் பெரியவர்? கர்த்தர். அவரைப் போல வேறொருவருமில்லை. (வசனம் 35)

➔ கற்பித்தல்: உபாகமம் 4:32–40

கர்த்தரே மிகச் சிறந்தவர். கர்த்தர் பேசுகிறார். கர்த்தரே மிகப் பலமுள்ளவர்.

மீண்டும்: யார் மிகப் பெரியவர்?

வாசியுங்கள்: உபாகமம் 4:36–39
தேவனே மிகப் பெரியவர். இது மிகவும் முக்கியமானதால் மோசே இதை மீண்டும் கூறுகிறார்.

தேவன் வானத்திலிருந்து பேசினார். தேவன் பூமியில் செயற்பட்டார். தேவன் வானத்திற்கும் பூமிக்கும் கர்த்தராவார். இஸ்ரவேல் ஜனங்கள் அவரின் சத்தத்தைக் கேட்டார்கள். தேவன் பலத்தினால் எகிப்தைத் தோற்கடித்தார்.

39வது வசனமானது 35ம் வசனத்தைப் போன்றது. கர்த்தரே தேவன். வேறொருவருமில்லை.

நம்பிக் கீழ்ப்படியுங்கள்

வாசியுங்கள்: உபாகமம் 4:38,40
இஸ்ரவேல் ஜனங்கள் இரண்டு விடயங்களைக் கற்கவேண்டும்.

1. தேவன் பலத்தினால் எகிப்தைத் தோற்கடித்ததினால் வாக்களிக்கப்பட்ட தேசத்திலே தேவன் ஜாதிகளைத் தோற்கடிப்பார் என்று ஜனங்கள் நம்ப முடியும்.

2. தேவன் ஒரே தேவனானதால் அவரது நியதிகளுக்குக் கீழ்ப்படிதல் வேண்டும். இதனால் ஜனங்கள் நீடிய காலம் வாழ்வார்கள்.

கிறிஸ்தவர்கள் தேவனை நம்பிக் கீழ்ப்படிய வேண்டும். எமது பாவங்களிலிருந்து எம்மை மீட்க தேவன் வல்லமையுள்ளவர் என்பதை நாம் நம்ப வேண்டும். அவர் தமது வல்லமையைச் சிலுவையில் காட்டினார். இயேசுவின் மரணம் வல்லமையள்ளது. நாமும் அவருக்குக் கீழ்ப்படிய வேண்டும். அவரின் கட்டளைகளின் கீழேயே நாம் வாழ வேண்டும்.

இன்னுமொரு தேவனையோ, ஆவியையோ நாம் பின்பற்ற வேண்டுமென யாரும் யோசனை கூறினால்; நிறுத்துங்கள்! கர்த்தரே மிகப் பெரியவர்! தேவனின் நியதிகளைப் பின்பற்ற வேண்டியதில்லை என நாம் கருதினால்; நிறுத்துங்கள்! தேவனே பெரியவராகும். நாம் அவரை மட்டுமே பின்பற்ற வேண்டும்.

ஜெபியுங்கள்: உமது வாழ்வின் ஒவ்வொரு நாளிலும் அவரையே முழுமையாக நம்பி அவரையே பின்பற்ற உதவும்படி தேவனிடம் கேளுங்கள்.

11 தேவனுக்கு முதன்மையை கொடுங்கள்

பின்னணி
உபாகமம் 1-4 அதிகாரங்கள் வரை கடந்தவற்றில் இருந்து கற்றுக் கொள்ளுதல் ஆகும்.
உபாகமம் 5-26 அதிகாரங்கள் வரை தேவனிடமிருந்து வரும் கட்டளைகள் தொடர்பானது . மோசே பத்துக் கட்டளைகளுடன் ஆரம்பிக்கின்றர்.

வசனங்கள் 6–11 ஐ படிக்கவும்

குறிப்புக்கள்
- **உபாகமம் 5:7.** ஜனங்கள் தம்மை மட்டுமே ஆராதிக்க வேண்டுமென தேவன் விரும்புகின்றார்.
- **உபாகமம் 5:8.** தேவ ஜனங்கள் விக்கிரகத்தையோ, சொரூபத்தையோ உண்டாக்கக் கூடாது. தேவனுக்குப் பௌதீக உருவம் கிடையாது. மீண்டும் உபாகமம் 4:9-20 வரை பாருங்கள். இஸ்ரவேல் ஜனங்கள் சீனாய் மலையில் தேவனை காணவில்லை.
- **உபாகமம் 5:9-10.** "எரிச்சலுள்ள தேவன்" உபாகமம் 4:3 ஐ வாசியுங்கள் தேவன் குற்றமிழைத்த பெற்றோரையும், விக்கிரகங்கள் செய்த பிள்ளைகளையும் தண்டிக்கிறார். "பிள்ளைகளைத் தண்டித்தல்" பெற்றோர் செய்த அதே பாவத்தை பிள்ளைகளும் செய்கின்றார்கள் என்பது இதன் அர்த்தமாகும். குற்றமிழைக்காத பிள்ளைகளையல்ல. "மூன்றாம் நான்காம் தலைமுறைகள் ... ஆயிரம் தலைமுறைகள்". தேவனின் அன்பு முடிவு வரை நீடிக்கின்றது. தேவனின் தண்டனை குறுகிய ஒரு காலம் வரையே நீடிக்கின்றது.
- **உபாகமம் 5:11.** "வீணாக உபயோகித்தல்" என்பதன் அர்த்தம் தவறான வழியில் பயன்படுத்தல் என்பதாகும். தேவனின் நாமத்தை நாம் சரியான முறையில் பயன்படுத்த வேண்டும்.

ஆராய்ந்து பாருங்கள்
நியாயப்பிரமாணங்கள் பத்துக் கட்டளைகளுடன் ஆரம்பிக்கின்றது. இக்கட்டளைகள் தான் தேவனிடமிருந்து வருகின்ற நியாயப் பிரமாணங்களில் மிக முக்கியமானவையாகும். தேவன் இவற்றை எல்லா ஜனங்களுடனும் பேசினார். தேவன் அவற்றைக் கற்பலகைகளில் எழுதினார். சகல நியாயப்பிரமாணங்களின் சுருக்கமே பத்துக் கட்டளைகளாகும்.

- *இக் கட்டளைகளுக்கு ஜனங்கள் ஏன் கீழ்ப்படிய வேண்டும்?*

சரியான காரணங்களுக்காக தேவனுக்குக் கீழ்ப்படிய வேண்டுமென்பது முக்கியமானதாகும். இஸ்ரவேல் ஜனங்கள் தேவனுக்கு உரித்தானவர்கள் என எற்கனவே 6ம் வசனம் கூறுகிறது தேவன் அவர்களை எகிப்திலிருந்து மீட்டார். தேவ ஜனங்கள் தேவனின் நியாயப் பிரமாணங்களுக்கு கீழ்ப்படிகிறார்கள். ஏனெனில் அவர்கள் தேவனால் மீட்கப்பட்ட ஜனங்கள் ஆவர். கீழ்ப்படிவானது நாம் தேவனுடன் வைத்துள்ள உறவைக் காட்டுவதாயுள்ளது. முதல் மூன்று கட்டளைகளும் தேவனுடனுள்ள

⬇ கற்றுக்கொள்ளுங்கள்: உபாகமம் 5:6–11

உறவைப்பற்றியது. தேவ ஜனங்கள் வேறு தேவர்களைக் கொண்டிருக்கக் கூடாது. தேவன் செய்த கிரியையின் நிமித்தம் அவர் முதன்மையுள்ளவராகவுள்ளார். தேவன் சீனாய் மலையில் இஸ்ரவேல் ஜனங்களுடன் பேசினார். தேவன் ஜனங்களை எகிப்திலிருந்து காப்பாற்றினார்.

⊕ **பிரதான கரு**

தேவனை மட்டுமே ஆராதியுங்கள் ஏனெனில் அவர் எம்மை மீட்டார்.

➡ கற்பித்தல்: உபாகமம் 5:6–11

ஏன் தேவனுக்குக் கீழ்ப்படிய வேண்டும்?

⌄ வாசியுங்கள்: உபாகமம் 5:6

- ஏன் ஜனங்கள் தேவனுக்குக் கீழ்ப்படிதல் வேண்டும்?

ஜனங்களுக்கு அநேக காரணங்கள் உண்டு.

- ஏனெனில் அவர்கள் தேவனுக்குப் பயப்படுகிறார்கள்.
- ஏனெனில் அவர்கள் தேவனால் அன்புகூரப்படும்படி விரும்புகிறார்கள்.

பிரதான காரணமானது தேவன் ஏற்கனவே அவரது ஜனங்களை மீட்டுள்ளார். பழைய ஏற்பாட்டில் தேவன் இஸ்ரவேல் ஜனங்களை எகிப்திலிருந்து மீட்டுள்ளார். இயேசுவுக்கூடாக சிலுவையில் தேவன் சகல விசுவாசிகளையும் பாவத்திலிருந்து மீட்டுள்ளார்.

எமது மாறுத்தரம் அவர்களுக்குக் கீழ்ப்படிவதாகும். நீங்கள் கற்பிப்போருக்கு 6ம் வாக்கியத்தின் முக்கியத்துவத்தை விளங்கப்படுத்துங்கள்.

முதல் மூன்று கட்டளைகளும் தேவனுடனான சரியான உறவைப் பற்றியதாகும்.

➙ கற்பித்தல்: உபாகமம் 5:6–11

தேவனுக்கு முதன்மையை கொடுங்கள் வேறு தேவர்கள் இல்லை

வாசியுங்கள்: உபாகமம் 5:7

நாம் தேவனையும் அத்துடன் வேறு தேவர்களையும் ஆராதிக்க முடியாது. நீங்கள் கற்பிப்போருக்கு உபாகமம் 4:32~40 வரையுள்ள பகுதியிலிருந்து இக் கட்டளைகளுக்கான காரணத்தைக் கூறுங்கள். கர்த்தர் மாத்திரமே இஸ்ரவேல் ஜனங்களை எகிப்தில் இருந்து மீட்டு அவர்களோடு சீனாய் மலையில் பேசினார்.

உங்கள் கலாச்சாரத்தில் இருக்கும் வேறு தேவர்களுக்கு உதாரணங்களை தருக. அவை வேறு மத தேவர்களாகவோ, பணம் அல்லது சிற்றின்ப உணர்வு தரும் தேவர்களாகவோ இருக்கலாம். உங்கள் கலாச்சாரத்தில் பல தேவர்கள் இருப்பார்களேயானால் தேவனையும் வேறு தேவர்களையும் ஒன்றாக ஆராதிப்பதற்கு முயற்சி செய்வது மக்களுக்கு இலகுவானதாக அமைந்து விடும்.

தேவனை முதன்மைப்படுத்துங்கள் விக்கிரகங்களையல்ல

வாசியுங்கள்: உபாகமம் 5:8–10

சிலையையோ உருவத்தையோ அல்லது விக்கிரகத்தையோ பயன்படுத்தி நாம் தேவனை ஆராதித்தல் கூடாது. உபாகமம் 4:9~20 வரையான வாக்கியங்களில் இருந்து அதற்கான காரணத்தை நீங்கள் கற்பிப்போருக்கு கூறுங்கள். நாம் ஆராதிப்பதற்காக தேவனுக்கான வடிவத்தை அமைத்தல் கூடாது.

- உங்கள் கலாச்சாரத்தில் விக்கிரகங்கள் உண்டா? சிலைகளை அல்லது விக்கிரகங்களை வைத்திருப்பதற்கான சோதனைக்கு கிறிஸ்தவர்கள் உள்ளாக்கப்படுவதுண்டா?

தேவனை முதன்மைப் படுத்துங்கள் தேவனின் நாமத்தை வீணாகப் பயன்படுத்த வேண்டாம்

வாசியுங்கள்: உபாகமம் 5:11

'வீணாகப் பயன்படுத்தல்' என்பதன் அர்த்தத்தை நீங்கள் கற்பிப்போருக்கு விளக்குங்கள். தேவனைப் பற்றி தவறாக பேசக்கூடாது. தேவனின் நாமத்தை ஆணையிடுவதற்கு பயன்படுத்தக் கூடாது. தேவனின் நாமத்தை மாந்திரீகத்திற்கு பயன்படுத்தக் கூடாது. நீர் இருக்கும் இடத்தில் ஜனங்கள் கோபமடையும் போது இயேசுவின் நாமத்தை பயன்படுத்துகின்றனரா? கிறிஸ்தவர்கள் ஒருபோதும் இதைச் செய்யவே கூடாது.

தேவன் செய்ததை நினைவு கூருங்கள். இயேசுவுக்கூடாக தேவன் எம்மைப் பாவத்திலிருந்து விடுவித்தார். எனவே நாம் எம் வாழ்விலும் ஆராதரனையிலும் தேவனுக்கு முதலிடத்தைக் கொடுக்க வேண்டும். வேறொரு தேவனை நாம் வழிபடக்கூடாது. விக்கிரகங்களையும் சிலைகளையும் வைத்திருத்தல் கூடாது. தேவனுடைய நாமத்தை வீணாகப் பயன்படுத்தவும் கூடாது. நாம் நன்றியுள்ளவர்களாக தேவனை நேசிக்க வேண்டும்.

ஜெபியுங்கள்: தேவனுக்கு முதலிடம் கொடுக்கவும். தேவ நாமத்தை தவறான வழிகளில் பயன்படுத்தாதிருக்கவும் உதவும் படி தேவனிடம் கேளுங்கள்.

12 ஓய்வு நாளை ஆசரியுங்கள்

பின்னணி
பத்துக் கட்டளைகளை மோசே இஸ்ரவேல் ஜனங்களுக்கு நினைவூட்டுகின்றார். ஓய்வுநாள் கட்டளையானது நான்காவது கட்டளையாகும்.

வசனங்கள் 12–15 ஐ படிக்கவும்
இரண்டு அல்லது மூன்று தடவைகள் வாசியுங்கள்.

குறிப்புக்கள்
- **உபாகமம் 5:14.** "7ம்" நாளானது வெள்ளிக்கிழமை சூரியன் அஸ்தமனத்துடன் ஆரம்பித்து சனிக்கிழமை சூரியன் அஸ்தமனத்துடன் முடிந்தது.
- **உபாகமம் 5:14.** "அந்நியர்" என்பது இஸ்ரவேல் ஜனங்களுக்கு தம்மை உரித்துடையவர்களாவதை தெரிந்து கொண்ட புற தேசத்தாரைக் குறிக்கும்.

ஆராய்ந்து பாருங்கள்
ஓய்வு நாள் என்பது ஏழாம் நாள் ஆகும். ஆதி. 2:1-3 வரை வாசியுங்கள். தேவன் சகலத்தையும் உருவாக்கிய பின்னர் ஏழாம் நாளில் ஓய்ந்திருந்தார்.

ஜனங்கள் ஆறு நாட்களும் வேலை செய்ய வேண்டும் (வசனம் 13). சில ஜனங்கள் சோம்பேறிகள்; அவர்கள் அதிகம் வேலை செய்வதில்லை. சில ஜனங்கள் எந்நேரமும் வேலை செய்கிறார்கள். அவர்கள் மிகையாகவே வேலை செய்யக்கூடும். வாரத்தில் ஒருநாள் வேலை செய்யாமல் இருப்பது ஜனங்களுக்குத் தேவையானதொன்று.

- ஏன் சில ஜனங்கள் மிக அதிகமாக வேலை செய்கிறார்கள்? ஏன் சில ஜனங்கள் சோம்பேறிகளாகவுள்ளனர்?

வசனங்கள் 12-14. ஓய்வு நாளானது பரிசுத்த நாளாயிருந்தது. இந்த நாள் தேவனுக்கு சொந்தமாயிருந்தது. இந்த நியாயப்பிரமாணம் சகல தேவ ஜனங்களுக்காய் இருந்தது. மேலும் இஸ்ரவேலில் உள்ள அடிமைகளுக்கும், அந்நியர்களுக்குமாயிருந்தது.

இந்த நியாயப்பிரமாணத்திற்கான காரணம் வசனம் 15ல் உள்ளது. ஜனங்கள் எகிப்தில் அடிமைகளாயிருந்த போது ஒவ்வொரு நாளும் வேலை செய்தார்கள். முழு நேரமும் வேலை செய்தார்கள். தேவன் அவர்களை எகிப்திலிருந்து வெளியே கொண்டு வந்தார். இப்பொழுது அவர்கள் ஒருநாள் ஓய்வை எடுத்து தேவனை ஆராதிக்க வேண்டும். யாத்திராகமம் 20:8-11வரை வாசியுங்கள். ஓய்வுநாள் சட்டத்திற்கான மற்றுமொரு காரணமாவது, தேவன் உலகை ஆறுநாட்களில் படைத்தார் ஏழாம் நாளில் ஓய்ந்திருந்தார்.

ஜனங்கள் தம்மிடம் வந்து இளைப்பாற முடியும் என இயேசு கூறினார். (மத். 11:28). எபிரேயர் 4:9-11 வரையுள்ள வாக்கியங்கள் பரலோக இளைப்பாறுதலைப்பற்றி பேசுகிறது. பரலோகமானது, தேவனுடனான முடிவில்லாத ஓய்வாக அமையும். ஓய்வு நாளானது இதைத்தான் சுட்டிக் காட்டுகிறது.

ⓘ கற்றுக்கொள்ளுங்கள்: உபாகமம் 5:12–15

- கிறிஸ்தவர்கள் ஓய்வு நாளை ஆசரிக்க வேண்டுமா?

கிறிஸ்தவர்களிடையே ஒருமித்த கருத்து இல்லை. அனேக கிறிஸ்தவர்கள் எமக்கு வாரத்தில் ஒரு நாள் ஓய்வுக்கும் ஆராதனைக்கும் தேவை என கூறுகிறார்கள். வழமையாக அது ஞாயிறு தினமாகும். மேய்ப்பர்கள் போன்று சில கிறிஸ்தவர்கள் ஞாயிறு தினங்களில் வேலை செய்கிறார்கள். அவர்களுக்கு ஓய்வுக்காக வேறொரு நாள் தேவை.

⊕ **பிரதான கரு**
ஓய்வு நாளை ஆசரியுங்கள்.

→ கற்பித்தல்: உபாகமம் 5:12–15

⊙ **ஆரம்பித்தல்**
இரு நபர்களை கற்பனை செய்யுங்கள். ஒருவர் சோம்பேறி, கடினமாக வேலை செய்வதே இல்லை. மற்றவர் ஒவ்வொருநாளும் வேலை செய்கிறார். ஓய்வுநாள் பற்றிய கட்டளையானது சோம்பேறி ஜனங்களுக்கும், கடினமாக வேலை செய்கிறவர்களுக்கும் பேசுகிறது என நீங்கள் கற்பிப்பவர்களிடம் கூறுங்கள். அவர்கள் சோம்பேறிகளா அல்லது கடினமாக உழைப்பவர்களா என சிந்தித்து பார்க்கும்படி கூறுங்கள்.

பழைய ஏற்பாட்டு நியாயப்பிரமாணம் என்ன கூறியது
⊙ **வாசியுங்கள்: உபாகமம் 5:12–15**
வசனம் 15இலிருந்து ஓய்வு நாளை ஆசரிப்பதற்கான காரணத்தை விளக்கிக் கூறுங்கள். ஓய்வுநாள் மகிழ்ச்சியான நாளாகும். தேவனால் அவரது ஜனங்கள் மீட்கப்பட்டதை கொண்டாடுகிறது. அடிமைகளும் அந்நியரும் அடங்கலாக சகல ஜனங்களும் தேவன் அவர்களுக்கு செய்ததை நினைவு கூருவதற்காக ஓய்வுநாளை அவசியம் கடைப்பிடிக்க வேண்டும். இந்த நாள் தேவனை ஆராதிப்பதற்கும், தேவனோடு ஓய்ந்திருப்பதற்குமானது இந்த நாள் தனித்தன்மை வாய்ந்தது. ஏனெனில் தேவன் ஏழாம் நாளில் ஓய்ந்திருந்தார் (யாத் 20:11). தேவ ஜனங்கள் ஆறு நாட்கள் வேலை செய்ய வேண்டுமென நியாயப்பிரமாணமும் கூறியது.

→ கற்பித்தல்: உபாகமம் 5:12–15

கிறிஸ்தவர்கள் ஓய்வுநாளை ஆசரிக்கத்தான் வேண்டுமா?

கிறிஸ்தவர்களுக்கு பழைய ஏற்பாட்டு நியாயப்பிரமாணம் என்ன சொல்லுகிறது என்பதை புரிந்து கொள்ளுவதற்கு கற்பிப்போருக்கு உதவி செய்யுங்கள். கிறிஸ்தவர்கள் ஓய்வுநாளை ஆசரிக்க வேண்டுமென்ற கட்டளை புதிய ஏற்பாட்டில் இல்லை.

ஒவ்வொரு வாரத்திலும் ஒரு நாள் ஓய்வுக்காகவும், ஆராதனைக்காகவும் என்பதே ஓய்வுநாளின் தத்துவமாகும். கிறிஸ்தவர்கள் இத்தத்துவத்தை கடைப்பிடிக்க வேண்டும். ஆனால் ஓய்வு நாளானது வாரத்தின் எந்த நாளாகவும் இருக்க முடியும். ஜனங்கள் என்னென்ன செய்ய வேண்டும் அல்லது என்னென்ன செய்யக்கூடாது என மேலதிக சட்டங்களை விதித்தல் கூடாது.

பெரிதான ஓய்வு நாள்

ஓய்வைப் பெறுவதற்காக ஜனங்களைத் தம்மிடம் வரும்படி இயேசு அழைத்தார். சிறந்த ஓய்வானது இயேசுவோடுதான். ஒருநாள் பரலோகத்திலே இந்த ஓய்வு கிடைக்கும்.

ஒவ்வொரு வாரமும் ஒரு நாளை ஓய்வுக்காகவும் ஆராதனைக்காகவும் வைத்துக்கொள்ளுதல் கட்டாயமானதாகும். அது பரலோகத்தை சுவை பார்ப்பது போல அமையும். அந்த நாளை ஓய்வுக்கும், ஆராதனைக்கும், தேவனோடு நேரத்தை செலவளிப்பதற்குமாக பயன்படுத்துவதை உறுதிப்படுத்தல் வேண்டும்.

ஆறு நாட்கள் வேலை செய்யவேண்டுமென நியாயப்பிரமாணமும் கூறுகிறது. நன்றாக வேலை செய்ய வேண்டுமென தேவன் விரும்புகிறார். சோம்பலாக இருக்கும் கற்பிப்போருக்கு, கடின வேலையாட்களாக வருவதற்கு உற்சாகப்படுத்துங்கள்.

ⓘ பிரயோகியுங்கள்: எங்களில் அநேகர் மிகவும் கடினமாக வேலை செய்கிறோம். முழு நேரத்தையும் எமது வேலைக்கே கொடுக்கிறோம். எமது குடும்பத்தை போஷிக்க போதிய பணத்தைப் பெற வேலை செய்தாகவே வேண்டுமென காரணம் கூறலாம் வாரத்தில் ஒரு நாள் ஓய்வு கட்டாயம் என தேவன் கூறுகிறார்.

தினமும் வேலை செய்வதன் மூலம் நாம் தேவனை கனம் பண்ண முடியாது. தேவன் எமக்கு தேவையானவற்றை தருவார். ஓய்வு நாளானது, நாம் தேவனை நம்புகிறோம் என்பதைக் காட்டுகிறது.

⊕ ஜெபியுங்கள்: ஒவ்வொரு வாரத்திலும் ஆராதனைக்கும் ஓய்வுக்குமான ஒரு நாளுக்காக நன்றி கூறுங்கள்.

13 ஏனைய ஜனங்களை நேசியுங்கள்

பின்னணி

வாக்களிக்கப்பட்ட தேசத்தில் வாழ்வதற்காக மோசே ஜனங்களை ஆயத்தம் பண்ணுகிறார். ஜனங்களுக்கு பத்துக் கற்பனைகளை நினைவூட்டுகிறார்.

வசனங்கள் 16–21 ஐ படிக்கவும்

குறிப்புக்கள்

- உபாகமம் 5:16. "கனம் பண்ணுதல்" என்பதன் பொருள் மதிப்பளித்தல் என்பதாகும். இக்கட்டளை சிறுபிள்ளைகளுக்கும், பெரியவர்களுக்குமானது.
- உபாகமம் 5:17. "கொலை" என்ற பதம் விபத்து மரணத்தை உள்ளடக்குவதில்லை. தீய குற்றவாளிகளை கொல்வதையும் உள்ளடக்குவதில்லை சில யுத்தங்களில் கொல்லப்படுவதையும் உள்ளடக்குவதில்லை.
- உபாகமம் 5:18. "விபச்சாரம் செய்தல்" இதன் பொருள் திருமணத்திற்கு வெளியே பாலுறவில் ஈடுபடுதலாகும்.
- உபாகமம் 5:21. இச்சித்தல் என்பது இன்னுமொருவருக்கு சொந்தமானதொன்றின்மேல் அதிக நாட்டம் கொள்வதாகும்.

ஆராய்ந்து பாருங்கள்

நினைவில் கொள்ளுங்கள்: தேவ ஜனங்கள் இக் கற்பனைகளுக்கு அவசியம் கீழ்ப்படிய வேண்டும். ஏனெனில் அவர்கள் தேவன் எப்படிப்பட்டவர் என்பதைக் கண்டார்கள். (உபாகமம் 5:6). தேவன் அவர்களை எகிப்திலிருந்து வெளியே கொண்டு வந்தார் கிறிஸ்தவர்களாகிய நாமும் கூட இயேசுவின் சிலுவையினால் எம்மை மீட்ட தேவனுக்கு கீழ்ப்படிகிறோம்.

- தேவனை ஆராதிக்க வேண்டாம் என பெற்றோர் கட்டளையிட்டால் கிறிஸ்தவர்கள் என்ன செய்ய வேண்டும்? பிள்ளையானவன் எவ்விதம் பெற்றோரைக் கனம் பண்ணுகிறான் (வசனம்.16) ஆனாலும் தேவனுக்கு கீழ்ப்படிகிறான்.

வசனங்கள் 17-18. தேவ ஜனங்கள் மனித வாழ்வைக் கனம் பண்ண வேண்டும். ஜனங்கள் தேவ சாயலில் உருவாக்கப்பட்டுள்ளனர் (ஆதி.1:26). தேவ ஜனங்கள் அவசியம் உண்மையுள்ளவர்களாக தமது கணவனை அல்லது மனைவியை நேசிக்க வேண்டும். பாலுறவு என்பது திருமணமான இருவருக்கிடையே இருத்தல் வேண்டும்.

வசனம் 19. இன்னுமொருவருடைய பொருளை களவாடுவது தவறாகும். எமது வேலைகளில் ஏமாற்றுதல், அரசாங்கத்திடமிருந்தோ அல்லது தொழில் தருநரிடமிருந்தோ பணத்தை அல்லது நேரத்தை களவாடுவது போன்றவற்றை உள்ளடக்கும்.

வசனம் 20. தேவ ஜனங்கள் உண்மை பேச வேண்டும். பொய்யுரைக்க கூடாது. மனிதரை ஏமாற்றி தவறாக வழிநடத்தக் கூடாது. நீதி மன்றத்தில் சாட்சி கூறும் போதும் ஏனைய ஜனங்களுடன் பேசும் போதும் இவ்விதமாக இருத்தல் வேண்டும்.

⬇ கற்றுக்கொள்ளுங்கள்: உபாகமம் 5:16–21

வசனம் 21.
மற்றவர்களுக்குரித்தானவற்றில் ஆசைப்படுவது இச்சித்தலைக் குறிக்கும். ஏனைய காரியங்களில் தீவிரமாக ஆசைப்படும் போது, எம்மிடம் இருப்பதைக் குறித்து நாம் சந்தோசமடைவதில்லை என்பதையே காட்டும். நாம் தேவனுக்கு முதலிடம் கொடுத்தல் வேண்டும். தேவன் எமக்கு கொடுத்தவைகளில் சந்தோசமடைய வேண்டும். ஏனையரோடு உள்ள உறவுகளில் பேராசையோ அல்லது சுயநலமோ அற்றவர்களாக காணப்பட வேண்டும்.

⊙ **பிரதான கரு**
ஏனையோரை நேசிப்பதன் மூலம் தேவனுக்கு முதலிடம் கொடுங்கள்.

→ கற்பித்தல்: உபாகமம் 5:16–21

ஆரம்பியுங்கள்
அநேக ஜனங்களுக்கு பத்து கற்பனைகள் தெரியும். ஆனால் அவற்றுக்கு கீழ்ப்படிவது கடினமானதாகும். சகல பத்துக் கற்பனைகளும் தேவனுக்கு முதலிடத்தை தருகிறது. தேவ ஜனங்கள் இக்கற்பனைகளை கடைப்பிடிக்க வேண்டும். ஏனெனில் தேவன் எகிப்திலிருந்து அவர்களை மீட்டார்.

மற்றவர்களை நேசித்தல்

வாசியுங்கள்: உபாகமம் 5:16–21
மற்றவர்களை நேசிப்பதன் மூலம் நாம் தேவனுக்கு முதலிடம் கொடுக்கிறோம். தேவ ஜனங்கள் கட்டாயம் பெற்றோரை மதித்து கனம் பண்ணி நல்ல கட்டளைகளுக்கு கீழ்ப்படிய வேண்டும் (வசனம் 16). பெற்றோர் தேவனுக்கு கீழ்ப்படிய வேண்டாம் என்பதை போன்ற தீமையான கட்டளைகளை தரும்போது, தேவ ஜனங்கள் பெற்றோருக்கு கீழ்ப்படியாமல் தேவனுக்கு கீழ்ப்படிய வேண்டும்.

- **கொலை செய்தல் தவறானது (வசனம் 17).** மனிதர் தேவசாயலில் உருவாக்கப்பட்டுள்ளனர். நாம் மற்றவர்களை கொலை செய்தல் கூடாது அனேக கொலைகள் சுயநலத்திலிருந்தும், பேராசையிலிருந்தும் பிறக்கின்றன.
- **திருமணத்திற்கு புறம்பான பாலுறவு தவறானது (வசனம் 18).**

கணவரும், மனைவியரும் ஒருவருக்கொருவர் உண்மையுள்ளவர்களாக இருத்தல் வேண்டும். திருமணமான தம்பதிகள் சந்தோசமடைவதற்காக பாலுறவை ஏற்படுத்தினார்.

- **மற்றுமொரு நபரின் உடமைகளை திருடுவது பேராசையும், சுயநலமுமாகும் (வசனம் 19)**

எடுத்துக்காட்டு: ஒரு மனிதன் கொஞ்சப் பணத்தை எடுக்க வேண்டும் என்பதற்காக சபை அல்லது சங்கத்தின் கணக்கை மாற்றுகிறான். இன்னுமோர் மனிதன் மற்றவர்களுக்குரித்தானவற்றை எடுத்துக் கொள்கிறான். அவை தொலைந்துவிட்டன என கூறி நடிக்கிறான். இன்னுமோர் மனிதன் மற்றவருக்குரிய உணவை எடுத்துக் கொள்கிறான். இவர்கள் எல்லாரும் திருடுகிறார்கள். தேவ மனிதர்கள் தேவன் அவர்களுக்கு கொடுத்தவைகளுக்காக நன்றியுள்ளவர்களாக இருத்தல் வேண்டும்.

- **உண்மை முக்கியமானதாகும் (வசனம் 20).** எந்த ஒரு காரணத்திற்காகவும் பொய்யுரைத்தல் கூடாது. எமது வார்த்தைகள் எப்பொழுதும் உண்மையுள்ளதாக இருத்தல் வேண்டும். நாம் பொய்யுரைக்கும் போது நம்பிக்கையையும், உறவுகளையும் திரித்துவிடுகிறோம். மிகவும் முக்கியமாக தேவனுக்கு கீழ்ப்படியாமல் போகிறோம்

எடுத்துக்காட்டு: ஒரு மனிதன் தன்னுடைய வாடிக்கையாளர் முன்பாக வெட்கப்பட விரும்புகிறதில்லை. அவன் வாடிக்கையாளனுக்கு சாக்குப்போக்குச் சொல்லுகிறான். அவன் பொய்யுரைத்தான். உண்மையை பேசுவதே துணிவுள்ள செயலாகும். ஆனால் அதுவே செய்ய வேண்டிய சரியான காரியமாகும். எமது குடும்பத்துடன் நாம் உண்மையைப் பேச வேண்டும். ஒரு தகப்பன் தான் தன் பிள்ளைகளுடன் நகரத்திற்குள் போக விரும்புகிறதில்லை. எனவே தான் போவதில்லை என அவர்களிடம் கூறுகிறான். பின்னர் இரகசியமாக போகிறான் இது பொய்யானதாகும்.

- **மற்றைய ஜனங்களின் பொருட்களுக்கு நாம் ஆசைப்படுதல் கூடாது.** ஆசை தவறான இருதயங்களில் இருந்தே வருகிறது (வச. 21). இன்னொருவருக்கு சொந்தமான உடைகளோ அல்லது புதிய வீடோ உமக்கு வேண்டுமா? அது பேராசையும் தவறானதுமாகும்.

இக் கற்பனைகள் இந்நாளின் ஒவ்வொரு கிறிஸ்தவர்களுக்குமானது. தேவ ஜனங்கள் அவற்றுக்கு கீழ்படிய விரும்புவார்கள். ஏனெனில் தேவன் அவர்களை சிலுவையினால் மீட்டுள்ளார்.

ஜெபியுங்கள்: உண்மையை பேசவும், பேராசையில்லாமல் இருக்கவும், மற்றைய ஜனங்களை நேசிக்கவும் உதவும்படி தேவனிடம் கேளுங்கள்.

14 முழு இருதயத்துடன் தேவனை நேசியுங்கள்

பின்னணி
தேவ கற்பனைகளை மோசே ஜனங்களுக்கு நினைவூட்டுகிறான். கற்பனைகள் யாவற்றையும் சுருக்கி ஒரு பெரிய கற்பனையாக கூறுகிறான்.

வசனங்கள் 4–9 ஐ படிக்கவும்
இப் பகுதியை 2அல்லது மூன்று தடவைகள் வாசியுங்கள். ஒவ்வொரு வாக்கியத்தையும் வாசித்து உங்களின் சொந்த மொழி நடையில் விளங்கிக் கொள்ளுங்கள்.

குறிப்புக்கள்
- **உபாகமம் 6:4.** "கர்த்தர் ஒருவரே" என்பதன் பொருள் கர்த்தர் ஒருவரே தேவன் என்பதாகும். உபாகமம் 4:35யும் பாருங்கள்.
- **உபாகமம் 6:5.** "இருதயம்" என்பதன் பொருள் உமது தீர்மானங்கள், சிந்தனை, மற்றும் உணர்வுகளாகும். "ஆத்துமா" என்பது உங்கள் முழு வாழ்வைக் குறிக்கும். "பலம்" என்பதன் பொருள் முயற்சியும், உடைமைகளும் ஆகும்.
- **உபாகமம் 6:7.** "வீட்டில் ... வழியில்" என்பதன் அர்த்தம், எந்த இடத்திலும் என்பதாகும். "படுத்துக் கொள்கிற... எழுந்திருக்கிற" என்பதன் அர்த்தம் எந்த நேரத்திலும் என்பதாகும்.
- **உபாகமம் 6:8.** "கரங்கள்" அல்லது "கைகள்" என்பதன் பொருளானது நாம் செய்யும் ஒவ்வொன்றிலும் தேவனுக்கு கட்டாயமாக கீழ்ப்படிதலாகும். "நெற்றியில்" என்பதன் பொருளானது நாம் சிந்திக்கும் ஒவ்வொன்றிலும் தேவனுக்கு கீழ்ப்படிதலாகும்.

ஆராய்ந்து பாருங்கள்
கர்த்தர் ஒருவரே தேவன் என்பதை 4ம் வசனம் அர்த்தப்படுத்துகிறது. இஸ்ரவேல் ஜனங்களுக்கு வேறு தேவன் இல்லை. வேறு தேவர்களை இஸ்ரவேல் ஜனங்கள் ஆராதிக்கவே கூடாது.

வசனம் 5 ஆனது பிரதான கட்டளையாகும். இதன் பிரதான அழுத்தம் "முழு" என்பதிலாகும். ஜனங்கள் தம்மை முழுமையாகவும் அவர்கள் வைத்திருக்கும் அனைத்தின் மூலமும் தேவனை நேசிக்க வேண்டும். அன்புதான் தேவனுக்கான சரியான மாறுத்தரமாகும். அன்பானது பற்றுறுதியுள்ளது, உண்மையுள்ளது, மற்றும் நீண்ட காலம் நீடிக்க வல்லது. அன்பு செயற்பாட்டில் வெளிப்படுகிறது. அன்பு வெறுமனே ஒரு உணர்வு அல்ல. தேவ ஜனங்கள் தேவனோடு நெருக்கமான உறவை வைத்துக் கொள்ள வேண்டும்.

அன்பு செய்யும் இருதயத்திலிருந்துதான் தேவனுக்கான கீழ்ப்படிவு வருகிறது. எனவே கற்பனைகள் ஜனங்களுடைய இருதயத்திலே அவசியம் இருத்தல் வேண்டும் (வசனம் 6). இதனால்தான் தேவன் நியாயப்பிரமாணத்தை (வார்த்தை) ஒவ்வொரு நாளும் வாசித்து சிந்திக்கும்படி வேதாகமம் கூறுகிறது (சங்.1:2).

- தேவ வார்த்தையை எமது இருதயத்திற்குள் வைவத்திருப்பது எப்படி?

கற்றுக்கொள்ளுங்கள்: உபாகமம் 6:4–9

வசனங்கள் 7-9. தேவ வார்த்தையைக் குறித்து பெற்றோர்கள் தமது பிள்ளைகளுக்கு கற்பிக்க வேண்டும். இது எல்லா இடத்திலும், மற்றும் எல்லாக் காலங்களிலும் செய்யப்பட வேண்டும். தேவ கற்பனைகள் எவ்வளவு முக்கியமானவை என்பதை இது காட்டுகிறது. வசனம் 8ன் அர்த்தம் என்னவென்றால், ஜனங்கள் சிந்திக்கும் மற்றும் செய்யும் காரியங்களில் தேவனுக்கு கீழ்ப்படிதல் வேண்டும். 9ம் வசனத்தின் அர்த்தம் என்னவென்றால் எமது குடும்பங்கள் தேவனுக்கு கீழ்படிதல் அவசியமானது என்பதாகும்.

பிரதான கரு

முழு இருதயத்தோடும் தேவனை நேசியுங்கள்.

கற்பித்தல்: உபாகமம் 6:4–9

ஆரம்பியுங்கள்

ஒரு மனிதன் இயேசுவிடம் வந்து "பிரதான கற்பனை எது"? என்று கேட்டான். "உன் ஆண்டவராகிய தேவனை முழு இருதயத்தோடும் அன்பு கூருவாயாக" என இயேசு கூறுகிறார். உபாகமம் 6:5ஐ மேற்கோள் காட்டினார். இந்த கற்பனை மிக முக்கியமானது.

கர்த்தர் மாத்திரமே தேவன்

வாசியுங்கள்: உபாகமம் 6:4

கர்த்தரே தேவன் என மோசே ஏற்கனவே கூறியிருந்தார். வேறு எவருமில்லை. (உபாகமம் 4:35) இஸ்ரவேல் ஜனங்களுக்கு கர்த்தர் மாத்திரமே தேவன். வேறு எந்த தெய்வமும் உண்மையானதல்ல.

முழு இருதயத்துடன் தேவனை அன்பு செய்யுங்கள்

வாசியுங்கள்: உபாகமம் 6:5–6

கர்த்தர் மாத்திரமே தெய்வமானால் ஜனங்கள் அவரை முழு இருதயத்தோடும், முழு ஆத்துமாவோடும், முழு பலத்தோடும் அன்பு கூர்ந்தாகவே வேண்டும். தேவன் எமது முழு அன்பையும், வாஞ்சிக்கிறார். இருதயம், ஆத்துமா, பலம் என்பவற்றின் அர்த்தங்களை நீங்கள் கற்பிப்போருக்கு கூறுங்கள். தேவன் எமது முழு அன்பை விரும்புகிறார்.

அன்பே பிரதானம். அன்பின் மூலம் தேவனுக்கு கீழ்ப்படிய வேண்டும். அன்பு ஒரு உணர்வு மட்டுமல்ல அன்பு செயலிலே தான்

கட்டப்படுகிறது. நாம் தேவனுக்கு கீழ்ப்படியாமலிருந்து கொண்டு அவரை அன்பு செய்கிறோம் என கூற முடியாது.

- உங்களிலுள்ளவற்றில் எந்த அளவு தேவனை அன்பு செய்கிறது? தேவனின் கற்பனைகளை எமது இருதயத்தில் வைத்திருக்க வேண்டும். (வசனம் 6) அதனாலேயே முழு இருதயத்தோடும் தேவனில் அன்பு கூரலாம். (வசனம் 5)

தேவனை அன்பு செய்ய எமது இருதயத்தை ஆயத்தம் செய்வது எவ்வாறு?

வாசியுங்கள்: உபாகமம் 6:7–9

தேவனின் கற்பனைகளை எமது இருதயத்தில் வைத்திருப்பதற்கு:

- எமது பிள்ளைகளுக்கு எப்போதும் கற்றுக் கொடுக்க வேண்டும். (வசனம் 7)
- நாம் சிந்திப்பதும், செய்வதுமான யாவும் சரியானதாக இருக்க வேண்டுமென்பதை நினைவில் கொள்ள வேண்டும். (வசனம் 8)
- நாம் வீட்டிற்குள் வரும்போதும், வெளியே செல்லும் போதும் தேவனின் கற்பனைகளை நினைவில் கொள்ள வேண்டும் (வசனம் 9).

எல்லா நேரங்களிலும் தேவ கற்பனைகளை நினைவில் கொள்ள வேண்டும். இதன் மூலம் கற்பனைகள் எமது இருதயத்திலும், வாழ்க்கையிலும் ஆழமாகச் செல்லும். உண்மையாக தேவனை நாம் அன்பு செய்தால் நாம் அவரது கற்பனைகளை அன்பு செய்து, அவற்றை அடிக்கடி வாசித்து எமது வாழ்வில் அவற்றை கடைப்பிடிப்போம்.

கிறிஸ்தவர்கள், இஸ்ரவேல் ஜனங்களைப் போன்றவர்கள் அல்ல. பரிசுத்த ஆவியானவர் கிறிஸ்தவர்களின் இருதயத்திலே தமது வார்த்தைகளை எழுதியுள்ளார். நாம் தேவ வார்த்தைகளை சிந்தித்து வாசிக்கும் போது பரிசுத்த ஆவியானவர் இதைச் செய்கிறார்.

எடுத்துக்காட்டு: சிலர் WWJD என்ற எழுத்துக்கள் உள்ள பட்டி ஒன்றை தமது கை மணிக்கட்டில் அணிந்திருப்பார்கள். "இயேசுவானவர் என்ன செய்வார்?" (What Would Jesus Do?) என்பதே இந்த எழுத்துக்களின் அர்த்தமாகும். ஜனங்கள் தேவனுக்கு கீழ்ப்படிவதையும் அன்பு செய்வதையும் நினைவுபடுத்தும் முகமாக இப்பட்டியை அணிவார்கள்.

நீங்கள் கற்பிப்போரிடம் கேளுங்கள்: தேவனின் கற்பனைகளை நினைவுபடுத்த அவர்கள் என்ன செய்வார்கள்? தேவனை அதிகமாக அன்புசெய்ய அவர்கள் என்ன செய்வார்கள்?

ஜெபியுங்கள்: தேவனை எல்லாக் காலங்களிலும் அன்பு செய்யவும், கீழ்ப்படியவும் உதவி செய்யும்படி அவரிடம் கேளுங்கள்.

15 பிள்ளைகளுக்கு கற்பியுங்கள்

பின்னணி
வாக்களிக்கப்பட்ட தேசத்திலே பிரவேசிக்கவும் அங்கு வாழ்வதற்குமாக இஸ்ரவேல் ஜனங்களை மோசே ஆயத்தப்படுத்துகிறார். கடந்த காலங்களில் தேவன் செய்தவற்றை பிள்ளைகளுக்கு கற்பிக்கும்படி கூறுகிறார். அத்துடன் அவர்கள் ஏன் தேவனுக்கு கீழ்படிய வேண்டுமெனவும் கூறகிறார்.

வசனங்கள் 20–25 ஐ படிக்கவும்

குறிப்புக்கள்
- **உபாகமம் 6:21-22.** இது புறப்படுதல் (யாத்திரை) பற்றியதானது. யாத்திரகாமம் 7-14 வரை பாருங்கள்.
- **உபாகமம் 6:23.** “முற்பிதாக்கள்” அல்லது “முன்னோர்கள்” என்பது ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு ஆகியோரை குறிக்கிறது. ஆதியாகமம் 12:7ல் ஆபிரகாமுக்குத்தான் தேசத்தை வாக்களித்தார்.
- **உபாகமம் 6:24.** “முன்னேற்றகரமான வாழ்வு” என்பது நன்றாக இருப்பதாகும்.
- **உபாகமம் 6:25.** “நீதியாகவிருத்தல்” என்பதன் பொருள் தேவனுடன் நேராக இருத்தல் என்பதாகும்.

ஆராய்ந்து பாருங்கள்
“நியாயப்பிரமாணங்களின் அர்த்தம் என்ன?” இக் கேள்வியை ஒரு நாள் பெற்றோரிடம் கேட்கும் பிள்ளையை மோசே நினைத்துப் பார்க்கிறார்.

தேவனின் நியாயப்பிரமாணங்களுக்கு பிள்ளையானவன் ஏன் கீழ்ப்படிய வேண்டும்? காரணம் என்னவெனில், தேவன் இஸ்ரவேல் ஜனங்களை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து வெளியே கொண்டுவந்து அவர்களை வாக்களிக்கப்பட்ட தேசத்திற்குள் அழைத்து வந்தார். இவ்விடையின் மையம் தேவ கிருபையாகும். தேவ கிருபையானது தேவனின் நியாயப்பிரமாணங்களுக்கு கீழ்படிவதை நோக்கியும் தேவனுக்கு பயப்படுதலை நோக்கியும் வழிநடத்த வேண்டும். தேவனுக்குப் பயப்படுதல் என்பது தேவனை விசுவாசிப்பதாகும். தேவனின் நியாயப்பிரமாணங்களுக்கு இஸ்ரவேல் ஜனங்கள் ஏன் கீழ்ப்படிய வேண்டும்? ஏனெனில் அவர்கள் ஏற்கனவே தேவ ஜனங்களாக இருக்கிறார்கள். தேவன் அவர்களை மீட்டார். தேவன் அவர்களை வாக்களிக்கப்பட்ட தேசத்திற்கு கொண்டுவந்தார். மீட்கப்பட்டவர்களுக்கு நியாயப்பிரமாணமானது அவர்களது வாழ்விற்கு ஒரு வழிகாட்டியாகவுள்ளது.

தேவனின் நியாயப்பிரமாணங்களுக்கு கீழ்ப்படிவது இஸ்ரவேலருக்கு நீதியாக இருந்தது. அவர்கள் “கர்த்தருக்கு முன்பாக” கீழ்ப்படிந்தார்கள் என்பதன் பொருள், அவர்கள் ஏற்கனவே தேவனோடு உறவு வைத்திருந்தார்கள் என்பதாகும். அவர்கள் அவருக்கு பயப்படுகிறவர்களாயிருந்தார்கள். ஆபிரகாம், விசுவாசத்தினாலே தேவனுக்கு முன்பாக நீதிமானாயிருந்தான் (ஆதி 15:6). ஆனால் அவனுடைய விசுவாசமும்

⬇ கற்றுக்கொள்ளுங்கள்: உபாகமம் 6:20–25

கிரியையும் ஒன்றாக செயற்பட்டன (யாக்கோபு 2:22). கீழ்ப்படியாமையும், விசுவாசக் குறைவும் சேர்ந்தேபோகும். இதை 3ம் பாடத்தில் மீண்டும் பாருங்கள் தேவனுடன் நீதியாகவுள்ள ஓர் இஸ்ரவேலனுடைய விசுவாசத்தை அவனுடைய கீழ்ப்படிதலில் காணலாம்.

தேவனுக்கு கீழ்ப்படிவதற்கான காரணம் முக்கியமானது தேவன் நம்மை ஏற்றுக்கொள்ள வேண்டும் என முயற்சி செய்வது தவறான காரணமாகும். தேவ கிருபைக்கான எமது மாறுத்தரமே சரியான காரணமாகும். விசுவாசமானது கீழ்ப்படிதலில் காட்டப்படல் வேண்டும்.

எமது பிள்ளைகளுக்கு இதை கற்பிப்பது முக்கியமானதாகும். தேவனுக்கு எவ்விதம் கீழ்ப்படிதல் வேண்டும் என்பதை பிள்ளைகளுக்கு கற்பித்தல் வேண்டும். இதைவிட மேலாக கீழ்படிதலை ஊக்குவிக்கும் வகையில் தேவகிருபையின் நற்செய்தியை கற்பிக்க வேண்டும்.

⊕ **பிரதான கரு**

தேவனை சந்தோசப்படுத்த நாம் அவருக்கு கீழ்ப்படிகிறோம். ஏனெனில் அவர் எம்மை இரட்சித்தார்.

➡ கற்பித்தல்: உபாகமம் 6:20–25

⊙ **ஆரம்பியுங்கள்**

பிள்ளைகள் அநேக நேரங்களில் பெற்றோரிடம் முறையிடுவார்கள் "நான் ஏன் சுத்தமாக இருக்க வேண்டும்? என் நண்பர்களுடன் ஏன் நான் விளையாட முடியாது?" நான் ஏன் விறகு வெட்டுவதோடு, வேலைகளையும் செய்ய வேண்டும்? "நான் சொல்வதனால் நீ செய்ய வேண்டும்" என சில பெற்றோர்கள் இவ்விதமாக கூறக்கூடும்.

- தேவனின் நியாயப்பிரமாணங்களுக்கு தேவ ஜனங்கள் ஏன் கீழ்ப்படிய வேண்டும்?

கேள்வி

⊙ **வாசியுங்கள்: உபாகமம்: 6:20**

அவனது பெற்றோரிடம் கேள்வி கேட்கும் பிள்ளையை மோசே நினைவுபடுத்தினான். "நியாயப்பிரமாணத்தின் அர்த்தம் என்ன?" ஏன் நாம் கீழ்ப்படிய வேண்டுமென்பதே இதன் அர்த்தமாகும். ஒவ்வொரு பரம்பரையும் இக்கேள்விக்கான விடையை அறிய வேண்டுமென்பதை மோசே உறுதிப்படுத்த விரும்பினான்.

பதில்

⊙ **வாசியுங்கள்: உபாகமம் 6:21–25**

பதிலானது மூன்று பிரிவுகளாக உள்ளது.

1. தேவன் அவரது ஜனங்களை

→ கற்பித்தல்: உபாகமம் 6:20–25

எகிப்திலிருந்து விடுவித்தார். (வசனங்கள் 21-22) யாத்திராகமத்தின் கதையைப்பற்றி நீங்கள் கற்பிப்போருக்கு கூறுங்கள் ஜனங்கள் கட்டாயமாக நியாயப்பிரமாணத்திற்கு கீழ்ப்படிய வேண்டும். ஏனென்றால் தேவன் அவர்களை விடுவித்தார். தேவன் ஜனங்களுக்கு நியாயப்பிரமாணத்தை கொடுத்தார். அதனால் அவர்கள் அவருக்கு முன்னுரிமை கொடுத்து அவருக்காக வாழக் கூடுமாயிருக்கும்.

2. அதன் மூலம் வாக்களிக்கப்பட்ட தேசத்தில் நன்றாயிருப்பார்கள் (வசனங்கள் 23-24). ஜனங்கள் தேசத்தில் செழிப்பாகவும், நன்றாகவும் இருக்க வேண்டுமென தேவன் விரும்புகிறார்.

3. ஜனங்கள் கீழ்ப்படிந்தால் நீதியுள்ளவர்களாயிருப்பார்கள் நீதியுள்ளவர்களாயிருப்பது என்பதன் பொருள் தேவனுடன் சீரான உறவில் இருப்பது என்பதாகும் என்ற விடயத்தை நீங்கள் கற்றுக்கொடுப்போருக்கு விளக்குங்கள். அவர்கள் மட்டில் தேவன் மகிழ்ச்சியடைவார். ஆபிரகாம் விசுவாசத்தால் நீதிமானாக கீழ்ப்படிவுள்ளவனாக காணப்பட்டான். ஜனங்கள் விசுவாசத்திற்குள்ளிருந்து கீழ்ப்படிய வேண்டும்.

! **பிரயோகம்:** தேவன் செய்ததை பெற்றோர் பிள்ளைகளுக்கு சொல்ல வேண்டும். தேவ மனிதர்களாக எவ்விதம் கீழ்படிந்து வாழவேண்டுமென பெற்றோர் பிள்ளைகளுக்கு அவசியம் கூற வேண்டும். விசுவாசத்துடன் தேவனுக்கு கீழ்ப்படிவதற்கான காரணங்களை பெற்றோர் விளங்கப்படுத்தல் வேண்டும். தேவனைப்பற்றி பிள்ளைகளுக்கு கற்பிக்கும் விடயம் தொடர்பாக பெற்றோருக்கு சவாலிடுங்கள்.

இயேசு விசுவாசிகளை பாவத்திலிருந்து விடுவிப்பதற்காக மரித்தார். அதனாலேயே கிறிஸ்தவர்கள் எல்லாவற்றிலும் தேவனுக்கு முதலிடம் கொடுத்து அவருக்கு கீழ்ப்படிய வேண்டியுள்ளது. இயேசுவின் மேலுள்ள விசுவாசத்தால் நாம் நீதிமான்களாக்கப்படுகின்றோம். தேவனுக்கு கீழ்படிவதன் மூலம் எமது விசுவாசத்தை காட்டுகிறோம்.

எல்லா ஜனங்களும் பாவம் செய்கிறதினால் தேவன் இயேசுவை அனுப்பினார் இயேசுவின் மரணத்தினாலேயே நாம் நீதிமானாக்கப்படுகிறோம். கீழ்ப்படிவின் மூலம் காண்பிக்க கூடிய விசுவாச வாழ்க்கையை நாம் இன்று வாழ வேண்டும். உண்மையாக இயேசுவை பின்பற்றுவோருக்கு முன்பாக வைக்கப்பட்டிருக்கிறவைகளுக்காக தேவனை துதிப்போம். இது பற்றி உங்கள் பிள்ளைகளுக்கு கற்பியுங்கள்.

↑ **ஜெபியுங்கள்:** இயேசு சிலுவையில் செய்தவற்றை நினைவுகூர்ந்து மேலும் மேலும் அவருக்கு கீழ்ப்படியவும், அன்பு கூரவும் உதவி செய்யும்படியாக தேவனிடம் கேளுங்கள்.

16 பரிசுத்தமாய் இருப்பதற்கு தெரிந்து கொள்ளப்பட்டவர்கள்

பின்னணி
தெரிந்து கொள்ளப்பட்ட தேசத்திலே பிரவேசிக்கவும், வாழவும் என மோசே ஜனங்களை ஆயத்தம் செய்கிறான். அந்த தேசத்திலே இருந்த பெரிதான ஜாதிகள் தான் பிரச்சனையாக இருந்தார்கள். இந்த ஜாதிகள் வேறு தெய்வங்களை வழிபடுபவர்களாயிருந்தனர். அந்நிய தேவர்களை வழிபட கூடாதென மோசே எச்சரிக்கின்றான்.

வசனங்கள் 1–11 ஐ படிக்கவும்
2 அல்லது 3 தடவைகள் வாசியுங்கள்.

குறிப்புக்கள்
- **உபாகமம்** 7:1. இந்த ஏழு ஜாதியினரும் வாக்களிக்கப்பட்ட தேசத்தில் வாழ்ந்தார்கள்.
- **உபாகமம்** 7:2. “அவர்களை முழுமையான சங்காரம் பண்ணு”. எதிரான ஜாதிகளில் ஒருவர்கூட உயிருடன் வாழ விடக்கூடாது.
- **உபாகமம்** 7:5. “அசேரா விக்கிரக உயரமான மரத்திலானவை கம்பங்கள்” (புதிய தமிழ் வேதாகமம்) அந்நிய போலித்தெய்வங்களை வழிப்படுவதற்கானவை.
- **உபாகமம்** 7:6. “உரிமைச் சொத்து” என்பது ஒருவரின் மிக பெறுமதியான உடைமையாகும். இஸ்ரவேல் ஜனங்கள் தேவனின் மிக பெறுமதியான உடைமையாவார்கள்.
- **உபாகமம்** 7:7. “நீங்கள் எண்ணிக்கையில் மிகக் குறைந்தவர்கள்” என்பது ஆபிரகர், சாராள் ஆகிய இருவர் மட்டுமே.

ஆராய்ந்து பாருங்கள்
வசனம் 1 ஜாதிகள் இஸ்ரவேலரை விட பலம் வாய்ந்தவை. ஆனால் தேவன் ஜாதிகளை விட பலம் வாய்ந்தவர். எனவே இஸ்ரவேல் ஜனங்கள் வெற்றியடைவார்கள்.

வசனங்கள் 2- 5 வரை இந்த ஜாதிகள் பலம் வாய்நதவை என்பது முக்கிய பிரச்சனையல்ல. அவர்களுடைய போலித் தேவர்களே முக்கிய பிரச்சினையாகும். இந்த ஜாதிகளின் தேவர்கள் இஸ்ரவேல் ஜனங்களுக்கு ஆபத்தை தருபவைகளாக அல்லது சோதனைக்கு இழுப்பவர்களாக் காணப்பட்டனர். எனவே ஏனைய ஜாதிகளை இஸ்ரவேல் கட்டாயம் அழிக்க வேண்டும். அவர்களில் எவர்களையும் இஸ்ரவேல் ஜனங்கள் திருமணம் செய்யக் கூடாது. அந்நிய மத வழிபாட்டிங்களையும் விக்கிரகங்களையும் அவர்கள் அழிக்க வேண்டும்.

வசனம் 6 இஸ்ரவேல் தனித்துவமானதாக காணப்படல் வேண்டும். விக்கிரகங்களையும் ஏனைய தெய்வங்களையும் அவர்கள் கொண்டிருக்கக் கூடாது. தேவனுக்கே முதலிடம் தர வேண்டும். பரிசுத்தம் என்பதன் அர்த்தம் இது தான். இஸ்ரவேல் ஜனங்கள் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட அவரின் விசேட சொத்தாகும். இஸ்ரவேல் ஜனங்கள் தேவனால் நேசிக்கப்படுகிறவர்களுமாவார்கள்.

வசனம் 7-11 தேவன் இஸ்ரவேல் ஜனங்களை ஏன் நேசிக்கிறார். ஏனெனில் அவர் ஆபிரகாமுக்கு

ⓘ கற்றுக்கொள்ளுங்கள்: உபாகமம் 17:1–11

கொடுத்த வாக்குத்தத்தங்களை காத்துக்கொள்கிறார். இஸ்ரவேல் ஜனங்கள் ஆபிரகாமின் வழித்தோன்றல்கள். அவர்கள் எகிப்திலிருந்து மீட்கப்பட்டவர்கள். எனவே அவர்கள் ஏனைய ஜாதிகளை விட தனித்துவமாக நடந்து கொள்ள வேண்டும்.

- தேவனுடன் உள்ள உறவு எவ்விதம் நமது நடத்தையில் மாற்றத்தை ஏற்படுத்தும்?

⊕ **பிரதான கரு**

கிறிஸ்தவர்கள் தேவனுக்கான பரிசுத்த ஜனம்.

→ கற்பித்தல்: உபாகமம் 17:1–11

⊙ **ஆரம்பியுங்கள்**

எம்மை சூழவுள்ளவர்களின் மூலம் சில தீமையான காரியங்களில் வழிநடத்தப்படுவது இலகுவானதாய் இருக்கும். உதாரணமாக பிள்ளைகளும் வாலிபரும் ஆணையிடுதல் மற்றும் போதைப்பொருள் பயன்படுத்தல் போன்றவற்றில் ஈடுபடுதல். வளர்ந்தவர்கள் தீமையான காரியங்களான ஏமாற்றுதல் மதுபானம் குடித்தல் ஆகியவற்றை அவர்களின் கடமை நேரத்தில் செய்ய முடியும். உமது சூழலில் காணப்படும் தீமையான உதாரணங்கள் குறித்து நீங்கள் கற்பிப்போருக்கு அறிவுறுத்துங்கள்.

தீமை விளைவிக்கும் உதாரணங்கள்

⊙ **வாசியுங்கள்: உபாகமம் 7:1–5**

இஸ்ரவேல் ஜனங்கள் வாக்களிக்கப்பட்ட தேசத்தினுள் பிரவேசிக்க ஆயத்தமாயிருந்தார்கள். தேசத்தினுள் இருந்தவர்கள் வேறு தெய்வங்களை வழிபட்டார்கள். எனவே தேவ ஜனங்கள் ஜாதிகளையும் அவர்களின் இடங்களையும் அழிக்க வேண்டியிருந்தது. இதற்கு காரணம் தேவ ஜனங்களுக்கு அவர்கள் ஓர் தீமையான உதாரணமாகவிருந்தனர்

இஸ்ரவேல் ஜனங்கள் கட்டாயமாக அந்நிய மத விக்கிரகங்களையும் மேடைகளையம் அழிக்க வேண்டியிருந்தது. இவைகள் இஸ்ரவேல் ஜனங்களை தவறான

வழிபாடுகளுக்கு தூண்டுவதாய் இருந்தன. சில சமயங்களில் சோதனைகளுக்கு எதிர்த்து நிற்க நமக்கு பெலமுண்டு என எண்ணுகிறோம். ஆனால் பல சமயங்களில் மனிதர் பலவீனமுள்ளவர்களாக உள்ளனர். நாம் சோதனைகளில் இருந்து விலகி ஓட வேண்டும். எனவே இஸ்ரவேல் ஜனங்கள் விக்கிரகங்களை அகற்ற வேண்டும். அப்போது அவர்கள் சோதனைக்கு உட்பட மாட்டார்கள்.

தேவ ஜனங்கள் ஏன் தனித்துவமானவர்கள்?

வாசியுங்கள்: உபாகமம் 7:6–8

தேவன் ஏன் இஸ்ரவேல் ஜனங்களைத் தெரிந்தெடுத்தார் என நீங்கள் கற்பிப்போருக்கு விளக்கி கூறுங்கள். சில சமயங்களில் பரிசுத்தர் என்பது விசேட பரிசுத்தர்களை குறிக்கும் என எண்ணுகிறோம். ஆனால் சகல தேவ ஜனங்களும் பரிசுத்தமானவர்கள் இதன் அர்த்தம் நாம் தேவனக்கே சொந்தமானவர்கள் என்பதாகும். தேவன் எம்மை தெரிவு செய்வதானது தேவனிடமிருந்தே வருகிறது.

பிரயோகம்: நீங்கள் கற்பிப்போருக்கு சவாலிடுங்கள். அவர்கள் உண்மையாகவே தேவனுக்கு சொந்தமானவர்களா? அவர்கள் பரிசுத்தமானவர்களா? அவர்கள் வாழ்வில் தேவனுக்கே முதலிடம் கொடுக்கிறார்களா? விசுவாசிகளை விட தனித்துவமுள்ளவர்களாக செயற்படுகிறார்களா?

எடுத்துக்காட்டு: அவிசுவாசி ஒருவர் வேறொரு நாட்டில் பிரயாணம்பண்ணிக் கொண்டிருந்தார். ஒவ்வொரு முறையும் அவர் கிறிஸ்தவர்களை சந்தித்த பொழுது அவர்கள் தனித்துவமானவர்களாக செயற்படுவதை கண்டார். அவர்கள் உண்மையுள்ளவர்களாக இருந்தனர், அன்புள்ளவர்களாயிருந்தனர், தனித்தவமுள்ளவர்களாளயிருந்தனர். அவர் தனது பணப்பையை தொலைத்த போது அவருக்கு அவர்கள் உதவினர். அவர் சுகவீனமுற்ற போது அவர்கள் அவரை பராமரித்தனர்.

தனித்துவமுள்ளவர்களாயிருங்கள்

வாசியுங்கள்: உபாகமம் 7:9–11

தேவன் உண்மையுள்ளவர் தமது ஜனங்களை இப்போதும் அன்பு செய்கிறார். 11ம் வசனத்தில் உள்ள கட்டளையானது முழுப்பகுதியையும் குறித்து பேசுகிறது. தேவகட்டளைகளை பின்பற்றுங்கள். ஏனெனில் தேவஜனங்கள் பரிசுத்தமானவர்கள், தனித்துமானவர்கள், தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டு நேசிக்கப்படுகிறவர்கள். எனவே தேவ ஜனங்கள் கட்டாயமாக தேவனுக்கு கீழ்ப்படிந்து அவருடைய நியாயங்களை பின்பற்ற வேண்டும்.

- உங்கள் வாழ்க்கையை குறித்து எண்ணிப் பாருங்கள். உங்கள் வாழ்க்கையை குறித்து அவிசுவாசிகள் என்ன கூறுவார்கள்?

ஜெபியுங்கள்: அவிசுவாசிகளைவிட தனித்துமுள்ளவர்களாக வாழ்வதற்கான பெலனை தேவன் தமது மக்களுக்கு கொடுக்க வேண்டுமென தேவனிடம் கேளுங்கள்.

கற்றுக்கொள்ளுங்கள்: உபாகமம் 8:1–20

17 தாழ்மையுள்ளவர்களாக இருங்கள். பெருமை வேண்டாம்

பின்னணி

ஏறக்குறைய 40 ஆண்டுகளாக ஜனங்கள் வனாந்திரத்திலே இருந்தார்கள். தேவன் வனாந்திரத்திலே இருந்த ஜனங்களை பரிட்சித்தார். வனாந்திரம் கடினமான வரண்ட இடமாகும். அங்கு வாழ்வது இலகுவானதல்ல. வாக்களிக்கப்பட்ட தேசமே வேறுபட்டதாக இருந்தது.

வசனங்கள் 1–20 ஐ படிக்கவும்

குறிப்புக்கள்

- **உபாகமம் 8:3.** “மன்னா” என்பது தேவனிடமிருந்து வரும் விசேட உணவு. “மன்னா” என்ற சொல்லின் அர்த்தம் இது என்ன? என்பதாகும். இது என்ன என்பது யாருக்குமே தெரியாதிருந்தது.
- **உபாகமம் 8:12.** “திருப்தியடைந்தார்கள்” ஜனங்கள் தமக்கு தேவையானதைப் பெற்றுக் கொண்டார்கள்.
- **உபாகமம் 8:17.** “உனக்கு நீயே கூறிக்கொள்வது” அசல் வார்த்தை என்னவென்றால் “உன் இருதயத்தில்” நீ சொல்லிக் கொள்வது என்பதாகும்.

ஆராய்ந்து பாருங்கள்

8ம் அதிகாரத்தை வாசித்து பின்வரும் பதங்களை கவனியுங்கள். “நினைவுகூருதல், மறவாதிருத்தல், தாழ்மை, பெருமை” என்பனவாகும. இந்த அதிகாரத்தில் இந்த பதங்கள் முக்கியமானவை.

வசனங்கள் 1-6. வனாந்திரத்திலே இருந்த நாற்பது வருடங்கள் தேவனிடத்திலிருந்து வந்த பரீட்சையாகும். இஸ்ரவேலரை பசிக்கச்செய்து அதிசயமான விதத்தில் போஷித்தார். யாத்திராகமம் 16ல் முதலில் மன்னாவைக் கொடுத்தார். ஓய்வு நாளுக்கு முன்னைய இரவைத் தவிர ஏனைய இரவுகளிலே அது குறைவுபட்டது. ஜனங்களை தாழ்மைப்படுத்துவதற்காக தேவனிடமிருந்து வந்த ஒவ்வொன்றும் அதிசயமாக இருந்தது.

வசனங்கள் 7-10. வனாந்திரத்திலே அதிக உணவு இல்லை. தேசமோ அதிகளவு உணவைக் கொண்டிருந்தது.

வசனங்கள் 11-14. தேசத்திலே சிறிது காலம் சென்ற பின்னர் ஜனங்களிடமிருந்தவை பெருகிவிடும் அவர்கள் திருப்ததியடைவார்கள். ஆனால் ஆபத்தானது பெருமையே. பெருமையுள்ளவர்கள் தேவனிடம் தங்கியிருப்பதில்லை.

வசனங்கள் 15-18. அவர்கள் பெருமையடையாமல் வனாந்திரத்தை நினைவுகூரும் படி மோசே ஜனங்களுக்கு கூறினான். 17ம் வாக்கியமானது பெருமையுள்ள இருதயத்திலிருந்து வருகிறது. “ஐஸ்வர்யம் / ஐஸ்வர்யமாக” என்பதன் அர்த்தம் செல்வம் / செல்வமுள்ளது என்பதாகும்.

வசனங்கள் 19-20. பெருமையானது விக்கிரக ஆராதனைக்கும் வேறு தெய்வ வழிபாட்டிற்கும் இட்டுச்செல்கிறது. வேறு தெய்வங்களை வழிபட வேண்டாம் என்று மோசே எச்சரிக்கின்றான்.

⬇ கற்றுக்கொள்ளுங்கள்: உபாகமம் 8:1–20

- ஜனங்களின் இருதயம் ஏன் பெருமையடைகிறது? ஏன் இருதயம் பெருமையடைகின்றன என நீங்கள் புரிந்து கொண்டால் உங்கள் பிரசங்கங்கள் அதிக வல்லமையாக இருக்கும். அதிக பெருமை வருவது வனாந்தரம் போன்ற காலங்களின் போதா அல்லது வாக்களிக்கப்பட்ட இலகுவான காலங்களிலா?

⊕ **பிராதான கரு**

தேவன் எவ்விதம் உம்மை தாழ்மைப்படுத்தினார் என நினைவுகூருங்கள். தாழ்மையுடனிருந்து அவரில் தங்கியிருங்கள்.

➡ கற்பித்தல்: உபாகமம் 8:1–20

எடுத்துக் காட்டு: ஒரு மனிதனின் மனைவி மரிக்கின்றாள். அவனுக்கு தொழில் இல்லை. அவன் கோபமடைந்து தேவனிடம் முறையிடுகிறான். அவன் விசுவாசத்தை இழக்கிறான். ஒரு பெண் அவளின் வாழ்க்கை நன்றாக இருப்பதாக காண்கின்றாள். அவள் அதிக சம்பத்தை பெற்று செல்வந்தன் ஆகிறாள். ஆனால் அவள் தேவனிடமிருந்து விலகி வாழ்கிறாள்.

- தீமையான காலங்களா அல்லது நன்மையான காலங்களா மனிதரை தேவனிடமிருந்து தூரமாக்குகிறது?

வனாந்திர பரீட்சையை நினைவுகூருங்கள்

வாசியுங்கள்: உபாகமம் 8:1–6

நாற்பது வருடங்கள் இஸ்ரவேல் ஜனங்கள் வனாந்திரத்திலேயே வாழ்ந்ததை மோசே நினைவுபடுத்துகிறான். தேவன் எவ்விதம் இஸ்ரவேலரை பசியுண்டாக்கி தாழ்மைப்படுத்தி அவர்களை மன்னாவினால் போஷித்தார் என்பதை விளக்குங்கள். தாழ்மையாக இருப்பது என்பது இது தான். தேவனிலேயே தங்கியிருப்பதாகும். இஸ்ரவேல் ஜனங்கள் கடந்ததை மறவாது அவற்றை நினைவு கூர வேண்டும்.

➡ கற்பித்தல்: உபாகமம் 8:1–20

வாக்களிக்கப்பட்ட தேசம் தனித்தன்மையுள்ளது
வாசியுங்கள்: உபாகமம் 8:7–11
வாக்களிக்கப்பட்ட தேசம் வனாந்திரத்தை விட மேலானது. வாக்களிக்கப்பட்ட தேசம் நிறையவே நல்ல காரியங்களை கொண்டிருந்தது – நீர் நதிகள், நிறைய தாவரங்கள், அதிக பழங்கள், செம்பு போன்றவை. முதலாவதாக ஜனங்கள் தேவனுக்கு நன்றி கூறுவார்கள். (வசனம் 10)

வாக்களிக்கப்பட்ட தேசமும் ஓர் பரீட்சையே
வாசியுங்கள்: உபாகமம் 8:12–18
வாக்களிக்கப்பட்ட தேசத்தில் இஸ்ரவேல் ஜனங்கள் அநேக காரியங்களைப் பெறுவார்கள். மிருகங்கள் மற்றும் வெள்ளியும் பொன்னுமாகும். அவை நிறைவாக இருக்கும். ஆனால் இது ஆபத்தானது. ஜனங்கள் தேவன் செய்ததையும் தேவனையும் மறப்பார்களாயின் அவர்கள் பெருமையடைவார்கள். கடவுளால் அல்ல தமது முயற்சியினாலே தாம் செல்வந்தர்கள் ஆனார்கள் என எண்ணுவார்கள். இஸ்ரவேல் ஜனங்களை தாழ்மைப்படுத்தும் ஒரு பரீட்சையாக வனாந்திரம் அமைந்தது. வாக்களிக்கப்பட்ட தேசத்தில் அவர்கள் தாழ்மையாக இருத்தல் வேண்டும். பெருமை கொள்வது சாதாரண பாவம். பெருமையுள்ள ஒருவர் தான் தேவனில் தங்கியிருக்க வேண்டியதில்லை என எண்ணுகிறார். அவர் தான் விரும்பியதை தான் முயற்சி செய்து அவற்றை பெற முடியாது என எண்ணுகிறார். (வசனம் 17) எனவே எச்சரிக்கையாயிருங்கள்! நீங்கள் பெருமையள்ளவரா?

விக்கிரக ஆராதனையின் ஆபத்து
வாசியுங்கள்: உபாகமம் 8:19–20
ஜனங்கள் பெருமையுள்ளவர்களாக இருப்பார்களானால் அவர்கள் வேறு தெய்வங்களை வழிபடுவார்கள். உண்மையான தேவனை விசுவாசிக்க மாட்டார்கள். விக்கிரக ஆராதனைக்கு எதிராக ஜனங்களை மோசே ஜனங்களை எச்சரித்தான்.

பிரயோகம்: தேவ ஜனங்கள் எப்பொழுதுமே தேவனில் தங்கியிருக்க வேண்டும். நாம் தாழ்மையுள்ளவர்கள் என உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். வனாந்திரத்திலே இஸ்ரவேல் ஜனங்களுக்கு தேவன் செய்ததை நினைவில் கொள்ள வேண்டும். இயேசுவின் சிலுவையினால் தேவன் உமக்கு செய்ததை நினைவுபடுத்திப் பாருங்கள். அதன் மூலம் அவர் கொடுத்தவற்றையும் செய்த உதவிகளையும் நினைவு கூருங்கள்.

ஜெபியுங்கள்: உமக்கிருக்கும் பெருமையயைக் கண்டுகொள்ள உதவும் படி தேவனிடம் கேளுங்கள். தேவன் தரும் ஒவ்வொன்றுக்காகவும் அவருக்கு நன்றி கூறுங்கள்.

18 எவ்வாறு தவறிழைத்தீர்கள் என்று நினைத்துப்பாருங்கள்

வசனங்கள் 4–24 ஐ படிக்கவும்
2 அல்லது 3 தடவைகள் வாசியுங்கள்

குறிப்புக்கள்

- **உபாகமம் 9:4.** "நீதியுள்ள" என்பதன் அர்த்தமாவது தேவனுடன் சீரிய உறவைப் பேணுதல் என்பதாகும். இந்த வசனத்தில் "நன்மையானவை" என பொருள்படும்.
- **உபாகமம் 9:6.** "வணங்கா கழுத்து" என்பதன் அர்த்தம் பிடிவாதம் என்பதாகும். நீர் போக வேண்டுமென விரும்பும் இடத்திற்கு போக விரும்பாத எருது அல்லது கழுதையைப் போல என்பதாகும்.
- **உபாகமம் 9:9.** "உடன் படிக்கையின் கற்பனைகள்" பத்து கற்பனைகள் தேவனால் இரண்டு கற்களில் எழுதப்பட்டது. "உடன் படிக்கை" என்பது ஒரு திருமணத்தைப் போல பலமான கட்டப்பட்ட உறவாகும்.
- **உபாகமம் 9:18.** "விழுந்து கிடக்கின்ற" என்பது முகம் தரையில் விழுந்து கிடப்பதாகும்.

ஆராய்ந்து பாருங்கள்

சீனாய் மலையில் ஜனங்கள் வழிபாட்டிற்காக பொன் கன்று குட்டியை செய்து கலகம் விளைவித்ததை மோசே நினைவுபடுத்துகின்றான்.

தேவன் ஏன் இஸ்ரவேல் ஜனங்களுக்கு தேசத்தை கொடுக்கிறார்.

வசனங்கள் 4-6. தேவன் ஜனங்களுக்கு வாக்களிக்கப்பட்ட தேசத்தை கொடுக்கும் போது ஏனைய ஜாதிகளை விட தாம் சிறந்தவர்கள் என அவர்கள் எண்ணியிருக்கக் கூடும். தேசமானது தேவ கொடை என எண்ணியிருக்கலாம். ஏனைய ஜாதிகளை விட அதிக நீதியுள்ளவர்கள் என ஜனங்களைப் பார்த்து மோசே கூறுகின்றான். தேசமானது தேவனின் கொடையாகும். ஜனங்கள் பிடிவாத குணம் உள்ளவர்கள். (வணங்கா கழுத்துள்ளவர்கள்) அவர்கள் தேவனுக்கு கீழ்படிய மறுத்தார்கள்.

வசனங்கள் 7, 22-24 ஜனங்கள் எப்போதும் தேவனுக்கு எதிராக கலகம் விளைவிப்பவர்கள். யாத்திராகமத்திலும், எண்ணாகமத்திலும் இஸ்ரவேலர்கள் முறையிட்டு தேவனுக்கு எதிராக இருந்தனர். மோசே இங்கு சாரத்தை தருகிறான். தேவனுக்கு எதிராக கலகம் பண்ணுவது என்பது அவருக்கு கீழ்படியாமலும் அவரை நம்பாமலும் இருப்பதும் ஆகும். ஜனங்கள் வாக்களிக்கப்பட்ட பூமிக்கு தகுதியற்றவர்கள்.

வசனங்கள் 8-17. ஜனங்களின் மிகப் பெரிதான பாவமானது பொன் கன்றுக் குட்டியை ஆராதனைக்கு செய்தமை ஆகும். முழு சம்பவத்தையும் அறிய யாத்திராகமம் 32-34 வரை வாசியுங்கள். பத்து கற்பனையில் முதல் இரண்டிற்கு ஜனங்கள் கீழ்படியவில்லை. எகிப்திலிருந்து வெளியே அழைத்து வந்த தேவனுக்கு வேதனையான, கடுகடுப்பான விளைவுகளை தருகின்றதாகும்.

ⓘ கற்றுக்கொள்ளுங்கள்: உபாகமம் 9:4–24

இஸ்ரவேல் ஜனங்களுடன் தேவன் கோபமுள்ளவரானார். தேவன் அவர்களை அழிக்க விரும்பினார். மோசே இரண்டு கற்பலகைகளை உடைத்தான். இது எழுதப்பட்ட உடன்படிக்கையை கிழிப்பது போன்றது அல்லது திருமணச் சான்றிதளை கிழிப்பது போன்றது எனலாம். தேவன் தமது ஜனங்களுடனான உறவை முடிவுக்கு கொண்டு வருகின்ற அடையாளமாக இது இருந்தது. அவர் உடன்படிக்கையை முடிவுக்கு கொண்டு வர விரும்பினார்.
சான்றிதளை கிழிப்பது போன்றது எனலாம். தேவன் தமது ஜனங்களுடனான உறவை முடிவுக்கு கொண்டு வருகின்ற அடையாளமாக இது இருந்தது. அவர் உடன்படிக்கையை முடிவுக்கு கொண்டு வர விரும்பினார்.

⊕ **பிரதான கரு**
நீர் ஒரு பாவி என்பதை ஒரு போதும் மறக்க வேண்டாம்.

→ கற்பித்தல்: உபாகமம் 9:4–24

⊳ **ஆரம்பியுங்கள்**
நாம் தேவனுக்கு தகுதியாவர்கள் என எண்ணுவது இலகுவானது. தகுதி என்பதன் அர்த்தம் நாம் ஏதோ சம்பாதிக்கும் நேரம் அல்லது எனக்கு உரிமை உண்டு என்பதாகும். “நான் மற்றவரை விட சிறந்தவன்” “நான் நல்லவன் என்பதால் பரலோகம் போக தகுதியுண்டு” என எண்ண முடியும்.

- சில சமயங்களில் இவ்விதமாக நீங்கள் நினைப்பதுண்டா?

தேசத்தை பெறுவதற்கான தகுதி ஜனங்களுக்கு இல்லை
⊙ **வாசியுங்கள் உபாகமம் 9:4–6**
இஸ்ரவேலர் தேசத்தினுள் பிரவேசிக்கும் போது ஏனைய ஜனங்களை விட நாம் மேலானவர் என எண்ணக் கூடும். அத் தேசத்திற்கான தகுதி தமக்குண்டு என எண்ணக் கூடும். அவர்களுக்கு தகுதியில்லை என மோசே கூறுகின்றான். இஸ்ரவேல் ஜனங்கள் பிடிவாதமுள்ளவர்கள் (வணங்கா கழுத்துள்ளவர்கள்)

⊕ **எடுத்துக்காட்டு:** உமது பண்ணையில் நிலத்தை உழுவதற்காக ஒரு மிருகத்தை வைத்திருக்கக் கூடும். அது தனது கழுத்தை கடினமாகவும் விளையாட்டாகவும் வைத்திருந்தால் அந்த மிருகம் கீழ்படிய மறுப்பதாலாகும். இஸ்ரவேல் ஜனங்களும் அப்படிப்பட்டவர்கள் தான்.

➡ கற்பித்தல்: உபாகமம் 9:4–24

ஜனங்கள் எப்போதும் தேவனுக்கு விரோதமாக கலகம் செய்கிறவர்கள்

வாசியுங்கள் உபாகமம் 9:7, 22–24
எகிப்தை விட்டு ஜனங்கள் வந்த பிற்பாடு அவர்கள் உணவு, நீர், அவர்களுடைய தலைவர்கள், வனாந்திரம் ஆகியவற்றை பற்றி முறையிட்டனர்.

ஜனங்களின் மிகப் பெரிய பாவம் விக்கிரக ஆராதனை

வாசியுங்கள் உபாகமம் 9:8–21
சீனாய் மலையில் விக்கிரகத்தை உருவாக்கியது தான் மிகப் பெரிய பாவமாகும். விக்கிரகம் பொன்னால் செய்யப்பட்டு அது கன்றுக் குட்டியைப் போலிருந்தது. தேவன் மிகவும் கோபமடைந்து ஜனங்களை அழிக்க தீர்மானித்தார். விக்கிரகத்தை உருவாக்குவது ஆவிக்குரிய விபச்சாரமாகும். அதனால்தான் மிகவும் கோபடைந்தார். அதனால் தான் பத்து கற்பனைகள் எழுதப்பட்ட கற்பலகைகளை மோசே உடைத்தான்.

எடுத்துக்காட்டு: உங்கள் திருமண நாளை கற்பனை செய்து பாருங்கள். அந்த நாளின் முடிவில் இரவில் நீர் உமது அறைக்கு செல்கிறீர் உமது கணவன் அல்லது மனைவி ஏற்கனவே அங்கே உள்ளார். நீர் சந்தோஷத்தோடும் உற்சாகத்தோடும் செல்கிறீகள். நீர் கதவை திறந்த போது உமது புதிய கணவன் அல்லது மனைவி வேறொரு நபருடன் இருப்பதைக் காண்கிறீர். நீர் மிகவும் கோபடைகிறீர். நீர் உமது திருமண சான்றிதளைக் கிழிக்கிறீர். உறவு முடிவுக்கு வருகிறது.

பிரயோகம்: இஸ்ரவேல் ஜனங்கள் தேசத்தினுள் பிரவேசிப்பதற்கு தகுதியற்றவர்கள். ஆனால் தேவன் தமது கிருபையால் தேசத்தை ஜனங்களுக்கு கொடுத்தார். நாம் பரலோகம் செல்ல தகுதியில்லாதவர்கள். கடந்த காலத்தில் தேவனுக்கெதிராக எப்படி கலகம் பண்ணினோம் என்பதை எண்ணிப் பாருங்கள். நரகம் எமக்கு தகுதியானது. இயேசுவில் மூலம் வரும் கிருபையினால் மட்டுமே எமக்கு பரலோகத்தில் பிரவேசிக்கும் உரிமையை கொடுக்கிறார். நாம் பரலோகம் செல்ல தகுதியானவர்கள் என ஒரு போதும் எண்ணலாகாது.

ஜெபியுங்கள்: என்னில் விசேஷ தன்மை எதுவுமில்லை என்பதை நினைவில் கொள்ள தேவனிடம் உதவி கேளுங்கள். அவரது கிருபைக்காகவும் மன்னிப்பிற்காகவும் தேவனுக்கு நன்றி கூறுங்கள்.

19 மற்றவர்களுக்காக ஜெபம் பண்ணுவது எப்படி?

பின்னணி
சீனாய் மலையில் விக்கிரகத்தை செய்ததான பாவத்தை ஜனங்களுக்கு மோசே நினைவூட்டுகிறான். தேவன் ஜனங்களை அழிக்கப் போகிறார். மோசே அதற்காக ஜெபிக்கிறான்.

வசனங்கள் 25–29 ஐ படிக்கவும்
2 அல்லது 3 தடவைகள் வாசியுங்கள்.

குறிப்புக்கள்
- **உபாகமம் 9:26.** இங்கு "சுதந்திரம்" என்பதன் பொருள் ஜனங்கள் தேவனின் பிள்ளைகளைப் போன்றவர்கள் என்பதாகும். "மீட்டல்" என்பதன் பொருள் காப்பாற்றுதல் அல்லது அடிமைத்தனத்திலிருந்து மீளப்பெறுதல் என்பதாகும்.

ஆராய்ந்து பாருங்கள்
- உமது ஜனங்கள் கீழ்படியாமையாலும் பிடிவாதமாகவும் இருக்கும் போது உமது ஜெபம் எவ்வளவு கருத்தாழமாயுள்ளது?

ஜனங்களுக்காக மோசே எப்படி ஜெபித்தான் என பார்க்கும் போது தலைவர்களுக்கு இப்பகுதியானது பெரும் சவாலைக் கொடுக்கிறது.

மோசே தேவனுக்கு முன்பாக 40 நாட்கள் இரவும் பகலும் விழுந்து கிடந்தான். (வசனம் 18, 25) அவன் உபவாசித்து ஜெபித்தான்.

12ம் வசனத்தில் அவர்களின் பாவத்தின் நிமித்தம் ஜனங்களை அழிப்பதாக கூறினான். இஸ்ரவேல் ஜனங்களை அழிக்க வேண்டாம் என தேனிடம் மோசே கேட்டுக் கொண்டான். அவர்களை அழிக்க கூடாதென மோசே 3 காரணங்களை கூறினான்.

- தொடர்ந்து வாசிப்பதற்கு முன்பதாக அவற்றை கண்டு பிடிப்பீரா?

வசனம் 26 முதற் காரணம்: ஜனங்கள் தேவனுக்குரியவர்கள். தேவன் ஜனங்களை எகிப்திலிருந்து மீட்டு பாதுகாத்துள்ளார். ஜனங்கள் தேவனின் சுதந்திரம். தேவன் ஜனங்களை அழித்து விட்டால் தேவன் அவர்களை மீட்க செய்த யாவும் வீணாகிவிடும்.

வசனம் 27 இரண்டாவது காரணம்: ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபை நினைத்து பாருங்கள். ஆதியாகமம் 12: 1-7 தேவன் ஆபிரகாமுக்கு தேசத்தையும் பல சந்ததியையும் வாக்களித்தார். தேவன் ஜனங்களை அழித்தால் ஆபிரகாமுக்கு தேவன் கொடுத்த வாக்கத்தத்தங்கள் யாவும் முறிந்து போகும். தேவன் கொடுத்த வாக்குத்தத்தங்களை காத்துக் கொள்ளும் படியாக மோசே கேட்கிறான்.

வசனம் 28 மூன்றாவது காரணம்: எகிப்திய ஜனங்கள் தேவனைப் பற்றி தவறாக எண்ணுவார்கள். ஜாதிகளால் அவருடைய நாமம் மகிமைப்பட வேண்டுமென தேவன் விரும்புகிறார். தேவன் மக்களை அழித்தால் தேவன் பலவீனமானவர் என்றும், இவர் ஜனங்கள் வெறுக்கின்றார் என்றும் எகிப்தியர் எண்ணுவார்கள். அவருடைய நோக்கம் தோல்வியடையும்.

பாவம் செய்யும் விசுவாசிகளுக்காக எப்படி ஜெபிப்பீர்கள்? இந்த

கற்றுக்கொள்ளுங்கள்: உபாகமம் 9:25–29

ஜெபமானது பாவமன்னிப்புக்கான அற்புதமான ஜெபத்திற்கு உதாரணமாகும். இஸ்ரவேலின் பாவத்திற்கு சாக்கு போக்கு எதுவும் கூற முடியாது. தேவனுடைய உண்மைத்துவத்தையும் நோக்கங்களையும் மையப்படுத்தியே இந்த ஜெபம் ஏறெடுக்கப்படுகின்றது. உங்கள் ஜெபம் எப்பபடிப்பட்டதாயிருக்கிறது? தேவன் மோசேயின் ஜெபத்திற்கு பதிலளிக்கிறார். (பார்க்கவும் உபாகமம் 9:19, 10:1-5)

⊕ பிரதான கரு
மற்றவர்களை மன்னிக்கும் படி தேவனிடம் ஜெபியுங்கள்.

கற்பித்தல்: உபாகமம் 9:25–29

ஆரம்பியுங்கள

- பாவம் செய்கிற விசுவாசிகளுக்காக எவ்வளவு தூரம் ஜெபிக்கின்றீர்கள்?

இஸ்ரவேல் ஜனங்கள் விக்கிரகம் ஒன்றை செய்த பிற்பாடு தேவன் அவர்களை அழிக்க விரும்பினார். ஆனால் மோசே ஜெபிக்கின்றான். பாவம் செய்கிற விசுவாசிகளுக்காக கருத்தாக எப்படி ஜெபிக்க வேண்டும் என்பதற்கு மோசே ஒரு உதாரணத்தை தருகிறார். அவன் உணவின்றி 40 நாட்கள் இரவும் பகலும் முகத்தை தாழ்த்தி ஜெபித்தான். இஸ்ரவேலை தேவன் அழிக்க கூடாது என்பதற்கு மோசே 3 காரணங்களை தருகிறான்.

தேவன் ஜனங்களை மீட்டுள்ளார்.
வாசியுங்கள்: உபாகமம் 9:26, 29
ஜனங்கள் அவருடையவர்கள் என தேவனுக்கு நினைவூட்டுகிறான். அவர்கள் அவரது பிள்ளைகள். தேவன் ஏற்கனவே மீட்டுள்ளார். தேவன் இப்பொழுது அவர்களை அழித்தால் எகிப்திலிருந்து மீட்டது வீணாகி விடும்.

தேவன் வாக்குத்தத்தங்களை செய்தார்
வாசியுங்கள்: உபாகமம் 9:27
தேவன் ஆபிரகாம், ஈசாக்கு மற்றும் யாக்கோபுக்கு கொடுத்த வாக்குதததத்தங்களை நினைப்பூட்டுகிறான். தேவன் தேசத்தையும் சந்ததியையும் வாக்களித்தார். தேவன் ஜனங்களை

➔ கற்பித்தல்: உபாகமம் 9:25–29

அழித்தால் வாக்குத்தத்தங்கள் யாவும் ஒன்றுமில்லாததாகி விடும்.

ஏனைய ஜாதிகள் தேவனை மகிமைப்படுத்த மாட்டார்கள்

வாசியுங்கள்: உபாகமம் 9:28

தேவனால் இஸ்ரவேல் ஜனங்களை தேசத்துக்கு கொண்டு வர முடியாதெனவும் அல்லது தேவன் இஸ்ரவேல் ஜனங்களை வெறுக்கிறார் எனவும் எகிப்திய ஜனங்கள் எண்ணுவார்கள் என மோசே கூறுகின்றான். ஜாதிகள் அவரை மகிமைப்படுத்த வேண்டும் என தேவன் விரும்புகிறார். தேவனைப் பற்றி ஜனங்கள் தவறாக எண்ணுவதை மோசே விரும்பவில்லை.

இன்றைய விசுவாசிகளுக்கான பாடங்கள் எவை? பாவம் செய்கிற ஜனங்களுக்காக ஜெபிக்கின்ற போது மோசேயின் ஜெபத்திலுள்ள 3 காரணங்களைப் பயன்படுத்த முடியும்.

1. **“எனக்காக மரித்த இயேசுவின் நிமித்தம்”**: இஸ்ரவேல் ஜனங்களை மீட்ட போல இயேசுவின் மரணத்தின் நிமித்தம் தேவன் தமது ஜனங்களை மீட்டார்.
2. **“உங்களுக்கான வாக்குத்தத்தங்களை நினைவு கூருங்கள்”**: இயேசுவின் மரணத்தினூடாக பாவ மனிதர்கள் இரட்சிக்கப்படுகிறார்கள் என தேவன் வாக்களிக்கிறார்.
3. **“அவிசுவாசிகளின் நன்மைக்காக”**: விசுவாசிகள் பாவம் செய்கையில் தேவன் அவர்களைத் தண்டிக்கும் போது தேவன் பலவீனமானவர் என எண்ணக்கூடும். தேவனுடைய நாமம் இகழப்படும். அவிசுவாசிகள் தேவனைப் பின்பற்ற விரும்பமாட்டார்கள்.

- பாவம் செய்த விசுவாசிகள் யாரையாவது உமக்கு தெரியுமா? தேவன் அவர்களை மீண்டும் கொண்டுவரத்தக்கதாக கருத்தாழமாக அவர்களுக்காக ஜெபிப்பீர்களா?

மோசே கேட்டவைகளுக்கு தேவன் செவிமடுத்து சம்மதித்தார். தேவன் இன்னும் பத்துக்கட்டளைகளுடன் இரண்டு கற்பனைகளையும் கொடுத்தார். (உபாகமம் 10:1-5) இஸ்ரவேலுக்கும் தேவனுக்குமிடையே உள்ள விசேட உறவு சீரடைந்தது. எப்படியொரு மன்னிக்கும் தேவனாக இருக்கின்றார்.

ஜெபியுங்கள்: பாவம் செய்து வருகிற கிறிஸ்தவர்களின் பாவ மன்னிப்புக்காக ஜெபியுங்கள். அதன் மூலம் இயேசுவின் மரணம் வீணாய்ப் போகாதபடியும் தேவனின் உண்மைத்துவம் காணப்படவும், ஏனைய ஜனங்கள் தேவ நாமத்தை இகழாமல் இருக்கவும் ஜெபியுங்கள்.

20 தேவன் எதைக் கேட்கிறார்?

பின்னணி
வாக்களிக்கப்பட்ட தேசத்தில் வாழ்வதற்காக ஜனங்களை மோசே ஆயத்தம் செய்கிறான். தேவன் ஜனங்களிடமிருந்து எதை விரும்புகிறார் என்பதை அவன் சுருக்கமாக கூறுன்றான்.

வசனங்கள் 12–22 ஐ படிக்கவும்

குறிப்புக்கள்

- **உபாகமம் 10:12.** “பயப்படுதல் அல்லது பூசித்தல்” என்பதன் பொருள் மதிப்பளித்து மேன்மைப்படுத்துவதாகும். தேவன் பயபக்திக்குரிய தேவன். நாம் அவருக்கு மதிப்பளிக்கிறோம் அல்லது பயப்படுகிறோம்.
- **உபாகமம் 10:13.** “கடைப்பிடித்தல்” என்பது தேவ கட்டளைகளுக்கு கீழ்ப்படிதல் ஆகும்.
- **உபாகமம் 10:16.** “விருத்தச்சேதனம்” 35ம் பாடத்தைப் பாருங்கள் ஆதியாகமம் 17ல் ஆபிரகாம் சரீரத்திலே தமக்கும் தமது குடும்பத்தினருக்கும் விருத்தசேதனம் செய்கின்றார். ஆனால் உண்மையான விருத்தசேதனமானது இருதயத்தில் தான். (ரோமர் 2:28-29) ஜனங்கள் எதிர்காலத்தில் அவரை நேசிக்கவும், அவருக்கு கீழ்ப்படியும் படியாகவும் அவர்களின் இருதயங்களை விருத்தசேதனம் செய்வதாக வாக்களித்தார். (உபாகமம் 30:6)
- **உபாகமம் 10:17.** “பட்சாபாதம் காட்டுகிறதில்லை” என்பதன் அர்த்தம் தேவன் ஒவ்வொருவரையும் சமமாக நடத்துகிறவர் என்பதாகும்.
- **உபாகமம் 10:18.** “அந்நியன்” என்பவர் இஸ்ரவேலில் எப்போதும் வாழுகின்ற புற நாட்டவரர் ஆவார்.

ஆராய்ந்து பாருங்கள்
வசனங்கள் 12-13 தேவன் 5 காரியங்களை தமது மக்களிடம் கேட்கின்றார். நடைமுறையில் ஒவ்வொன்றின் அர்த்தம் என்னவென்று சிந்தித்து பாருங்கள்.

1. **தேவனுக்கு பயப்படுதல்:** தேவனுக்கு பயந்து நடுங்குவது என அர்த்தப்பட கூடாது. தேவன் பரிசுத்தரும் வல்லமையுள்ளவர் என்பதும் இதன் அர்த்தமாகும். நாம் கவனமாக அவருடன் நடந்து கொள்ள வேண்டும்.

2. **அவரின் வழிகளில் நடத்தல்:** ஒவ்வொரு நாளும் தேவன் கூறுவதற்கு கீழ்ப்படிதலாகும்.

3. **தேவனை அன்பு செய்தல்:** இது இருதயத்திலிருந்து வர வேண்டும். இதன் அர்த்தம் தேவனுக்கு முதலிடம் கொடுப்பதாகும்.

4. **தேவனுக்கு ஊழியம் செய்தல் (சேவித்தல்):** தனியாகவும் மற்றவர்களுடன் சேர்ந்து ஆராதித்தலை உள்ளடக்கும்.

5. **தேவ கற்பனைகளை கடைபிடித்தல்:** இதன் அர்த்தம் தேவ பிரமாணங்களுக்கு கீழ்ப்படிதலாகும்.

வசனங்கள் 14-15 தேவ ஜனங்கள் ஏன் இந்த 5 காரியங்களை செய்தல் வேண்டும். ஏனெனில் “தேவன் யார்” என்பதினால் ஆகும். அவர் பெரிதான

⬇ கற்றுக்கொள்ளுங்கள்: உபாகமம் 10:12–22

சிற்பி ஆனால் தமது ஜனங்களையும் நேசிக்கிறார்.

வசனம் 16 தேவன் கேட்பதை செய்ய ஜனங்களின் இருதயத்தில் மாற்றம் தேவை. அவர்களின் இருதயம் பிடிவாதமும் பெருமையும் கொண்டவை.

வசனங்கள் 17-19 தேவைகளின் பொழுது தேவன் ஜனங்களை அன்பு செய்கிறார்.

வசனங்கள் 20-22 மறுபடியுமாக தேவ ஜனங்கள் தேவனுக்கு பயந்து அவரை சேவிக்க வேண்டும். அவர்கள் தேவனை துதிக்க வேண்டும். ஏனெனில் அவர் தமது ஜனங்களை எகிப்திலிருந்து கொண்டு வந்தார்.

⊕ **பிரதான கருத்து**

கர்த்தருக்கு பயந்து அன்பு செய்து அவரையே சேவியுங்கள்.

➡ கற்பித்தல்: உபாகமம் 10:12–22

ஆரம்பியுங்கள்

- தேவன் அவரது ஜனங்களிடம் எதை கேட்கிறார்? மிகவும் முக்கியமான விடயம் என்ன?

தேவன் எதைக் கேட்கிறார்?

வாசியுங்கள்: உபாகமம் 10:12–13

மிகவும் முக்கியமான விடயங்களை இந்த வாக்கியங்கள் கூறுகின்றன. 5 காரியங்களும் என்னவென்று கற்பிப்போரிடம் கூறுங்கள். அவற்றை எப்படி செய்ய முடியும் என சில உதாரணங்களை கூறுங்கள்.

தேவன் ஏன் இதை விரும்புகிறார்?

வாசியுங்கள்: உபாகமம் 10:14–15

தேவன் எமது முழுமையான அர்ப்பணத்தை விரும்புகிறார். ஏனெனில் அவர் பெரிதான தேவன். அவரின் ஜனங்கள் அவருக்கு விசேஷமானவர்கள். அவருடையவர்களாயிருக்கும்படியாக அவர் அவர்களை தெரிந்து கொண்டார். தேவன் அவரின் ஜனங்களை அன்பு செய்கிறார். அவர் ஜனங்கள் அவரை அவர்கள் இருதயத்தில் அன்பு செய்து அவருக்கு கீழ்ப்படிய வேண்டுமென விரும்புகிறார்.

பிரச்சனை

வாசியுங்கள்: உபாகமம் 10:16

ஆபிரகாம் தமது குடும்பத்தினருக்கு எவ்விதம் விருத்தசேதனம் பண்ண வேண்டும் என கூறுகின்றார் என நீங்கள் கற்பிப்போருக்கு

→ கற்பித்தல்: உபாகமம் 10:12–22

விளக்கப்படுத்துங்கள். தேவனுக்கு எக்காலத்திலும் உரித்தானவர்கள் என்பதைக் காட்டும் அடையாளமாக இருந்தது. (ஆதியாகமம் 17:13) ஆனால் உண்மையான பிரச்சினை மனித இருதயத்தில் தான் உள்ளது. எமது இருதயத்தை மாற்ற எமக்கு தேவன் தேவை. எனவே அந்த 5 விடங்களை நாம் செய்கிறோம். எம்மை எங்களால் மாற்ற முடியாது. இயேசுவினால் மட்டுமே எமது இருதயங்களை மாற்ற முடியும். இயேசுவை விசுவாசிக்கும் போது அவரது ஆவியானவர் எம் இருதயத்தில் வாழ்ந்து உள்ளிருந்து எம்மை மாற்றுவார். பரிசுத்த ஆவியானவர் மேலும் மேலும் இயேசுவைப் போல மாற்றுகிறார்.

தேவன் மற்றவர்களுடன் நடந்து கொள்வது போல் நீங்களும் மற்றவர்களுடன் நடந்து கொள்ளுங்கள்

வாசியுங்கள்: உபாகமம் 10:17–19

தேவன் எப்படிப்பட்டவர் என்பதை 17ம் வசனத்திலிருந்து விளக்குங்கள். எந்த தெய்வங்களையும், வல்லமைகளையும் விட மிகவும் உயர்ந்தவர். தேவன் நீதியுள்ளவர் எல்லோரையும் சமமாக நடத்துகிறவர். தேவன் தேவைகளோடு உள்ளவர்களை நேசிக்கிறார். அவர்கள் நீதியுடனும், இரக்கத்தடனும் நடத்தப்பட வேண்டுமெனவும் அவர் விரும்புகிறார்.

தகப்பனில்லாதவர்களும், விதைவைகளும் அநேகமாக ஏழைகளாவார். அந்நியர் தேசத்தை சுதந்தரிப்பதில்லை. அவர்களுக்கு உதவி தேவைப்படும். தேவன் இவர்கள் யாவரையும் நேசிக்கிறார். இஸ்ரவேல் ஜனங்களும் அவர்களை நேசிக்க வேண்டும் என தேவன் விரும்புகிறார்.

தேவனை சேவித்து அவரைத் துதியுங்கள்

வாசியுங்கள்: உபாகமம் 10:20–22

இப்பகுதி எங்கே ஆரம்பித்ததோ அங்கே முடிவடைகின்றது – பயத்துடன் தேவனை சேவியுங்கள். தேவன் இஸ்ரவேல் ஜனங்களை எகிப்திலிருந்து மீட்டார். எனவே தேவ ஜனங்கள் அவரை துதிக்க வேண்டும்.

பிரயோகம்: தேவன் கேட்கும் காரியங்களை எவ்வளவு சிறப்பாக நீங்கள் செய்கிறீர்கள்? நீங்கள் எப்போதும் தேவனுக்கு முதலிடம் கொடுக்கிறீர்களா? 12-13 வசனங்களில் உள்ள 5 முக்கிய விடயங்களை நினைவுபடுத்துங்கள். தேவையுள்ளவர்களை நேசிக்கிறீர்களா?

இவ்வாக்கியங்களில் உள்ள விடயங்கள் செய்வதற்கு கடினமானவை. அவர் விரும்புவதை எப்படி செய்ய முடியும்? இயேசுவானவர் தமது ஆவியானவரை தந்து எமது இருதயங்களை மாற்ற உதவுகின்றார்.

ஜெபியுங்கள்: அவர் விரும்புவதை செய்வதற்கு தேவனிடமே உதவி கேளுங்கள். சகல விசுவாசிகளுக்கும் உதவி செய்யுங்கள். அவர் தமது ஆவியானவரை தருவதற்காக தேவனுக்கு நன்றி கூறுங்கள்.

21 தேவன் கூறும் வழிமுறையில் ஆராதியுங்கள்

பின்னணி

வாக்களிக்கப்பட்ட தேசத்தில் ஜனங்கள் வாழ்வதற்கு இஸ்ரவேலை ஆயத்தம் செய்கிறான் இப்போது வாழ்வின் பல பகுதிகளைக் குறித்து பல சட்டங்களை கொடுக்கிறான்.

வசனங்கள் 1–7 ஐ படிக்கவும்

2 அல்லது 3 தடவைகள் வாசியுங்கள். ஒவ்வொரு வசனத்தையும் வாசித்து உமது சொந்த மொழியில் விளக்கிக் கூறுங்கள்.

குறிப்புக்கள்

- உபாகமம் 12:3. "புனித கற்கள்" (புதிய தமிழ் வேதாகமம்) ஆண் தெய்வங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் விசேட கற்கள். மரத்தினாலான "அசேரா கம்பங்கள்" (புதிய தமிழ் வேதாகமம்) பெண் தெய்வங்களை பிரததிநிதித்துவபடுத்துபவை.
- உபாகமம் 12:5. "அவரது பெயரை இடுகின்ற" என்பதன் அர்த்தம் தேவன் அவர்கள் மத்தியில் வாழ்வார் என்பதாகும்.

ஆராய்ந்து பாருங்கள்

வசனங்கள் 2-4 கானானிய ஜனங்கள் அனேகமாக மலைகளிலும் பெரிய மரங்களின் கீழும் ஆராதனை செய்தார்கள். மலைகள் வானத்திற்கு அண்மித்தவை. பெரிய மரங்கள் வாழ்வுக்கும் செழுமைக்குமான அடையாளங்களாகும். கானானிய மக்கள் அவர்களது தெய்வங்களே மழையையும், பயிர்களையும், விலங்குகளையும், பிள்ளைகளையும் தருவதாக நம்பினார்கள். இவற்றை பெறுவதற்கு அவர்கள் தவறான பாலுறவினையும் விசேட கற்களையும் கம்பங்களையும் பயன்படுத்தினர். இஸ்ரவேல் உண்மையான தேவனை ஆராதிக்கும் போது அதே இடங்களையும் பொருட்களையும் பயன்படுத்தல் கூடாது. அவர்கள் அச்சோதனையிலிருந்து விலகி இவைகளை அழிக்க வேண்டும்.

- உமது சூழலில் என்னென்ன தவறானவற்றை மக்கள் வழிபடுகிறார்கள்? (உதாரணம் மந்திரவித்தைகள், வேறு தெய்வ சிலைகள்) நாம் அவற்றை அழிக்க முடியாது எவ்வாறு அவற்றிலிருந்து விலகியிருக்கலாம்?

வசனம் 5: இது முக்கியமான வசனமாகும். தேவன் முழு தேசத்திலும் ஓரிடத்தை தெரிவு செய்வார். இஸ்ரவேல் ஜனங்கள் அவ்விடத்தை தெரிவு செய்கிறதில்லை.

வசனங்கள் 6-7 ஜனங்கள் இவ்விடத்தில் சரியான பலிகளையும், காணிக்கைகளையும் (பாருங்கள் லேவியராகமம் 1-7) செலுத்த வேண்டும். "உண்டு" "மகிழுங்கள்" என்பதன் அர்த்தம் இஸ்ரவேல் ஜனங்கள் தேவனுக்கு நன்றி கூற அதிகமுண்டு என்பதாகும். தேவன் ஆசிர்வதித்து கொடுக்கிறார். ஏனைய தெய்வங்கள் அதைச் செய்வதில்லை.

- கிறிஸ்தவர்களுக்கு இது என்ன கூறுகின்றது?

நாம் ஒரு விசேடமான இடத்திற்கு செல்கிறதில்லை. உண்மையான ஆலயம் அவரது உயிர்த்தெழுந்த உடல் என இயேசு கூறுகின்றார். (யோவான் 2:21) எல்லா நாமங்களிலும் உயர்ந்தது இயேசுவின்

⬇ கற்றுக்கொள்ளுங்கள்: உபாகமம் 12:1–7

நாமம். கிறிஸ்தவர்கள் இயேசுவை எல்லா இடங்களிலும் ஆராதிக்க வேண்டும். ஓர் இடத்தில் மட்டுமல்ல இயேசு இருக்கும் இடத்தில் தான் தேவன் மக்களை சந்திக்கின்றார்.

⊕ **பிரதான கரு**
வேறு சமய ஜனங்களைப் போல் ஆராதிக்க வேண்டாம். தேவன் கூறும் வழி மூலம் ஆராதனை செய்யுங்கள்.

➡ கற்பித்தல்: உபாகமம் 12:1–7

ஆரம்பியுங்கள்: நாம் எப்படி ஆராதிப்பது என்பது குறித்து கிறிஸ்தவர்கள் கருத்து வேற்றுமையுள்ளவர்களாக உள்ளனர்.

- கிறிஸ்தவ ஆராதனையில் மிக முக்கியமான விடயங்கள் யாவை?

தேவ ஜனங்கள் எங்கே ஆராதிக்க கூடாது

வாசியுங்கள்: உபாகமம் 12:2–4
தேசத்தில் அந்நிய தெய்வ வழிப்பாட்டிற்காக பயன்படுத்தப்படும் காரியங்களை பற்றி கூறுங்கள். அத்துடன் இஸ்ரவேல் ஜனங்கள் அவற்றை எவ்விதம் அழிக்க வேண்டும் எனவும் கூறுங்கள்.

உமது சூழலில் வேறு தெய்வங்களை வழிபடப் பயன்படுத்தப்படும் தவறான ஆராதனை முறையை பற்றி பேசுங்கள். ஏனைய மதங்களில் வழிபடும் முறைகளை பயன்படுத்தி தேவனை ஆராதிக்கும் சோதனைக்குள் கிறிஸ்தவர்கள் விழக் கூடாது.

தேவ ஜனங்கள் எங்கே ஆராதிக்க வேண்டும்

வாசியுங்கள்: உபாகமம் 12:5
இஸ்ரவேல் ஜனங்கள் ஆராதிப்பதற்காக அவர்களுக்கு ஒரு இடத்தை தெரிவு செய்வதாக தேவன் கூறினார். மோசேயின் பின்னர் காலங்கள் சென்ற பின் தேவன் எருசலேமை தெரிவு செய்தார். ஆலயம் அங்கு கட்டப்பட்டது. ஆலயத்தின் மத்தியில் வாசம் பண்ணுவதை தெரிந்து கொண்டார். கிறிஸ்தவர்களுக்கு இன்று இது எதை

→ கற்பித்தல்: உபாகமம் 12:1–7

கூறுகின்றது?
இயேசுவின் உயிர்ப்பிக்கப்பட்ட சரீரமே உண்மையான ஆலயம் ஆகும். (யோவான் 2:21 ஐ வாசியுங்கள்) பழைய ஏற்பாட்டு ஆலய ஆராதனை இயேசுவை சுட்டிக் காட்டுகிறது. இயேசு வந்த பின் ஆலய ஆராதனை தேவைப்படவில்லை. இயேசு தேவனாக இப்பூமியில் ஜனங்கள் மத்தியில் வாழ்ந்தார். எல்லா கிறிஸ்தவர்களும் இயேசுவை ஆராதிக்க வேண்டும். எனவே கிறிஸ்தவர்கள் எந்த இடத்திலும் ஆராதிக்க முடியும். இயேசுவை ஆராதிக்காத மதங்கள் உண்மையானவை அல்ல.

தேவ ஜனங்கள் எப்படி ஆராதிக்க வேண்டும்

வாசியுங்கள்: உபாகமம் 12:6–7

தேவன் தெரிந்து இடத்தில் இஸ்ரவேலர் பலிகளையும் காணிக்கைகளையும் செலுத்த வேண்டும். சில பலிகள் பாவத்திற்கானவை. ஏனையவை தேவனக்கு நன்றி கூறுவதற்கானவை. தேவன் தெரிந்து கொண்ட இடத்திலே இஸ்ரவேல் ஜனங்கள் உண்டு மகிழ வேண்டும். தேவன் செய்தவற்றின் நிமித்தம் அங்கு மகிழ்ச்சி உண்டாகும். இந்த பலிகள் யாவும் இயேசுவை முன் சுட்டிக் காட்டுகிறது. இயேசுவே உண்மையான பலியாகும். கிறிஸ்தவர்கள் மிருக பலிகளை செலுத்துவதுமில்லை. இயேசுவே எங்கள் பலியாக உள்ளார்.

பிரயோகியுங்கள்: இவ்வேத பகுதியில் கிறிஸ்தவர்களுக்காக நாம் காண்பவை.

- ஆராதனையானது இயேசுவினாலேயே கூடுமானதொன்றாக ஆக்கப்பட்டுள்ளது.
- சிலுவையில் இயேசுவின் பலிக்கூடாகவே மட்டுமே நாம் தேவனிடம் சேருகிறோம்.
- ஏனைய சமயங்களில் பயன்படுத்தப்படும் வழி முறைகளோடும் விக்கிரங்களோடும் நாம் ஆராதிப்பதில்லை.
- தேவன் நமக்கு இயேசுவுக்கூடாக செய்ததின் நிமித்தம் ஆராதனையில் எமக்கு சந்தோஷம் உண்டு.
- நாம் தனிநபர்களாக மட்டுமல்ல தேவ ஜனங்களாக ஒன்றிணைந்து ஆராதிக்கிறோம்.

ஆராதனைக்காக தேவ ஜனங்களை சந்திக்கும் போது இவை பற்றி நீங்கள் சிந்தித்ததுண்டா? நீங்கள் ஆராதிப்பது இயேசுவையா?

ஜெபியுங்கள்: இயேசுவை மகிழ்ச்சியோடும் தேவ ஜனங்களோடும் இணைந்தும் ஆராதிக்க உதவும்படி தேவனிடம் கேளுங்கள்.

கற்றுக்கொள்ளுங்கள்: உபாகமம் 13:1–11

22 தேவனிடமிருந்து உங்களை தூரமாக்க எவருக்கும் இடமளிக்க வேண்டாம்

பின்னணி
இஸ்ரவேல் ஜனங்கள் வாக்களிக்கப்பட்ட தேசத்திலே வாழ்வதற்கு ஆயத்தம் செய்ய மோசே உதவி செய்கிறான்.

வசனங்கள் 1–11 ஐ படிக்கவும்
2 அல்லது 3 தடவைகள் வாசிக்கவும். ஒவ்வொரு வசனத்தையும் வாசித்து உமது சொந்த மொழி நடையில் விளங்கிக் கொள்ளவும்.

குறிப்புக்கள்
- **உபாகமம்** 13:1-3. சில போலித் தீர்க்கதரிசிகளுக்கு அற்புதங்களை செய்வதற்கான வல்லமையுண்டு. சிலர் கனவுகளைக் கூறுவார்கள்.
- **உபாகமம்** 13:5. "தீமையை விலக்குதல்" என்பது தீமையின் வேரை ஜனங்கள் மத்தியில் இருந்து அகற்றுவதாகும்.
- **உபாகமம்** 13:6. "வசீகரித்தல்" என்பதன் அர்த்தம் சோதனைக்குட்படுத்தல் அல்லது கவர்தல் என்பதாகும்.

ஆராய்ந்து பாருங்கள்
- யாராவது ஒருவரால் அதிசயம் ஒன்றை செய்யமுடியுமாயின் அது தேவனிடமிருந்து வருகிறது என அர்த்தமா? அற்புதமானது வியாதி, மரணம் போன்ற தீமையானவையாக இருந்தால் அவை தேவனிடமிருந்து வருகிறதில்லை. ஆனால் நன்மையான அதிசயம் என்றால் எப்படிப்பட்டது?

வசனங்கள் 1-5. போலித் தீர்க்கதரிசி ஒருவரால் அற்புதம் ஒன்றை செய்ய முடியும். இது தேவனுடைய வல்லமை என ஜனங்கள் எண்ணுவர். ஆனால் போலித்தீர்க்கதரிசியானவன் ஏனைய தேவர்களை வழிபடத்தக்கதாக ஜனங்களை வழிநடத்துவான். ஜனங்கள் குழப்பமடைவார்கள். முக்கிய விடயம் என்னவென்றால் தீர்க்கதரிசியானவன் எந்த தேவனை பின்பற்றுகிறான் என்பதே முக்கிய விடயமென மோசே கூறுகிறான். போலித்தீர்க்கதரிசியை மக்கள் மரணத்திற்குட்படுத்த வேண்டும்.

வசனங்கள் 6-11. வேறு தெய்வங்களை வழிபடும் படியாக உங்கள் குடும்ப அங்கத்தினர் உங்களை அழைத்தால் என்ன செய்வது? அன்பு காட்டும் குடும்ப அங்கத்தினரால் ஜனங்கள் அநேக நேரத்தில் அழுத்தத்திற்கு உட்படுகிறார்கள். ஆனால் குடும்ப அங்கத்தினர் வேறு தெய்வங்களை வழிபடும் படி வழிநடத்துவாரானால் அவர்களால் அவர் மரணத்திற்கு உட்படுத்தப்பட வேண்டும். பாவமானது பரவாமல் நிறுத்தப்படுவதற்காக மரண தண்டனை நடைமுறைப்படுத்தப்படுகின்றது. ஏனைய ஜனங்கள் இந்த தண்டனையை கேள்வியுற்று அவர்கள் இந்த பாவத்தை செய்யாதவாறு எச்சரிக்கப்பட்டார்கள். இஸ்ரவேல் ஜனங்கள் கட்டாயமாக ஒரு தூய மற்றும் பரிசுத்த ஜாதியாக வாழ வேண்டும். மோசமான பாவத்திற்கு கட்டாயம் தண்டனையளிக்கப்பட வேண்டும்.

⬇ கற்றுக்கொள்ளுங்கள்: உபாகமம் 13:1–11

① **பிரயோகியுங்கள்:** எமது நாடுகளில் போலித்தீர்க்கதரிசிகளை கிறிஸ்தவர்கள் மரண தண்டனைக்குட்படுத்துதல் கூடாததாகும். **ஆனால் நாம் அவர்களுக்கு செவிமடுக்க கூடாது.** அவர்களது படிப்பினையை ஏற்றுக் கொள்ள கூடாது. அவர்கள் ஒரு அற்புதத்தை செய்தாலோ அல்லது கனவொன்றை கூறினாலோ வேறு தெய்வங்களை நாம் பின்பற்றக் கூடாது. நாம் அந்த நபரை மரணத்திற்குட்படுத்துவதில்லை. ஆனால் அவர்கள் சபையில் அங்கத்தினராக இருக்க கூடாது. அவர்களின் தவறான போதனைகள் மற்றவர்கள் மத்தியில் பரவுதல் கூடாது.

⊕ **பிரதான கரு**
தேவ ஜனங்கள் தம்மை தேவனிடமிருந்து தூரமாக வழிநடத்துபவர்களை புறந்தள்ளி விட வேண்டும்.

➡ கற்பித்தல்: உபாகமம் 13:1–11

ஆரம்பியுங்கள்

- ஒரு நபர் ஓர் அற்புதத்தை செய்தால் தேவன் அந்த நபரைக் குறித்து மகிழ்ச்சியடைவார் என அர்த்தம் கொள்ளலாமா?

போலித்தீர்க்கதரிசிகளைப் பின்பற்ற வேண்டாம்

வாசியுங்கள்: உபாகமம் 13:1–5
போலித்தீர்க்கதரிசிகள் அற்புதங்களை செய்யக் கூடும். கனவுகளை காணக்கூடும். முக்கிய விடயம் என்னவெனில் ஒவ்வொரு தீர்க்கதரிசியும் அல்லது பிரசங்கியும் எதைக் கற்பிக்கின்றார் என்பதை கவனிக்க வேண்டும். அவர்கள் உண்மையை கற்பிப்பார்களா?

எடுத்துக்காட்டு: ஒரு பிரசங்கியார் ஒரு கிராமத்துக்கு வந்து சில அற்புதங்களை செய்தார். இயேசுவின் நாமத்தில் பேசினார். தான் மீண்டும் வந்திருக்கும் இயேசு என கூறினார். அவர் செய்த அற்புதங்கள் நிமித்தமாக பலர் அவரை பின்தொடர்ந்தார்கள். ஆனால் அவர் போலியானவர். தேவ நாமத்தை பயன்படுத்தினால் பிரசங்கியார் தேவனிடமிருந்து வருகிறார் என அர்த்தப்பட முடியாது.

ஏனைய தேவர்களிடம் வழிநடத்தும் குடும்ப அங்கத்தினரைப் பின்பற்ற வேண்டாம்

வாசியுங்கள்: உபாகமம் 13:6–11
நாம் நேசிக்கும் ஒருவர் வேறு தெய்வங்களை வழிபடும் படி

➔ கற்பித்தல்: உபாகமம் 13:1–11

விரும்பினால் அது கடினமானது. நாம் அவரை நேசிப்பதனால் நாம் அவருடன் இணைந்து சம்மதிக்க விருமம்புகிறோம்.

தேவ ஜனங்கள் கட்டாயமாக தேவனை முழு இருதயத்தோடு நேசிக்க வேண்டும். நண்பரோ அல்லது குடும்ப அங்கத்தினரோ வேறு தேவர்களை பின்பற்றுவதற்கு வழிகாட்ட முயற்சி செய்தால் நாம் அவர்களுக்கு செவிமடுத்தல் கூடாது.

 # எடுத்துக்காட்டு: அற்புதங்கள் செய்கின்ற புதிய பிரசங்கி ஒருவரை தான் கேள்வியுற்றதாக ஒரு மனைவி தன் கணவரிடம் கூறுகின்றாள். இந்த தீர்க்கதரிசி கூறுவதை கேட்க வரும் படியாக வற்புறுத்துகிறாள். கணவனோ வர மறுக்கிறான். ஆனால் மனைவியோ தொடர்ந்து கணவனை கேட்கிறாள். அவன் தனது மனைவியை நேசிப்பதனால் அவன் சம்மதித்து அவளுடன் செல்கிறான். அவன் தவறான வழியில் நடத்தப்படுகிறான்.

போலிப்போதகர்களை கிறிஸ்தவர்கள் இன்று மரணத்தக்குட்படுத்தக் கூடாது. அவர்களை நாம் சபைக்கு வெளியே அனுப்ப வேண்டும். தேவ ஜனங்கள் மத்தியில் அவர்களுக்க இடமில்லை. அநேக ஜனங்களால் போலிப் போதகர்கள் அன்பு செய்யப்படலாம். சில வேளைகளில் நண்பர்களாலும் குடும்ப அங்கத்தினராலும் கூட. ஆனால் அவர்கள் ஆபத்தானவர்கள். எது தவறு எது சரி என்று அவசியம் தேவ ஜனங்கள் அறிந்திருக்க வேண்டும்.

- ஜனங்கள் பேசும் வார்த்தைகளை பரிசோதித்து பார்த்தீர்களா?
- தேவனுடைய வார்த்தையுடன் உங்கள் பிரசங்கிகளின் வார்த்தைகளை பரிசோதித்து பார்த்தீர்களா?

↑ ஜெபியுங்கள்: தேவனது சபையானது உறுதியானதாகவும் சத்தியத்தை அறியும் ஞானமுள்ளதாகவும் இருக்க உதவும் படி தேவனிடம் கேளுங்கள். போலிப் போதகர்களிடமிருந்து சபையை பாதுகாக்கும் படி தேவனிடம் கேளுங்கள்.

23 தேவ ஜனங்கள் பரிசுத்தமாயிருத்தல் அவசியமானதாகும்

பின்னணி

வாக்களிக்கப்பட்ட தேசத்திலே வாழ்வதற்காக இஸ்ரவேல் ஜனங்களை மோசே ஆயத்தப்படுத்தினான். ஏனைய ஜாதிகளிடமிருந்து வேறுபட்டவர்களாக தேவ ஜனங்கள் வாழ வேண்டும்.

வசனங்கள் 1–21 ஐ படிக்கவும்

2 அல்லது 3 தடவைகள் வாசியுங்கள்.

குறிப்புக்கள்

- உபாகமம் 14:2,21. "பரிசுத்தம்" என்பது தேவனுக்கு சொந்தமானது என அர்த்தமாகும். தேவனுடைய ஜனங்கள் உலகிற்கு சொந்தமானவர்கள் அல்ல.
- உபாகமம் 14:17. "அசுத்தமானவை" மிருகம் அசுத்தமானது அல்ல. ஆனால் அவரது ஜனங்கள் அதை உண்ணக் கூடாது எனக் கூறுகிறார்.

ஆராய்ந்து பாருங்கள்

வசனங்கள் 1-2, 21. இஸ்ரவேல் ஜனங்கள் பரிசுத்தமானவர்கள். அவர்கள் தேவனின் பிள்ளைகள். தேவன் விரும்புகின்ற வண்ணம் அவர்கள் வாழ வேண்டும். ஒருவர் மரிக்கின்ற போது சிலர் தமது துக்கத்தை காட்ட தம் உடலை வெட்டிக்கொள்வார்கள். அவ் வேளையில் சில அந்நிய மதத்தினர் வெள்ளாட்டுக் குட்டியை அதன் பாலில் சமைத்து மந்திர கிரியையாக அதைச் செய்வார்கள். தேவ ஜனங்கள் இவற்றை செய்யக் கூடாது.

வசனங்கள் 3-8. மாடு ஏன் சுத்தமானது ஆனால் பன்றி அசுத்தமானது? ஏன் ஏனைய ஜனங்களைத் தெரிந்தெடுக்காமல் தேவன் இஸ்ரவேல் ஜனங்களைத் தெரிந்து கொண்டார். (வசனம் 2) எமக்கு தெரியாது ஆனால் தேவன் இவ்விதம் கூறினார். சில மிருகங்கள் சுத்தமானவை. இஸ்ரவேல் ஜனங்களைப் போல். ஏனைய ஜாதிகளைப் போல ஏனைய மிருகங்கள் அசுத்தமானவை. இஸ்ரவேல் ஜனங்கள் தேவனுக்கு சொந்தமானவர்கள். எனவே அசுத்தமான மிருகங்களை அவர்கள் உண்ணக் கூடாது.

வசனங்கள் 9-20. சில நீர் வாழ் விலங்குகளான இறால், ஓடுள்ள மீன் வகை சில பறவைகள், சில பூச்சிகள் ஆகியன அசுத்தமானவை.

கிறிஸ்தவர்கள் இந்த சட்டங்களை கடைபிடிக்க வேண்டியதில்லை. எல்லா உணவும் சுத்தமானவை என இயேசு கூறுகின்றார். (மாற்கு 7:19) தேவனிடமிருந்து பேதுருவுக்கு கிடைத்த தரிசனத்திலும் எல்லா உணவும் சுத்தமானது என கூறப்பட்டது. (அப் 10:9-15) இந்த மாற்றத்திற்கான காரணம் இயேசுவே. நற்செய்தியானது யூதர்கள், புறவினத்தார் ஆகிய அனைவருக்குமானது. ஆனால் தேவ ஜனங்கள் அவிசுவாசிகளிடமிருந்து வேறுபட்டவர்களாக காணப்படல் வேண்டும். சிலர் பாவமென எண்ணுகின்ற உணவு வகைகளை கிறிஸ்தவர்கள் உண்ணாதபடி கவனமாயிருத்தல் வேண்டும். (1கொரி 8:4-13)

- உமது சூழலில் உணவைப்பற்றியதான தவறான விளக்கங்கள் உண்டா? பழைய ஏற்பாட்டு விதிகளை இன்னும் சிலர்

⬇ கற்றுக்கொள்ளுங்கள்: உபாகமம் 14:1–21

பின்பற்றுகிறார்களா? கிறிஸ்துவுக்குள் அவர்கள் விடுதலையடைய எவ்விதம் உம்மால் உதவி செய்ய முடியும்?

⊕ **பிரதான கரு**

தேவ ஜனங்கள் கட்டாயமாக அவிசுவாசிகளிடமிருந்து வேறுபட்டவர்களாக இருத்தல் வேண்டும்.

➡ கற்பித்தல்: உபாகமம் 14:1–21

ஆரம்பியுங்கள்

- வேறொரு மதத்தின் மதம் சார்ந்த உணவுக்கு ஒருவர் உம்மை அழைத்தால் நீர் என்ன செய்வீர்? இன்னுமோர் கேள்வி - பன்றி இறைச்சியை உண்ண வேண்டாம் என பழைய ஏற்பாடு கூறுகின்றது. நீர் இதற்கு கீழ்படிய வேண்டுமா?

உபாகமம் 14ல் உணவு தொடர்பான விடயங்கள் அநேக ஜனங்களுக்கு விசித்திரமானவையாகும். அவை எமக்கு எதைக் காட்டுகின்றது?

தேவ ஜனங்களாகிய இஸ்ரவேலர் சுத்தமான உணவை மட்டும் உண்ணுதல் வேண்டும்

வாசியுங்கள்: உபாகமம் 14:3–20

இஸ்ரவேல் ஜனங்கள் கட்டாயமாக சுத்தமான உணவையே உண்ண வேண்டும். சுத்த உணவை தீர்மானித்தது தேவனே. விசேடமாக நன்மையானவையும் சுகாதாரமுள்ளவையும் என அர்த்தம் கொள்ளத் தேவையில்லை. அவரது ஜனங்கள் இந்த உணவை உண்ட போது அவர் மகிழ்ச்சியடைந்தார் என்பது தான் அர்த்தம். சில உணவுகள் சுத்தமானவை. ஆடு, மீன், கோழி போன்றவை. சில அசுத்தமானவை பன்றி, இறால் மற்றும் கழுகு போன்றவை.

- இச் சட்டங்களுக்கான காரணங்கள் யாவை?

➔ கற்பித்தல்: உபாகமம் 14:1–21

நீங்கள் பரிசுத்தமானவர்கள்

வாசியுங்கள்: உபாகமம் 14:1–2, 21

தேவ ஜனங்கள் பரிசுத்தமானவர்கள் என்பதை விளக்குங்கள். எனவே ஏனைய ஜாதிகளை விட அவர்கள் வேறானவர்களாக காணப்படல் வேண்டும். ஏன் சில விலங்குகளை தவிர்த்து சிலவற்றை தேவன் தெரிந்தெடுத்தார் என்பது எமக்கு தெரியாது. தேவனுக்கு தெரிந்து கொள்வதற்கான உரிமை இருக்கிறது. அந்த சமயத்தில் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட ஜனங்கள் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட உணவையே உண்ண வேண்டும். இஸ்ரவேல் ஜனங்கள் வேறானவர்கள் என்பதை இது காட்டியது.

வேறு மத ஜனங்களைப் போல் இருக்க வேண்டாம்

வாசியுங்கள்: உபாகமம் 14:1, 21

சில அந்நிய மதத்தவர் இறந்த போது சிலர் தம்முடலை வெட்டிக் கொண்டார்கள். சிலர் (மந்திரவித்தையாக) வெள்ளாட்டுக்குட்டிகளை அதின் பாலில் சமைத்தார்கள். இஸ்ரவேல் ஜனங்கள் வேறுபட்டவர்களாக இருத்தல் வேண்டும். அந்நிய மதத்தவர்களிலிருந்து வேறுபட்டவர்களாக உணவருந்தி வாழ வேண்டும்.

பிரயோகியுங்கள்: கிறிஸ்தவர்கள் எந்த உணவையும் உண்ண முடியும். எல்லா உணவும் சுத்தமானவை என இயேசு கூறுகின்றார். (மாற்கு 7:19) எல்லா உணவும் சுத்தமானவை என காட்ட பேதுருவுக்கும் ஒரு தரிசனம் கிடைத்தது. இயேசுவின் நற்செய்தி சகல ஜனங்களுக்குமானது. உணவை உண்பதற்கான சுதந்திரத்தை தரும் இயேசுவுக்காக தேவனுக்கு நன்றி கூறுங்கள்.

உபாகமம் 14ல் உள்ள சட்டத்திற்கான காரணம் மிகவும் முக்கியமானது. தேவ ஜனங்கள் அவிசுவாசிகளிடமிருந்து வேறுபட்டவாகளாக இருத்தல் வேண்டும். பவுல் கொரிந்தியருக்கு கூறும் போது அவர்கள் விக்கிரகத்திற்கு படைக்கப்பட்ட உணவை உண்ணலாம். ஆனால் பாவம் என்று கருதும் இன்னுமோர் கிறிஸ்தவனை சோதனைக்குள்ளாக்குமாயின் அதை தவிர்க்கும் படி கூறினார். உண்பதற்கும் உண்ணாமல் இருப்பதற்கும் கிறிஸ்தவனுக்கு சுதந்திரம் உண்டு. ஆனால் நாம் மற்றவர்களுக்கு அன்பு செய்து உதவுதல் வேண்டும். கிறிஸ்தவமல்லாத வேறொரு சமயசார்புள்ள விருந்துக்கு உம்மை அழைக்கும் போது கவனமாக சிந்தியுங்கள். நீங்கள் உட்கொண்டால் நீங்கள் வேறு சமயத்தை ஏற்றுக் கொண்டுள்ளீர்கள் என மற்றவர்கள் எண்ணுவார்கள்.

ஜெபியுங்கள்: உணவில் கலந்து கொள்ளாமல் இருப்பதற்கு எந்த வேளை சிறந்தது என்பதை அறிந்து கொள்ளும் ஞானத்திற்காக தேவனிடம் கேளுங்கள். ஏனைய கிறிஸ்தவர்களை பாவத்திற்கு தூண்டாதபடி அவர்களை அன்பு செய்ய தேவனிடம் உதவி கேளுங்கள்.

24 கிறிஸ்தவர்கள் பத்தில் ஒன்று கொடுக்க வேண்டுமா?

பின்னணி
வாக்களிக்கப்பட்ட தேசத்தில் எப்படி வாழ வேண்டும் என்பதற்கான சட்டங்களை இஸ்ரவேல் ஜனங்களுக்கு மோசே கொடுக்கிறான். தேவனையும் மற்ற ஜனங்களையும் எப்படி அன்பு செய்வது என்பதை இச்சட்டங்கள் காட்டுகின்றன.

வசனங்கள் 22–29 ஐ படிக்கவும்
ஒவ்வொரு வசனத்தையும் வாசித்து உமது சொந்த மொழி நடையில் விளங்கிக் கொள்ளுங்கள்.

குறிப்புக்கள்
- **உபாகமம்** 14:23. "தசமபாகம்" என்பதன் அர்த்தம் பத்தில் ஒன்றாகும்.
- **உபாகமம்** 14:23. "பயம்" என்பதன் அர்த்தம் கனப்படுத்தல் ஆகும்.
- **உபாகமம்** 14:27. "பங்கு அல்லது சுதந்திரம்" லேவி கோத்திரத்திற்கு பங்கு இல்லை.

ஆராய்ந்து பாருங்கள்
- தசமபாகம் கொடுப்பது எவ்விதம் ஜனத்திற்கு தேவ பயத்தை கொடுக்கிறது?

வசனம் 23. நாம் எமது தானியத்தையும் பணத்தையும் சேமித்து செல்வந்தராவதற்கும் கஷ்டமான காலங்களில் போதியளவு வைத்திருக்கவும் முயற்சி செய்யலாம். அவ்வாறு செய்யும் போது நாம் எம்மிலே நம்பிக்கை கொள்கிறோம். தசமபாகத்தை கொடுக்கும் போது தேவ ஜனங்களுக்கு குறைவுபடும். ஆனால் அவர்கள் தேவனுக்கு முதலிடம் கொடுத்து அவரை கனம் பண்ணுவதற்கு கற்றுக் கொள்ளுகிறார்கள்.

வசனங்கள் 24-26. உபாகமம் 25ல் பலி செலுத்தும் இடமே ஆராதனைக்கான இடமாகக் கூறப்படுகின்றது. அநேக ஜனங்கள் பலி செலுத்துமிடத்திலிருந்து தூரமாக வாழக் கூடும். எல்லாத் தானியங்களையும் மிருகங்களையும் எடுத்துச் செல்வது கடினமானது. எனவே இஸ்ரவேல் ஜனங்கள் தமது தசமபாகத்தை விற்று பணத்தை அங்கு எடுத்துச் செல்கையில் ஆகாரத்தை வாங்கி பலியிடுவார்கள்.

வசனம் 27. லேவி கோத்திரத்தார் ஆசாரியார்களாவர். அவர்களுக்கு நிலமோ பயிர்களோ விலங்குகளோ இல்லை. லேவியர்கள் பலியிடுவோரோடு சேர்ந்து அவர்களுடன் உணவருந்துவார்கள்.

வசனங்கள் 28-29. ஒவ்வொரு 3ம் வருடத்திலும் தசமபாகம் ஏழைகளுக்கு கொடுக்கப்படுகிறது. ஏழைகளுக்கு நிலங்கள் சொந்தமாக இல்லை. ஏழைகளானோர் லேவியர்கள், அந்நியர்கள், தகப்பனில்லாதோர் மற்றும் விதைவைகளாவர். தசமபாகமானது ஏழைகளை பராமரிக்க உதவியது.

கிறிஸ்தவர்களுக்கு இந்த சட்டம் என்ன கூறுகின்றது? புதிய ஏற்பாடு தசமபாகம் கொடுக்கும் சட்டம் எதையும் தருவதில்லை. ஆனால் தேவனுக்கு நன்றி கூறவும் அவருக்குப் பயப்படுதலையும் கற்று கொள்ளவும் கிறிஸ்தவ ஊழியர்களுக்கும் ஏழைகளுக்கு சந்தோஷமாகவும் தாராளமாகவும் கொடுக்கும் படி புதிய

⬇ கற்றுக்கொள்ளுங்கள்: உபாகமம் 14:22–29

ஏற்பாடு உற்சாக மூட்டுகிறது. இதன் அர்த்தம் என்னவென்றால் சில ஜனங்கள் பத்தில் ஒன்றை விட அதிகமாக கொடுக்கிறார்கள்.

- உமது சபையிலுள்ள ஜனங்கள் தசமபாகத்தை கொடுக்கிறார்களா? அவர்கள் கொடுப்பதற்கான காரணங்கள் யாவை?

⊕ **பிரதான கரு**
தேவனுக்கு தாரளமாக கொடுங்கள்

→ கற்பித்தல்: உபாகமம் 14:22–29

⊙ **ஆரம்பியுங்கள்:**
உற்சாகமாகக் கொடுப்பவர்களை தேவன் நேசிக்கிறார்.

- நீங்கள் உற்சாகமாக கொடுக்கிறீகளா?

தேவனுக்கு கொடுங்கள்

⊙ **வாசியுங்கள்: உபாகமம் 14:22–27**
தேவன் அவர்களது ஜனங்களுக்கு எல்லாவற்றையும் கொடுத்துள்ளார். அவர்களின் பயிர்கள் வளருகின்ற போதும் விலங்குகள் பெருகுகின்ற போதும் அவர்கள் அவரை நினைக்க வேண்டும். எல்லா இஸ்ரவேல் ஜனங்களும் ஒவ்வொன்றிலும் பத்தில் ஒன்றை ஒவ்வொரு வருடமும் கொடுக்க வேண்டும். பலியை செலுத்துவதற்காக தேவன் தெரிந்து கொண்ட இடத்திற்கு அவர்கள் செல்ல வேண்டும். ஜனங்கள் படைக்கப்பட்டவற்றை உண்ணலாம். ஆனால் அவர்கள் நிலமற்ற லேவிய ஆசாரியர்களையும் இணைத்துக் கொள்ள வேண்டும்.

மற்றவர்களுக்கு கொடுங்கள்

⊙ **வாசியுங்கள்: உபாகமம் 14:28–29**
3ம் வருடத்திலே தசமபாகம் ஏழைகளுக்கு கொடுக்கப்படுகிறது. அவர்கள் ஏழைகள், லேவியர்கள், அந்நியர்கள், தகப்பனில்லாதோர் மற்றும் விதைவைகளாவர். இந்த ஜனங்களுக்கு நிலங்கள் சொந்தமாக இல்லை. கொடுப்பதற்கு பயிர்களோ மிருகங்களோ இல்லை.

→ கற்பித்தல்: உபாகமம் 14:22–29

மற்றவர்களிடமிருந்து அவர்களுக்கு உதவி தேவை. அதிகமாக வைத்திருக்கும் தேவ ஜனங்கள் குறைந்தவர்களுக்கு கொடுக்கும் படி தேவன் விரும்புகிறார்.

ஏன் கொடுக்க வேண்டும்? 4 காரியங்கள் உண்டு.

1. **தேவன் தரும் ஆசீர்வாதங்களுக்காக தேவ ஜனங்கள் தேவனக்கு நன்றி கூற வேண்டும் என அவர் விரும்புகிறார்.** (வசனம் 26)
2. **கர்த்தரை அவரது ஜனங்கள் கனம் பண்ண வேண்டுமென தேவன் விரும்புகிறார்.** (வசனம் 23) தசமபாகம் எவ்விதம் தேவனை நம்பவும் பயப்படவும் உதவுகிறது என விளக்கி கூறுங்கள்.
3. **தேவன் தமது ஜனங்கள் ஆசாரியர்களுக்கு கொடுக்க வேண்டுமென விரும்புகிறார்.** ஆசாரியர்கள் ஜனங்களுக்கு ஊழியம் செய்து நியாயப்பிரமாணத்தை போதித்து பலி செலுத்தலை ஒழுங்கமைத்தனர்.
4. **அவரது ஜனங்கள் வறிய இஸ்ரவேலரை பராமரிக்க வேண்டுமென தேவன் விரும்புகிறார்.**

ⓘ **பிரயோகம்:** தாம் விளைவிக்கின்றவைகளிலும் சம்பாதிக்கின்றவைகளிலும் பத்தில் ஒன்று கொடுப்பதைக் குறித்து கிறிஸ்தவர்களிடையே கருத்து வேறுபாடு உண்டு. ஒவ்வொன்றிலும் பத்தில் ஒன்று கொடுக்கும் படியாக புதிய ஏற்பாடு கிறிஸ்தவர்களுக்கு கூறவில்லை. ஆனால் புதிய ஏற்பாடு இச் சட்டத்தை தடுப்பதும் இல்லை.

இந்த சட்டத்திற்கான 4 காரணங்கள் இன்றும் காணப்படுகின்றது. 1. தேவனுக்கு நன்றி செல்ல கிறிஸ்தவர்கள் கொடுக்க வேண்டும். **2.** கிறிஸ்தவர்கள் தேவனுக்கு பயப்பட வேண்டும். **3.** கிறிஸ்தவர்கள் கிறிஸ்தவ ஊழியங்களுக்காக கொடுக்க வேண்டும். **4.** கிறிஸ்தவர்கள் வறியோரை பராமரிக்க வேண்டும்.

பழைய ஏற்பாட்டு நியாயப்பிரமாணத்திற்கான காரணங்கள் கிறிஸ்தவர்களுக்கும் சமமானவையாகும்.

அநேக கிறிஸ்தவர்கள் பத்தில் ஒன்றை விட அதிகமாக கொடுக்க முடியும். சில கிறிஸ்தவர்களால் முடியாது. முக்கியமான விடயம் என்னவென்றால் நன்றியுள்ள இருதயத்துடன் எம்மால் முடிந்தளவு கொடுக்க வேண்டும். இந்த வேதப்பகுதியானது நாம் எவ்விதம் எமது முழு இருதயத்துடன் தேவனை அன்பு செய்ய வேண்டுமெனவும் கூறுகிறது. எம்மை நேசிப்பது போல எமது அயலாரையும் அன்பு செய்ய வேண்டுமெனவும் கூறுகிறது. நாம் அன்பு செய்தால் தாராள மனதுள்ளவர்களாக இருப்போம்.

↑ **ஜெபியுங்கள்:** தாராள மனதுள்ளவர்களாகவும் நன்றியுள்ளவர்களாகவும் மகிழ்ச்சியுடனும் இருக்க உதவும்படியாகவும் அவருக்கும் ஏழைகளுக்கும் அன்பு காட்ட உதவும்படியாகவும் தேவனிடம் கேளுங்கள்.

25 தேவையுள்ளோருக்கு தாராளமாகக் கொடுங்கள்

பின்னணி

வாக்களிக்கப்பட்ட தேசத்தில் இஸ்ரவேலர் வாழ்வதற்காக அவர்களை தயார்படுத்துகின்றான். தேவனிடமிருந்து வரும் நியாயப்பிரமாணங்களுக்கு கீழ்படியும் படி ஜனங்களை உற்சாகப்படுத்துகிறான்.

வசனங்கள் 1–18 ஐ படிக்கவும்

இப்பகுதியை 2~3 தடவைகள் வாசியுங்கள். ஒவ்வொரு வசனத்தையும் வாசித்து உமது சொந்த மொழி நடையில் விளங்கிக் கொள்ளுங்கள்.

குறிப்புக்கள்

- **உபாகமம் 15:7,10.** "இருதய கடினமுள்ள" "விசன இருதயம்" என்பதன் அர்த்தம் "விருப்பமற்றது" என்பதாகும்.
- **உபாகமம் 15:7,11.** "கைளை மூடுவது" என்பதன் அர்த்தம் சுயநலமாகும் "கையை திறத்தல" என்பதன் அர்த்தம் கொடுப்பதற்கான விருப்பம் ஆகும். தேவ ஜனங்கள் தாரா‌ள மனதுள்ளவர்களாக இருத்தல் வேண்டும்.

ஆராய்ந்து பாருங்கள்

இந்த சட்டங்கள் தேவையுள்ள இஸ்ரவேலரை பாதுகாக்கின்றது. முதலாவது சட்டம் (வசனங்கள் 1-11) கடன்களை நீக்கி விடுகிறது.

இரண்டாவது சட்டம் அடிமைகளைப் பற்றியது வசனங்கள் 1-6. இஸ்ரவேலன் ஒருவன் உன்னிடமிருந்து கடன் வாங்கியிருந்தால் 7ம் வருடத்திலே அக் கடன் நீக்கப்பட வேண்டும். ஜனங்கள் ஏழ்மைக்குள் போவதை தடுப்பதே இதற்கான காரணம் ஆகும் (வசனம் 4). இஸ்ரவேல் ஜனங்கள் பகிர்ந்து கொண்டால் தேவன் ஜனங்களை ஆசிர்வதிப்பார். ஒவ்வொருவருக்கும் போதுமானளவு கிடைக்கும்.

- *ஏன் இந்த சட்டம் கடைபிடிக்க கஷ்டமாக இருந்தது?*

வசனங்கள் 7-11. 7ம் வருடம் அண்மித்துள்ளது என்று எண்ணுங்கள். ஒரு இஸ்ரவேலன் கடன் வாங்க விரும்புகின்றான். ஆனால் நீங்கள் நினைக்கின்றீர்கள் எனது பணத்தை திரும்ப தருவதற்கு அவனுக்கு காலம் போதாது. "நான் பணத்தை கொடுக்க மாட்டேன்" என தேவனுடைய ஜனங்கள் சிந்திக்க கூடாது. அவர்கள் தாரளமாக கொடுக்க வேண்டும். பேராசை கூடாது.

வசனம் 4, உங்கள் மத்தியில் ஏழைகள் இருக்கக் கூடாது எனக் கூறுகிறது. வசனம் 11, ஏழைகள் எப்போதும் இருப்பார்கள் என கூறுகின்றது. நடைபெற வேண்டியதை வசனம் 4ல் கூறப்பட்டுள்ளது. ஆனால் ஜனங்களின் பேராசையினால் வசனம் 11ல் உள்ளதே உண்மையாக உள்ளது.

வசனங்கள் 12-18. இஸ்ரவேலன் ஒருவன் ஏழையாகவிருந்தால் அவன் ஒரு அடிமையாக வரலாம். அவனுடைய எஜமான் ஒரு இஸ்ரவேலனாக இருக்க வேண்டும். எஜமான் அவனுக்கு பராமரிப்பு வழங்க வேண்டும். 6 வருடங்களுக்கு பின்பு விடுவிக்கப்படலாம். எஜமான் அவனுக்கு அதிகளவு உணவை

⬇ கற்றுக்கொள்ளுங்கள்: உபாகமம் 15:1–18

வழங்க வேண்டும். கடன்களை நீக்க கிறிஸ்தவர்களுக்கு ஒரு குறிப்பிட்ட வருடம் இல்லை. ஆனால் அச்சட்டங்களுக்கு பின்னால் காரணங்கள் உண்டு. தேவையுள்ள கிறிஸ்தவர்களை நாம் பராமரிக்க வேண்டும். எங்களுக்கு தேவைக்கு அதிகமாகயிருப்பின் நாம் பகிர்ந்து கொள்ள வேண்டும். (அப்போஸ்தலர் 4:32) வேலையற்று இருக்கும் சக கிறிஸ்தவர்களுக்கு நாம் உதவுதல் வேண்டும்.

- உமது சூழலில் என்ன உதாரணங்களை உம்மால் தர முடியும்?

⊕ **பிரதான கரு**

தேவ ஜனங்கள் மத்தியில் தேவையுள்ளவர்கள் எவரும் இருத்தல் கூடாது.

→ கற்பித்தல்: உபாகமம் 15:1–18

▷ ஆரம்பியுங்கள்

விசேட தேவையுள்ள எமது சகோதர சகோரிகளுக்கு எவ்விதம் உதவ முடியும்? புராதன இஸ்ரவேலில் தேவ ஜனங்களிடம் ஏழைகளுக்கு உதவுவதற்கான சட்டங்கள் இருந்தன.

தேவையுள்ளோருக்கு கொடுப்பதற்கு தாராள மனதுடன் இருங்கள்

⌄ வாசியுங்கள்: உபாகமம் 15:1–11

கடனை நீக்குவது பற்றியதான சட்டங்களை பற்றி நீங்கள் கற்பிப்போருக்கு கூறுங்கள். தேவ ஜனங்கள் பல காரணங்களினால் வறுமையுற்றிருக்கலாம். அவர்கள் நோயுற்றிருக்கலாம். நல்ல விவசாயிகளாக இல்லாது இருக்கலாம். தேவன் அவரது ஜனங்களுக்கு போதியளவு கொடுப்பதாக வாக்குப்பண்ணியிருக்கிறார். ஆனால் அவர்கள் பகிர்ந்து கொள்ள வேண்டும்.

 # எடுத்துக்காட்டு: 9~10ம் வாக்கியங்களை பேராசைக்குரிய சிந்தனைக்கான எடுத்துக்காட்டாக பயன்படுத்துங்கள். தேவ ஜனங்கள் தாராள மனதுள்ளவர்களாகவும் கொடுப்பதற்கு தங்கள் கைகளைத் திறக்க வேண்டுமெனவும் இந்த சட்டம் கூறுகிறது.

! பிரயோகம்: கிறிஸ்தவர்கள் இந்த சட்டத்திற்கு எவ்விதம் கீழ்ப்படிய வேண்டும்? கிறிஸ்தவர்கள் தேவையுள்ள கிறிஸ்தவர்களை

➙ கற்பித்தல்: உபாகமம் 15:1–18

பராமரிக்க வேண்டும். தேவையான போது தாராள மனதுடன் கொடுத்தும், மற்றும் கடன் கொடுத்தும் உதவ வேண்டும். நாம் வாழும் இடத்திலும் ஏனைய நாடுகளிலும் உள்ள கிறிஸ்தவர்களுக்கு உதவ வேண்டும். உதாரணமாக:

- தேவையுள்ள ஒரு கிறிஸ்தவனுக்கு நீங்கள் கடன் கொடுக்கிறீர்கள். 6 வருடங்களுக்கு பிறகு அதை நீக்கி விடுகிறீர்கள்.
- ஒரு கிறிஸ்தவன் தனது முதலீட்டு வேலைக்காக கடனுதவியை கேட்கிறார். அவர் ஏழையல்ல என்பதனால் நீர் இல்லை என்று கூறுகின்றீர். இச் சூழ்நிலைக்கு இந்த சட்டம் பொருந்தாது.
- இன்னொரு நாட்டில் உள்ள ஏழைக் கிறிஸ்தவர்களுக்கு ஓர் சபை ஸ்தாபனத்தினூடாக பணம் கொடுக்கிறீர்.

ஏழைகளுக்கு வேலை கொடுப்பதில் தாராள மனதுடையவர்களாகவிருங்கள்

வாசியுங்கள்: உபாகமம் 15:12–18
இஸ்ரவேல் ஒருவன் ஏழையாய் இருப்பதனால் அவன் வேறு யாருக்கும் கீழ் வேலை செய்ய வேண்டும். அவன் சொந்தமாக அவன் பண்ணையை இயக்க முடியாதவனாக இருக்கலாம். ஆனால் அவன் தன்னை அடிமையாக விற்கலாம். எஜமான் அவனது அடிமையை பராமரித்து 6 வருடங்களின் பின் அவனை விடுவிக்க வேண்டும்.

பிரயோகியுங்கள்: ஏழ்மையிலும் வேலையற்று இருக்கும் கிறிஸ்தவர்களுக்கு உதவி செய்ய கிறிஸ்தவாகள் வழியை தேட வேண்டும். இது நல்லதும் தாராள மனதுடன் செய்ய வேண்டிய வேலையாகும். தொழில் தருனருக்கு இது அதிக செலவைத் தரலாம். சிந்திக்கக் கூடிய சில உதாரணங்கள்

- ஒரு சபையானது ஏழ்மையான சபை அங்கத்தினருக்கு வேலை கொடுக்கலாம்.
- ஒரு கிறிஸ்தவ முதலாளி தமது சக கிறிஸ்தவனை வேலைக்கு அமர்த்தலாம்.
- ஏனைய நாடுகளில் உள்ள ஏழைக் கிறிஸ்தவர்களுக்கு வேலை கொடுக்கும் கிறிஸ்தவ ஸ்தாபனங்களுக்கு கிறிஸ்தவர்கள் கொடுக்கலாம்.

தேவன் தமது ஜனங்களை ஆசீர்வதிக்கிறார். ஆனால் அவாகளுடைய ஜனங்கள் தாராள மனதுடையவர்களாக இருக்க வேண்டுமென எதிர்பார்க்கிறார். தேவன் எம்மைப் பொறுத்தவரை தாராள மனதுடையவராகவுள்ளார். எமக்குள்ளதெல்லாம் தேவனிடமிருந்து வருகிறது.

ஜெபியுங்கள்: உம்மை விட பெரிதான தேவைகளுடைய சகோதர, சகோதரிகளுக்கு கொடுக்கவும், கடன் கொடுக்கவும் உதவி செய்யும் படி தேவனிடம் கேளுங்கள்.

26 தேவன் செய்தவற்றை நினைவு கூர்ந்து கொண்டாடுங்கள்

பின்னணி
இஸ்ரவேல் ஜனங்கள் தேவனின் நியாயப்பிரமாணங்களுக்கு கீழ்ப்படியும் படி மோசே அவர்களை உற்சாகப்படுத்துகிறான்.

வசனங்கள் 1–17 ஐ படிக்கவும்

குறிப்புக்கள்
- **உபாகமம் 16:3.** "புளிப்புள்ள அப்பம்" புளிப்புள்ள நொதியத்தை போன்றதே. புளிக்காத அப்பம் சமைக்க இலகுவானது.
- **உபாகமம் 16:13.** "வழிபாட்டு கூடாரம்" அல்லது தற்காலிக தங்குமிடம் என்பவை கூடாரங்களைப் போன்றவை (பண்டிகை காலங்களில்) வனாந்தரத்திலே கூடாரங்களிலேயே வாழ்ந்ததை நினைவுபடுத்த ஜனங்கள் கூடாரங்களில் வாழ்ந்தார்கள்.

ஆராய்ந்து பாருங்கள்
ஒவ்வொரு வருடமும் இஸ்ரவேலருக்கு பண்டிகைகள் இருந்தன. 1. **பாஸ்கா** (யாத்திரகாமம் 12:1-28, லேவியராகமம் 23:4-8). 2. **வாரங்களின் பண்டிகை** (லேவியராகமம் 23:15-21). 3. **கூடாரப் பண்டிகை** (லேவியராகமம் 23:33-44).

- ஒவ்வொரு பண்டிகைகளிலும் ஜனங்கள் எதை நினைவு கூர வேண்டும்? அவர்கள் எதைக் கொண்டாடுகிறார்கள்?

வசனங்கள் 1-8. தேவ ஜனங்கள் எகிப்திலிருந்து விடுதலையாக்கப்பட்டதை நினைவு கூருதலே பாஸ்கா பண்டிகையாகும். ஜனங்கள் எகிப்திலிருந்து விரைவாக வெளியேறினதால் அவர்கள் புளியாத அப்பத்தை மட்டுமே இந்த பண்டிகையில் பயன்படுத்தினர்.

வசனங்கள் 9-12. தானியங்களின் அறுவடைக்கான நன்றி செலுத்தலே வாரங்களின் பண்டிகையாகும்.

தேவனின் ஆசிர்வாதங்களில் ஜனங்கள் மகிழ வேண்டும். சொந்த நிலமில்லாத ஏழை ஜனங்கள் இப்பண்டிகையின் போது உள்வாங்கப்படல் வேண்டும். எகிப்திலே அடிமைகளாயிருந்தார்கள் என்பதையும் நினைவு கூர வேண்டும்.

வசனங்கள் 13-15. அறுவடையின் முடிவிலே கொண்டாடப்படுவது கூடாரப் பண்டிகையாகும். சொந்த நிலமற்ற ஏழைகள் உள்ளடக்கப்பட வேண்டும். தேவன் கொடுத்த எல்லாவற்றையும் நினைவு கூர்ந்து ஜனங்கள் கொண்டாட வேண்டும்.

வசனங்கள் 16-17. மூன்று பண்டிகைகளும் தேவன் தெரிந்தெடுத்த ஸ்தானத்தில் நிகழ்ந்தன. இந்த பண்டிகைகள் கிறிஸ்தவர்களுக்கு என்ன சொல்கிறது?

1. **இயேசுவே எங்கள் பாஸ்கா ஆடாகும்.** (1 கொரிந்தியர் 5:7) கிறிஸ்தவர்கள் ஐக்கிய விருந்தில் அல்லது கர்த்தரின் பந்தியில் இயேசு நமக்காக மரித்ததை கொண்டாடுகிறார்கள்.
2. **வாரங்களின் பண்டிகையானது கிரேக்க மொழியில் "பெந்தகோஸ்தே" என அழைக்கப்படுகிறது.** தேவன் எமது இருதயங்களில்

➊ கற்றுக்கொள்ளுங்கள்: உபாகமம் 16:1–17

நியாயப்பிரமாணத்தை எழுத பரிசுத்த ஆவியானவரைத் தந்ததை கிறிஸ்தவர்கள் கொண்டாடுகிறார்கள்.

3. **கூடாரப் பண்டிகை** பற்றி யோவான் 7:37-39ல் கூறப்பட்டுள்ளது. பரிசுத்த ஆவியானவராகிய ஜீவ நீரூற்றை இயேசு தருகிறார். கிறிஸ்தவர்கள் இயேசுவையும் பரிசுத்த ஆவியானவரின் வரத்தையும் கொண்டாடுகிறார்கள்.

⊕ பிரதான கரு
தேவன் தமது ஜனங்களுக்கு செய்ததை தேவ ஜனங்கள் நினைத்து கொண்டாட வேண்டும்.

➜ கற்பித்தல்: உபாகமம் 16:1–17

⊘ ஆரம்பியுங்கள்
தேவனை நினைக்கவும் அவரில் அகமகிழவும் தேவ ஜனங்களுக்கு பண்டிகைகள் அவசியமானவை. பழைய ஏற்பாட்டில் தேவ ஜனங்களுக்கு முக்கிய பண்டிகைகள் இருந்தன.

பாஸ்கா பண்டிகை
⊘ வாசியுங்கள்: உபாகமம் 16:1–8
பாஸ்காவின் பின்னணியையும் எகிப்திலிருந்து ஜனங்கள் விடுதலையாக்கப்பட்டதையும் குறித்து நீங்கள் கற்பிப்போருக்கு கூறுங்கள். முக்கியமான குறிப்புக்கள்.

- **நினைவு கூருங்கள்** - தேவன் செய்ததை (வசனங்கள் 1, 3, 6)
- **அகமகிழுங்கள்** (வசனம் 1)

இந்த பண்டிகை கிறிஸ்தவர்களுக்கு என்ன கூறுகின்றது?
இயேசுவே எமது பாஸ்கா ஆடு. அவரது மரணம் பாவ அடிமைத்தனத்திலிருந்து எம்மை விடுவிக்கிறது. இஸ்ரவேல் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலையாகினதை விட இது முக்கியமானது. நாங்கள் இதை எப்போதும் நினைவு கூர்ந்து மகிழ வேண்டும்.

வாரங்களின் பண்டிகை
⊘ வாசியுங்கள்: உபாகமம் 16:9–12
இந்த பண்டிகையின் பின்னணியை கூறுங்கள். முக்கிய குறிப்புக்களாவன.

- **நினைவு கூருங்கள்:** எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்ததை

→ கற்பித்தல்: உபாகமம் 16:1–17

நினைவு கூரவேண்டும். (வசனம்12)

- **அகமகிழுங்கள்** (வசனங்கள் 10, 11)
- சகல ஜனங்களையும் **உள்வாங்குங்கள்** (வசனம் 11)

இந்தப் பண்டிகை கிறிஸ்தவர்களுக்கு என்ன கூறுகின்றது?
இப்பண்டிகை புதிய ஏற்பாட்டில் பெந்தகோஸ்தே என அழைக்கப்படுகிறது. பெந்தகோஸ்தே என்பது தேவன் சகல ஜனங்களுக்கும் பரிசுத்தாவியானவரை கொடுக்கின்ற வேளையாகும். பரிசுத்த ஆவியானவர் நியாயப்பிரமாணங்களை எங்கள் இருதயங்களில் எழுதுகிறார். நாம் தேவ ஆவியானவருக்கு நன்றி செலுத்தி ஆவியிலே நடக்கிறோம்.

கூடாரப் பண்டிகை

வாசியுங்கள்: உபாகமம் 16:13–15
இந்த பண்டிகையின் பின்னணி பற்றி கற்பியுங்கள். முக்கிய குறிப்புக்களாவன:

- **நினைவு கூறுங்கள்:** வனாந்திரத்திலே கூடாரங்களிலே வாழ்ந்ததை ஜனங்கள் நினைவு கூர்ந்தார்கள்.
- **அகமகிழுங்கள்** (வசனம் 14, 15)
- சகல ஜனங்களையும் **உள்வாங்குங்கள்** (வசனம் 14)

கிறிஸ்தவர்களுக்கு இப் பண்டிகை என்ன கூறுகிறது?
யோவான் 7ம் அதிகாரத்தில் இயேசு வாரங்களின் பண்டிகையை கொண்டாடும் போது ஜீவ நீரூற்றாகிய பரிசுத்த ஆவியானவரை வாக்களித்தார். (யோவான்7:37-39)
தேவன் வனாந்திரத்திலே தண்ணீரை கொடுத்தார். இயேசு ஜீவ நீரூற்றாகிய ஆவியானவரை தருகிறார்.

பிரயோகியுங்கள்: இயேசுவுக்குள் தேவன் செய்தவற்றை நினைத்து அதைக் கொண்டாட வேண்டும். கர்த்தருடைய பந்தி அல்லது ஐக்கிய விருந்தானது இயேசுவின் மரணத்தை நினைவு கூரும் பிரதான பண்டிகையாகும். இயேசுவுக்கு எமது இருதயங்களின் துதியோடும் நன்றியோடும் கிரமமாக இதை நாம் கொண்டாட வேண்டும். இஸ்ரவேல் ஜனங்கள் பண்டிகைக்கு நீண்ட பயணம் செய்ய வேண்டிருந்தது. கிறிஸ்தவர்களோ எங்கும் கொண்டாட முடியும்.

ஜெபியுங்கள்: இயேசுவுக்காகவும் அவரது சிலுவை மரணத்திற்காகவும் தேவனுக்கு நன்றி கூறுங்கள். அது எம்மை பாவத்திலிருந்து விடுவித்திருக்கிறது. சகல விசுவாசிகளிலும் வாழ்கிற அற்புத கொடையாகிய பரிசுத்த ஆவியானவருக்காக தேவனுக்கு நன்றி கூறுங்கள்.

கற்றுக்கொள்ளுங்கள்: உபாகமம் 17:14–20

27 தேவனுடைய அதிகாரத்தில் கீழிருங்கள்

பின்னணி

இஸ்ரவேல் ஜனங்கள் ஒரு ராஜாவை ஏற்படுத்த மோசே அவர்களை தயார் செய்கிறான். எப்படிப்பட்ட ஒரு இராஜாவை ஏற்படுத்த வேண்டும் என அவன் கூறுகிறான்.

வசனங்கள் 14–20 ஐ படிக்கவும்

இப்பகுதியை 2 அல்லது 3 தடவைகள் வாசியுங்கள்

குறிப்புக்கள்

- **உபாகமம்** 17:16. "அநேக குதிரைகள்" என்பதன் அர்த்தம் பலமுள்ள இராணுவமாகும். "திரும்பவும் எகிப்துக்கு போதல்" என்பதன் அர்த்தம் இன்னொரு நாட்டின் மேல் நம்பிக்கை கொள்வதாகும்.
- **உபாகமம்** 17:17. "பெருகப்பண்ணுதல்" என்பதன் அர்த்தம் அதிகளவு பெற்றுக் கொள்ளுதல் என்பதாகும்.
- **உபாகமம்** 17:18. இந்த நியாயப்பிரமாணத்தின் வார்த்தைகள் என்பது உபாகமப் புத்தகமாகும்.

ஆராய்ந்து பாருங்கள்

பின்னர் இஸ்ரவேல் ஜனங்கள் ஒரு இராஜாவைக் கேட்பார்கள் (1சாமுவேல் 8) அதற்கு முன்பதாக யோசுவாவும், நியாயாதிபதிகளான கிதியோன், சிம்சோன் போன்றவர்களும் ஜனங்களை வழிநடத்தினார்கள்.

ஒரு இராஜா எப்படிப்பட்டவனாக இருக்க வேண்டும்?

- தேவன் தெரிவு செய்கிற மனிதனாக இருக்க வேண்டும். (வசனம் 15)
- அந்நியனாக அல்ல, ஒரு இஸ்ரவேலனாக இருக்க வேண்டும். (வசனம் 15)
- பலத்திலோ அல்லது இராணுவத்திலோ நம்பிக்கை வைக்காதவனாக இருக்க வேண்டும். (வசனம் 16)
- தேவனை விட்டுப் பின்வாங்கிப் போகாத படி அநேக மனைவியரை வைத்திருக்காதவனாக இருக்க வேண்டும். (வசனம் 17)
- அதிக செல்வமுள்ளவனாக இருத்தல் கூடாது.
- தேவனுடைய நியாயப்பிரமாணங்களை எழுதவும் வாசிக்கவும் கூடியவனாக இருத்தல் வேண்டும். (வசனங்கள் 18-19)
- தேவனுக்கு பயந்து கனம் பண்ணி கீழ்ப்படிகிறவனாக இருக்க வேண்டும். (வசனம் 19)
- பெருமையில்லாதவனாக இருக்க வேண்டும். (வசனம் 20)

பலமான இராணுவம் அநேக மனைவியர் மற்றும் அதிக பணம் யாவும் சோதனை தருபவை. அவை இராஜாவை தேவனிடமிருந்து தூரமாக்கும். ஆகவே தான் இராஜா தேவ நியாயப்பிரமாணங்களை அறிந்து கொள்வதற்காக வாசித்து அதற்கு கீழ்ப்படிய வேண்டும். இதன் அர்த்தம் என்னவெனில் இராஜா தேவனின் அதிகாரத்தின் கீழேயுள்ளவன். எல்லா தேவ ஜனங்களும் தேவ வார்த்தையை வாசிக்க வேண்டும்.

⬇ கற்றுக்கொள்ளுங்கள்: உபாகமம் 17:14–20

(சங்கீதம் 1:2) மக்களிடமிருந்து இராஜா வேறுபட்டவனல்ல.

அநேக இராஜாக்கள் இக்கட்டளைக்கு கீழ்ப்படியவில்லை. 1ம் மற்றும் 2ம் இராஜாக்கள் நூலில் அநேகமாக ஒவ்வொரு இராஜாவும் கூடாதவனாக இருந்தான். சாலமோன் (1இராஜாக்கள் 2-11) இந்த நியாயப்பிரமாணத்தினுள் அனைத்து தீமைகளையும் செய்தான். அவனிடம் குதிரைகளும், அநேக மனைவியரும், அதிக பணமும் இருந்தன. அவனுடைய இருதயம் தேவனிடமிருந்து தூரமானது.

தேவனே உண்மையான இராஜா. இந்த நியாயப்பிரமாணத்தினூடாகவே இஸ்ரவேலின் இராஜாக்களை தேவன் ஆளுகை செய்தார். இராஜா குறித்த சட்டங்கள் (பூரணமான இராஜாவை) இயேசுவை நோக்கிப் பார்க்க உதவுகிறது. இயேசுவே சபையின் இராஜா. இந்த நியாயப்பிரமாணமானது இன்றைய நாடுகளின் இராஜாக்களையும் ஆட்சியாளர்களையும் பற்றியதல்ல.

⊕ **பிரதான கரு**

தேவ ஜனங்களின் தலைவர்கள் தேவனின் ஆளுகையின் கீழ் இருக்க வேண்டும். இயேசு மட்டுமே இதை பூரணமாக செய்தார்.

➡ கற்பித்தல்: உபாகமம் 17:14–20

ஆரம்பியுங்கள்

அநேக நாடுகளுக்கு இராஜாக்கள் இருந்தார்கள். இராஜாக்கள் பெரும்பாலும் ஆற்றல் மிக்கவர்களாக இருந்தனர்.

- அசல் அல்லது மிகச் சிறந்த அரசன் எப்படி இருக்க வேண்டும்.

இஸ்ரவேல் ஜனங்கள் பல தீய இராஜாக்களை கொண்டிருந்தார்கள். ஒருவருமே பூரணமானவர்களாக இருந்ததில்லை.

இராஜாவைக் குறித்து 3 எச்சரிக்கைகள்

வாசியுங்கள்: உபாகமம் 17:16–17

இராஜாக்களிடம் அநேக குதிரைகள் இருக்க கூடாது. அநேக குதிரைகளானது ஒரு இராஜாவை தனது சொந்த பலத்தில் நம்ப வைக்குமே தவிர தேவனிடம் அல்ல.

இராஜாக்களுக்கு அநேக மனைவியர் இருக்க கூடாது. அநேக மனைவியர் இராஜாவை தேவனிடமிருந்து தூரமாக்கும் சோதனைக்குள் தள்ளுவார்கள்.

சாலமோன் இராஜா இந்த 3 காரியங்களிலும் எவ்விதம் வீழ்ந்தான் என்பதை கற்பியுங்கள்.

தேவ ஆளுகைக்குள் உள்ள இராஜா

வாசியங்கள்: உபாகமம் 17:14–15, 18–20

இராஜா தேவனின் ஆளுகைக்குள் இருக்க வேண்டும். அவன் நினைத்த வண்ணமோ அல்லது விரும்புகிற வண்ணமோ செயல்படல் கூடாது.

→ கற்பித்தல்: உபாகமம் 17:14–20

தேவன் இராஜாவை தெரிவு செய்கிறார். இராஜா ஒரு இஸ்ரவேலனாக இருக்க வேண்டும். நியாயப்பிரமாணத்தின் பிரதி ஒன்றை அவன் எழுதி அதை வாழ் நாள் முழுவதும் அதை வாசிக்க வேண்டும். இராஜா தேவனைக் கனம் பண்ண வேண்டும். பெருமையுள்ளவனாக இருத்தல் கூடாது.

புராதன இஸ்ரவேலரைப் போல் கிறிஸ்தவர்கள் ஒரு ஜாதி அல்லவே. அவர்களைப் போல் எங்களுக்கு ஒரு இராஜா இல்லை.

இன்று சபை தான் தேவ ஜனங்களாகும். சபைக்கான தலைவர்களைப் பற்றி நியாயப்பிரமாணம் கூறுகிறது. சபைத் தலைவர்கள் தேவ ஆளுகைக்குள்ளே இருக்க வேண்டும். சபைத்தலைவர்கள் உண்மையான விசுவாசிகளாக இருத்தல் வேண்டும். அவர்கள் தாழ்மையாகவும் தேவ வார்த்தையை அறிந்தவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

சில சபைத்தலைவர்கள் தேவ ஆளுகைக்குள் இல்லை. சிலருக்குத் தேவனுடைய வார்த்தை நன்கு தெரியாது. சிலர் பெருமையுள்ளவர்கள். சில சபைத்தலைவர்களுக்கு அதிகாரமும் பணமும் தேவை. சில சபைத் தலைவர்கள் பாலியல் பாவங்களைச் செய்கிறார்கள். இவை நன்மையானவை அல்ல. இப்படிப்பட்ட தலைவர்களை குறித்து தேவன் சந்தோஷப்படுகிறதில்லை.

பூரணத்துவமுள்ள இராஜா

இஸ்ரவேலில் பூரணத்தவமுள்ள இராஜா ஒரு போதும் இருந்ததில்லை என்பதை கற்பியுங்கள். தாவீதின் குமாரன் இயேசுவே பூரணத்துவமுள்ள இராஜாவாக இருந்தார். அவர் எப்போதும் தேவனுடைய நியாயப்பிரமாணங்களுக்கு கீழ்ப்பட்டவராக இருந்தார். பல குதிரைகள், அதிகாரம், மனைவியர் அல்லது பணம் ஆகியவற்றின் சோதனைக்குட்படவில்லை. இயேசுவே சபையின் இராஜா. கிறிஸ்தவர்கள் அவருடைய இராஜ்ஜியத்திற்குரியவர்கள். கிறிஸ்தவர்கள் அவருடைய ஆளுகைக்குள்ளே வாழ வேண்டும்.

ⓘ **பிரயோகியுங்கள்:** உமது வாழ்விடத்தில் சபைத் தலைவர்களுக்கிருக்கும் சோதனைகள் எவை? தேவ வார்த்தையின் கீழ் வாழும் படி சபைத் தலைவர்களை உற்சாகப்படுத்துங்கள்.

Ⓘ **ஜெபியுங்கள்:** பூரணத்துவமுள்ள இராஜா இயேசுவுக்காய் தேவனுக்கு நன்றி கூறுங்கள். சபையின் தலைவர்களுக்காவும், அவர்கள் தேவனின் ஆளுகைக்குள்ளே வாழும்படியாகவும் ஜெபியுங்கள்.

28 தேவனுடைய தீர்க்கதரிசிகளுக்கு செவி கொடுங்கள்

பின்னணி

மோசே விரைவில் மரித்துவிடுவான். அவன் மரித்தபின்னர் தேவன் தீர்க்கதரிசிகளுக்கூடாக தொடர்ந்து ஜனங்களுடன் பேசுவார்.

வசனங்கள் 9–19 ஐ படிக்கவும்

இப்பகுதியை 2 அல்லது 3 தடவைகள் வாசியுங்கள்

குறிப்புகள்

- **உபாகமம் 18:9.** "அருவருக்கின்ற" "வெறுப்பைத் தூண்டுகின்ற" என்பதன் அர்த்தம் தேவன் இவற்றை வெறுக்கின்றார் என்பதாகும்.
- **உபாகமம் 18:10.** குறிசொல்லுதல் என்பது நடைபெற்ற ஒரு சம்பவத்தை செய்தவன் யார் என்றோ எதிர்காலத்தைக் குறித்து ஒருவரிடமோ அல்லது மந்திரவாதிகளிடமோ கேட்பதாகும். "சகுனங்கள்" என்பது தீய மனிதர்களிடமிருந்து அல்லது ஆவிகளிடமிருந்து வரும் எதிர்காலத்தைப் பற்றியதான அடையாளங்களாகும்.
- **உபாகமம் 18:11.** செத்தவர்களிடத்தில் குறி கேட்பவனும் அல்லது மாய வித்தைக்காரனும் செத்தவர்களிடத்தில் பேச முடியும் என கூறுவர். "மந்திர வாய்ப்பாடு" என்பது ஒருவர் மேல் மந்திர வித்தையை பிரயோகிப்பதாகும்.

ஆராய்ந்து பாருங்கள்

வசனங்கள் 9-14. வேறு தெய்வங்களை வழிபடுபவர்கள் பிள்ளைகளைப் பலியாக தேவர்களுக்குக் கொடுத்தனர். அது ஒரு தீமையான காரியமாகும். எதிர்காலத்தைக் குறித்துக் கூற முடியும் எனச் சொல்லும் மனிதர்கள் வேறு சமயங்களில் இருந்தார்கள். மந்திரக்காரி அல்லது மந்திரவாதியைப் போல ஜனங்கள் மேல் மந்திரத்தை செய்ய முடியுமானவர்களாயிருந்தனர். அவர்கள் மரித்தவர்களிடம் பேச முயற்சி செய்து எதிர்காலத்தை அறியவோ அல்லது மந்திரவாதி அல்லது ஆவியுடனான தொடர்புகளை வைத்திருக்க முயற்சி செய்யக் கூடும்.

- நீர் வாழும் இடத்தில் இவை போன்ற எக்காரியங்கள் செயற்படுத்தப்படுகின்றன?

இக்காரியங்கள் ஜனங்களை தவறாக வழிநடத்துகின்றன. அவை பொய்யுரைக்கும் சாத்தானிடமிருந்து வருகின்றன. இவை தேவனுக்கு அருவருப்பானவையும் வெறுப்பூட்டுவனவுமாகும். தேவ ஜனங்கள் மந்திரவாதிகளிடமும், சூனியக்காரியிடமும், இவர்களைப் போன்றவர்களிடமும் செல்லக் கூடாது.

தேவன் எல்லாவற்றையும் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கிறார். ஜனங்கள் அறியத் தேவையான யாவற்றையும் அவர்களுக்குக் கூறுகிறார். அதனால் தான் வசனம் 9-14ல் கூறப்படும் தீமையான கரியத்தைத் தொடர்ந்து 15-18ம் வசனங்களில் சரியான காரியங்கள் கூறப்படுகின்றது.

வசனங்கள் 15-18. மோசேயைப் போல ஒரு தீர்க்கதரிசியை தேவன் தமது ஜனங்களுக்காக அனுப்புவார். தீர்க்கதரிசியானவன் தேவனுடைய

கற்றுக்கொள்ளுங்கள்: உபாகமம் 18:9–19

வார்த்தையை ஜனங்களுக்கு அறிவிப்பான்.

பழைய ஏற்பாட்டில் மோசேயைப் போன்ற பல தீர்க்கதரிசிகளைக் காண்கிறோம். எலியா, எலிசா, ஆமோஸ் போன்ற இன்னும் பலர் உண்டு. ஆனால் மோசேயைப் போன்ற பிரதான தீர்க்கதரிசி இயேசுவே.

இயேசுவுக்கு திருமுழுக்கு கொடுக்கப்பட்ட போது வானத்திலிருந்து வந்த தேவ சத்தம் "இவருக்கு செவி கொடுங்கள் என்று கூறியது". எழுதப்பட்ட மற்றும் விளங்கப்படுத்தப்பட்ட வேதாகமத்தினூடாக தேவன் தம்முடைய வார்த்தையை கிறிஸ்தவர்களுடன் இன்றும் பேசி வருகிறார்.

பிரதான கரு

தேவன் தமது தீர்க்கதரிசிகளினூடாகப் பேசுகிறார். அவர்களுக்கு செவி கொடுங்கள்! மந்திரவித்தையோ சூனியத்தையோ பின்பற்ற வேண்டாம்.

கற்பித்தல்: உபாகமம் 18:9–19

ஆரம்பியுங்கள்

ஜனங்கள் எதிர்காலத்தைப்பற்றி அறிய விரும்புகிறார்கள். ஆனால் ஜனங்கள் அநேக வேளைகளில் தவறானவர்களிடம் செல்கிறார்கள். நீர் வாழும் பிரதேசத்திலிருந்து சில உதாரணங்கள் தருக.

தேவன் கூறுவதைத் தேடுவதில் பின்பற்றப்படும் தவறான வழிமுறைகள்

வாசியுங்கள்: உபாகமம் 18:9–14

மரித்தவர்களிடம் பேச முடியும் என்றோ அல்லது அவர்களிடம் தகவல் பெற முடியம் என்றோ கூறும் மனிதர்களிடம் செல்ல வேண்டாம் என மோசே கூறுகின்றார். இவர்களில் சிலர் மக்கள் மேல் மந்திரவித்தைகளை செய்வார்கள். சில ஜனங்கள் எதிர்காலத்திற்கான அடையாளங்களைத் தேடுவார்கள். சில அவிசுவாசிகள் தமது தெய்வங்களுக்கு பலி செலுத்த தமது பிள்ளைகளைக்கூட கொலை செய்வார்கள். இவை யாவும் தீமையானவை. சாஸ்த்திரம் பார்த்தல், மந்திரவித்தை, ஆகியவையும் பில்லிசூனிய மருத்துவர், மந்திரவாதிகளிடம் செல்வதும் தவறானவையே. தேவன் இவற்றை வெறுக்கிறார்.

இவை யாவும் சாத்தானிடமிருந்தே வருகின்ற தந்திரங்கள் என்பதை விளக்கிக் கூறுங்கள். ஏமாற்றப்படுவதற்கு இடமளிக்க வேண்டாம். நட்சத்திரங்களும், மந்திர

வித்தைகளும் எம்மை ஆளுவது இல்லை. தேவனே ஆளுகை செய்கிறவர். கிறிஸ்தவர்கள் இத்தீமையை செய்தால் நீங்கள் அவற்றைப் பின்பற்ற வேண்டாம். பொய் சொல்லி எம்மை ஏமாற்றுகின்ற சாத்தானிடமிருந்து விலகியிருங்கள். ஆனால் தேவனே மரணத்தையும் ஜீவனையும் கட்டுப்படுத்துகிறவர். தேவனில்லாமல் மரணிப்பதையே சாத்தான் விரும்புகின்றான். ஆனால் தேவன் இல்லாத மரணம் நரகமே.

தவறான விடையங்களைக் குறித்த பயம் அடைய வேண்டாம். ஒரு சூனியக்காரியோ அல்லது மந்திரவாதியோ உம்மேல் மந்திரத்தை செய்தால் என்ன செய்வது? தேவன் அதிக வல்லமையுள்ளவர் என்பதை நினைவில் கொள்ளுங்கள். இயேசுவுக்குள்ளாக தேவனின் அன்பைவிட்டு எம்மை எதுவுமே பிரிக்க முடியாது.

தேவன் கூறுவதற்கு செவி கொடுக்க சீரான வழி முறைகள்

வாசியுங்கள்: உபாகமம் 18:15–19

தேவன் கூறுவதை நாம் அறிய விரும்புவோமேயாயின் அது இலகுவானது. மோசே இறந்த பின்னர். மோசேயைப் போல தீர்க்கதரிசிகளை தேவன் எழும்பப் பண்ணுவார். அந்த தீர்க்கதரிசிகள் தேவனுடைய வார்த்தையை மக்களிடம் பேசுவார்கள். பழைய ஏற்பாட்டில் உள்ள சில தீர்க்கதரிசிகளைப்பற்றி நீங்கள் கற்பிப்போருக்குக் கூறுங்கள்.

மிக பெரிதான தீர்க்கதரிசியும் இன்றைய விசுவாசிகளும்

மிகப் பெரிதான தீர்க்கதரிசி இயேசுவே. அவருக்குத் திருமுழுக்குக் கொடுக்கப்பட்ட போது வானத்திலிருந்து **“இவருக்கு செவி கொடுங்கள்”** என்ற தேவ சத்தம் கேட்டது.

விசுவாசிகள் இன்று தேவன் சொல்வதை கேட்க வேண்டும். தேவன் வேதாகமத்தில் பேசுகிறார். அங்கே அவர் அவரது தீர்க்கர்களுக்கூடாகவும், அவரது குமாரன் இயேசுவுக்கூடாகவும் பேசியுள்ளார். (எபிரேயர் 1:1-4). நாம் செவிமெடுத்துக் கீழ்ப்படிய வேண்டும்.

தேவன் தெளிவாகப் பேசுகிறார் அவருடைய வார்த்தை கடினமானதல்ல. ஏனைய தேவர்களின் வழி முறைகளைப் பின்பற்றி எதிர்காலத்தைக் குறித்து அறிய முயற்சிக்கக் கூடாது. நாம் வேத வார்த்தையான வேதாகமத்திற்கு செவிமடுத்துக் கீழ்ப்படிய வேண்டும்.

ஜெபியுங்கள்: தேவன் தமது வார்த்தையினால் தெளிவாக பேசுவதற்காக அவருக்கு நன்றி கூறுங்கள். அவருடைய வார்த்தைக்கு அதிகமாக செவிக்கொடுத்துக் கீழ்ப்படிய வேண்டுமென ஜெபியுங்கள்

கற்றுக்கொள்ளுங்கள்: உபாகமம் 22:1–12

29 வாழ்வின் ஒவ்வொரு விடயமும் தேவனுக்காக செய்யப்பட வேண்டும்

பின்னணி
வாக்களிக்கப்பட்ட தேசத்தில் வாழ்வதற்காக ஜனங்களை மோசே தயார்படுத்துகின்றான். தேவனிடமிருந்து வரும் நியாயப்பிரமாணங்களை அவர்களுக்குக் கொடுக்கிறான். இப்பிரமாணங்கள் வாழ்வின் சகல பகுதிகளையும் உள்ளடக்கியவையாகும்.

வசனங்கள் 1–12 ஐ படிக்கவும்
இப்பகுதியை இரண்டு அல்லது மூன்று தடவைகள் வாசியுங்கள். ஒவ்வொரு வசனத்தையும் வாசித்து உமது சொந்த மொழிநடையில் விளங்கிக்கொள்ளுங்கள்.

குறிப்புக்கள்
- **உபாகமம் 22:8.** “கைப்பிடிச் சுவர்” என்பது ஒரு தட்டையான கூரையிலிருந்து ஜனங்கள் கீழே விழாதபடி கட்டப்படும் ஒரு வேலியாகும்.
- **உபாகமம் 22:12.** “தொங்கல் இழை” என்பது ஒரு மேலிடையின் அல்லது ஆடையின் அல்லது தோளின் ஆடையிலோ முடிவில் காணப்படும் மேலதிக கற்றையான துணியாகும்.

ஆராய்ந்து பாருங்கள்
சில சட்டங்கள் வினோதமானவை. தொடர்ந்து வாசிக்க முன்பு ஒவ்வொரு சட்டத்திற்கான காரணத்தையும் கண்டுபிடிக்க முயற்சி செய்யுங்கள்.

வசனங்கள் 1-4. தேவ ஜனங்கள் ஏனைய இஸ்ரவேலரின் மிருகங்களை பராமரித்தல் வேண்டும். அயலவரை நேசிப்பதற்கு இது ஒரு வழியாகும். கிறிஸ்தவர்கள் ஏனைய கிறிஸ்தவர்களைக் கவனிக்க வேண்டும். உம்முடைய சகோதரரின் ஆடு அலைந்து திரிந்தால் என்னவாகும். நீர் அதை கண்காணித்து திரும்பவும் கொண்டு வந்து கொடுக்க வேண்டும்.

வசனம் 5. தேவன் அவர்களைப் படைத்த நிலையிலிருந்து தம்மை வேறுபடுத்தி காட்டுகிறவர்களுக்காகவே இந்தச் சட்டமாகும். ஒரு பெண் நீளமான காற்சட்டை அணியக் கூடாது என்றோ அல்லது ஒரு ஆண் லுங்கி அணியக் கூடாதென்றோ அர்த்தமல்ல.

வசனம் 6-7. எதிர்காலத்தில் உணவுகள் அதிகம் இருப்பதை உறுதி செய்வதற்கான சட்டமாகும். நாம் எமக்கான உணவு விநியோகத்தையும் வளங்களையும் கவனிக்க வேண்டும்.

வசனம் 8. புராதன இஸ்ரவேலில் ஜனங்களிடம் தட்டையான கூரை வீடுகள் காணப்பட்டது. சில சமயங்களில் கூரையின் மேல் வேலை செய்வார்கள் அல்லது தூங்குவார்கள். கைப்பிடிச் சுவரானது அவர்கள் கீழே விழுகிறதிலிருந்து அவர்களைப் பாதுகாக்கிறது. தேவ ஜனங்கள் அவர்களுடைய கட்டிடங்கள் ஏனையவர்களுக்குப் பாதுகாப்பாய் இருப்பதை உறுதிப்படுத்தல் வேண்டும்.

- உமது பிரதேசத்தில் ஜனங்கள் எவ்விதம் அவர்களது வீடுகளைப் பாதுகாக்கின்றார்கள் எனக் கூறுக. சமையலறைகள் பிள்ளைகளுக்குப்

கற்றுக்கொள்ளுங்கள்: உபாகமம் 22:1–12

பாதுகாப்பாக உள்ளதா? மின்சாரம் பாதுகாப்பாக உள்ளதா?

வசனங்கள் 9-11. தானியங்களையும், மிருகங்களையும், துணி வகைகளையும் ஒன்றாக சேர்த்து வைப்பதை ஏனைய சமய மக்கள் செய்தனர். ஏனைய சமயத்தினர் செய்வதை தேவ ஜனங்கள் செய்யக் கூடாது.

வசனம் 12. துணிகளில் உள்ள தொங்கல் இழை ஓரங்கள் தேவ ஜனங்கள் சட்டத்திட்டங்களை கடைப்பிடிப்பதை நினைவுபடுத்தின. வாசியுங்கள் : உபாகமம் 15:38-39. தேவ ஜனங்களுக்கு இன்று தொங்கல் இழை தேவையில்லை. நாம் உண்மையான விசுவாசிகளாயிருப்பின் எமது இருதயங்களில் தேவ ஆவியானவர் சட்டங்களை எழுதியுள்ளார். ஆனால் நாம் தேவ சட்டங்களை நினைவில் கொள்ள வேண்டும்.

⊕ பிரதான கரு
ஒவ்வொன்றையும் தேவனுக்காகவே செய்யுங்கள்.

கற்பித்தல்: உபாகமம் 22:1–12

ஆரம்பியுங்கள்
இந்த சட்டதிட்டங்கள் வினோதமாக தெரிகின்றதா?
இச்சட்டதிட்டங்களுக்கான காரணத்தை அறியும் போது இன்றைக்கு அவை எதைச் சொல்லுகின்றன என்பதைக் குறித்து சிந்திக்கலாம்.

ஏனைய கிறிஸ்தவர்கள் இழந்தவற்றைக் குறித்துக் கரிசனைக் காட்டுதல்
வாசியுங்கள்: உபாகமம் 22:1–4
இச்சட்டதிட்டத்திற்கான காரணத்தைக் கூறுங்கள். மற்றையவர்களின் பிரச்சனைகளைத் தட்டிக் கழிப்பது இலகுவானது. ஆனால் நாம் தேவ ஜனங்களாக ஒன்றிணைந்துள்ளோம். ஒருவர் மற்றவர் மேல் கரிசனை உள்ளவர்களாக இருக்க வேண்டும். உமது பிரதேசத்திற்கான உதாரணம் ஒன்று தருக.

தேவன் உம்மை யாராக இருக்கும்படி உருவாக்கியுள்ளாரோ அவ்விதமாகவே இருங்கள்
வாசியுங்கள் உபாகமம் 22:5
சில நாடுகளில் மனிதனை மனுஷியாக மாற்றுவதற்கான சத்திர சிகிச்சைகளை மக்கள் செய்கிறார்கள். கிறிஸ்தவர்கள் அவ்விதம் செய்தல் கூடாது. நாம் யாராக இருக்கிறோமோ அதை ஏற்றுக் கொள்ள வேண்டும். தேவன் எம்மைப் படைத்துள்ளார்.

➔ கற்பித்தல்: உபாகமம் 22:1–12

எதிர்காலத்திற்கான உணவு தேவையைக் குறித்து சிந்தியுங்கள்

⌄ வாசியுங்கள் உபாகமம் 22:6–7

எமது பிள்ளைகளுக்கும், பிள்ளைகளின் பிள்ளைகளுக்கும் உணவு கிடைப்பதை நாம் உறுதிப்படுத்த வேண்டும். எமது தேசத்தில் உள்ள உலகின் வளங்களை நாம் பயன்படுத்த வேண்டும்.

எமது வீடுகள் பாதுகாப்பாக இருப்பதை நாம் உறுதிப்படுத்த வேண்டும்

⌄ வாசியுங்கள்: உபாகமம் 22:8

இந்த சட்டம் ஏன் இஸ்ரவேல் ஜனங்களுக்குத் தேவைப்பட்டது என நீங்கள் கற்பிப்போருக்குக் கூறுங்கள்.

- உங்கள் வீடு பாதுகாப்பாக உள்ளதா? உங்கள் சபைக் கட்டிடம் பாதுகாப்பானதா? உமது பிரதேசத்தை பாதுகாப்பாக வைத்திருப்பதற்கான சில உதாரணங்களைத் தருக. வயதானவர்கள் அல்லது பிள்ளைகளை சிந்தித்துப் பாருங்கள். அவர்கள் தம்மைக் காயப்படுத்தக் கூடியதாக உமது வீடு உள்ளதா? படிக்கட்டுகளை பாதுகாப்பாக பயன்படுத்தக் கூடியதாக உள்ளதா? உமது வீட்டைப் பாதுகாப்பாக வைத்திருக்க என்ன செய்ய வேண்டியுள்ளது?

ஏனைய சமயத்தவரின் வழிகளைப் பின்பற்ற வேண்டாம்

⌄ வாசியுங்கள்: உபாகமம் 22:9–11

அநேகமாக அவிசுவாசிகள் விலங்குகள், விதைக்கிற பொருட்கள் என்பவற்றை ஒன்றாக சேர்த்து வைத்தார்கள். மந்திர வித்தைகள் காணப்பட்டிருக்கக்கூடும். தேவ ஜனங்கள், தவறான சமயங்கள் செய்பவற்றை செய்யக் கூடாது.

சட்டங்களை நினைவில் கொள்ளுங்கள்

⌄ வாசியுங்கள்: உபாகமம் 22:12

இஸ்ரவேல் ஜனங்கள் ஏன் தொங்கும் இழைகளை வைத்திருந்தார்கள் என நீங்கள் கற்பிப்போருக்குக் கூறுங்கள். கிறிஸ்தவர்கள் எவ்விதம் வேறானவர்கள் என விளக்குங்கள். தேவ சட்டதிட்டங்களை அவர்கள் நினைவு கூருவதை உறுதி செய்யும்படி சவாலிடுங்கள்.

எமது குடும்ப வாழ்வு, உணவு, உடை அயலாரின் மிருகங்கள் மற்றும் வாழ்வின் ஒவ்வொரு பகுதியும் தேவனுக்கான வாழ்வாக அமைதல் வேண்டும். தேவன் செய்ய விரும்புவதை நாம் எப்போதும் எண்ணிக்கொள்ள வேண்டும். தேவன் எமது வாழ்வின் அனைத்திற்கும் தேவனாய் உள்ளார். ஒவ்வொன்றும் அவருக்காக செய்யப்பட வேண்டும்.

⌃ ஜெபியுங்கள்: தேவனுடைய சட்டத்திட்டங்களுக்கு எவ்விதம் கீழ்ப்படிவது என்ற புரிந்துணர்விற்காக தேவனிடம் கேளுங்கள். நாம் தவறுகின்ற போது இயேசுவுக்குள்ளாக நாம் மன்னிக்கப்படுவதற்காக தேவனுக்கு நன்றி கூறுங்கள்.

30 பாலியல் பாவத்தை செய்தல் கூடாது

பின்னணி

தேவ ஜனங்கள் வாக்களிக்கப்பட்ட தேசத்தில் வாழ்வதற்காக மோசே அவர்களைத் தயார்படுத்துகிறான். தேவனிடமிருந்து வரும் சட்டத்திட்டங்களைக் கொடுத்து அவற்றுக்குக் கீழ்ப்படியும்படி அவர்களை உற்சாகப்படுத்துகின்றான்.

வசனங்கள் 13–30 ஐ படிக்கவும்

இப்பகுதியை இரண்டு அல்லது மூன்று தடவைகள் வாசியுங்கள்.

குறிப்புகள்

- **உபாகமம் 22:14.** "அவளின் கன்னிமையின் அடையாளம்" என்பது ஸ்திரியானவள் திருமணத்திற்கு முன்பு பாலுறவு கொள்ளவில்லை என்பதைக் காட்டுவதாகும். இரத்தம் பட்ட அவளுடைய படுக்கை விரிப்பே ஆதாரமாகும்.
- **உபாகமம் 22:21.** "ஒழுங்கீனமான" என்பதன் அர்த்தம் ஒருவருக்கு மேலதிகமான நபர்களுடன் பாலுறவு கொள்வதாகும்.
- **உபாகமம் 22:22.** "சயனிப்பது", "உறவு கொள்வது" என்பது ஒருவரோடு உடலுறவு கொள்வதாகும்.
- **உபாகமம் 22:23.** "வாக்குறுதி" என்பது நிச்சயிக்கப்படுதல் என்பதாகும்.
- **உபாகமம் 22:25.** கற்பழித்தல் என்பது ஒரு மனிதன் ஒரு பெண்ணை பாலுறவிற்கு பலாத்காரப்படுத்துவதாகும்.

ஆராய்ந்து பாருங்கள்

பாலுறவு என்ற பாடத்தைப்பற்றிப் பேசுவது இலகுவானதல்ல. சிலர் வெட்கப்படுவர். சிலர் அதை விளையாட்டாகக் கொள்வர். வேதாகமம் பாலுறவுபற்றி பல தடவைகள் பேசுகின்றது. பாலுறவு பல மனிதர்களுக்கு மிக பெரிய சோதனையாகும். விசுவாசிகள் தூய்மையாக இருக்கும்படி உற்சாகப்படுத்தப்பட வேண்டும்.

வசனங்கள் 13-22. தாம் திருமணம் செய்ய முன்பதாகவே மனைவி பாலுறவு கொண்டதாக ஒரு மனிதன் கதை சொல்லக் கூடும். திருமணத்தை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான சாக்குப்போக்காக இருக்கலாம். அந்த மனிதன் பொய் சொல்லுவதை பெற்றோரால் நிருபிக்க முடியும். திருமணம் முக்கியமானதொன்றாகும். விவாகரத்து இலகுவானதாக இருகக்கூடாது.

வசனங்கள் 23-27. நிச்சயிக்கப்பட்ட ஒரு பெண்ணை ஒரு மனிதன் கற்பழித்தால் அப்பெண் உதவிக்காக சத்தமிட வேண்டும். நகரத்தின் ஜனங்கள் அவள் சத்தத்தைக் கேட்பார்கள். ஆண்கள் பெண்களை பலாத்காரப்படுத்தக் கூடாது. அது தீமையானதாகும்.

வசனங்கள் 28-30. ஒரு பெண் நிச்சயிக்கப்படாது இருக்கையில் ஒரு ஆணுடன் பாலுறவில் ஈடுப்பட்டால் என்ன நடைபெறும்? அம்மனிதன் கட்டாயம்பண்ணியோ அல்லது கற்பழித்திருந்தாலோ அவர்கள் கட்டாயம் திருமணம் பண்ண வேண்டும். ஏனெனில் அப்பெண்ணுக்கு கணவனைத் தேடுவது கடினமானதாகும். அந்த மனிதன் அவளை பராமரிக்க வேண்டும்.

கற்றுக்கொள்ளுங்கள்: உபாகமம் 22:13–30

கிறிஸ்துவிற்கும் சபைக்கும் இடையேயுள்ள உறவை போன்று இருக்க வேண்டும் என்பதே கிறிஸ்தவ திருமணத்தின் அர்த்தமாகும். (எபேசியர் 5:22-33)

பிரதான கரு

உங்கள் கணவனுக்கு அல்லது மனைவிற்கு உண்மையுள்ளவர்களாயிருங்கள். திருமணத்திற்கு வெளியே பாலுறவு வேண்டாம்.

கற்பித்தல்: உபாகமம் 22:13–30

ஆரம்பியுங்கள்

எம் உலகில் உள்ள மக்கள் பாலுறவை விரும்புகிறார்கள். எல்லா இடங்களிலும் தவறான பாலியல் நடத்தைகள் அதிகம் உண்டு. இந்த முக்கிய விடயத்தில் கிறிஸ்தவர்கள் மௌனமாக இருக்கக் கூடாது. தேவன் இதைக் குறித்து அதிகம் கூறுகிறார். அதை போல நாமும் இருத்தல் வேண்டும்.

திருமணத்தில் பாலுறவானது தேவனின் அருமையான கொடையாகும். அது கணவனும் மனைவியும் மகிழ்ந்திருப்பதற்காகவே. ஆனால் திருமணத்திற்கு வெளியே பாலுறவானது தவறானதாகும்.

புராதன இஸ்ரவேலில் பொல்லாத பாவிகள் மரணத்திற்கு உட்படுத்தப்பட்டனர். கிறிஸ்தவர்களைப் பொறுத்தவரை கெட்ட பாவிகள் சபைக்குள் இருத்தலாகாது. அவர்கள் சபை அங்கத்துவத்திலிருந்து அகற்றப்படுவர்.

திருமணத்தில் உண்மையும் பரிசுத்தமுமாக இருங்கள்

வாசியுங்கள்: உபாகமம் 22:13–22

இந்த வசனங்கள் எவை பற்றியவை என நீங்கள் கற்பிப்போருக்குக் கூறுங்கள். தேவ ஜனங்கள் திருமணத்தை விசேடமானதாகக் கருத வேண்டும். கிறிஸ்தவ கணவன்மாரும் மனைவியரும் அவர்களது திருமணத்தை பலப்படுத்தவும்

→ கற்பித்தல்: உபாகமம் 22:13–30

அன்புள்ளதாக்கவும் தம்மால் முடியுமான எல்லாவற்றையும் செய்ய வேண்டும்.

ஒரு பெண்ணின் மேல் பலாத்காரம் பண்ண வேண்டாம்

வாசியுங்கள்: உபாகமம் 22:23–27
நிச்சயிக்கப்பட்ட ஒரு பெண் ஒரு மனிதனுடன் பாலுறவு கொண்டால் என்ன? அவர்கள் இருவரும் சம்மதித்திருந்தால், அவர்களைக் கொலை செய்ய வேண்டும். அந்த மனிதன் பெண்ணை பலவந்தப்படுத்தினால் என்ன?

மனிதன் பலவந்தப்படுத்தினால் அவள் கொல்லப்படாள். அநேக ஆண்கள் தங்கள் பாலுறவு வேட்கையை அடக்குவதில்லை. அவர்கள் பெண்களைப் பாலுறவிற்காக பலவந்தம் செய்கிறார்கள். தேவன் இது குறித்து மகிழ்ச்சி அடைவதில்லை. பெண்கள் கௌரவத்துடன் நடத்தப்பட வேண்டும்.

ஒரு மனிதன் பாலுறவிற்காக ஒரு பெண்ணை பலவந்தப்படுத்தினால் காவல்துறையினருக்கு நாம் முறையீடு செய்ய வேண்டும்.

இன்னுமோர் பிரச்சினை

வாசியுங்கள்: உபாகமம் 23:28–29
நிச்சயிக்கப்படாத ஒரு பெண்ணை பலவந்தம் செய்யும் போது என்ன நடந்தது. இந்த விடயத்தில் அவர்கள் திருமணம் செய்ய வேண்டும். இந்த சட்டம் பெண்ணை பாதுகாத்தது. அவளை பராமரிக்க ஆணைக் கட்டாயப்படுத்தியது. பெண்ணானவள் அவனைத் திருமணம் செய்ய விரும்பாவிட்டால் அவனைத் திருமணம் செய்ய தேவையில்லை. இன்று ஒரு மனிதன் ஒரு பெண்ணை பலவந்தம் செய்தால் கிறிஸ்தவர்கள் அப்பெண்ணை பராமரிக்க வேண்டும்.

பாலுறவைக் குறித்துப் பல சட்டங்கள் வேதாகமத்தில் உண்டு. தவறான பாலுறுவு ஒரு பலமான சோதனையாகும். தேவ ஜனங்கள் பரிசுத்தமாகவே இருக்க வேண்டும். திருமணமானது கனப்படுத்தப்பட வேண்டும்.

கணவன்மாரும் மனைவிமாரும் தேவன் தமது ஜனங்களை நேசிப்பது போல ஒருவரை ஒருவர் நேசிக்க வேண்டும். எபேசியர் 5: 22-23ல் கணவன்மாரும் மனைவியரும் பின்பற்றக் கூடிய இயேசுவைப்பற்றியதும் சபையைப்பற்றியதுமான உதாரணத்தை பவுல் தருகிறார்.

ஜெபியுங்கள்: பாலுறவில் பரிசுத்தமாய் இருக்க உதவும்படி தேவனிடம் கேளுங்கள். கடந்த கால பாவங்களை இயேசு மன்னிக்கிறதற்காக தேவனுக்கு நன்றி செலுத்துங்கள்.

31 தேவன் செய்தவற்றுக்காக நன்றி கூறுங்கள்

பின்னணி

இப்பகுதியுடன் சட்டங்கள் முடிவுறுகிறது. தேவனிடமிருந்து வரும் எல்லா சட்டங்களையும் மோசே ஜனங்களுக்குக் கூறி முடிக்கின்றான்.

வசனங்கள் 1–11 ஐ படிக்கவும்

இரண்டு அல்லது மூன்று தடவைகள் இப்பகுதியை வாசியுங்கள். ஒவ்வொரு வசனத்தையும் வாசித்து உம்முடைய சொந்த மொழி நடையில் விளங்கிக் கொள்ளவும்.

குறிப்புக்கள்

- **உபாகமம் 26:5.** “அரமேயன்” என்பதன் விளக்கம் - வாக்களிக்கப்பட்ட தேசத்திற்கு வெளியே ஆரானிலிருந்தும், ஆராமிலிருந்தும் யாக்கோபின் முற்பிதாக்கள் வந்தார்கள்.
- **உபாகமம் 26:9.** “பாலும் தேனும்” என்பதன் அர்த்தம் நல்ல இனிமையான உணவும் பானமுமாகும்.

ஆராய்ந்து பாருங்கள்

மோசே ஜனங்களுக்குக் கொடுத்த கடைசி சட்டம் இதுவாகும். ஜனங்கள் தேசத்திற்குத் திரும்பிய போது விசேட நன்றிப்பலி செலுத்துவது தொடர்பான சட்டமாக இருந்தது. ஒரு முறை மட்டுமே கீழ்ப்படிகின்ற சட்டமிதுவாகும்.

வசனங்கள் 1-4. மோசேயின் காலத்திற்கு முன்பதாகவே தேவன் ஆபிரகாமிற்கு தேசத்தை வாக்களித்தார். தேவன் தமது வாக்குத்தத்தத்தைக் காத்துக் கொள்வார். தேசம் நல்ல தேசம். அது அநேக பயிர்களையும் விலங்குகளையும் தோற்றுவிக்கும்.

இஸ்ரவேல் ஜனங்கள் தேசத்தில் வந்து அமர்ந்த போது அவர்கள் தேசத்தின் முதற்பலன்களை தேவனுக்குக் கட்டாயம் செலுத்த வேண்டியிருந்தது.

வசனங்கள் 5-9. இந்த வசனங்கள் தேவ ஜனங்களின் கதையைக் கூறுகிறது. யாக்கோபு எகிப்திலிருந்து அவன் மகன் யோசேப்பிடம் சென்றான் (ஆதியாகமம் 46). யாத்திராகம புத்தகத்தில் - எகிப்தில் யாக்கோபு மரித்தான். அவனது குடும்பம் பெரிய ஜாதியாகப் பெருகியது. பின்பு எகிப்தின் அரசனாகிய பார்வோன் இஸ்ரவேல் ஜனங்களை அடிமைகளாக்கினான் (யாத்திராகமம் 1). ஜனங்கள் தேவனிடம் முறையிட்டார்கள் (யாத்திராகமம் 2:23-25). தேவன் அவர்களின் கூக்குரலுக்கு பதிலளித்தார். எகிப்திலிருந்து ஜனங்களை வெளியே அழைத்து வர மோசேயை அனுப்பினார். “வல்லமையான கரம்” மற்றும் “பெரிதான பயங்கரம்” என்பதன் அர்த்தமானது தேவன் பார்வோனுக்கு எதிராக தண்டனையைக் கொண்டு வந்தார் என்பதாகும் (யாத்திராகமம் 7-12).

தேவ ஜனங்களுக்கு தேவன் செய்ததை நினைவுகூர வேண்டியது முக்கியமான ஒன்றாகும்.

- கிறிஸ்தவர்களாகிய நாம் எதைக் நினைத்துக் கொண்டாட வேண்டும்? எவ்வளவு சிறப்பாக நாம் இதை செய்கிறோம்?

⬇ கற்றுக்கொள்ளுங்கள்: உபாகமம் 26:1–11

வசனங்கள் 10-11. தேவன் உண்மையுள்ளவராததால் மனிதர்கள் நன்றியுடன் நிலத்தின் முதற் பலனை தேவனுக்கு திருப்பிக் கொடுக்க வேண்டும். தேவன் ஆகாரத்தைத் தருகிறார். ஏனைய தேவர்கள் அதை செய்வதில்லை. ஜனங்கள் மகிழ்ந்திருக்க வேண்டும். தேவன் எங்களுக்கு தருபனவற்றில் மகிழ்ந்திருப்பதில் நாம் எவ்வளவு சிறப்பாக உள்ளோம். பிலிப்பியர் 4:4 ஐ வாசியுங்கள்.

⊕ பிரதான கரு

தேவ ஜனங்கள் கட்டாயமாக தேவனுக்கு நன்றி செலுத்த வேண்டும்.

➡ கற்பித்தல்: உபாகமம் 26:1–11

⊙ ஆரம்பியுங்கள்

- காரியங்கள் நன்றாக இருக்கும் போது, சில வேலைகளில் நீங்கள் தேவனை மறப்பதுண்டா?

இந்தச் சட்டமானது தேவ ஜனங்கள் தேவனை நினைவு கூர்ந்து அவருக்கு நன்றி செலுத்த உதவுகிறது.

முதன்மையானதையும் மிக சிறந்ததையும் தேவனுக்குக் கொடுங்கள்

⊙ வாசியுங்கள்: உபாகமம் 26:1–4

ஜனங்கள் தேசத்தில் வந்து சேர்ந்த போது தேசத்திலிருந்து முதற் பலன்களையும் கனிகளையும் தேவன் கேட்டார். இதன் அர்த்தமானது தேவனுக்குக் கொடுப்பது முதன்மையானதாக இருக்க வேண்டும் என்பதாகும்.

- நாம் தேவனுக்கு எப்படி முதலிடம் கொடுத்து நன்றி செலுத்துவது?

தேவன் செய்ததை நினைவு கூருங்கள்

⊙ வாசியுங்கள்: உபாகமம் 26:5–9

இந்த வார்த்தைகளாவன தேவ ஜனங்களின் கதையாகும். யாக்கோபு, எகிப்து தேசம், அடிமைத்தனம், விடுதலை மற்றும் வாக்களிக்கப்பட்ட தேசத்தினுள் வருதல் ஆகியவற்றின் கதையை நீங்கள் கற்பிப்போருக்குக் கூறுங்கள்.

தேவன் செய்ததை தேவ ஜனங்கள் நினைவு கூர வேண்டும். எனவே தான் வேதாகம கதையை வாசிப்பது முக்கியமானதாகும். எமது கதை

➙ கற்பித்தல்: உபாகமம் 26:1–11

என்ன? கிறிஸ்தவர்களுக்கான எமது கதையின் மையம் சிலுவையில் உள்ள இயேசுவே. அதுதான் எமக்கான விடுதலை, பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்து இயேசு எமக்கு விடுதலை தருகிறார். அவர் ஜனங்களை ஆவிக்குரிய மரணத்திலிருந்து ஆவிக்குரிய விடுதலையைக் கொண்டு வருகிறார்.

- இயேசுவின் மரணத்தையும் உயிர்ப்பையும் பற்றி கூறுகின்ற எப்பாடல்களை உமது சபை பாடுகின்றது?

ஆராதனை செய்து மகிழுங்கள்

வாசியுங்கள்: உபாகமம் 26:10–11

பணிந்து மகிழும்படியான கட்டளையுடன் இப்பகுதி முடிவடைகிறது. தேவ ஜனங்களுக்கு மகிழ்ச்சி மிக முக்கியமானதாகும். புதிய ஏற்பாடு கிறிஸ்தவர்களை மகிழ்ந்திருக்கும்படி கட்டளையிடுகிறது. தேவன் எங்களுக்கு செய்ததை நினைக்கும் போது எம் இருதயங்களில் நன்றியுணர்வுண்டாகும்.

ஒரு நல்ல உதாரணம் எபேசியர் 1:3-14 வாக்கியங்களில் காணப்படுகின்றது. தேவன் எபேசியருக்கு செய்ததை பவுல் நினைவூட்டுகிறார். இதைக் கூறும் போது அவர் நன்றியுடனும் மகிழ்ச்சியுடனும் தேவனைத் துதிக்கிறார்.

- எந்தளவிற்கு நீங்கள் மகிழ்ச்சியாயுள்ளீர்கள்?
- எந்தளவிற்கு நன்றியுள்ளவராயுள்ளீர்கள்?

நீங்கள் கற்பிப்போருக்கு தேவன் அவர்களுக்கு செய்த யாவற்றையும் எழுதச் சொல்லுங்கள். தேவன் அவர்களுக்கு செய்ததை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ள சொல்லுங்கள். மகிழ்ச்சியுடன் தேவனை துதித்து ஆராதிக்க உற்சாகப்படுத்துங்கள்.

தேவன் அவரது ஜனங்களை தெரிந்து கொண்டார். இயேசுவிலே எம்மை மீட்டுக் கொண்டார். முழுமையான பரமதேசத்திற்கு நம்மைக் கொண்டு வருகிறார். அகமகிழுங்கள்! இயேசு செய்ததை கூறும் சில பாடல்களை பாடுங்கள். துதித்து ஆராதனை செய்யுங்கள்.

ஜெபியுங்கள்: தேவன் செய்த எல்லாவற்றிற்கும் நன்றி சொல்லுங்கள். கர்த்தரில் அகமகிழுங்கள்.

கற்றுக்கொள்ளுங்கள்: உபாகமம் 27:1–13

32 தேவனோடு உறவை சீராக வைத்துக் கொள்ளுங்கள்

பின்னணி

வாக்களிக்கப்பட்ட தேசத்திற்குள் வந்த பின்பு ஜனங்கள் ஒரு சமயச் சடங்கைச் செய்யும்படி மோசே கூறினான். இச்சடங்கானது. ஒரே தடவை ஒரு விசேட தலத்தில் செய்யப்பட வேண்டும்.

வசனங்கள் 1–13 ஐ படிக்கவும்

இரண்டு அல்லது மூன்று தடவைகள் இப்பகுதியை வாசியுங்கள். ஒவ்வொரு வசனத்தையும் வாசித்து உமது சொந்த மொழியில் அதை விளங்கிக் கொள்ளுங்கள்.

குறிப்புக்கள்

- **உபாகமம் 27:3.** "இந்த நியாயப்பிரமாண வார்த்தைகள்" என்பது உபாகமம் 1-26 வரையுள்ள அதிகாரங்களை குறிக்கும்.
- **உபாகமம் 27:12.** "ஆசீர்வாதத்தைக் கூறுதல்" என்பது அறிவித்தல் என அர்த்தப்படும்.

ஆராய்ந்து பாருங்கள்

இஸ்ரவேல் ஜனங்கள் செய்ய வேண்டிய நான்கு காரியங்கள்.

1. **உபாகமம் 1-26 வரையான வார்த்தைகளை பாரிய கற்களில் எழுதுதல் வேண்டும்.** எழுத்தானது தெளிவாகத் தெரிவதற்கு அக்கற்கள் சாந்து பூசப்பட்டிருந்தது. (வசனங்கள் 2-3, 8)

2. **அவர்கள் பலிபீடத்தை கற்களால் கட்ட வேண்டும்.** அக்கற்கள் இரும்பாயுதத்தினாலே வெட்டப்படாமல் இருக்க வேண்டும். (வசனங்கள் 5-6)

3. **அவர்கள் சர்வாங்க தகனபலியை செலுத்த வேண்டும் (வசனம் 6).** தகனபலியைச் செலுத்துவதற்கான சட்டங்கள் லேவியராகமம் முதலாம் அதிகாரத்தில் காணப்படுகின்றது. இது பாவ நிவாரணப் பலியாகும்.

4. **பின்னர் அவர்கள் சமாதான பலியை செலுத்த வேண்டும்.** சமாதானப்பலிக்கான சட்டங்கள் லேவியராகமம் மூன்றாம் அதிகாரத்தில் காணப்படுகின்றது. தேவனுடன் உள்ள உறவில் மகிழ்வதற்கான பலி இதுவாகும். கணிசமான அளவு மிருகங்கள் ஜனங்களின் உணவிற்காக வைக்கப்பட்டது. (வசனம் 7).

- இந்த சடங்காச்சாரத்தின் அர்த்தம் என்ன?

ஏபால் மலையிலேயே கற்களும் பலிபீடமும் வைக்கப்பட்டது. 13ம் வாக்கியத்தின்படி ஏபால் மலை சாபமான மலையாகும்.

- ஆசீர்வாதத்தின் மலையான கெரிசிம் மலையில் கற்களும் பலிபீடமும் வைக்கப்படவில்லை.

தேவனுடைய சட்டம் கீழ்படியாதவிடத்து சாபத்துக்கே வழியாகும் என்பதே இச்சடங்கின் அர்த்தமாகும். ஜனங்கள் சட்டத்தைக் கடைப்பிடிக்க தவறுவார்கள். தேவனின் சாபத்திற்கு ஆளாவார்கள். உபாகமம் 26:27ஐ வாசியுங்கள். ஆனால் சாபத்திலிருந்து வெளியே வருவதற்கு தேவன் வழி கூறுகிறார். தகனப்பலி பாவத்திற்கானது. அதனால் ஜனங்கள் சமாதான பலி மூலம் தேவ உறவில் மகிழலாம்.

ⓘ கற்றுக்கொள்ளுங்கள்: உபாகமம் 27:1–13

- சர்வாங்க தகன பலியும், சமாதான பலியும் புதிய ஏற்பாட்டில் நிறைவேறுவதை எவ்வாறு காண்கிறீர்?

கலாத்தியர் 3:10-14 வரை

வாசியுங்கள் தேவனுடைய கட்டளைகளுக்குக் கீழ்படியாததினால் வரும் சாபத்திலிருந்து ஜனங்கள் எவ்விதம் விடுதலை பெறலாம்?

⊕ **பிரதான கரு**
பாவமுள்ள ஜனங்கள் தேவனுடன் சீராக உறவை வைத்திருக்க தேவன் ஒரு வழியைத் தருகிறார்.

→ கற்பித்தல்: உபாகமம் 27:1–13

⊙ **ஆரம்பியுங்கள்**
உமது பிரதேசத்தில் நடைபெறும் ஒரு விசேட விழா ஒன்றிற்கு உதாரணம் தருக. விசேட விழாவிற்கான சட்ட விதிகளை தேவன் இஸ்ரவேல் ஜனங்களுக்குக் கொடுத்தார். இஸ்ரவேலர் வாக்களிக்கப்பட்ட தேசத்தினுள் பிரவேசித்த பின்னரே இந்த விழா கொண்டாடப்படும். ஒரு தடவை மட்டுமே இவ் விழா நடைபெறும்.

ஜனங்கள் நான்கு விடயங்களை அவசியம் செய்தல் வேண்டும்
⊙ **வாசியுங்கள்: உபாகமம் 27:2–7**
இஸ்ரவேல் ஜனங்கள் செய்ய வேண்டிய நான்கு விடயங்களை நீங்கள் கற்பிப்போரிடம் கூறுங்கள்.

1. சாந்து பூசிய கற்களிலே நியாயப்பிரமாணத்தை எழுத வேண்டும்.
2. பலி பீடத்தை அமைக்க வேண்டும்.
3. பாவத்திற்கான பாவ நிவாரணப் பலியை செலுத்த வேண்டும்.
4. சமாதானப் பலியை செலுத்த வேண்டும்.

இந்த விழாவின் சடங்காச்சாரங்களின் அர்த்தத்தை கற்பியுங்கள். இந்த விழா ஏபால் மலையில் நடைபெறும். அதுதான் சாபத்தின் மலையாகும் (வசனம் 13). தேவனின் நியாயப்பிரமாணங்கள்

→ கற்பித்தல்: உபாகமம் 27:1–13

எல்லாவற்றையும் ஒருவராலும் கடைப்பிடிக்க முடியாது.

ஜனங்கள் தேவனுக்கு கீழ்படிவின்மையினால் பாவம் செய்து சாபத்திற்கு உள்ளானார்கள் (வசனம் 26). ஆனால் தேவன் சாபத்திலிருந்து மீள்வதற்கு ஒரு வழியைத் தருகிறார். பாவத்திலிருந்து மன்னிப்பைப் பெற சர்வாங்க தகனப்பலிக்கான சட்டங்களை தேவன் தருகிறார். அதன் மூலம் தேவனோடு உள்ள உறவை ஜனங்கள் கொண்டாட முடியும்.

இயேசு சடங்காச்சார நிகழ்வுகளை நிறைவாக்குகிறார்
நியாயப்பிரமாணத்தையும் பலிகளையும் இயேசு இன்று எமக்காக நிறைவாக்குகிறார். நாம் மிருக பலிகளை செலுத்த வேண்டியதில்லை. இயேசு எமது பாவத்திற்கான பலியாகும். இயேசுவின் நிமித்தம் தேவனோடு உள்ள உறவைக் கொண்டாடுகிறோம்.

கலாத்தியர் 3:10~14 வரை வாசித்து கவனத்துடன் அதை விளங்கிக் கற்பியுங்கள். இயேசுவில் மட்டும் விசுவாசம் வைக்கும் போதே தேவன் எமது பாவங்களை மன்னிக்கிறார் என்பதைக் கூறுங்கள்.

பழைய ஏற்பாட்டு நியாயப்பிரமாணங்கள் இயேசுவை நோக்கியே எம்மை வழிநடத்துகின்றன. இயேசு மட்டுமே நியாயப்பிரமாணத்தை பூரணமாகக் கடைப்பிடித்தார். நாம் அப்படியல்லவே. நாம் பாவம் செய்து நியாயப்பிரமாணத்தைக் கடைப்பிடிக்காத வேளைகளில் இயேசுவிடம் திரும்பி மன்னிப்பை பெற வேண்டும்.

ⓘ **பிரயோகியுங்கள்:** நீங்கள் கற்பிப்போரில் உள்ள விசுவாசிகளுக்கு இந்த செய்தி முழுமையான மகிழ்ச்சியைத் தரும். இஸ்ரவேல் ஜனங்கள் மகிழ வேண்டும் என 7ம் வசனம் கூறுகிறது. கிறிஸ்தவர்கள் அகமகிழ அநேக காரணங்கள் உண்டு. மிருக பலிகளைவிட இயேசு மிக மிக மேலானவர்.

நீங்கள் கற்பிப்போரில் விசுவாசிகள் அல்லாதோருக்கு இயேசுவை விசுவாசிக்கும்படி அழைப்புக் கொடுங்கள். பாவத்தின் சாபத்தை இயேசு சிலுவையில் அகற்றிவிட்டார். கீழ்படியாமையினால் வரும் சாபத்திலிருந்து அவரை விசுவாசிப்பவர்களுக்கு அவர் விடுதலை தருகின்றார். அவர்கள் தேவனுடன் உள்ள உறவில் அகமகிழ முடியும்.

ⓘ **ஜெபியுங்கள்:** பாவத்தின் சாபத்திலிருந்து தப்புவதற்கு தேவன் தந்த வழிக்காக அவருக்கு நன்றி செலுத்துங்கள். தேவனிடம் மன்னிப்பைப் பெறவும் அவருடன் உறவு கொள்ளவும் அவிசுவாசிகள் தேவனிடம் நம்பிக்கை வைக்கும்படியாக ஜெபியுங்கள்.

33 தேவனால் ஆசீர்வதிக்கப்படுங்கள்

பின்னணி

தேவன் தந்த எல்லா நியாயப்பிரமாணங்களுக்கும் கீழ்படியும்படி மோசே இஸ்ரவேல் ஜனங்களை உற்சாகப்படுத்துகிறான். அவர்கள் தேவனுக்குக் கீழ்ப்படிந்தால் கிடைக்கும் ஆசீர்வாதங்களைப்பற்றி இப்பகுதியில் பேசுகிறான்.

வசனங்கள் 1–14 ஐ படிக்கவும்

2 அல்லது மூன்று தடவைகள் வாசியுங்கள்.

குறிப்புகள்

- **உபாகமம் 28:3.** "பட்டணத்திலும்" மற்றும் "பட்டணத்திற்கு வெளியிலும்" பட்டணத்திற்கு வெளியே என்பது கிராமப் பகுதிகளாகும். பட்டணத்திலும், பட்டணத்திற்கு வெளியே என்பது எல்லா இடங்களிலும் ஒவ்வொரு இடத்திலும் என அர்த்தப்படும்.
- **உபாகமம் 28:6.** "வருகையிலும்" மற்றும் "போகையிலும்" என்பது எல்லா நேரத்திலும் என்பதாகும்.
- **உபாகமம் 28:7.** ஏழு வழியாய் ஓடிப் போவார்கள் என்பதன் அர்த்தம் எதிரியானவன் தோல்வியுற்று பல திசைகளில் ஓடுவான் என்பதாகும்.
- **உபாகமம் 28:14.** "வாலாக்காமல் தலையாக்குவார்" என்பதன் அர்த்தம் இஸ்ரவேல் ஜனங்கள் தேசத்தை வழி நடத்துவார்கள் என்பதாகும்.

ஆராய்ந்து பாருங்கள்

இரண்டு தொகுதி ஆசீர்வாதங்களை எண்ணிப்பாருங்கள்.

1. பல விடயங்களை அதிகரிக்கப்பண்ணுகின்ற வசனங்களையும் ஆசீர்வாதங்களையும் வரிசைப்படுத்துக. மழை, ஆகாரம், பயிர்கள், விலங்குகள், பிள்ளைகள் மற்றும் அநேக விடயங்களாகும்.

- *இஸ்ரவேல் ஜனங்கள் ஆசீர்வதிக்கப்பட்டால் அவர்கள் எப்படி இருப்பார்கள் என எண்ணுகிறீர்?*

தேசத்திலிருந்த அவிசுவாசிகள் ஏனைய தேவர்கள் மழையையும் பிள்ளைகளையும் தருவதாக எண்ணினார்கள். ஆனால் உண்மையான தேவனே மழையையும் ஆசீர்வாதத்தையும் தருகின்றார்.

2. ஏனைய ஜனங்களைப்பற்றியும் மற்றும் தேவன் தனது ஜனங்களைப் பாதுகாப்பது பற்றியும் உள்ள வசனங்களை வரிசைப்படுத்துக.

- *ஆசீர்வதிக்கப்பட்ட இஸ்ரவேலர் ஏனைய ஜாதிகளைவிட எவ்வழிகளில் தனித்துவமுள்ளவர்களாக காணப்படுவர்?*

தேவனிடமிருந்து ஆசீர்வாதத்தை பெற ஜனங்கள் என்ன செய்ய வேண்டுமெனக் கூறுகின்ற வசனங்களை கண்டுபிடியுங்கள். ஜனங்கள் முழுமையாகக் கீழ்ப்படிய வேண்டும்.

- *இதே வகையான ஆசீர்வாதங்கள் இன்றைய கிறிஸ்தவர்களுக்கு உண்டா?*

கிறிஸ்தவர்கள் தேவ இராஜ்யத்திற்கு உரித்துடையவர்கள். நாங்கள் இப் பூமிக்கான ஜாதியர் அல்ல. கிறிஸ்தவ ஆசீர்வாதங்கள் பிரதானமாக ஆவிக்குரியவை (எபேசியர் 1:3). மலை பிரசங்கத்தின் ஆசீர்வாதங்கள்

⬇ கற்றுக்கொள்ளுங்கள்: உபாகமம் 28:1–14

(மத்தேயு 5:1-12) பரலோக இராஜ்யத்தைப் பற்றியதாகும். அநேக கிறிஸ்தவர்கள் இதை தவறாக விளங்கிக் கொள்கிறார்கள். தேவன் அவர்களைச் செல்வந்தராக இருக்க விரும்புகிறார் என எண்ணுகிறார்கள். எங்கள் பொக்கிஷம் பரலோகத்தில் உண்டு.

இயேசு எங்களுக்காக மரித்ததினாலே ஏற்கனவே எங்களுக்கு அவருக்குள்ளாக ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள் உண்டென நிச்சயிக்க முடியும். இயேசுவுக்கூடாக வரும் விசுவாசத்தினால் கிறிஸ்தவர்கள் நீதிமான்களாகவுள்ளனர்.

⊕ பிரதான கரு

ஆனால் எங்கள் விசுவாசமானது எமது வாழ்வில் கீழ்ப்படிதலினூடாக காட்டப்படுகிறது.

➡ கற்பித்தல்: உபாகமம் 28:1–14

⊙ ஆரம்பியுங்கள்

- நீங்கள் தேவனால் ஆசீர்வதிக்கப்பட்டுள்ளீர்களா? என்ன ஆசீர்வாதங்களைத் தேவன் உமக்கு கொடுத்துள்ளார்?

பலவிடயங்களால் ஆசீர்வதிக்கப்படல்

⊙ வாசியுங்கள்: உபாகமம் 28:3–6, 8, 11, 12

இஸ்ரவேல் ஜனங்கள் பலவிடயங்களால் ஆசீர்வதிக்கப்படுவர் என தேவன் வாக்களித்தார். மழை, பிள்ளைகள், பயிர்கள், ஆகாரம், விலங்குகள் (வசனங்கள் 3-6,8,11,12) அவர்கள் செழிப்பாக இருப்பார்கள்.

பலமுள்ள ஜாதியினராக ஆசீர்வதிக்கப்படுவர்

⊙ வாசியுங்கள்: உபாகமம் 28:7, 10, 13

அவர்களுடைய ஜாதி பலமுள்ளதாகும் எனவும் தேவன் வாக்களித்துள்ளார். எதிரிகள் அவர்களை தோற்கடிக்கமாட்டார்கள். ஏனைய ஜாதிகள் அவர்களை ஆளுகை செய்ய மாட்டார்கள். (வசனங்கள் 7,10,13) தேவன் அதே ஜனங்கள் பலமுள்ளதாகவும், ஆசீர்வதிக்கப்பட்ட ஜாதியாகவும் இருக்க வேண்டுமென விரும்புகிறார். அதன் மூலம் ஏனைய ஜாதிகள் ஆசீர்வதிக்கப்படும்.

ஆசீர்வதிக்கப்படுவது எப்படி?

⊙ வாசியுங்கள்: உபாகமம் 1–2, 9, 13–14

மோசே தேவனுடைய

➡ கற்பித்தல்: உபாகமம் 28:1–14

நியாயப்பிரமாணங்களை ஜனங்களுக்கு கொடுத்தான். (அதிகாரங்கள் 5-26). தேவன் கட்டளையிட்ட ஒவ்வொன்றுக்கும் கீழ்ப்படியும்படி உற்சாகப்படுத்துகிறான். முழுமையான கீழ்ப்படிவை தேவன் விரும்புகிறார்.

- கிறிஸ்தவர்களுக்கு இன்றும் அதே ஆசீர்வாதங்கள் உள்ளதா?

㊉ **எடுத்துக்காட்டு:** கிறிஸ்தவர்கள் செல்வமுடையவர்களாக இருக்க வேண்டுமென ஒரு பிரசங்கியார் பின்வருமாறு கூறுகிறார். செல்வந்தராக இருப்பது தேவ ஆசீர்வாதமாகும். விலையுயர்ந்த மோட்டார் வாகனங்கள், அதிகளவு நிலம், வீடுகள், தங்கம் மற்றும் பொருட்களை வைத்திருப்பது நல்லது. சில கிறிஸ்தவர்கள் இதைக் கேட்கும் போது துக்கமடைவார்கள். சில செல்வமுள்ள கிறிஸ்தவர்கள் தாம் மிகவும் நல்ல கிறிஸ்தவர்கள் என எண்ணுவார்கள். ஏனெனில் அவர்கள் பணக்காரர்கள். இது சரியா?

ⓘ **பிரயோகியுங்கள்:** இயேசு பரலோக இராஜ்யத்தைக் குறித்து பிரசங்கித்தார். தேவ ஜனங்கள் தற்போது பூமியில் ஒரு ஜாதியர் அல்ல. மத்தேயு 5:1-12ல் இயேசு சில ஆசீர்வாதங்களைப்பற்றி கற்பிக்கிறார். இவ்வசனங்களில் என்ன ஆசீர்வாதங்கள் உண்டு என்பதைக் கற்பியுங்கள். எபேசியர் 1:13~14 வரை வாசியுங்கள். இந்த வசனங்களில் உள்ள ஆசீர்வாதங்கள் எல்லாம் ஆவிக்குரியவை. மன்னிப்பு, தேவனுடைய பிள்ளையாகுதல் மற்றும் தேவனுடைய பரிசுத்த ஆவியானவரைக் கொண்டிருத்தல் போன்ற அற்புதமான காரியங்கள் ஆகும்.

தேவனிடமிருந்து பல பௌதிக ஆசீர்வாதங்கள் உண்டு. ஆனால் இயேசுவின் நிமித்தம் மிக முக்கிய ஆசீர்வாதங்கள் யாவும் ஆவிக்குரியவை அல்லது பரத்துக்குரியவை. இவற்றைத் தான் நாம் முதலில் வாஞ்சிக்க வேண்டும்.

இயேசுவில் வைக்கும் விசுவாசத்திற்கூடாக இந்த ஆசீர்வாதங்கள் யாவும் எமக்கானவை (எபேசி. 1:3). எங்கள் விசுவாசமானது தேவ கீழ்ப்படிதலைக் காட்ட வேண்டும். நாங்கள் எமது கீழ்ப்படிதலில் தங்கியிருப்பதில்லை, ஆனால் இயேசுவிலேயே தங்கியிருக்கிறோம்.

ⓘ **ஜெபியுங்கள்:** இயேசுவுக்கூடாக வரும் ஆவிக்குரிய ஆசீர்வாதங்களுக்காக தேவனுக்கு நன்றிகூறுங்கள். உங்களைத தெரிந்து கொண்டு, மன்னித்து, அவரது பிள்ளையாக்கி அவரது பரிசுத்த ஆவியானவரைத் தருவதற்காக தேவனுக்கு நன்றி செலுத்துங்கள்.

34 தேவனுக்கு கீழ்ப்படியாதிருக்க வேண்டாம்

பின்னணி
உபாகமம் 5-26 வரை மோசே ஜனங்களுக்கு தேவனுடைய நியாயப்பிரமாணங்களை கொடுத்தார். பின்பு 28:1-14 வரையுள்ள ஆசீர்வாதங்களோடு சேர்த்து கீழ்ப்படியும் படியாக ஊக்கப்படுத்துகிறார். தேவன் தமது நியாயப்பிரமாணங்களுக்கு கீழ்ப்படியாமல் போனால், தேவன் செய்வதைப் பற்றி இப்போது மோசே எச்சரிக்கை செய்கிறார்.

வசனங்கள் 15–44 ஐ படிக்கவும்
2 அல்லது 3 தடவைகள் வாசியுங்கள்.

குறிப்புகள்
- **உபாகமம் 28:15.** "சாபங்கள்" என்பது ஆசீர்வாதங்களுக்கு எதிரானதாகும். அவை மந்திரம் அல்ல. சாபங்கள் என்பவை, பாவத்திற்கான தேவனின் தண்டனையாகும்.
- **உபாகமம் 28:23.** "உன் தலைக்கு மேலுள்ள வானம் வெண்கலமும்" என்பதன் அர்த்தம் மழை பெய்யாது என்பதாகும்.

ஆராய்ந்து பாருங்கள்
தேவன் எல்லாவற்றையும் எவ்விதம் ஆளுகை செய்கிறார் என்பதை எண்ணிப்பாருங்கள். தேவன் ஆளுகை செய்வதைக் காட்டும் வாக்கியங்களை பாருங்கள். காலநிலை, வாழ்வும் மரணமும், பயிர்கள், விலங்குகள், நோய் மற்றும் ஏனைய ஜாதிகள்
- 1~14 வரையுள்ள வாக்கியங்களில் உள்ள ஆசீர்வாதங்களுக்கு எதிரானவை எந்த சாபங்கள்?
- 30~34 வரையுள்ள வசனங்களில் உள்ள தேவனுடைய சாபங்களுக்கு ஒருவன் ஆளானால் அது எப்படியிருக்கும்?
- நீங்கள் அதை எப்படி உணருகிறீர்கள்?

வசனங்கள் 45–68 ஐ படிக்கவும்
- 15-44 வரையுள்ள வசனங்களில் உள்ளவற்றை விட இந்த வசனங்களில் உள்ளவை எந்தளவு கடினமானவை?

புராதன இஸ்ரவேலில் அவர்கள் தேவனுக்கு கீழ்ப்படியாமல் போனால், தேவன் அவர்களை சபிப்பார். இந்த வேதப் பகுதி கூட்டாகவுள்ள ஜனங்களைப் பற்றியதாகும். ஒரு மனிதனை சபிப்பதைப் பற்றியதானதல்ல. ஜனங்கள் கூட்டாக கீழ்ப்படியாமல் போனால், முழு இஸ்ரவேல் ஜாதியும் துன்பமடையும்.

தவறான தேவர்களை வழிபடுவதே மிகப் பெரிதான பாவமாகும் தேவ ஜனங்கள் தேவையற்ற விக்கிரகங்களை வழிபட விரும்பினால், தேவன் அந்த ஜனங்களை தேவையற்ற தேவர்களான மரத்தை அல்லது கல்லை வழிபட இன்னுமோர் தேசத்திற்கு அனுப்பிவிடுவார்.

தேசத்திலிருந்து துரத்திவிடுதலே கடைசியான சாபமாகும். ஏனைய சாபங்கள் முதலில் வருபவையாகும். முதற்சாபங்கள் இடம் பெறுகையில் தேவ ஜனங்கள் தேவனிடமாய்த் திரும்ப முடியும். உதாரணத்திற்கு **ஆமோஸ் 4:6-12** ஐ வாசித்துப் பாருங்கள்.

⬇ கற்றுக்கொள்ளுங்கள்: உபாகமம் 28:15–68

கிறிஸ்தவர்களுக்கு நல்ல செய்தி உண்டு. ஒவ்வொருவரும் தேவனுக்கு கீழ்ப்படியாமல் உள்ளனர். ஆனால் இயேசு எங்களுக்கான சாபத்தை அவர் சுமந்து கொண்டார். கலாத்தியர் 3:13-14 ஐ வாசித்துப் பாருங்கள். இயேசுவின் மரணத்தை விசுவாசிப்பதின் மூலம் நியாயப்பிரமாணத்தை மீறுகின்ற விசுவாசிகள் சாபத்திலிருந்து விடுதலையாகிறார்கள். பயமின்றி நாம் வாழ வேண்டும். சகல விடயங்களையும் தேவனே ஆளுகை செய்கிறார்.

⊕ **பிரதான கரு**

தேவனுக்கு கீழ்ப்படியாமலிருக்க வேண்டாம். கீழ்ப்படியாமைக்கு தேவன் தண்டிப்பார்.

➡ கற்பித்தல்: உபாகமம் 28:15–68

⊕ **எடுத்துக்காட்டு:** ஆதியாகமம் 4ல் பாவம் செய்ய வேண்டாமென காயீனைத் தேவன் எச்சரித்தார். ஆனால் காயின் கேட்கவில்லை. காயின் தனது சகோதரன் ஆபேலை கொன்றான். தேவன் காயீனை சபித்து அவனை தேசத்திலிருந்து துரத்தி விட்டார்.

இஸ்ரவேல் ஜனங்களைப் பாவம் செய்ய வேண்டாமென தேவன் எச்சரித்தார். இஸ்ரவேலர் தேவனுக்கு கீழ்ப்படியாதபோது, தேவன் அவர்களை சபித்தார். வாக்களிக்கப்பட்ட தேசத்தில் இருந்து வெளியேற்றினார்.

சாபங்கள் என்றால் என்ன?

⌄ **வாசியுங்கள்: உபாகமம் 28:15, 20–21, 24–25, 28–29, 36**

இஸ்ரவேல் ஜனங்கள் கீழ்ப்படியாதபோது என்ன நடைபெறும் என்பதை கற்பியுங்கள்.

தேவன் ஏன் அவரது ஜனங்களை சபிக்கின்றார்?

⌄ **வாசியுங்கள்: உபாகமம் 28:45**

இஸ்ரவேல் ஜனங்கள் கீழ்ப்படியாதபோது அவர் அவர்களைத் தண்டிப்பார். இஸ்ரவேலர் தேவனுடைய நியாயப்பிரமாணங்களை அறிந்திருந்தார்கள். அவர்கள் தேவனுடைய நியாயப்பிரமாணங்களுக்கு கீழ்ப்படிய

வேண்டும் அல்லது தேவனின் சாபத்தைப் பெறுவார்கள்.

தேவன் மாத்திரமே சபிக்க முடியும்
எல்லாவற்றையும் தேவன் ஆளுகை செய்கிறார் என்பதை நீங்கள் கற்பிப்போருக்கு கூறுங்கள். காலநிலை, நோய், வாழ்வும் மரணமும், பயிர்களும் விலங்குகளும், மற்றும் ஜாதிகள் ஆகியவை. தேவன் மாத்திரமே ஆளுகை செய்கிறவர். சாபங்கள் மந்திரவித்தையல்லவே. சாபமிடுவதற்கான வல்லமை யாரிடமும் இல்லை.

இந்த எச்சரிப்பக்கு இஸ்ரவேல் செவி சாய்த்ததா?
பின்பதாக பழைய ஏற்பாட்டிலே, இஸ்ரவேல் ஜனங்கள் மேல் சாபம் வந்தது. ஏனெனில் அவர்கள் தேவனுக்கு கீழ்ப்படியவில்லை. ஆமோஸ் 4ம் அதிகாரத்தின் உதாரணத்தை நீங்கள் கற்பிப்போருக்கு விளக்குங்கள். சாபங்களும் கூட அவரது ஜனங்கள் மீண்டும் அவரிடம் திரும்புவதற்கான ஒரு வகையான வழியாகும். ஆனால் துக்கமான விடயம் என்னவென்றால் இஸ்ரவேல் ஜனங்கள் தேவனின் எச்சரிப்புக்கு செவி சாய்க்கவில்லை. அவர்கள் தேவனிடம் திரும்பவில்லை. எனவே அவர்களை வாக்களிக்கப்பட்ட தேசத்திலிருந்து தேவன் அடிமைகளாக பாபிலோனுக்கு கொண்டு சென்றார்.

கிறிஸ்தவர்கள் சபிக்கப்பட்டவர்களா?
நல்ல செய்தி என்னவென்றால் பாவத்திற்கான சாபத்தை இயேசு சிலுவையில் சுமந்து தீர்த்தார். இயேசுவுக்குள்ளான விசுவாசிகள் சாபத்தின் கீழே இல்லை. ஒவ்வொருவனும் பாவம் செய்கிறான். ஒவ்வொரு நபரும் கீழ்ப்படியாமையினாலே சாபத்தின் கீழானவர்களாக இருந்தனர். சாபத்தை அகற்றுவதற்காக இயேசு மரித்தார். அதன் மூலம் நாம் தேவனால் ஆசீர்வதிக்கப்படுகிறோம்.

ⓘ **பிரயோகியுங்கள்:** நீங்கள் கற்பிப்போரில் சிலர் விசுவாசிகள் அல்லாதவர்களாயிருக்கலாம். சிலர் நாம் சபிக்கப்பட்டுள்ளோம் என பயமடையலாம். இயேசுவுக்குள் உள்ள விசுவாசிகளை யாருமே சபிக்க முடியாதென கூறி அவர்களை உற்சாகப்படுத்துங்கள். தேவன் மன்னிப்பவராததால் கீழ்ப்படியாமல் இருக்க வேண்டாமென அவர்களை எச்சரியுங்கள். உண்மையான விசுவாசிகள் எப்போதும் தேவனைப் பிரியப்படுத்த விரும்புவார்கள்.

ஜெபியுங்கள்: எமது கீழ்ப்படியாமையின் சாபத்தை அகற்ற இயேசு மரித்ததற்காக தேவனுக்கு நன்றி செலுத்துங்கள். இயேசுவை விசுவாசிக்கவும், பயமின்றி சுதந்திரமாக வாழவும் உதவி செய்யும்படி தேவனிடம் கேளுங்கள்.

35 தேவன் இருதயங்களை மாற்றுவார்

≪ பின்னணி

ஜனங்கள் கீழ்ப்படியாமல் போவார்கள் என்பது மோசேக்கு தெரியும். ஆனால் தேவன் அவர்களுடைய இருதயங்களை மாற்றி அதன் மூலம் அவர்களைக் கீழ்ப்படியப் பண்ண முடியும் என தேவன் வாக்களிக்கிறார்.

வசனங்கள் 1–10 ஐ படிக்கவும்

2 அல்லது 3 தடவைகள் வாசியுங்கள்.

குறிப்புகள்

- **உபாகமம் 30:2.** "திரும்புங்கள்/ தேவனிடம் திரும்புங்கள்" என்பதன் அர்த்தம் மனந்திரும்பி பாவத்திலிருந்து விலகுவதாகும்.
- **உபாகமம் 30:6.** "விருத்தசேதனம்" என்பதன் சாதாரண அர்த்தம் நுனித்தோலை வெட்டுவதாகும். இந்த வசனம் இருதயத்தின் விருத்தசேதனம் பற்றியதாகும். தேவனுடன் ஒப்புரவாகுவதற்கு, தேவன் உங்கள் இருதயத்தை மாற்றுகிறார் என்பதே இதன் அர்த்தமாகும்.

ஆராய்ந்து பாருங்கள்

உபாகமம் 29:18-28 வரை வாசியுங்கள். தேவன் அவரது ஜனங்கள் அவரிடமிருந்து விலகும் இருதயம் உடையவர்கள் என்பதை அறிகின்றவராக உள்ளார் (வசனம் 18). ஜனங்கள் தேவனிடமிருந்து விலகுவார்கள் (வசனம் 25-28). அவர்கள் வாக்களிக்கப்பட்ட தேசத்தில் இருந்து வெளியேற வேண்டும்.

நற்செய்தியாவது! தேவன் தமது ஜனங்களை மீட்டு வாக்களிக்கப்பட்ட தேசத்தினுள் கொண்டு வருவார் என்பதாகும். தேவன் தமது வார்த்தையை ஜனங்களின் இருதயத்தினுள் கொண்டு வருவார் (வசனங்கள் 1,6). இஸ்ரவேல் ஜனங்கள் தேவனிடம் திரும்பி, அவருக்கு கீழ்ப்படிந்து, அவரை நேசிப்பார்கள். (வசனங்கள் 2,6,8,10)

தேவன் இஸ்ரவேல் ஜனங்களை வாக்களிக்கப்பட்ட தேசத்திற்கு கொண்டு வந்து அவர்களை ஆசீர்வதிப்பார் (வசனங்கள் 3-5,9). ஆதியாகமம் 12:2-3ல் ஆபிரகாமுக்கு கொடுத்த வாக்குத்தத்தங்களை தேவன் காத்துக் கொள்வார் என்பதாகும்.

ஆதியாகமம் 17:10-14 ஐ வாசியுங்கள். விருத்தசேதனம் செய்யும்படி தேவன் ஆபிரகாமுக்கு கூறினார். பௌதிக (சரீர) விருத்தசேதனமானது தேவனுடன் உள்ள விசேட உறவைக்காட்டுகிறது. ஆனால் உண்மையான பிரச்சனையானது சரீரத்தில் அல்ல, இருதயத்திலேயே இருந்தது. உண்மையான விருத்தசேதனமானது இருதயத்தைப் பற்றியதாகும். உபாகமம் 10:16ல் தேவன் இஸ்ரவேல் ஜனங்களிடம், அவர்கள் இருதயத்தில் விருத்தசேதனம் செய்ய வேண்டுமென கூறினார். ரோமர் 2:28-29 ஐ வாசியுங்கள்.

முழு இருதயத்துடன் தமது ஜனங்கள் தம்மை நேசிக்க வேண்டுமென தேவன் விரும்புகிறார் என்பதே இதன் அர்த்தமாகும். ஆனால் தேவஜனங்கள் பிடிவாதமும்,

ⓘ கற்றுக்கொள்ளுங்கள்: உபாகமம் 30:1–10

விலகுகின்றதுமான இருதயமுடையவர்களாக காணப்படுகின்றனர். அவர்களுடைய இருதயங்கள் மாறுவதற்கு தேவன் அவர்களுக்குத் தேவை. மாற்றப்பட்ட இருதயத்துடன் அவர்கள் தேவனை நேசித்து அவருக்கு கீழ்ப்படிவார்கள். (வசனங்கள் 6-8)

- தேவன் எப்போது இருதயங்களை மாற்றுகிறார்?

வாசியுங்கள் கொலொசேயர் 2:10-11. இயேசுவிலே விசுவாசம் வைக்கும் போது தேவன் ஜனங்களின் இருதயங்களை மாற்றுகிறார்.

⊕ **பிரதான கரு**

தேவன் இருதயங்களை மாற்றுவார். எனவே அவரது ஜனங்கள் அவருக்கு கீழ்ப்படிய முடியும்.

→ கற்பித்தல்: உபாகமம் 30:1–10

எடுத்துக்காட்டு: ஒரு மனிதன் முழுமையாக தேவனுக்கு கீழ்ப்படிய விரும்பினான். ஒவ்வொரு நாளும் தேவனுக்காக எல்லாவற்றையும் சரியாக செய்ய வேண்டுமென தீர்மானம் செய்தான். ஆனால் ஒரு நாள் இன்னொரு மனிதனிடம் கோபம் அடைந்தான். இன்னுமொரு நாள் அதிக பணத்திற்காக இச்சித்தான். இன்னுமொரு நாள் அவனது அயலவனுடைய பொருட்களை பெற விரும்பினான்.

ஜனங்கள் ஏன் முழுமையாக தேவனுக்கு கீழ்படிவதில்லை? நியாயப்பிரமாணம் தெளிவாக உள்ளது. பிரச்சனையானது எமக்குள்ளே தான் உள்ளது. எங்கள் இருதயங்கள் தான் சரியில்லை. ஜனங்களுக்கு புதிய இருதயங்கள் தேவை.

வாக்களிக்கப்பட்ட தேசத்திலே தேவ ஜனங்கள் கீழ்ப்படிவதில் தவறுவார்கள். தேவனுடைய சாபங்கள் (அதிகாரம் 28:15-68) இஸ்ரவேலர் மேல் வரும். அவர்கள் தேசத்திலிருந்து அகற்றப்படுவார்கள். ஆனால் அதுதான் முடிவல்ல. நல்ல செய்தி உண்டு:

தேவன் என்ன செய்வார்?

வாசியுங்கள்: உபாகமம் 30:1, 6

ஆதியாகமம் 17:10~14 வரையுள்ள பகுதியில் உள்ள சரீர விருத்தசேதனம் பற்றி கற்பியுங்கள். தேவனுடன் உள்ள

➡ கற்பித்தல்: உபாகமம் 30:1–10

உடன்படிக்கை உறவிற்கான அடையாளம் என கூறுங்கள். உண்மையான விருத்தசேதனம் இருதயத்திற்கானது. ரோமர் 2:28,29 வாசித்து விளக்குங்கள்.

இஸ்ரவேலர் என்ன செய்வார்கள்?
வாசியுங்கள்: உபாகமம் 30:2, 6, 8, 10
தேவன் இஸ்ரவேலின் இருதயங்களை மாற்றும் போது, ஜனங்கள் தேவனிடம் திரும்பி அவருக்கு கீழ்ப்படிவார்கள். ஜனங்கள் அவர்கள் பாவத்திற்காக மனம் வருந்தி தேவனிடம் திரும்புவார்கள். ஜனங்கள் தேவனை அன்பு செய்வார்கள். (வசனம் 6)

தேவன் பின்பு என்ன செய்வார்?
வாசியுங்கள்: உபாகமம்: 30:3–5, 9
ஜனங்கள் தேவனிடம் திரும்பும் போது தேவன் அவர்களை ஆசீர்வதிப்பார். அவர்களுக்கு மீண்டும் அநேக நல்ல காரியங்களைக் கொடுப்பார். அவர்கள் மீண்டும் பெருகுவார்கள். ஆபிரகாமுக்கு கொடுத்த வாக்கை தேவன் காத்துக் கொள்வார்.

இது எப்போது நடைபெறும்?
இது நல்ல செய்தி. ஆனால் இது எப்போது நடைபெறும்? இயேசுவில் விசுவாசம் வைக்கும் போது தேவன் ஜனங்களின் இருதயங்களை மாற்றுவார். கொலோசெயர் 2:10–11 வரையுள்ள வசனங்களை வாசித்து அதை நீங்கள் கற்பிப்போருக்கு விளக்குங்கள். ஒரு நபர் இயேசுவை விசுவாசிக்கும் போது பரிசுத்த ஆவியானவர் அவனுடைய இருதயத்தினுள் வந்து இருதயத்தை மாற்றுவார்.

பிரயோகியுங்கள்: நீங்கள் கற்பிப்போரில் சிலர் இயேசுவை விசுவாசிப்பவர்களாக இருக்க மாட்டார்கள். அவர்களின் பாவத்திலிருந்து திரும்ப அவர்களை ஊக்குவியுங்கள். இயேசுவிடம் திரும்பி தேவ ஆவியானவரை கேட்க ஊக்குவியுங்கள். இயேசுவை விசவாசித்து, பாவத்திலிருந்து திரும்பினால், தேவனுடைய ஆவியானவர் அவர்களுடைய இருதயங்களில் இருக்கிறார் எனலாம். அவர்கள் இருதயங்களில் நடைபெறும் தேவனுடைய கிரியைகளை நம்பும் படி ஊக்கப்படுத்துங்கள்.

ஜெபியுங்கள்: தேவனை அன்பு கூரும் விதமாக எங்கள் இருதயங்களை மாற்றுகின்ற, அவருடைய அற்புதமான கிருபைக்காக தேவனுக்கு நன்றி செலுத்துங்கள். ஒவ்வொரு நாளும் இயேசுவைப் போல் மேலும் மேலும் எம்மை மாற்றிக் கொண்டிக்கும்படி தேவனிடம் கேளுங்கள்.

36 ஜீவனை தெரிந்து கொள்ளுங்கள்

பின்னணி
வாக்களிக்கப்பட்ட தேசத்தில் வாழ்வதற்காக மோசே ஜனங்களை ஆயத்தம் செய்கிறான். அவனுடைய பிரசங்கங்கள் இந்த வசனங்களுடன் முடிவடைகிறது.

வசனங்கள் 11–20 ஐ படிக்கவும்
2 அல்லது 3 தடவைகள் இப்பகுதியை வாசியுங்கள். ஒவ்வொரு வசனத்தையும் வாசித்து, உமது சொந்த மொழியில் விளங்கிக் கொள்ளுங்கள்.

குறிப்புக்கள்
- **உபாகமம் 30:19.** “வானத்தையும், பூமியையும் சாட்சியாக வைத்து.” தேவன் தமது ஜனங்களுக்கு வாக்குப் பண்ணினார். அவர்கள் கீழ்ப்படியும்படி அவர்களுடன் ஒரு உடன்படிக்கையை ஏற்படுத்த விரும்பினார்.

ஆராய்ந்து பாருங்கள்
வசனங்கள் 11-14 வரை. தேவனுடைய நியாயப்பிரமாணங்களுக்கு இஸ்ரவேல் ஜனங்கள் கீழ்ப்படியும்படி மோசே உற்சாகப்படுத்தினான். இது அதிக கடினமானதல்ல, ஏனெனில் தேவன் அதை அவர்களின் இருதயத்தில் போடுவார். எனவே அவர்களால் அதைச் செய்ய முடியும். கடைசியாகப் பார்த்த பகுதியில் என்ன வாசித்தோம் என்பதை நினைவுபடுத்திப் பாருங்கள். மனித இருதயம் தான் பிரச்சனையானதாகும். ஆனால் தேவன் இருதயத்தை விருத்தசேதனம் செய்வார் அல்லது மாற்றுவார். அதனால் அவரது ஜனங்கள் நியாயப்பிரமாணத்திற்கு கீழ்ப்படிய முடியும்.

- இந்த வசனங்கள் புதிய ஏற்பாட்டிலே எங்கே மேற்கோளாக காட்டப்பட்டுள்ளன?

ரோமர் 10:5-9. வரை வாசியுங்கள். வார்த்தை என்பது இயேசுவைப் பற்றியதான நற்செய்தியாகும். இயேசு தேவனின் வார்த்தையை எமது இருதயத்திலும் வாயிலும் வைத்துள்ளார் என பவுல் கூறுகிறார். மோசே எதிர்காலத்தை சுட்டிக் காட்டுகிறார். இயேசுவின் நற்செய்தியானது தேவனுடைய வார்த்தையை எமது இருதயங்களிலும், வாய்களிலும் வைத்து தேவனைப் பிரியப்படுத்த உதவுகிறது. நற்செய்தியானது கடினமானது அல்ல. அது தூரமானது அல்ல. ஏனெனில் இயேசு நற்செய்தியை எம்மிடம் கொண்டு வருகிறார்.

வசனங்கள் 15-20. மோசேயின் பிரசங்கத்தின் கடைசிப்பகுதி இதுவாகும். தேவனிடம் திரும்பும்படி மோசே இஸ்ரவேல் ஜனங்களுக்கு சவால் விடுக்கிறான். ஜீவனையும், செழிப்பையும் ஆசீர்வாதத்தையும் தெரிந்து கொள்ளும்படி வேண்டுகிறான். “தேவனே உங்கள் ஜீவன்” என 20ம் வாக்கியம் கூறுகிறது. ஜீவன் தேவனிடமிருந்து வருகிறது. நியாயப்பிரமாணத்தில் இருந்து அல்ல. தேவன் அவரது ஜனங்களின் இருதயங்களை மாற்றுகின்ற போது, அவர் ஜீவனைக் கொடுக்கிறார். (வசனம் 6)

⬇ கற்றுக்கொள்ளுங்கள்: உபாகமம் 30:11–20

- கிறிஸ்தவர்களைப் பொறுத்தவரையில் தேவன் எவ்விதம் எங்களுக்கு இன்று ஜீவனாகவுள்ளார்?

இயேசுவே எமது ஜீவன். இயேசுவே வழியும், சத்தியமும், ஜீவனுமாயுள்ளார். மரணத்திலிருந்து உயிர்த்தெழுந்த இயேசுவிடமிருந்து ஜீவன் வருகிறது. இயேசு எமது இருதயங்களை மாற்றுகிறார். அதன் மூலம் நாம் அவரை அன்பு செய்து, அவருக்காக எப்பொழுதும் முழுமையாக வாழ முடியும். நாம் இயேசுவை தெரிந்து கொள்ளவேண்டும்.

⊕ **பிரதான கரு**

தேவன் அவரது ஜனங்கள் தம்மை பின்பற்றி வாழ்வதை தெரிந்துகொள்ள விரும்புகிறார்.

➡ கற்பித்தல்: உபாகமம் 30:11–20

⊙ **ஆரம்பியுங்கள்**

ஜனங்கள் கூறும் கடைசி வார்த்தைகள் அநேகமாக நினைவு கூரப்படும்.

- யாராவது கடைசியாக கூறின வார்த்தைகள் உமக்கு ஞாபகம் இருக்கிறதா? ஒரு பிரசங்கத்தின் கடைசி வார்த்தைகள் உமக்கு ஞாபகம் உண்டா?

மோசே “ஜீவனை தெரிந்து கொள்ளுங்கள்” என்ற பலத்த சவாலான வார்த்தைகளோடு தமது பிரசங்கத்தை முடிக்கிறார்.

வார்த்தை உமக்கு அருகில் உள்ளது.

⊙ **வாசியுங்கள்: உபாகமம் 30:11–14**

உபாகமம் 30:1-10 வரையான வசனங்களை நினைவில் கொள்ளுங்கள். தேவன் தமது ஜனங்களின் இருதயங்களை மாற்றுவார். தேவனுடைய வார்த்தையை கடைப்பிடிப்பது கடினமானதல்ல மற்றும் தூரமானதுமல்ல என மோசே ஜனங்களுக்கு கூறுகிறான். அது அவர்களுடைய வாயிலும் இருதயத்திலும் உள்ளது.

மோசே எதைக் குறித்துப் பேசுகிறான். பவுல் இப்பகுதியை ரோமர் 10:5-9ல் பயன்படுத்துகிறார். இயேசுவின் நற்செய்தி தான்

→ கற்பித்தல்: உபாகமம் 30:11–20

வார்த்தையாகும். இயேசுவில் விசுவாசம் வைப்பது நற்செய்தியாகும். இது நம்மை தேவனோடு ஒப்புரவாக்குகிறது. நியாயப்பிரமாணத்தினூடாக நாம் தேவனோடு ஒப்புரவாக முடியாது. ஏனெனில் எங்கள் இருதயங்கள் சரியாக இல்லை.

ஜீவனைத் தெரிந்து கொள்ளுங்கள்.

வாசியுங்கள்: உபாகமம் 30:15–20

ஜீவனைத் தெரிந்து கொள்ளும்படி ஜனங்களுக்கு கூறுவதுடன் மோசே தமது பிரசங்கத்தை முடிக்கிறார். மரணத்தையும் அழிவையும் சாபத்தையும் ஜனங்கள் தெரிந்து கொள்ள முடியும். இதன் அர்த்தமாவது ஜனங்கள் தேவனுக்கு கீழ்ப்படியாமல் வேறு தெய்வங்களை நாடுவதாகும். அல்லது தேவனை நம்புவதைத் தெரிந்துகொண்டு தேவனைப் பின்பற்ற முடியும். தேவன் ஜீவன் தருகிறார். இதன் பொருளானது ஜனங்கள் தேவனுக்கு கீழ்ப்படிவார்கள் என்பதாகும்.

எங்களைப் பொறுத்தவரையில் ஜீவனைத் தெரிந்துகொள்வது என்பது இயேசுவைத் தெரிந்து கொள்வதாகும். அவரே வழியும், சத்தியமும், ஜீவனுமாயிருக்கிறார். அவர் தமது வாழ்வு தரும் ஆவியைத் தருகிறார். இயேசுவே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயுள்ளார். ஜீவனைத் தெரிந்து கொள்வது என்பது தேவனின் கிருபையைத் தெரிந்து கொண்டு, இயேசுவின் நற்செய்தியை ஏற்றுக் கொள்வதாகும்.

ஜனங்கள் என்ன பெரிதான தெரிவுகளை செய்ய முடியும்: ஜீவன், செழுமை, ஆசீர்வாதம், வாழ்ந்து பெருகுவது, தேசத்தில் நீண்ட நாள் வாழ்ந்து தேவனை அன்பு செய்வது ஆகியனவாகும். இந்தப்பட்டியலானது ஜனங்களை ஏவி தேவனுக்கு ஆம் எனக் கூறுவதாகும். தேவனைத் தெரிந்து கொள்வது எவ்வளவு நன்மையான காரியம் என நீங்கள் கற்பிப்போருக்கு கூறுங்கள்.

பிரயோகியுங்கள்: நீங்கள் கற்பிப்போரில் சிலர் விசுவாசிகள் அல்லாது காணப்படலாம். இயேசுவைத் தெரிந்து கொண்டு வாழும்படி அவர்களை ஊக்கப்படுத்துங்கள். இயேசுவின் மரணமானது அவர்களது பாவங்களையும், சாபங்களையும், அகற்றிவிடும் என்பதை விசுவாசிக்க உற்சாகம் அளியுங்கள். சிலர் தேவனிடமிருந்து விலகிச் செல்லாமல் அவர்கள் மீண்டும் தேவனிடம் வந்து, அவரையே தெரிந்து கொள்ள உற்சாகம் அளியுங்கள். இயேசுவைத் தெரிந்து கொள்வதன் மூலம் வரும் நல்ல விடயங்களை காணும்படி உற்சாகப்படுத்துங்கள்.

ஜெபியுங்கள்: எமது இருதயங்கள் தேவனைத் தெரிந்து கொண்டு வாழ தேவனிடம் கேளுங்கள். நாம் கீழ்ப்படியும்படியாக இயேசு எம்மருகே கொண்டு வருகின்ற நற்செய்தியின் வார்த்தைக்காக தேவனுக்கு நன்றி செலுத்துங்கள்.

37 தேவனுக்கு பயப்படுங்கள். எதிரிக்கு அஞ்ச வேண்டாம்

பின்னணி
மோசே விரைவில் மரிக்க போகிறார். அவர் இஸ்ரவேல் ஜனங்களை நாற்பது வருடங்கள் வழிநடத்தினார். அவருடைய கடைசி பிரசங்கத்தின் பின் மோசே யோசுவாவிடம் பணிகளை ஒப்படைக்கிறான்.

வசனங்கள் 1–13 ஐ படிக்கவும்

குறிப்புகள்
- **உபாகமம் 3:1-2.** "யோர்தானைக் கடக்க வேண்டாம்." தேசத்துள் பிரவேசிக்க மோசே அனுமதிக்கப்படவில்லை. எண்ணாகமம் 20:9-12ல் உள்ள மோசேயின் பாவம் தான் இதற்கு காரணம்
- **உபாகமம் 31:4.** "சீகோன் மற்றும் ஓகு" உபாகமம் 2:24-3:11 வரை வாசியுங்கள்.
- **உபாகமம் 31:10.** "கூடாரப் பண்டிகை" உபாகமம் 16:13-15 வரை வாசித்துப்பாருங்கள்.

ஆராய்ந்து பாருங்கள்
வசனங்கள் 1-6. இஸ்ரவேல் ஜனங்களுடன் மோசே பேசுகிறான். அவன் தேசத்திற்குள் பிரவேசிக்க மாட்டான் என அவர்களுக்கு கூறுகிறான். யோசுவா அவர்களை வழிநடத்துவான் எனவும், நியாயப்பிரமாணங்களுக்கு கீழ்ப்படியும்படி ஜனங்களிடம் கூறுகிறான்.

- யோசுவாவுக்கும், ஜனங்களுக்கும் மோசே என்ன கட்டளை கொடுத்தான்.
- இந்த விடயத்தை ஏன் மோசே முக்கியப்படுத்தினான்?

நாற்பது வருடங்களுக்கு முன்பதாக இஸ்ரவேல் ஜனங்கள் தேசத்திற்குள் பிரவேசிக்கவில்லை. தேசத்தில் இருந்த ஜனங்களுக்கு பயந்திருந்தார்கள். உபாகமம் 1:27-28 வரை வாசித்துப் பாருங்கள் அவர்களுக்குப் இப்போது பயப்பட வேண்டாமென மோசே கூறுகிறான். துணிவுள்ளவர்களாகவும், பலமுள்ளவர்களாகவும் இருங்கள் எனக் கூறுகிறான். தேவன் அவர்களோடு இருந்து அவர்களுக்காக யுத்தம் செய்வார் என நினைவூட்டுகிறான்.

வசனங்கள் 7-8. மோசே, யோசுவாவிடம் பேசுகிறான். பயப்படவேண்டாம் எனவும் யோசுவாவிடம் கூறுகிறான். யோசுவா பலமுள்ளவனாகவும், திடமுள்ளவனாகவும் இருக்க வேண்டும். ஆபிரகாமின் சந்திதியினருக்கு தேவன் தேசத்தை வாக்குப் பண்ணினார் என யோசுவாவுக்கு நினைவூட்டுகிறான். தேவன் உண்மையுள்ளவர். யோசுவாவுடன் தேவன் இருப்பதை மோசே நினைவூட்டுகிறான்.

- யோசுவாவையும், ஜனங்களையும் எது பலமுள்ளதாயும், திடமுள்ளதாயும் மாற்றும்?
- எது அவர்களை எதிரிக்கு பயப்படாதபடி செய்யும்?

வசனங்கள் 9-13. ஒவ்வொரு ஏழு வருடங்களும், ஆசாரியர்கள் சகல நியாயப்பிரமாணங்களையும்,

ⓘ கற்றுக்கொள்ளுங்கள்: உபாகமம் 31:1–13

ஜனங்களுக்கு முன் வாசிக்க வேண்டும். ஜனங்கள் தேவனுடைய நியாயப்பிரமாணங்களை மறக்கக் கூடாது. தேவ ஜனங்களுடைய உண்மையான தலைவன் தேவனே. தேவன் தமது ஜனங்களை அவரது வார்த்தைக்கூடாகவும், யோசுவாக்கூடாகவும் வழிநடத்துவார். யோசுவா தேவனுக்கு கீழாக இருந்து தேவனுடைய வார்த்தையைப் பின்பற்ற வேண்டும்.

- தேவ ஜனங்களுக்கு இந்த வசனப்பகுதி என்ன கூறுகிறது?
- தலைவர்களுக்கு அது என்ன சொல்கிறது?

⊕ **பிரதான கரு**

தேவனுடைய வார்த்தைக்கு செவி சாய்த்து அவருக்குப் பயப்படுங்கள். எதிரிக்குப் பயப்பட வேண்டாம்.

→ கற்பித்தல்: உபாகமம் 31:1–13

ஆரம்பியுங்கள்

தேவ ஜனங்களின் தலைவர்கள் விலகிப்போகிற போது அல்லது மரிக்கின்ற போது எதிர்காலத்தைக் குறித்து ஜனங்கள் பயப்படக் கூடும். மோசே தேவ ஜனங்களின் பெரிதான தலைவர்களில் ஒருவராவார். மோசே மரிப்பார் என ஜனங்கள் அறிந்திருந்தார்கள்.

மோசே ஜனங்களை உற்சாகப்படுத்துகிறான்

வாசியுங்கள்: உபாகமம் 31:1–6

ஜனங்களைப் பலமாகவும், திடமாகவும் இருக்கும்படி மோசே கூறுகிறான். ஜனங்கள் திடமாகவும் பலமாகவும் இருக்க முடியும். ஏனெனில் தேவன் அவர்களை வழிநடத்துவார். தேவன் வல்லமையும், உண்மையும் உடையவர். எதிரி பலமானவன். ஆனால் தேவன் அதிக பலமுள்ளவர்.

மோசே யோசுவாவை பலப்படுத்துகிறான்

வாசியுங்கள்: உபாகமம் 31:7–8

மோசே யோசுவாவை பலமாகவும் திடமாகவும் இருக்கும்படி கூறுகிறான். தேசத்தை வாக்குப்பண்ணின தேவன் உண்மையுள்ளவர் என யோசுவாவுக்கு நினைவூட்டுகிறான். யோசுவா பலமுள்ளவனாகவும், நல்ல திடமுள்ளவனாகவும் இருக்கமுடியும். ஏனென்றால் தேவன் உண்மையும் வல்லமையும் மிக்கவர்.

➡ கற்பித்தல்: உபாகமம் 31:1–13

ஜனங்கள் தேவ வார்த்தையை கேட்க வேண்டும்

வாசியுங்கள்: உபாகமம் 31:9–13
ஒவ்வொரு ஏழாம் வருடத்தின் முடிவிலும் ஜனங்கள் தேவனுடைய நியாயப்பிரமாணத்தை கேட்க வேண்டும். ஆசாரியர்கள் அதை வாசிக்க வேண்டும். ஜனங்கள் தேவனுக்குப் பயப்படுவதைக் கற்றுக் கொள்ள வேண்டும். ஜனங்கள் தேவனுக்குப் பயந்தால் அவர்கள் எதிரிக்குப் பயப்பட மாட்டார்கள்.

மோசே இறந்தபின்னர், யோசுவா ஜனங்களை வழிநடத்தினான். ஆனால் ஜனங்கள் தேவ வார்த்தைக்கூடாகவும் வழிநடத்தப்பட்டார்கள். தேவன் தமது வார்த்தைக்கூடாகவும் மனித தலைவருக்கூடாகவும் ஜனங்களை வழிநடத்துகிறார்.

எடுத்துகாட்டு: ஒரு சபையானது அவர்களுடைய சபைக்கு மேய்ப்பராக ஒருவரை தெரிய செய்ய வேண்டியிருந்தது. ஒருவர் பிரபல்யமானவர். ஏனெனில் அவர் ஒருபொழுதும் யாரையும் குழப்பியது இல்லை. எப்பொழுதும் ஒவ்வொருவரையும் மகிழ்ச்சிப்படுத்த முயற்சிப்பவர். மற்றவர் பிரபல்யமானவர் அல்ல, அவர் பிரபல்யமானவராக இருக்கவில்லை. ஏனெனில் சபையை நடாத்தும் சக்திமிக்க அல்லது செல்வந்த ஜனங்களுக்குப் பயப்படவில்லை. இவர் சில சமயங்களில் தேவ வார்த்தையைப் பேசி, அதிகாரத்திலுள்ளவர்களை நிலை குலையச் செய்வார்?

மேய்ப்பராக இருப்பதற்கு சிறந்த நபர் யார்?

பிரயோகியுங்கள்: தேவ ஜனங்களுடைய சிறந்த தலைவர்கள் யாவர்? தேவ வார்த்தைக்கு கீழானவர்களே மிகச்சிறந்த தலைவர்களாவார். ஒரு தலைவர் அவனோ அல்லது அவளோ தேவனை நம்பி அவருக்கு கீழ்ப்படிந்து இருக்கும் போது மட்டுமே, பலமாகவும் திடமாகவும் இருக்கலாம்.

யோசுவா தெரிவு செய்யப்பட்டது அவனுக்கு இருந்த யுத்த திறைமையினால் அல்ல, ஆனால் அவன் தேவனுக்குக் கீழ்ப்படிந்து தேவனை நம்பினதாலேயே ஆகும். நீங்கள் சபைக்கு தலைவரை தெரிவு செய்யும் போது எது மிக முக்கியமானது என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

தேவ ஜனங்கள் யாவரும் பலமாகவும், திடமாகவும் இருக்க வேண்டும். தலைவன் என்பவன் விசேடமானவனோ அல்லது தனித்துவமானவனோ அல்ல, பலமாகவும் முழுத்திட முள்ளவனாகவும் இருப்பதற்கு தேவ வார்த்தையை விசுவாசிக்க வேண்டும்.

- தேவ வார்த்தையை எத்தனை தடவைகள் வாசிக்கிறீர்கள்? நீங்கள் அவற்றுக்கு கவனமாக செவிமடுத்து கீழ்ப்படிகிறீர்களா?

ஜெபியுங்கள்: தேவனை நம்பி கீழ்ப்படிகின்ற தலைவர்களை அவரது சபைக்குத் தரும்படி தேவனிடம் கேளுங்கள். சபைக்கு உண்மையான தலைவராயிருக்கும்படி தேவனிடம் கேளுங்கள்

38 கற்றுக்கொண்டு நினைவுகூர பாடல்களைப் பாடுங்கள்

பின்னணி

மோசே தான் மரித்தபின்பு ஜனங்கள் பாடுவதற்காக ஒரு பாடலை எழுதினான்.

வசனங்கள் 1–18 ஐ படிக்கவும்

குறிப்புகள்

- **உபாகமம் 32:2.** "பனி" என்பது, குளிர்மையயான இராக்காலத்தின் பின் நிலத்தில் காணப்படும் நீராகும்.
- **உபாகமம் 32:5.** "கெடுத்துக்கொள்ளல்" என்பதன் அர்த்தம் மிக மோசமாக, தவறாக என்பதாகும்.
- **உபாகமம் 32:9.** "கர்த்தரின் பங்கு" என்பதன் அர்த்தம் இஸ்ரவேல் ஜனங்கள், தேவனின் விசேட ஜனங்களாவர்கள்.
- **உபாகமம் 31:15.** "யெசூரன்" என்பது இஸ்ரவேல் ஜனங்களுக்கான ஓர் பெயராகும். "செழிப்பு" என்பதன் அர்த்தம் ஆரோக்கியமாகும்.

ஆராய்ந்து பாருங்கள்

- கருத்து: இந்தச் சொற்களை சாதாண இசையுடன் பாடமுடியுமா?
- மோசேயின் சொற்களின் பாடலானது இஸ்ரவேல் ஜனங்களுக்கு எதைக் கற்பிக்கிறது?

வசனங்கள் 1-2. பாடலானது, தேவனிடம் இருந்து வரும் கட்டளையை கேட்டுக் கற்றுக் கொள்வதோடு ஆரம்பிக்கிறது. இஸ்ரவேல் தேசத்திலே தாவரங்களுக்கான நீருக்கு பனியானது முக்கியமாயிருந்தது. தேவனுடைய வார்த்தை ஜீவனைத் தருகிறது.

வசனங்கள்: 3-4, தேவன் எப்படி கன்மலையைப் போன்றவர்

வசனங்கள் 5-6, இஸ்ரவேல் ஜனங்கள் தேவனிடமிருந்து விலகிப் போனார்கள். தேவனே அவர்களுடைய தகப்பன். ஆனால் ஜனங்கள் பிள்ளைகளைப் போல நடந்து கொள்ளவில்லை.

- வனாந்தரத்திலே இஸ்ரவேல் ஜனங்கள் தேவனிடமிருந்து விலகிய உதாரணங்களை நினைவு கூரமுடியுமா?

யாத்திராகமம் 32:1-10 எண்ணாகமம் 13:1-33 ஆகிய பகுதிகளைப் பாருங்கள்.

- மோசே இறந்த பின்னர் இஸ்ரவேலர் தேவனிடமிருந்து விலகியதை நினைவில் கொள்ள முடிகிறதா?

யோசுவா 7:1-21, 1 இராஜா. 12:25-33 ஆகிய பகுதிகளைப் பாருங்கள்.

வசனங்கள் 7-14. தேவன் தமது ஜனங்களுக்கு செய்தவற்றை பட்டியலிடுக. இவை வனாந்தரத்தில் இருந்த காலப்பகுதியை குறிக்கிறது. தேவனைப் பற்றி இது என்ன கூறுகிறது?

வசனங்கள் 15-18. தேவன் ஜனங்களை நன்கு பராமரித்தார். தேவ ஜனங்களுக்கு நிறைய உணவு கிடைக்கப் பெற்ற போது அவர்கள் தேவனிடமிருந்து விலகி, ஏனைய தெய்வங்களிடம் திரும்புகிறவர்களாக

⬇ கற்றுக்கொள்ளுங்கள்: உபாகமம் 32:1–18

இருந்தனர் – சாலமோனின் காலத்திலே இது நடந்தது.

- உமது சபையில் நீர் பாடும் பாடல்கள் சத்தியத்தை கற்பிக்கின்றனவா?

நீர் கற்றுக் கொள்வதற்காக, மோசேயின் பாடல்களின் மிகுதியை வசனங்கள் 19-43 வரை வாசியுங்கள். தேவனைப் பற்றியும் அவரது ஜனங்களைப் பற்றியும் மேலும் எதைக் கற்றுக் கொள்கிறீர்?

⊕ **பிரதான கரு**

தேவனை மறந்து விட வேண்டாம். தேவனிடமிருந்து நீர் விலகிச் சென்றதையும் மறந்து விட வேண்டாம்.

→ கற்பித்தல்: உபாகமம் 32:1–18

ஆரம்பியுங்கள்

தேவன் பாடல்களை நேசிக்கிறவர். வேதாகமத்தில் அநேக பாடல்கள் உண்டு. மோசேயின் பாடல் ஒரு சோகப் பாடல். ஆனால் அதைக் கற்றுக் கொள்வது அவசியமானது. எமது பாடல்கள் எமக்கு சத்தியத்தைப் போதிக்க வேண்டும்.

இந்தப்பாடல் தேவனையும், தேவ ஜனங்களைப் பற்றியதாகும். தேவன் உண்மையுள்ளவர். தேவ ஜனங்கள் உண்மையற்றவர்கள். பாடலின் நோக்கமானது ஜீவனைக் கொண்டு வருதலாகும்.

தேவன் எப்படிப்பட்டவர் என்பதை பாடுங்கள்

வாசியுங்கள்: உபாகமம் 32:3–4

தேவன் பெரியவர், பூரணமுள்ளவர், உண்மையுள்ளவர், செம்மையானவர் மற்றும் கன்மலை போன்றவர் என இவ்வாக்கியங்கள் கூறுகிறது - கன்மலையானது பலமுள்ளதும், நிலையானதுமாயிருக்கும். தேவ ஜனங்கள் தேவனுக்கு துதியைப் பாடவேண்டும். (வசனம்:3)

தேவ ஜனங்கள் எதைப் போன்றவர்கள் எனப் பாடுங்கள்

வாசியுங்கள்: உபாகமம் 32:5–6

ஆனால் தேவ ஜனங்கள் தேவனைப் போன்றவர்கள் அல்ல. இந்த வசனங்கள், இஸ்ரவேல் ஜனங்கள் தம்மை கெடுத்துக்

கொண்டவர்களும், (நேர்மையானவர்கள் அல்ல), குறுக்கு வழியுள்ளவர்களும் (தவறான வழியில் செல்பவர்கள்), மூடர்களும், ஞானமில்லாதவர்களும் எனக் கூறுகிறது. தேவனே அவர்களின் தகப்பன். ஆனால் இஸ்ரவேல் ஜனங்கள் அவருடைய பிள்ளைகளைப் போல் நடந்து கொள்ளவில்லை. தேவ ஜனங்கள் வனாந்தரத்திலே தேவனிடமிருந்து விலகிப் போன சந்தர்ப்பங்களை நீங்கள் கற்பிப்போருக்கு கூறுங்கள்.

தேவன் செய்தவற்றை குறித்துப் பாடுங்கள்

வாசியுங்கள்: உபாகமம் 32:7–14

இந்த வாக்கியங்களில், இஸ்ரவேலருக்கு தேவன் வனாந்திரத்திலே செய்த காரியங்களைக் குறித்து நீங்கள் கற்பிப்போருக்கு கூறுங்கள். தேவன் தமது ஜனங்களைப் பாதுகாத்தார். தேவன் அவர்களை வழிநடத்தி, போஷித்து, தேசத்திற்கு கொண்டு வந்தார். அவருடைய ஜனங்கள் அவரிடமிருந்து பலதடவைகள் விலகிய போதும், தேவன் அவருடைய ஜனங்களுக்காக இதைச் செய்தார்.

தேவ ஜனங்கள் செய்ததைக் குறித்துப் பாடுங்கள்

வாசியுங்கள்: உபாகமம் 32:15–18

தேவன் எல்லாவற்றையும் அவரது ஜனங்களுக்குக் கொடுத்ததினால் அவர்களுக்கு சாப்பிட நிறையவே இருந்தது. அவர்கள் கொழுத்துப் போனார்கள். ஆனால் அவர்கள் ஏனைய வேறு தெய்வங்களிடமாய் திரும்பி அசுத்த ஆவிகளுக்குப் பலியிட்டார்கள். ஜனங்கள் எவ்வளவு கேடானவர்கள் என்பதை இப்பாடல் நினைவூட்டுகிறது.

பிரயோகியுங்கள்: தேவ ஜனங்கள் தேவனிடமிருந்து பலதடவைகள் விலகியதை இப்பாடல் நினைவூட்டுகிறது. ஆனால் தேவன் ஒருபோதும் கைவிடுகிறவர் அல்ல. தேவன் உண்மையுள்ளவர். இப்பாடலில் உள்ள கதை பழைய ஏற்பாட்டில் முடிவடையவில்லை. இக்கதை இயேசுவை நோக்கி செய்கிறது. பாவ ஜனங்களை தேவன் எவ்வளவு நேசிக்கிறார் என்பதை இயேசு காட்டுகிறார்.

தேவனையும் அவரது ஜனங்களையும் பற்றி அறிந்து, நினைவு கூர்ந்து மற்றும் பாடுவது முக்கியமானது என இப்பாடல் கூறுகிறது. உண்மையானவற்றை எமது பாடல்கள் கூற வேண்டும்.

- மோசேயின் பாடலைப் பயன்படுத்தி தேவன் எப்படிப்பட்டவர் என்பதையும் நீர் எதைப்போன்றவர் என்பதையும் கூறும் உமது சொந்தப் பாடலை உருவாக்க முடியுமா?

ஜெபியுங்கள்: தேவன் உண்மையுள்ளவரும் அவரது ஜனங்களை நேசிக்கிறவருமாயிருக்கிறார் என்பதற்காக தேவனுக்கு நன்றி செலுத்துங்கள்.

ⓘ கற்றுக்கொள்ளுங்கள்: உபாகமம் 34:1–12

39 தேவன் தரும் இளைப்பாறுதலை எதிர்பாருங்கள்

பின்னணி
மோசே இஸ்ரவேல் ஜனங்களை நாற்பது வருடங்கள் வழிநடத்தினான். வாக்களிக்கப்பட்ட தேசத்தினுள் பிரவேசிக்க மோசே அனுமதிக்கப்படவில்லை. யோர்தான் நதியைக் கடந்து, மலைகளில் மரித்துப் போனான்.

வசனங்கள் 1–12 ஐ படிக்கவும்
2 அல்லது 3 தடவைகள் வாசியுங்கள்.

குறிப்புகள்
- **உபாகமம் 34:1.** "நேபோ", "மோவாப்" மற்றும் "பிஸ்கா" ஆகிய பெயர்கள் வாக்களிக்கப்பட்ட தேசத்திற்கு வெளியேயுள்ள இடங்கள் ஆகும். இவை யோர்தானுக்கு மேலாக உள்ளவை. மோசே இஸ்ரவேல் ஜனங்களுடன் இங்கே பேசினான்.
- **உபாகமம் 34:9.** "ஞானத்தின் ஆவியினால் நிறைக்கப்படல்". ஜனங்களை வழிநடத்த தேவன் தமது ஆவியை யோசுவாவுக்கு கொடுத்தார்.
- **உபாகமம் 34:10.** "முகமுகமாக" என்பதன் அர்த்தமானது, தேவன் மோசேயை தனிப்பட்ட விதமாகவும், நெருக்கமாகவும் அறிந்திருந்தார் என்பதாகும். தேவனின் முகத்தை யாரும் பார்ப்பதில்லை.

⊙ ஆராய்ந்து பாருங்கள்
மோசே ஏன் தேசத்தினுள் பிரவேசிக்க அனுமதிக்கப்படவில்லை? எண்ணாகமம் 20:2-13, உபாகமம் 1:37, 3:25-28, 4:21, 32:48-52 ஆகிய வசனங்களை வாசியுங்கள். மோசே தேசத்தினுள் பிரவேசிக்கப் போவதில்லை என இவ்வசனங்கள் கூறுகின்றன.

இது நீதியானது என எண்ணுகிறீர்களா? மோசே நீண்டகாலமாக பெரிதான தலைவராக இருந்தான். அவன் ஒரு தவறிழைத்திருந்தான். ஆனால் அவன் செய்தது மோசமான தவறாகும். ஆம், அது நீதியானது. மோசே தேவனை மதிக்கவில்லை. ஆனால் தேவன் இரக்கமுள்ளவர். வாக்களிக்கப்பட்ட தேசத்தைப் பார்க்க தேவன் அவனை அனுமதித்தார். (வசனங்கள் 1-4).

வசனங்கள் 10-12. உபாகமம் 18:15ல் தேவன், மோசேயைப் போன்ற ஒரு தீர்க்கதரிசியை எதிர்காலத்தில் தருவதாக வாக்களித்தார். உபாகமம் 34ம் அதிகாரம் எழுதப்பட்ட போது அந்த தீர்க்கதரிசி தோன்றியிருக்கவில்லை.

- *பின்னர் வர இருக்கின்ற மோசேயைப் போன்ற தீர்க்கதரிசி யார்?*

மோசேயைப் போன்ற தீர்க்கதரிசி இயேசுவே. இயேசு தேவனுடைய வார்த்தையைப் பேசினார். இயேசு அடையாளங்களையும், அற்புதங்களையும் செய்தார். மோசேயை விட அதிகாரமுடையவராகப் பேசினார்.

- *தேவனைப் பற்றி இது என்ன கூறுகிறது?*

தேவன் பரிசுத்தர். **மோசே போன்ற பெரிய தலைவர்களின் பாவத்தையும் நியாயம் தீர்ப்பார்.**

⬇ கற்றுக்கொள்ளுங்கள்: உபாகமம் 34:1–12

தேவன் உண்மையுள்ளவர்.
மோசேயைப் போன்ற தீர்க்கதரிசியை தேவன் வாக்களித்தார். இயேசுவே அந்த தீர்க்கதரிசியாகும்.

- இது எங்களுக்கு என்ன கூறுகிறது?

எபிரேயர் 3:7-4:11 வரையுள்ள பகுதியில் பரலோகத்திற்கு வருவதை ஜனங்கள் தவறிவிட வேண்டாம் என எழுத்தாளர் எச்சரிக்கிறார். மோசே எங்களுக்காகவே எச்சரிக்கிறான். அவர் செய்ததைப் போல நாமும் தவறிவிடக் கூடாது.

நல்ல செய்தி என்ன வென்றால், மோசே பரலோகத்தில் இருக்கிறான். (எபிரேயர் 11:25-26). இயேசுவுக்குள்ளான தேவ கிருபையினாலே அவன் பரலோகத்தில் இருக்கிறான். சகல கிறிஸ்தவர்களுக்கும் தலைவர்கள் உட்பட இயேசுவுக்குள்ளான தேவ கிருபை தேவை. நாம் இயேசுவை எப்போதும் விசுவாசிக்க வேண்டும். இயேசுவின் மூலம் நாம் பரலோகத்தை அடைவோம் என நாம் நிச்சயமாக கூற முடியும்.

⊕ **பிரதான கரு**
தேவனின் இளைப்பாறுதலில் பிரவேசிப்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

➡ கற்பித்தல்: உபாகமம் 34:1–12

ஆரம்பியுங்கள்
ஜனங்கள் தமது இலக்கினை அடையாமல் இருப்பது துக்கமான விடயமாகும். தனது பிள்ளையின் திருமணத்திற்கு முன்பே தகப்பன் மரித்துப் போகலாம். உமது பிரதேசத்தில் இருந்து உதாரணங்கள் தருக.

- மோசேயின் நிலை என்ன?

மோசே தேசத்திற்குள் பிரவேசிக்க முடியாது
வாசியுங்கள்: உபாகமம் 34:1–8
மோசே இஸ்ரவேல் ஜனங்களை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து வாக்களிக்கப்பட்ட தேசத்திற்கு 40 வருடங்களாக வழிநடத்தினான். ஆனால் அவன் தேசத்திற்கு வெளியே மரித்துப் போனான். தேசத்தைப் பார்ப்பதற்கு தேவன் மோசேயை அனுமதித்தார். ஆனால் அவனால் பிரவேசிக்க முடியாமல் போனது.

எண்ணாகமம் 20:10~12 வரையுள்ள வசனங்களில் இருந்து, மோசேயினால் ஏன் தேசத்தினுள் பிரவேசிக்க முடியாமல் போனது என்பதை நினைவு படுத்துங்கள். மோசே பெரிய தலைவனாக அநேக நன்மைகளைச் செய்திருந்தும், அவன் தவறிழைத்தவனாக காணப்பட்டான்.

பிரயோகியுங்கள்: நாங்கள் மோசேயைப் போலிருக்க கூடாது. மோசே எம்மை எச்சரிக்கிறார். விசேடமாக கிறிஸ்தவ தலைவர்களை மோசே எச்சரிக்கிறார்.

→ கற்பித்தல்: உபாகமம் 34:1–12

அவிசுவாசத்தினாலும், கீழ்ப்படியாமையினாலும், பரலோகம் செல்வதை தவறவிடக்கூடாது. தேவனுக்காக தாம் செய்த நன்மையான காரியங்களினால் நாம் பரலோகத்திற்கு செல்லலாம் என சில தலைவர்கள் எண்ணக் கூடும். உங்கள் கிரியைகளில் தங்கியிருக்க வேண்டாம்.

மோசே பூமியிலுள்ள தேசத்தை அடையவில்லை. ஆனால் முக்கியமாக அவன் உண்மையான வாக்களிக்கப்பட்ட தேசமான பரலோகத்தில் இருக்கிறான் எபிரேயர் 11:26ல் உள்ள விடயத்தை நீங்கள் கற்பிப்போருக்கு கூறுங்கள். தேவன் இரக்கமுள்ளர். தேவன் மன்னிக்கிறவர் - தேவனின் கிருபையும், அவரது இலவச கொடையான மன்னிப்பும் ஜனங்களை இயேசுவினூடாக பரலோகத்திற்கு கொண்டு வருகிறது. பரலோகத்திற்கான ஒரே வழி இயேசுவே.

மோசேயைப் போன்ற ஓர் தீர்க்கதரிசி

வாசியுங்கள்: உபாகமம் 34:9–12

மோசேயைப் போன்ற ஓர் தீர்க்கதரிசியை தேவன் வாக்களித்தார். தீர்க்கதரிசியானவன் தேவ வார்த்தையைப் பேசி அடையாளங்களையும், அற்புதங்களையும் செய்வான். உபாகமம் 34ம் அதிகாரம் எழுதப்பட்ட போது தீர்க்கதரிசி தோன்றியிருக்கவில்லை. இயேசுவே மோசையைப் போன்ற தீர்க்கதரிசியாகும். இயேசு தேவனின் வார்த்தையை பேசி அடையாளங்களையும், அற்புதங்களையும் செய்தார்.

தேவன் அவரது வார்த்தை மூலமாக அவரது ஜனங்களுடன் பேசுகிறார். இயேசுவே தேவனின் வார்த்தையாகும். தேவனின் வார்த்தையை நாம் வேதாகமத்தில் கேட்கிறோம்.

பிரயோகியுங்கள்: மோசேக்கு செவிமடுக்கும்படி தேவன் ஜனங்களுக்கு கூறினார். மோசேயைப் போன்ற தீர்க்கதரிசிக்கு செவிமடுக்க வேண்டுமென தேவன் உபாகமம் 18:15ல் கூறினார். தேவ ஜனங்கள் இயேசுவுக்கு செவிமடுக்க வேண்டும். தேவ வார்த்தையை வாசிப்பதன் மூலம் நாம் இயேசுவுக்கு செவிமடுக்கிறோம்.

- எவ்வளவு தூரம் நாம் தேவ வார்த்தையை வாசிக்கிறோம் - எவ்வளவு கவனமாக நாம் கீழ்ப்படிகிறோம்.

ஜெபியுங்கள்: இயேசுவுக்கூடாக பரலோகம் செல்ல முடியும் என்பதால் தேவனுக்கு நன்றி கூறுங்கள். தேவனுடைய இளைப்பாறுதலிலே பிரவேசிக்க வேண்டுமென ஜெபியுங்கள். இயேசுவைக் குறித்த தேவ வார்த்தைக்கு நாம் எப்போதும் கவனமாக செவிமடுக்க வேண்டுமென ஜெபியுங்கள்.

பின்னிணைப்பு: பழைய ஏற்பாட்டு நியாப்பிரமாணங்களை இன்று நடைமுறைப் பிரயோகம் செய்வது எப்படி?

உபாகமத்தின் பல அதிகாரங்கள் (சிறப்பாக அதிகாரங்கள் 12-26) இஸ்ரவேல் ஜனங்களுக்கான தேவனுடைய சட்டதிட்டங்களைக் கூறுகின்றன. எனவே உபாகமத்தில் இவை முக்கியமானவை. சில சட்டங்கள் எவ்விதம் பிரயோகமாகும் என்பதை முன்வைக்கலாம். பழைய ஏற்பாட்டு சட்டங்கள் எவ்விதம் கிறிஸ்தவர்களுக்காக நடைமுறைப்படுத்த முடியும் என்பதை பின்வரும் படிகள் மூலம் நாம் சிந்திக்கலாம்.

1. ஒவ்வொரு நியாயப்பிரமாணத்திற்கான காரணம் என்ன?

பழைய ஏற்பாட்டு நியாயப்பிரமாணம் ஒன்றை வாசிக்கும் போது, சற்று சிந்தியுங்கள்: இந்த சட்டத்திற்கான காரணம் என்ன? உமது அயலவனை நேசிப்பதற்கான காரணத்தை சில சட்டங்கள் கொண்டிருக்கலாம். ஒரே தெய்வத்தை வழிபடுவது தொடர்பாக சில சட்டங்கள் காணப்படலாம். இஸ்ரவேல் ஜனங்கள் ஏனைய ஜாதியினரிடமிருந்து தனித்துவமாக காணப்படுவதற்காக சில சட்டங்கள காணப்படலாம். சில சட்டங்கள் பாதுகாப்பு தொடர்பானவையாகும். சில சம நீதி தொடர்பானவை. சில ஏழைகளைப் பாதுகாப்பவை.

பல பழைய ஏற்பாட்டுச் சட்டங்கள் உதாரணங்களாகும். ஒரு மனிதன் அவனுடைய அயலவனின் எருதுக்கு அல்லது கழுதைக்கு உதவுதல் வேண்டும். (உபாகமம் 22:4) ஆட்டைப் பொறுத்தவரையில் என்ன? ஆம், சட்டமானது ஆட்டுக்கும் பொருந்தும். அயலவனின் விலங்குகளுக்கு பராமரிப்பைத் தரவேண்டுமென்ற காரணத்தை இவ்வுதாரணத்திலிருந்து அறிகிறோம். எனவே இச்சட்டமானது ஏனைய விலங்குகளுக்கும் பொருந்துவதாயுள்ளது.

ஒரு சட்டத்திற்கான காரணத்தை அறிவது எப்பொழுதும் இலகுவானதல்ல. ஒரு இளம் ஆட்டினை அதன் தாயின் பாலில் சமைக்க கூடாது என்பதற்கான காரணம் என்ன? இதை அறிந்து கொள்வது கடினம். அநேகமாக இஸ்ரவேல் ஜனங்கள் ஏனைய சமய ஜனங்களின் நடைமுறையினை பின்பற்றுவதை தடை செய்வதே ஒரு காரணமாக இருக்கலாம்.

2. அநேக காரணங்கள் இன்றும் பிரயோகப்படுகிறது.

சட்டங்களுக்கான அநேக காரணங்கள் இன்னும் நடைமுறையில் உள்ளது. புதிய ஏற்பாடானது சட்டங்களுக்கான பல காரணங்களை மாற்றுகிறதில்லை. கிறிஸ்தவர்கள் அயலவனை நேசித்து ஒரே தேவனை ஆராதித்து, பாதுகாப்புடன் இருந்து, சமத்துவமும், நீதியாயும் நடந்து அவிசுவாசிகளிடமிருந்து தனித்துவமுள்ளவர்களாக காணப்பட வேண்டும். அநேக சட்டங்கள் இன்றும் கிறிஸ்தவர்களுக்கு பொருத்தமானவையாயுள்ளன. தேவனின் தராதரங்களான அன்பும், பரிசுத்தமும் மாற்றமடையவில்லை.

3. சில காரணங்கள் பொருத்தமானவை ஆனால் எமது கலாச்சாரம் வேறானது.
புராதன இஸ்ரவேலில் இருந்து எங்களில் அநேகர் வேறுபட்ட கலாச்சாரங்களில் வாழ்கிறோம். ஒரு உதாரணம் வீடுகளாகும். பழைய ஏற்பாட்டுக் காலத்திலே ஜனங்கள் அவர்களின் வீடுகளிலே தட்டையான கூரைகளைக் கொண்டிருந்தார்கள். பாதுகாப்புக்காக அவர்கள் கூரையிலே கைப்பிடிச்சுவரை செய்ய வேண்டியிருந்தது. (உபாகமம் 22:8). அநேக கலாச்சாரங்களில் தட்டையான கூரை வீடுகள் இல்லை. கைப்பிடிச்சுவர் தொடர்பான சட்டம் பொருந்தாது. ஆனால் பாதுகாப்புக்கான காரணம் இன்றும் நடைமுறையில் உள்ளது. எமது வீடுகளைப் பாதுகாப்பதற்கான வேறு பல வழிகள் உண்டு. உதாரணமாக, மின்சாரக் கம்பிகளும், சமையலறையும் பிள்ளைகளுக்கு பாதுகாப்பானவையாக பேணப்பட வேண்டும்.

4. சில காரணங்கள் மாற்றமடையும். ஏனெனில் இயேசு நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றுகிறார்.
பழைய ஏற்பாட்டுப் பலிகளை இயேசு நிறைவேற்றுகிறார். கிறிஸ்தவர்கள் மிருகப் பலிகளைக் கொடுக்க வேண்டியதில்லை. கிறிஸ்தவர்கள் தேவனோடு ஒப்புரவாக்கப்பட்டுள்ளார்கள் ஏனெனில் அவர்களது பாவங்களுக்கான இயேசுவின் சிலுவைப் பலியை விசுவாசிக்கிறார்கள். பழைய ஏற்பாட்டின் பலிகள் இயேசுவின் சிலுவைப்பலியை சுட்டிக்காட்டுகின்றன. இன்றைய விசுவாசிகளுக்கு இயேசுவின் பலியே உண்மையும், ஒரே பலியுமாகும் (எபிரேயர் 10:11-12). இயேசுவே வாழும் ஆலயமாகவும் உள்ளார் (யோவான் 2:21). கிறிஸ்தவர்கள் ஆசரிப்புக் கூடாரத்திற்கோ, ஆலயத்திற்கோ, அல்லது எருசலேமிற்கோ தேவனை ஆராதிக்க செல்வதில்லை. கிறிஸ்தவர்கள் தேவனை ஆராதிக்க இயேசுவிடம் செல்கிறார்கள். ஆராதனைக்கான விஷேசித்த இடமென இனி எதுவும் கிடையாது. பழைய ஏற்பாட்டுப் பலி மற்றும் ஆலயப் பிரமாணங்களை கிறிஸ்தவர்கள் இயேசுவுக்கூடாக நடைமுறைப்படுத்துகிறார்கள். இயேசு இவ்விதமுறைகளை விரிவாக்குகிறார். கிறிஸ்தவர்கள் கட்டாயமாக எதிரிகளை நேசிக்க வேண்டும். கிறிஸ்தவர்கள் மற்றவர்களை வெறுக்கவோ அல்லது இச்சையோ கொள்ளல் கூடாது.

5. சில காரணங்கள் மாற்றமடைகிறது. ஏனெனில் தேவ ஜனங்கள் தற்போது ஒரு ஜாதியை சேர்ந்தவர்கள் அல்ல.
தேவ ஜனங்கள் தற்போது ஒவ்வொரு தேசத்திலும் சபையினராக உள்ளனர். உலகளாவிய சபையானது புராதன இஸ்ரவேல் ஜாதியினது நிறைவேறுதலாகும். பழைய ஏற்பாட்டு நியாயப்பிரமானங்ளுக்கான சில காரணங்கள் தேவ ஜனங்களின் ஜாதி என்பதை அடிப்படையாக கொண்டது. எனவே ஜாதியைக் குறித்ததான பழைய ஏற்பாட்டு சட்டத்திற்கான காரணம் மாற்றமடைந்துள்ளது. ஒரு உதாரணம்: உபாகமத்திலே, தவறான பாலுறவுத் தொடர்புள்ள இஸ்ரவேலன் மரணத்துக்குட்படுத்த வேண்டும். தவறான பாலுறவுத் தொடர்பு கொண்டுள்ள கிறிஸ்தவன் தற்பொழுது சபையை விட்டு வெளியேற்றப்பட வேண்டும் (1 கொரிந்தியர் 5:1-5). ஜாதி அல்லது தேசம் தொடர்பான பழைய ஏற்பாட்டுச் சட்டங்கள் தேவ ஜனங்களின் சபைக்கு பிரயோகப்படுத்தப்பட வேண்டும்.

6. சில காரணங்கள் மாற்றமடையும். ஏனெனில் பரலோக இராஜ்ஜியமானது வாக்களிக்கப்பட்ட இவ்வுலக தேசத்தை பிரதியீடு செய்கிறது.
புராதன இஸ்ரவேலைப் போல கிறிஸ்தவர்கள் இவ்வுலக வாக்களிக்கப்பட்ட தேசத்தில் வாழ வேண்டியதில்லை. பரலோகமே முக்கியமான தேசமாகும். தேசத்தை வெற்றிகொள்ளும் சட்டமானது கிறிஸ்தவர்களுக்குப் பொருந்தாது. கிறிஸ்தவர்கள் ஆவிக்குரிய யுத்தத்தின் மூலம் பரலோகத்தை அடைவதை

உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். பிரதான எதிரியாகிய சாத்தானை இயேசு சிலுவையில் தோற்கடித்துள்ளார். இயேசுவின் நிமித்தம் கிறிஸ்தவர்கள் வெற்றியை உறுதிப்படுத்த முடியும்.

7. சில காரணங்கள் மாற்றமடையும். ஏனெனில் தற்போது தேவ ஜனங்கள் என்போர் யூதர்களும் புறவினத்தாருமாகும்.

பழைய ஏற்பாட்டில் அந்நியர்கள் தேவ ஜனங்களிடமிருந்து வேறுபட்டவர்களாக நடத்தப்பட்டனர். அந்நியர்களிடமிருந்து வேறுபட்ட நடத்தையுள்ளவர்களாக இருத்தல் வேண்டும். உதாரணமாக, உபாகமம் 14ல் உள்ள உணவுச்சட்டங்கள் இதைக் காட்டுகின்றன. இயேசு வந்த போது, புறவினத்தாருக்கும், யூதருக்குமான பாவ மன்னிப்பானது நற்செய்தியாகியது. எனவே அப்போஸ்தலர் 10ம் அதிகாரத்தில், சகல உணவுவகைகளும் சுத்தமாக்கப்படுகிறது. இப்போது யூதர் மற்றும் புறவின கிறிஸ்தவர்களும் இயேசுவின் நிமித்தம் வேறுபட்டவர்கள் அல்லவே.

8. ஏன் தேவனுக்கு கீழ்ப்படிய வேண்டும்?

நாம் தேவனுடைய நியாயப்பிரமாணங்களுக்கு ஏன் கீழ்ப்படிய வேண்டுமென்ற காரணத்தை நினைவில் கொள்ள வேண்டும். இஸ்ரவேல் ஜனங்கள் தேவனுக்குப் பயந்து அவருக்கு கீழ்ப்படிய வேண்டியிருந்தது. ஏனெனில் அவர் அவர்களை எகிப்திலிருந்து மீட்டெடுத்தார். கிறிஸ்தவர்கள் தேவனை நம்பி அவருக்கு கீழ்ப்படிய வேண்டும். ஏனெனில் அவர் சிலுவையில் எங்களைக் மீட்டுகொண்டார். இயேசுவிலே தான் நாம் இரட்சிக்கப்படுகிறோம். தேவனுடைய எல்லா நியாயப்பிரமாணங்களுக்கும், கீழ்ப்படிவதிலேயே இஸ்ரவேலரும், கிறிஸ்தவர்களும் தங்கியிருக்க கூடாது. பழைய ஏற்பாட்டிலும் புதிய ஏற்பாட்டிலும் அவரது ஜனங்கள் கீழ்ப்படிவதில் விசுவாசத்தைக் காண தேவன் விரும்புகிறார். நியாயப்பிரமாணங்களை கடைபிடிப்பதனால் விசுவாசிகள் இரட்சிக்கப்படுவதில்லை. கிறிஸ்துவில் மாத்திரம் வைக்கின்ற விசுவாசத்தினூடாக விசுவாசிகள் இரட்சிக்கப்படுகிறார்கள். விசுவாசம் கீழ்ப்படிதலில் காணப்படுகிறது. இயேசுவிற்கு பாத்திரவான்களாகும் வாழ்க்கையை நாம் வாழ வேண்டும் (எபேசியர் 4:1).

9. சுருக்கம்

எனவே, பழைய ஏற்பாட்டு நியாயப்பிரமாணங்களின் பின்னணிக்காரணங்களை கவனியுங்கள். அன்றிலிருந்து இன்று வரை ஏதாவது மாற்றம் நிகழ்ந்துள்ளதா என எண்ணிப் பாருங்கள் இயேசுவின் நிமித்தமாக ஏதாவது மாற்றமடைந்துள்ளதா? நியாயப்பிரமாணத்திற்கு என்ன மாற்றம் ஏற்படுத்தப்பட்டுள்ளது? எமது வாழ்க்கைக்கு எவ்விதம் அது பிரயோகப்படுகிறது என எண்ணிப் பாருங்கள். பின்னர் விசுவாசத்தோடு பின்பற்றுங்கள்! உமக்கு நிச்சயமல்லாத, போது ஜெபித்து, மற்றும் ஞானமுள்ள கிறிஸ்தவன் ஒருவனை வழிகாட்ட உதவும் படி தேடுங்கள்.

ஊ. உபாகமத்திலிருந்து பாடங்கள்

தேவனின் வார்த்தையிலிருந்து எமது வாழ்விற்குப் பாடங்களை பெற்றுக்கொள்வது முக்கியமானது. இந்தக் கேள்விகளை உமது மக்கள் குழுக்களில் கலந்துரையாடி, அவை பற்றி ஜெபம் பண்ணுவது அவர்களுக்கு உதவும். இந்தக் கேள்விகள், இப்புத்தகத்தில் முக்கிய பாடங்களைக் கற்றுக் கொள்ள உதவும். உபாகமத்தின் எல்லாப் பாடங்களையும் கற்பித்து முடித்த பின்னர் இந்தக் கேள்விகளை நீங்கள் பயன்படுத்த முடியும். அல்லது ஒவ்வொரு பகுதியின் முடிவிலும் நீங்கள் இதைப் பயன்படுத்தலாம்.

1. உபாகமம் 1:1–8
- உபாகமம் எதைப் பற்றியதாகும்? தேவ வார்த்தையைக் குறித்து நாம் ஏன் நினைவூட்டப்பட வேண்டும்?
- வாக்களிக்கப்பட்ட தேசத்தைக் குறித்த முக்கிய விடயம் என்ன? (வசனம் 8)

2. உபாகமம் 1:9–18
- வசனங்கள் 10-11 வரையுள்ள தேவ வாக்குத்தத்தங்களைப் பாருங்கள். தேவனின் எந்தெந்த வாக்குத்தத்தங்களை நம்புவது உமக்கு பிரச்சனையாகவுள்ளது?
- எவ்வகைப்பட்ட ஜனங்கள் சபைத்தலைவர்களாக இருக்க வேண்டும்? (வசனங்கள் 15-18)

3. உபாகமம் 1:19–33
- 28ம் வசனத்தைப் பாருங்கள். நீங்கள் பயப்படும் காரியங்களை எண்ணிப்பாருங்கள். ஏன் அவற்றுக்கு நீங்கள் பயப்படுகிறீர்கள்?
- இப்போது வசனங்கள் 32-33 வரை பாருங்கள். நீங்கள் தேவனை விசுவசியாததனால் தானா அவருக்கு கீழ்ப்படியாமல் போகிறீர்கள்?

4. உபாகமம் 1:34–36
- மோசேயும் வளர்ந்த இஸ்ரவேலரும் வாக்களிக்கப்பட்ட தேசத்தினுள் பிரவேசிக்கவில்லை. காலேபும் யோசுவாவும் பிரவேசித்தார்கள். ஏனெனில் அவர்கள் விசுவாசித்துக் கீழ்ப்படிந்தார்கள் (வசனங்கள் 34-38). வாக்களிக்கப்பட்ட பரலோக தேசத்தினுள் பிரவேசிப்பதற்கு என்ன முயற்சிகளைச் செய்வீர்? எபிரேயர் 4:11ஐ கவனியுங்கள்.
- இஸ்ரவேல் ஜனங்கள் உண்மையாகவே மனம் வருந்தவில்லை என்பது எவ்விதம் அவர்கள் செயல்களில் புலப்படுகிறது? (வசனங்கள் 41-45)

5. உபாகமம் 2:1–3:11
- எந்த எதிரிகளுக்கு நீங்கள் அஞ்சுகிறீர்கள்? அந்த எதிரிகளிடமிருந்து உங்களைப் பாதுகாக்க தேவன் எப்படி வல்லவராக இருக்கிறார்? தேவன் ஜாதிகளுக்குத் தேவனாக உள்ளார். இன்றைய உலகில் இது எப்படிப்பட்ட நம்பிக்கையைக் கொடுக்கிறது?

6. உபாகமம் 3:23–29
- எமது சபைத் தலைவர்கள் பாவத்தில் விழாமல் இருப்பதற்கு எவ்விதம் அவர்களுக்கு ஜெபம் பண்ணுவீர்?
- நீர் தேவ ஜனங்களின் தலைவராக இருப்பீரானால் நீர் தேவனுக்கு கீழ்ப்படிவதை எவ்விதம் உறுதி செய்வீர்?

7. உபாகமம் 4:1–8

- 4ம் வசனத்தைப் பாருங்கள். எவ்விதம் நீர் உறுதியாக கர்த்தரைப் பற்றிக் கொண்டு, அவருக்கு உண்மையாக இருக்க முடியும்?
- மீண்டும் வசனங்கள் 6-8 வரை பார்க்கவும். கிறிஸ்தவர்களின் கீழ்ப்படிதலினால் அவிசுவாசிகள் தேவனிடம் வருவதை கண்டிருக்கிறீர்களா?

8. உபாகமம் 4:9–20

- 9ம் வசனத்தைப் பாருங்கள். தேவன் சொன்னதையும் செய்ததையும் மறக்காமல் இருக்க நீர் என்ன செய்கிறீர்?
- விக்கிரகங்களைப் பற்றிக் கூறும் 15-16 வசனங்களைப் பார்க்கவும். உமது பிரதேசத்தில் எந்த விக்கிரகங்கள் பொதுவானவையாக உள்ளன. விக்கிரகங்களை அல்லது போலியான தேவர்களை வழிபடாமல் இருப்பதை நீர் எப்படி உறுதிப்படுத்துவீர்?

9. உபாகமம் 4:21–31

- 24ம் வசனத்தைப் பாருங்கள். தேவன் எரிச்சலுள்ளவர் என்பது உமது வாழ்வில் என்ன அர்த்தத்தை தருகிறது?
- 31ம் வசனத்தைப் பாருங்கள். தேவன் இரக்கமுள்ளவர் என்பது உமது வாழ்வில் என்ன அர்த்தத்தை தருகிறது?

10. உபாகமம் 4:32–40

- வேதாகமத்தின் தேவன், எவ்விதம் உமது பிரதேசத்தில் உள்ள ஏனைய மக்களின் தேவர்களை விட பெரியவராக உள்ளார்?
- வேறு தெய்வங்களை ஆராதிப்பவரோடு நீர் பேசும் போது வேதாகமத்தின் தேவனை எவ்விதம் வேறு தெய்வங்களுடன் ஒப்பிடுவீர்?

11. உபாகமம் 5:6–11

- 7ம் வசனத்தில் உள்ள கட்டளையை பாருங்கள். உமது பிரதேசத்தில் உள்ள கிறிஸ்தவர்கள் சில சமயங்களில் உண்மையான தேவனை வழிபடும் அதே வேளையில் அவர்கள் வழிபடும் வேறு தெய்வங்கள் யாவை?
- 8-9 வரையுள்ள வசனங்களைப் பாருங்கள். உமது பிரதேசத்தில் எந்த விக்கிரகங்கள் சோதனை தருபவை?

12. உபாகமம் 5:12–15

- ஒவ்வொரு வாரமும் எப்படி ஓய்வெடுக்கிறீர்கள்?
- 15ம் வசனத்தைப் பாருங்கள். உமக்கு இளைப்பாறுதலைத் தருவதற்கு தேவன் செய்ததை எப்படி நினைவு கூருவீர்கள்?

13. உபாகமம் 5:16–21

- 17ம் வசனத்தைப் பாருங்கள். ஜனங்களுடன் கோபமடைவதன் மூலம் இக்கட்டளையை நாம் மீறுகிறோம் என இயேசு கூறியதை நினைவு கூருங்கள். (மத்தேயு 5:21-22) யாருடன் நீங்கள் கோபமாயுள்ளீர்கள்?
- 18ம் வசனத்தைப் பாருங்கள். ஒருவரை இச்சையோடு பார்ப்பதன் மூலம் நாம் விபச்சாரம் செய்கிறோம் என இயேசு கூறினார் (மத்தேயு 5:28). என்ன இச்சையான சிந்தனைகளை நீர் நிறுத்தியாக வேண்டும்?

14. உபாகமம் 6:4–9

- 5ம் வசனத்தைப் பாருங்கள். தேவனை நீர் எவ்வளவு தூரம் அன்பு செய்கிறீர்கள் என்பதை நீர் அளவிட முடியுமானால் 100க்கு எவ்வளவு புள்ளிகள் கிடைக்கும்?
- இப்போது 6ம் வசனத்தைப் பாருங்கள். தேவனுடைய வார்த்தையை இருதயத்தினுள்

எடுப்பதற்கு நீர் எவ்வித முயற்சியை செய்கிறீர்?

15. உபாகமம் 6:20-25
- ஏன் தேவனுக்கு கீழ்ப்படிய வேண்டுமென ஒரு பிள்ளை கேட்டால், அதற்கு எவ்விதமாக விடையளிப்பீர்?
- தேவனைப் பற்றி உமது சபையானது பிள்ளைகளுக்கு எவ்வளவு சிறப்பாக கற்பிக்கிறது?

16. உபாகமம் 7:1-11
- 6ம் வசனத்தைப் பாருங்கள். உமது பிரதேசத்தில் உள்ள அவிசுவாசிகளிடமிருந்து உமது வாழ்க்கை எவ்விதத்தில் வேறுபட்டதாக உள்ளது? நீர் தேவனுக்கு உரித்தானவராகவும், பரிசுத்தமாகவும் இருப்பதை மற்றைய ஜனங்கள் காண்கிறார்களா?
- 8ம் வசனத்தைப் பாருங்கள். தேவன் உம்மை அன்பு செய்கிறார் என்பதை நினைவில் கொள்ளுவது உமக்கு பிரத்தியேகமானதாக உள்ளதா?

17. உபாகமம் 8:1-20
- உமது வாழ்வின் கஷ்டமான காலங்களில் இருந்து நீர் என்ன பாடங்களைக் கற்றுக் கொண்டீர்?
- 17-18 வரையுள்ள வசனங்களைப் பாருங்கள். உமது பிரதேசத்தில் செல்வந்தராக வருவதில் உள்ள ஆபத்துக்கள் எவை?

18. உபாகமம் 9:4-24
- மற்றையவர்களை விட நீங்கள் சிறந்தவர் என்பதை எப்பொழுதாவது சிந்தித்துண்டா? இதனால் தான் தேவன் உம்மை ஆசீர்வதித்துள்ளார் என நினைத்ததுண்டா? (வசனம் 4-6)
- 12ம் வசனத்தைப் பாருங்கள். தேவனிடமிருந்து விரைவாக விலகிப்போன காலங்களை ஞாபகப்படுத்த முடியுமா?

19. உபாகமம் 9:25-29
- தீமையான காரியங்களளைச் செய்து மற்றும் விசுவாசத்தை விட்டு பின்வாங்கும் சபையிலுள்ள ஜனங்களுக்கு எவ்விதம் ஜெபம் பண்ணுவீர்?
- அவிசுவாசிகள் உமது வாழ்வைக் கண்டு தேவனிடம் வரத்தக்கதாக, உமது சபை சரியான காரியங்ளை செய்யத்தக்கதாக நீர் எவ்விதம் சபைக்காக ஜெபம் பண்ணுவீர்?

20. உபாகமம் 10:12-22
- 16ம் வசனத்தைப் பாருங்கள். இது எப்படி நடைபெறும்? உம்முடைய இருதயம் விருத்தசேதனம் அடைந்துள்ளதா?
- 21ம், 22ம் வசனங்களைப் பாருங்கள். தேவன் உமது துதியாக உள்ளாரா? ஒவ்வொரு நாளும் தேவனை எப்படி துதிக்கிறீர்கள்?

21. உபாகமம் 12:1-7
- 5ம் வசனத்தைப் பாருங்கள். தேவ ஆராதனையில் உமது மையம் என்ன? (யோவான் 2:21ஐப் பாருங்கள்).
- 7ம் வசனத்தைப் பாருங்கள். நீர் தேவனை ஆராதிப்பது சந்தோசமுள்ளதாக விருக்கிறதா? எவ்வழிகளில் சந்தோசமுள்ளதாயுள்ளது?

22. உபாகமம் 13:1-11
- உமது பிரதேசத்தில் கள்ளத்தீர்க்கதரிசிகள் உள்ளனரா? அவர்களுக்கு எதிராக எவ்விதம் உமது ஜனங்களை எச்சரிக்கை செய்வீர்கள்?
- 1-4 வரையுள்ள வசனங்களைப் பாருங்கள். உமது பிரதேசத்தில் அற்புதங்களையும் முன்னறிவிப்புக்களையும் செய்யும் நபர்களைப் பின் பற்றுகிறவர்கள் உள்ளனரா?

23. உபாகமம் 14:1–21

- உமது பிரதேசத்திலுள்ள ஜனங்கள் புறசமயத்தினரின் உணவு வகைகளை உண்பதற்கு அழைக்கப்படுகின்றனரா? என்ன செய்ய வேண்டுமென அவர்களுக்கு ஆலோசனை கூறுவீர்?
- உமது பிரதேசத்தில் உள்ள கிறிஸ்தவர்கள் எவ்வழிகளில் இன்னும் அவிசுவாசிகளைப் போல் செயற்படுகிறார்கள்?

24. உபாகமம் 14:22–29

- கிறிஸ்தவ ஊழியத்திற்கும் அருட்பணிக்கும் எதைக் கொடுக்க வேண்டுமென எப்படி தீர்மானிப்பீர்? உம்முடைய கொடுத்தல், தேவனை நம்ப எப்படி உமக்கு கற்பிக்கிறது (வசனம் 23)?

25. உபாகமம் 15:1–8

- வறுமைப்பட்ட கிறிஸ்தவர்களுக்கு கடன் கொடுத்து உதவத்தக்கதாக உமது சபையில் வழிமுறை காணப்படுகிறதா?
- வறுமையுள்ள கிறிஸ்தவர்களுக்கு உதவத்தக்கதாக உமது சபை உடைமைகளை எவ்விதம் பகிர்ந்து கொள்கிறது?

26. உபாகமம் 16:1–17

- இயேசுவின் பிறப்பு மற்றும் இயேசுவின் உயிர்ப்பு போன்ற முக்கிய கொண்டாட்டங்களை எவ்விதம் கொண்டாடுகிறீர்கள்?
- விசுவாசிகள், தேவன் செய்தவற்றை நினைவுகூரும் படியாக உதவும் வகையில் கொண்டாடுகிறீர்களா?
- தேவன் செய்தவற்றுக்காக சந்தோசத்துடன் மீண்டும் மீண்டும் கொண்டாடுகிறீர்களா?

27. உபாகமம் 17:14–20

- இராஜாவுக்கு கொடுக்கப்பட்ட எச்சரிப்புக்களான குதிரைகள், மனைவியர் மற்றும் செல்வம் ஆகியவற்றை எண்ணிப்பாருங்கள். பணம், பாலுறவு, அதிகாரம் ஆகியவை சாதாரணமான சோதனைகளாகும். இச்சோதனைகளை எவ்விதம் எதிர் கொள்ளுகிறீர்? தலைவர்களைப் பொறுத்த வரையில் இச்சோதனைகள் மோசமானவையா?

28. உபாகமம் 18:9–19

- 9-11 வரையான வசனங்களைப் பாருங்கள். எப்படிப்பட்ட சூனியக்காரர்கள் அல்லது மந்திரவாதி போன்றவர்கள் உங்கள் பிரதேசத்தில் இருக்கிறார்கள்?
- நீர் இருக்கும் இடத்தில் விசுவாசிகளுக்கு எப்படி ஆபத்தானவர்களாகவுள்ளனர்?
- 15ம் வசனத்தைப் பாருங்கள். மோசேயைப் போன்ற தீர்க்கதரிசி இயேசுவே. இயேசுவுக்கு எவ்விதம் செவி கொடுக்கிறீர்கள்?

29. உபாகமம் 22:1–12

- 1-4 வரையுள்ள வசனங்களைப் பாருங்கள். விசுவாசிகள் எவ்விதம் ஒருவர் மற்றவருடைய உடைமைகளை சிறந்த முறையில் பாதுகாக்க முடியும்?
- 8ம் வசனத்தைப் பாருங்கள். உமது வீட்டையும், சொத்துக்களையும் ஜனங்களுக்கு பாதுகாப்பாக வைத்திருப்பதைப் பற்றி கலந்துரையாடவும்.

30. உபாகமம் 22:13–30

- ஏன் ஜனங்கள் அடிக்கடி பாலியல் பாவத்தில் வீழ்கிறார்கள்?
- திருமண வாழ்வில் உண்மையாய் இருக்க சபையானது கிறிஸ்தவர்களை எவ்விதம் பலப்படுத்தி உதவலாம்?

31. உபாகமம் 26:1–11

- கர்த்தர் உமக்கு என்ன செய்துள்ளார்? 5-10 வரையுள்ள

வசனங்களைப் போல் உமது வாழ்க்கையைக் குறித்து எழுதவும்.
- தேவன் உமக்குக் கொடுத்த நன்மையான காரியங்கள் எவை? எபேசியர் 1:3-14 வரை வாசியுங்கள்.

32. உபாகமம் 27:1–3
- பழைய ஏற்பாட்டு நியாயப்பிரமாணத்தை இயேசு எவ்விதம் நிறைவேற்றுகிறார்?
- பழைய ஏற்பாட்டு நியாயப்பிரமாணத்தை வாசிக்கும் போது உமது பாவத்தையும், தவறுகளையும் கண்டுகொள்ள வைக்கிறதா?
- கலாத்தியர் 3:10-14 வரை வாசியுங்கள். பாவத்திற்கான மன்னிப்புக்காகவும், நியாயப்பிரமாணத்திலிருந்து பெறும் விடுதலைக்காகவும் நீர் எப்போதும் சந்தோசமடைகிறீரா? தேவனைத் துதியுங்கள்.

33. உபாகமம் 28:1–14
- 10ம் வசனத்தைப் பாருங்கள். புராதன இஸ்ரவேலர் தேவனுக்கு கீழ்ப்படிந்து, ஆசீர்வதிக்கப்பட்டால் ஏனைய ஜாதிகளும் மக்களும் என்ன எண்ணம் கொள்வார்கள்?
- தேவன் எப்படிப்பட்ட ஆசீர்வாதங்களை உமக்கு கொடுத்துள்ளார்?
- எபேசியர் 1:3-14 வரை வாசியுங்கள். அவிசுவாசிகள் உமது சபையினூடாக தேவனிடம் வருகிறார்களா?

34. உபாகமம் 28:15:68
- தேவன் ஒருவரை சபிப்பாராயின் அதற்கான காரணம் என்ன?
- எமது சாபத்தை போக்க இயேசு என்ன செய்துள்ளார்?

35. உபாகமம் 30:1–10
- 6ம் வசனத்தைப் பாருங்கள். தேவன் உமது இருதயத்தை மாற்றியுள்ளாரா? இது எப்படி உமக்கு தெரியும்?
- 1-3 வரையுள்ள வசனங்களைப் பாருங்கள். தேவனிடம் திரும்பி வந்துள்ளீர்களா? நீங்கள் என்ன செய்ய வேண்டும்?

36. உபாகமம் 30:11–20
- 19ம் வசனத்தைப் பாருங்கள். ஜீவனைத் தெரிந்து கொள்வது என்றால் என்ன?
- இயேசுவின் வார்த்தையிலும், வாழ்க்கையிலும் ஜீவன் என்னும் கரு எவ்வளவு முக்கியமானதாகும்?

37. உபாகமம் 31:1–13
- 7ம் வசனத்தை கவனியுங்கள். எது உங்களுக்கு திடத்தையும் நம்பிக்கையும் தருகிறது?
- 13ம் வசனத்தைப் பாருங்கள். நீங்களும் உங்கள் பிள்ளைகளும் ஒன்றாக தேவ வார்த்தையை எவ்வளவு காலத்திற்கு ஒரு தடவை கேட்கிறீர்கள்?

38. உபாகமம் 32:1–18
- 4ம் வசனம் உமது வாழ்வில் எவ்விதம் உண்மையாகவுள்ளது?
- 18ம் வசனத்தை கவனியுங்கள். வாழ்வு தரும் கன்மலையாகிய தேவனை ஏன் ஜனங்கள் கைவிடுகிறார்கள்? மறக்கிறார்கள்?

39. உபாகமம் 34:1–12
- 9ம் வசனத்தைப் பாருங்கள். தேவ ஜனங்களின் தலைவர்களுக்கு ஏன் ஞானம் முக்கியமானது?
- 10ம் வசனத்தைப் பாருங்கள். இயேசு எவ்விதம் மோசே போன்ற தீர்க்கதரிசியாக உள்ளார்?

உபாகமத்தை கற்பித்தல்

உபாகம நூலுக்கான பேசும் வரைகோடுகள்

உலகமெங்குமுள்ள வேதாகம ஆசிரியர்களுக்காக எழுதப்பட்டுள்ளது.

ஜெபி - தயாராகு - பிரசங்கி என்ற தொடர் உலகெங்குமுள்ள வேதாகம ஆசிரியர்கள் தேவ வார்த்தையை தெளிவாகவும், திடநுட்பமாகவும் விளக்க உதவும் படியான வழிகாட்டியாகும். 2 தீமோத்தேயு 2:15 இவ்விதமாக கூறுகிறது. "நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும், சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்து போதிக்கிறவனாயும், உன்னைத் தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு."

இதைச் செய்வதற்கு 'உபாகமத்தை கற்பித்தல்' உதவி செய்யும்.

- **புரிந்து கொள்ளல்:** தேவனுடைய பழைய ஏற்பாட்டு நியாயப்பிரமாணம் எவ்விதம் கிறிஸ்தவர்களுக்கு தற்போது பிரயோகமாகும் என்பதை புரிந்து கொள்ளல்.
- **கற்றுக் கொள்ளல்:** ஏன் தேவனை நேசிக்க வேண்டுமென்பதை கற்றுக் கொள்ளல்
- **உதவி செய்தல்:** தேவனுக்கு உண்மையாகவும், கீழ்ப்படிவுடனும் இருக்க ஜனங்களுக்கு உதவி செய்தல்
- **சிந்தித்தல்:** ஒவ்வொரு பகுதியும் உங்கள் ஜனங்களுக்கு எவ்வளவு முக்கியமென்பதை சிந்தித்தல்
- **கற்பித்தல்:** பிரதான கருவை தெளிவாக கற்பித்தல்

அண்மைக் காலமாக, வியாக்கியான பிரசங்கத்தின் அவசியம் குறித்து அதிகம் பேசப்பட்டு வருகின்றது, எனினும் ஆசியாவிலே இப்பிரசங்கமானது மிகக் குறைந்த அளவிலேயே செய்யப்பட்டுள்ளது. இந்த பாடநூல் தொடரானது ஊழியர்களினதும் மற்றும் அநேக பிரசங்கிகளின் வாழ்விலும் அவர்கள் விரைந்து இப்படிமுறையை ஆரம்பிக்க உதவி செய்யும். இன்றைய நாள் ஊழியர்களுக்கு வியாக்கியான பிரசங்கமானது செய்ய முடியாத மற்றும் நடைமுறைக்கொவ்வாத ஒன்றல்ல என்பதை இது காட்டுகிறது. வேதாகமப் பகுதிகளைத் திறந்து நடைமுறைக் காரியங்களில் பிரசங்கம் செய்வதற்கு, இத் தொடரானது புதிய சந்ததியின் ஊழியர்களை வேத வார்த்தையில் வளர்ப்பதற்கு உதவி செய்யும்.

அஜித் பெர்னான்டோ, கற்பித்தல் இயக்குனர், கிறிஸ்துவுக்காக வாலிபர், இலங்கை.

பிரசங்கத்திற்கான உறுதியான வேதாகம அத்திவாரத்தைக் கொண்டதாகவும், அதன் வல்லமையையும், பொருத்தப்பாட்டையும் வெளிக் கொண்டுவருவதாகவும் அமைதலே "சூழவுள்ள உலகில், மிகப் பெரிதான தேவைகளில் ஒன்றாகும்". வேண்டும். ஜெபி - தயாராகு - பிரசங்கி என்ற இத் தொடர் அநேக மேய்ப்பர்களுக்கும், வளங்கள் குறைவான பொதுநிலை ஊழியர்களுக்கும் பெரிதான உதவியளிப்பனவாகும்.

யோனத்தான் லாம், இயக்குநர், இலங்கம் பிரசங்கித்தல், சர்வதேச இலங்கம் பங்குதாரர்.

Rs 200/-

ISBN 978-955-82389-2-9

Langham PARTNERSHIP

CTS Publishing
Colombo Theological Seminary
Resources to the Church for the Transformation of Nations